# மனோன்மணீயம்

பதிப்பாசிரியர் :

சி. பாலசுப்பிரமணியன்
எம்.ஏ., எம்.லிட்.

# மனோன்மணீயம்

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள்
இயற்றியது

*பதிப்பாசிரியர்*
**டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்**
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.

**நறுமலர்ப் பதிப்பகம்**
சென்னை – 29

ஏழாம் பதிப்பு : டிசம்பர் - 1978
எட்டாம் பதிப்பு : ஆகஸ்ட் - 1979
ஒன்பதாம் பதிப்பு : ஜூன் - 1988
பத்தாம் பதிப்பு : 1992
**நறுமலர்ப் பதிப்பக வெளியீடு**

**ரூ. 30.00**

*விற்பனை உரிமை :*
**பாரி நிலையம்**
184, பிராட்வே, சென்னை-600 001.

*அச்சிட்டோர் :*
**SRI YESES PRINT HOUSE,**
4 & 5, Thanappa Chetty Street,
Triplicane, Madras – 600 005
Phone : 83 32 31.

# முன்னுரை

பச்சையப்பர் கல்லூரியில் மூன்றாண்டுப் பட்டப் படிப்புப் பயிலும் மாணவர்க்குப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றியுள்ள 'மனோன்மணீயம்' என்னும் நாடக நூலினை வகுப்பில் பன்முறை பாடமாக நடத்தியுள்ளேன். அவ்வாறு மாணவர்களுப் பயிற்றுவிக்கின்ற பொழுது, நூலில் மூழ்கிப் பல்கால் திளைத்து மகிழ்ந்துள்ளேன். மேனாட்டு நாடகத்திறனை நன்கறிந்து சிறந்த கருத்துக்களை உள்ளடக்கிப் பேராசிரியர் அவர்கள் தம்முடைய முப்பத்தாறாவது வயதில், தமிழிற்கு—சிறப்பாக நாடகத் தமிழிற்கு நல்கிய நல்ல நாடகக் காப்பியம் மனோன்மணீயமாகும். இந்நூல் தமிழ் இலக்கியத்தில் தனக்கெனத் தனியானதோர் இடத்தினைப் பாங்குறப் பற்றிக் கொண்டதாகும். மாணவர்களுக்குச் சொல்லித் தருகின்ற பொழுது நூலாசிரியரின் நுண்மையான உள்ளத்தினை ஒருவாறு புரிந்துகொள்ள இயன்றது. நான் கண்டு தெளிந்த வழியே நாடக மாந்தரை நோக்கினேன்; அவர்தம் பண்புநலன்களைக் குறித்து ஆய்ந்து பார்த்தேன். மனோன்மணீய நாடக மாண்பும் எனக்கு ஒருவாறு புலப்பட்டது. இந்நூலினை நான் மாணவ நிலையில் நின்று உணர்ந்துள்ளேன். மாணவர் உள்ளங்களோடு கருத்துகளைப் பரிமாறிக் கொண்ட பொழுது எழுந்த என் ஆசிரிய அனுபவம் இந்நூல் எழுதுவதற்குத் தூண்டுகோலாய் அமைந்தது. இந்நூலினைத் தமிழுலகம் ஏற்கும் என்னும் துணிபுடையேன்.

சி. பா.

# உள்ளுறை


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் வாழ்க்கை வரலாறு | ... | 5 |
| நூலாசிரியர் முகவுரை | ... | 8 |
| களத்திற் கூறப்பட்ட பொருள்கள் | ... | 24 |
| மனோமணீயம்-நூல் (Text) | ... | 25 |
| I. சிறப்புக் கட்டுரைகள் | | |
| 1. மனோன்மணீய நாடக மாண்பு | ... | 219 |
| 2. நன்செய் நாட்டின் வளம் | ... | 247 |
| 3. சிவகாமி சரிதம் | ... | 252 |
| II. பண்புநலன் ஆராய்ச்சிக் கட்டுரைகள் | | |
| 1. மனோன்மணி | ... | 261 |
| 2. வாணி | ... | 274 |
| 3. ஜீவகன் | ... | 282 |
| 4. குடிலன் | ... | 289 |
| 5. சுந்தர முனிவர் | ... | 299 |
| 6. நடராசன் | ... | 304 |
| 7. நாராயணன் | ... | 309 |
| 8. புருடோத்தமன் | ... | 315 |
| 9. பலதேவன் | ... | 321 |
| III. இடங்கண்டு பொருள் நயம் காணவேண்டிய பகுதிகள் | ... | 326 |
| IV. பல்கலைக் கழக வினாத்தாள்கள் | ... | 330 |
| V. பின்னிணைப்பு | ... | 355 |

மனோன்மணீய நூலாசிரியர்
பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள்

# வாழ்க்கை வரலாறு

கேரள நாட்டில் ஆலப்புழை என்னும் ஊரில் பெருமாள் பிள்ளை என்பாருக்கும் மாடத்தி அம்மாளுக்கும் கி. பி. 1855ஆம் ஆண்டு பிறந்தவரே நம் சுந்தரம் பிள்ளை அவர்கள் ஆவர். இவருடைய குடும்பம் சைவப் பற்றும், ஒழுக்கக்கோட்பாடும் உடைய குடும்பம். எனவே இவர் தேவார திருவாசகங்களையும் சமய சாத்திர நூல்களையும் இளமையிலேயே கற்றுணர்ந்தார். ஆங்கிலமும் அருந் தமிழும் பாங்குறக் கருத்தூன்றிக் கற்றார். இளமையில் இவருடைய இயற்றமிழ் ஆசிரியராக விளங்கியவர் நாகப் பட்டினம் நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் ஆவர். இவ் ஆசிரியரிடந்தான் மறைமலையடிகளும் பயின்றார் என்பது ஈண்டுக் குறிக்கத்தக்கது. இவருடைய ஞான ஆசிரியராகக் கொள்ளத்தக்கவர் கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள் ஆவர். இத் தொடர்பே மனோன்மணீயத்தில் சுந்தர முனிவர் என்னும் பாத்திரப் படைப்பிற்குக் காரணமாக அமைந்தது. கி. பி 1876ஆம் ஆண்டு பி. ஏ. தேர்வில் வெற்றி பெற்றார். அடுத்த ஆண்டில் இவருக்குத் திருமணமும் நடந்தேறியது. மனைவியார் பெயர் சிவகாமி அம்மாள் என்பதாகும்.

கி. பி. 1877ஆம் ஆண்டு இவர்தம் ஆசிரியப்பணி தொடங்கிற்று. திருநெல்வேலி ஆங்கிலத் தமிழ்க் கல்விச் சாலையின் தலைவராக இரண்டாண்டுகள் பணியாற்றி, அக் கல்விச் சாலையே பின்னர் இந்துக் கல்லூரியாக உயர்வதற்கு உறுதுணையாக இருந்தார், பின்னர்,

திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவத்துறை (Philosophy) ஆசிரியராக அமர்ந்தார். 1880ஆம் ஆண்டில் எம். ஏ. தேர்வும் எழுதித் தேர்ச்சியடைந்தார். அதுபோது அக்காலையில் அக்கல்லூரியில் தத்துவத்துறையின் பேராசிரியாக இருந்த டாக்டர் ஹார்வி துரையின் தொடர்பு இவருக்குக் கிடைத்தது. மூன்றாண்டுகள் தத்துவ ஆசிரியராகப் பணியாற்றிய இவர் திருவனந்தபுரம் அரசர் அரண்மனை வருவாய்த் துறையின் தனி அலுவல ராக (Commissioner of Seperate Revenue) நியமிக்கப் பட்டார். கி. பி. 1885ஆம் ஆண்டு டாக்டர் ஹார்வின் துரை அவர்கள் தத்துவப் பேராசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்றபோது திருவாளர் சுந்தரம் பிள்ளை அவர்களையே தம் பதவிக்குப் பரிந்துரைத்தார். ஏற்கெனவே அரண்மனை அலுவலில் அவ்வளவாக விருப்பமில்லாதிருந்த நம் பிள்ளையவர்கள் 1885ஆம் ஆண்டு மீண்டும் திருவனந்த புரம் அரசர் கல்லூரியில் தத்துவத்துறையின் தலைமைப் பேராசிரியர் ஆனார். அப்பணியினை ஏறத்தாழத் தம் வாழ் நாளின் இறுதிவரையில்—அதாவது 1897ஆம் ஆண்டு வரையில் திறம்பட வகித்தார்.

இவரைப்பல பட்டங்கள் தேடி வந்தன. F. M. U., M.R. H. S., M. R. A. S, ராவ்பகதூர் முதலிய பட்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாக இவருக்குக் கிடைத்தன. திருவனந்த புரத்தில் 1885ஆம் ஆண்டு சைவப் பிரகாச சபையினை நிறுவிச் சமயத் தொண்டாற்றி வந்தார்.

இனி, இவருடைய தமிழ்த் தொண்டினைக் காண்போம். ‘நூற்றொகை விளக்கம்’ என்னும் நூலினை 1888ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்டார். ஒப்பற்ற நாடக நூலான ‘மனோன்மணீயம்’ இவரால் முதன் முதலாக 1891ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. ‘திருவிதாங்கூர் பண்டை மன்னர் (Early Sovereigns of Travancore) கால ஆராய்ச்சி’ என்னும் நூல் 1894-ல் வெளிவந்தது. கல்வெட்டு ஆராய்ச் சியிலும் வல்லவரான இவர் திருஞானசம்பந்தர் கால வாராய்ச்சி செய்து அவ் ஆராய்ச்சியினை 1895ஆம் ஆண்டில்

வெளியிட்டார். தமிழ் இலக்கியம், புலவர் தம் கால ஆராய்ச்சிக்குப் பேராசிரியர்தம் இந்தக் கால நிருணயம் இன்றும் பெரிதும் துணைபுரியக் காணலாம். பத்துப்பாட்டு பற்றிய திறனாய்வினை ஆங்கிலத்தில் எழுதிச் சென்னைக் கிறித்தவக் கல்லூரி இதழில் வெளியிட்டார்.

1878ஆம் ஆண்டில் தாயாரையும், 1886ஆம் ஆண்டில் தந்தையாரையும் இழந்த இவருக்குக் கை கொடுத்தது தத்துவ நூல்களேயாகும். இவருடைய திருமகனார் திரு. நடராசப் பிள்ளை பின்னாளில் கேரள அரசாங்கத்தில் அமைச்சராகவும் இருந்தார்.

தாம் வாழ்ந்த மனைத் தோட்டத்திற்குப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் 'தம் ஆசிரியர் ஹார்வி பெயரையே இட்டமையும், தம் மனோன்மணீய நூலினை அவருக்கு உரிமையாக்கிய செயலும் இவருடைய நன்றி மறவா நற்பண்பினையும், ஆசிரியர்பால் இவர் கொண்டிருந்த அன்பின் பெருக்கினையும் மரியாதையினையும் புலப்படுத்தும்.

நாடகத் துறைக்கு நல்ல தமிழில் நூல்கள் இல்லையே என்ற குறையினைத் தம் மனோன்மணீய நாடக நூலினால் ஈடு செய்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் சிறு வயதிலேயே—தமது நாற்பத்திரண்டாவது வயதிலேயே—(26—4—1897) மறைந்தது தமிழுக்கு—சிறப்பாக நாடகத் தமிழ்த் துறைக்கு ஒரு பேரிழப்பே எனலாம். ஆயினும் அவர் நூல் என்றென்றும் அவர்தம் பெயரினை நினைவுறுத்திக் கொண்டு நிற்கும்.

# நூலாசிரியர் முகவுரை

''மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி இலக்கணஞ் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும் வென் றாரி யத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய்வத்தை உண்ணினைந் தேத்தல் செய்வாம்''

''இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர் இயல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர் இசைபரப்பும்
இருமொழியும் ஆன்றவரே தழீஇனார் என்றாலிவ்
விருமொழியும் நிகரென்னும் இதற்கையம் உளதேயோ.''

''கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ ''

என்றெடுத்த ஆன்றோர் வசனங்கள் உபசாரமல்ல, உண்மையே யென்பது பரத கண்டம் என்னும் இந்திய தேசத்திலுள்ள பற்பல பாஷைகளைச் சற்றேனும் ஆராய்ந்து ஒப்பிட்டு நோக்கும் யாவர்க்கும் திண்ணிதிற் றுணியத் தக்கதே. பழமையிலும், இலக்கண நுண்மையிலும், இலக்கிய விரிவிலும் சிறப்புக்களிலும் மற்றக் கண்டங்களிலுள்ள எப்பாஷைக்கும் தமிழ் மொழி சிறிதும் தலை கவிழ்க்கும் தன்மையதன்று. இவ் வண்ணம் எவ்விதத்திலும் பெருமை சான்ற இத் தமிழ் மொழி பற்பல காரணச் செறிவால் சில காலமாக நன்கு பாராட்டிப் பயில்வார் தொகை சுருங்க மாசடைந்து நிலை தளர்ந்து, நேற்றுதித்த தெலுங்கு முதலிய பாஷைகளுக்கும் சமமோ தாழ்வோ என்று அறியாதார் பலரும் ஐயமுறும்படி அபிவிருத்தி யற்று நிற்கின்றது. இக்குறைவு நீங்கத் தங்கள் தங்களுக் கியன்றவழி முயற்சிப்பது தங்களை மேம்படுத்தும் தமிழ் மொழியைத் தம்மொழியாக வழங்கும் தமிழர் யாவரும் தலைக்கொள்ள வேண்டிய தவறாக் கடன் பாடன்றோ!

மேற்கூறிய முயற்சிக்கேற்ற வழிகள் பலவுளவேனும் அவற்றுள் இரண்டு தலைமையானவை. முதலாவது முன்னோராற் பொருட்சுவையும் சொற்சுவையும் பொலிய இயற்றப்பட்டிருக்கிற அருமையான நூல்களுள் இறந்தவை யொழிய இனியும் இறவாது மறைந்து கிடப்பனவற்றை வெளிக்கொணர்ந்து நிலைபெறச் செய்தலேயாம். இவ்வழியில் பெரிதும் உழைத்துப் பெரும்புகழ் படைத்த திருவாளர் தாமோதரம் பிள்ளையவர்கள், திரு. வே. சாமிநாதய்யர் அவர்கள் முதலிய வித்துவ சிரோன்மணிகளுடைய நன்முயற்சிக்கு ஈடு கூறத்தக்கது யாது? தம் மக்கட்கு எய்ப்பில் வைப்பாக இலக்கற்ற திரவியங்களைப் பூர்வீகர்கள் வருந்திச் சம்பாதித்து வைத்திருக்க அம் மக்கள், அவை இருக்குமிடந்தேடி எடுத்தநுபவியாது இரந்துண்ணும் ஏழைமை போலன்றோ ஆகும், ஈடுமெடுப்பு மற்ற நுண்ணிய மதியும் புண்ணிய சரிதமுமுடைய முன்னோர் ஆயிரக்கணக்கான ஆண்டு உழைத்து ஏற்படுத்தியிருக்கும் அரிய பெரிய நூல்களை நாம் ஆராய்ந்து அறிந்துஅநுபவியாது வாளா நொந்து காலம் போக்கல்! ஆதலால் முற்கூறிய உத்தம வித்துவான்களைப் பின்றொடர்ந்து நம் முன்னோர் ஈட்டிய பொக்கிஷங்களைச் சோதனை செய்து தமிழராகப் பிறந்த யார்க்கும் உரிய பூர்வார்ஜித கல்விப் பொருளை க்ஷேமப்படுத்தி யநுபவிக்க முயல்வது முக்கியமான முதற் கடமையாகும்.

பூர்வார்ஜித தனம் எவ்வளவு பெரிதாக இருப்பினும் அதனைப் பார்துகாப்பதோடு ஒவ்வொருவரும் தத்தமக்கியன்ற அளவு உழைத்துச் சொற்பமாயினும் புதுவரும்படியைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்பது பொதுவாக உலக நோக்கமாக இருப்பதால், முற்கூறிய முயற்சியோடு இரண்டாவதொரு கடன்பாடும் தமிழர் யாவர்க்கும் விட்டு விலகத் தகாததாகவே ஏற்படும். பூர்வார்ஜிதச் சிறப்பெல்லாம் பூர்வீகர்கள் சிறப்பு; அந்த அந்தத் தலைமுறையார்களுக்கு அவரவர்கள் தாமே ஈட்டிய பொருளளவுச் சிறப்பேயொழிய வேறில்லை. அத் தலைமுறையாளரை

பின் சந்ததியார் பேணுவதற்கும் அதுவேயன்றியொழிய வேறு குறியுமில்லை. ஆனதினால் எக்காலத்திலும் எவ்விஷயத்தி லும் பூர்வீகர்களால் தங்களுக்குச் சிந்தித்திப்பவற்றை ஒவ் வொரு தலைமுறையாரும் பாதுகாப்பதுமன்றித் தங்களாற் கூடிய அளவும் அபிவிருத்தி பண்ணவும் கடமை பூண்டவர் களாகின்றார்கள். 'பூர்வார்ஜிதம் மிகவும் பெரியதாயிருக் கின்றதே! நம் முயற்சியால் எத்தனைதான் சம்பாதிப்பினும் நமது பூர்வார்ஜிதத்தின் முன் அஃது ஒரு பொருளாகத் தோற்றுமா' என மனந்தளர்ந்து கைசோர்வார்க்கு அவர் பூர்வார்ஜிதப் பெருமைக் கேடு விளைவிப்பதாகவன்றோ முடியும்? அந்தோ! இக்கேட்டிற்கோ நம் முன்னோர் நமக் காக வருந்தி யுழைத்துப் பொருளீட்டி வைக்கின்றார்கள்! பிதிர்களால் நிற்கும் அம் முன்னோர் இவ் விபரீத விளைவைக் கண்டால் நம்மை எங்ஙனம் வாழ்த்துவர்! இக் கூறிய உண்மை செல்வப் பொருளுக்கன்றிக் கல்விப் பொரு ளுக்கும் ஒரு குடும்பத்துள் வந்த ஒருவனுக்கன்றி ஒரு தேசத்திற் பிறந்த ஒவ்வொரு தலைமுறையாருக்கும் ஒன்று போலவே பொருத்தமுடைத்தாதலால்,

> "குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
> மடிதற்றுத் தான்முந் துறும்"

என்னும் திருக்குறளை நம்பி முன்னோர் யாதேனும் ஒரு வழியில் அபரிமிதமான சிறப்படைந்தாராயின் நாமும் அவர் போலவே இயன்ற அளவும் முயன்று பெருமை பெறக் கருதுவதன்றோ அம்முன்னோர்க்குரிய மக்கள் நாமெனு முன்னிற்றற்கேற்ற முறைமை!

> "தீங்கரும் பீன்ற திரள்கால் உளையலறி
> தேங்கமழ் நாற்றம் இழந்தா அங்கு-ஓங்கும்
> உயர்குடி யுட்பிறப்பின் என்னாம் பெயர்பொறிக்கும்
> பேராண்மை யில்லாக் கடை."

ஆதலால் அருமையாகிய பூருவ நூல்களைப் பாது காத்துப் பயின்று வருதலாகிய முதற்கடமையோடு அவ்

வழியே முயன்று அந்த அந்தக் காலநிலைக் கேற்றவாறே புதுநூல்களை இயற்ற முயலுதல் தமிழ் நாடென்னும் உயர் குடியிற் பிறக்கும் ஒவ்வொரு தலைமுறையாருக்கும் உரித்தான இரண்டாம் கடமையாய் ஏற்படுகின்றது.

மேற்கூறிய இரண்டாம் கடமையைச் சிரமேற் கொண்டு தமிழோர் என்னும்பெரிய குடும்பத்துள்ளே தற்காலத்துள்ள தலைமுறையாருட் கல்வி கேள்வி அறிவு முதலிய யாவற்றுள்ளும் கனிஷ்டனாகிய சிறியேன்,

"இசையா தெனினும் இயற்றியோ ராற்றால்
அசையாது நிற்பதாம் ஆண்மை"

என்னும் முதுமொழியைக் கடைப்பிடித்து நவீனமான பல வழிகளுக்கும் என் சிறுமதிக் கேற்றதோர் சிறுவழியில் சில காலம் முயன்று வடமொழி முதலிய பாஷைகளிலுள்ள நாடக ரீதியைப் பின்றொடர்ந்து இயற்றிய 'மனோன் மணீயம்' என்னும் இந்நாடகம் பூர்வீக இலக்கியங்களுடன் சற்றேனும் உவமிக்க இயையாதெனினும் ஆஞ்சனேயராதி வானர வீரர்கள் சேதுபந்தனஞ் செய்யுங் காலத்தில் கடலீரிலே தோய்ந்து மணலிற் புரண்டு அம்மணலைக் கடலில் உகுத்த சிறு அணிற்பிள்ளையின் நன்முயற்சி அங்கீகரிக்கப் பட்டவாறே, கல்வி கேள்வியால் நிறைந்த இத் தலைமுறைச் சிரேஷ்டர் அங்கீகரித்து எனது இச்சிறு முயற்சியும் தமிழ் மாதாவுக்கு அற்பிதமாம்படி அருள்புரியா தொழியார் என நம்பிப் பிரகடனம் செய்யப்படுகின்றது.

இந் நாடகம் வடமொழி ஆங்கிலேயம் முதலிய பாஷைகளின் உள்ள நாடக வழக்கிற் கிசையச் செய்திருப்பதால் இதனுள்ளடங்கிய கதை அங் கங்கே நடந்தேறும் சம்பாஷணைகளாலும் அவாய் நிலைகளாலும் கோவைப்படுத்தி அறிந்து கொள்ள வேண்டியதாயிருக்கின்றது. இக்கதை புதிதாக இருப்பதினால் அவ்விதம் கோவைப்படுத்தி அறிந்து கொள்ளுவோர்க்கு அநுகூலமாகச் சுருக்கி சண்டுக் கூறப்படுகிறது.

## கதைச் சுருக்கம்

முற்காலத்தில் மதுரைமாநகரில் ஜீவகன் என ஒரு பாண்டியன் அரசு புரிந்து வந்தான். அவன் பளிங்குபோலக் களங்கமில்லாத நெஞ்சினன். அவன் மந்திரி குடிலன் என்பவன். ஒப்பற்ற சூழ்ச்சித் திறமை யுடையவனாயினும் முற்றும் தன்னய மொன்றே கருதும் தன்மையனா யிருந்தான். அதனால் அரசனுக்கு மிகவும் உண்மையுடையவன் போல நடித்து அவனை எளிதிலே தன்வசப்படுத்திக் கொண்டான். அங்ஙனம் சுவாதீனப்படுத்திய பின்பு தன் மனம் போனபடி யெல்லாம் அரசனை யாட்டித் தன் செல்வமும் சொல்வாக்கும் வளர்த்துக் கொள்ளத் தொன்னகராகிய மதுரை இடங்கொடாதெனை உட்கொண்டு அந்நகரின் மேற் பாண்டியனுக்கு வெறுப்புப் பிறப்பித்து, திருநெல்வேலி என்னும் பதியிற் கோட்டை கொத்தளம் முதலியன இயற்றுவித்து, அவ்விடமே தலைநகராக அரசன் இருந்து அரசாளும்படி செய்தான். முது நகராகிய மதுரை துறந்து கெடுமதியாளனாகிய குடிலன் கைப்பட்டு நிற்கும் நிலைமையால் ஜீவகனுக்கு யாது விளையுமோ என இரக்கமுற்று அவனுடைய குலகுருவாகிய சுந்தர முனிவர் அவனுக்குத் தோன்றாத் துணையாயிருந்து ஆதரிக்க எண்ணித் திருநெல்வேலிக் கருகிலுள்ள ஓர் ஆச்சிரமம் வந்தமர்ந்தருளினர். முனிவர் வந்து சேர்ந்தபின் நிகழ்ந்த கதையே இந்நாடகத்துட் கூறப்படுவது.

முனிவர் எழுந்தருளியிருப்பதை யுணர்ந்து ஜீவகன் அவரைத் தன் சபைக் கழைப்பித்து, தனது அரண்மனைக் கோட்டை முதலியனவற்றைக் காட்டி அவை சாசுவதம் என மதித்து வியந்து கொள்ள, அவ்விறுமாப்பைக் கண்ணுற்ற முனிவர், அவற்றின் நிலையாமையைக் குறிப்பாகக் கூறியும் அறியாதொழிய, அவன் குடும்பத்திற்கும் கோட்டை முதலியவற்றுக்கும் க்ஷேமகரமாகச் சில கிரியா விசேஷம் செய்யும் பொருட்டு அவன் அரண்மனையில்

ஒரறை தம் சுவாதீனத்து விடும்படி கேட்டு, அதன் திறவு கோலை வாங்கிக் கொண்டு தம் ஆச்சிரமம் போயினர். ஜீவக வழுதிக்குச் சந்ததியாக மனோன்மணி என்னும் ஒரே புத்திரி தான் இருந்தனள். அவள் அழகிலும் நற்குண நற்செய்கை களிலும் ஒப்பற்றவள். அவளுக்கு அப்போது வயது பதினாறாக இருந்தும், அவள் உள்ளம் குழந்தையர் கருத்தும் துறந்தோர் நெஞ்சும் போல யாதொரு பற்றும் களங்கமு மற்ற நின்மலமாகவே யிருந்தது. அவளுக்கு உற்றதோழியாக இருந்தவள் வாணி. இவள் ஒழுக்கம் தவறா உளத்தள்; தனக்கு நன்றெனத் தெள்ளிதில் தெளிந்தவையே நம்புந் திறத்தள். அல்லனவற்றை அகற்றும் துணிபுடையவள். இவ் வாணி நடராஜனென்ற ஓர் அழகமைந்த ஆணந்த புருஷனை யறிய, அவர்களிருவர் உள்ளமும் ஒருவழிப்படர்ந்து காதல் நேர்ந்தது. அதற்கு மாறாக இவ் வாணியினது பிதா மிகப் பொருளாசை யுடையோனாதலால், குடிலனுடைய மகன் பலதேவன் என்னும் ஒரு துன்மார்க்கனுக்குத் தன் மகளை மணம்புரியில் தனக்குச் செல்வமும் கௌரவமும் உண்டா மென்ற பேராசை கொண்டு அவ்வாறே அரசன் அநுமதி பெற்று விவாகம் நடத்தத் துணிந்தனன். அதனால் வாணிக்கு விளைந்த சோகம் அளவற்றதாயிருந்தது. இச்சோகம் நீங்க மனோன்மணி பலவாறு ஆறுதல் கூறும் வழக்கமுடையவளா யிருந்தாள். இவ்வாறிருக்கும் போது முனிவர் கோட்டை காணவந்த நாளிரவில் ஈடு மெடுப்புமற்ற சேரதேசத் தரசனாகியபுருடோத் தமவரீமனைப் பூருவகரும பரிபாகத் தால் மனோன்மணி கனாக்கண்டு மோஹம் கொள்ள அவட்குக் காமசுரம் நிகழ்ந்தது. அச்சுரம் இன்ன தன்மைய தென்றுணராது வருந்தும் ஜீவகனுக்குத் தெய்வகதியாய்த் தம் அறைக்குமறுநாட்காலமே வந்த முனிவர் மனோன்மணி நிலைமை காம சுரமே எனக் குறிப்பாலுணர்ந்து அவள் நோய் நீங்கு மருந்து மணவினையே எனவும், அதற்கு எவ்விதத்திலும் பொருத்தமுடையோன் சேரதேசத்துப் புருடோத்தமனே யெனவும் அவ்வரசனது கருத்தினை நன்குணர்ந்து இம் மணவினை எளிதில் முடிக்க வல்லோன் நடராஜனேயெனவுங்

உபதேசிக்கின்றார். வாணியினது காதலனாகிய நடராஜன் மேல் அவள் பிதா ஆரோபித்திருந்த அபராதங்களால் வெறுப்புக் கொண்டிருந்த பாண்டியன் அக் குருமொழியை உட்கொள்ளாதவனாய்க் குடிலனுடைய துன்மந்திரத்தை விரும்பினன். குடிலனோ தன்னயமே கருதுவோனாதலால், சேரதேசத்தரசன் மருமகனாக வருங்காலத்தில் தன் சுவதந்தரியத்திற்கு எங்ஙனம் கெடுதி வருமோ என்ற அச்சத்தாலும், ஒருபால் தன் மகனாகிய பலதேவனுக்கே மனோன்மணியும் அவட்குரிய அரசாட்சியும் சித்திக்கலாதா என்ற பேராசையாலும் முனிவர் கூறிய மணத்தைத் தடுப்பதற்குத் துணிந்து தொடக்கத்திற் பெண் வீட்டார் மணம் பேசிப் போதல் இழிவென்னும் வழக்கத்தைப் பாராட்டிப் புருடோத்தமன் மணக்கோள் அறிந்தே அதற்கு யத்தனிக்க வேண்டுமென்றும், அப்படியறிதற்குப் பழைய சில விவாதங்களை மேற்கொண்டு ஒரு தூது அனுப்பவேண்டுமென்றும் அப்போது கல்யாணத்திற்குரிய சங்கதிகளையும் விசாரித்து விடலாமென்றும் ஒரு சூது கூற அதனை அரசன் நம்பி, குடிலமகன் பலதேவனையே இவ்விஷயத்திற்குத் தூதனாக அனுப்பினான்.

சேரதேசத்திலோ புருடோத்தமன் தனக்குச் சில நாளாக நிகழ்ந்துவரும் கனாக்களில் மனோன்மணியைக் கண்டு காமுற்று அவள் இன்னாளென வெளிப்படாமையால் மனம் புழுங்கி யாருடனேனும் போர் நேர்ந்தால் அவ் வாரவாரத்திலாயினும் தன் மனத்தைக் கொள்ளை கொள்ளும் கனாவொழியாதா வென்ற நோக்கமுடனிருக்கும் சந்தியாக இருந்தது. அதனாற் பலதேவன் சென்று தன் பிதா தனக்கு இரகசியமாகக் கற்பித்தனுப்பியபடி சேரன் சபையில் அகௌரவமான துர்வாதம் சொல்லவே புருடோத்தமன் கோபம் கொண்டு போர் பூண்டு பாண்டி நாட்டின் மேற் படையெடுத்துப் புறப்பட்டான். அச்செய்தி அறிந்து ஜீவகன் போருக்கு ஆயத்தமாகவே இருபடையும் திருநெல்வேலிச்

கெதிரிலே கை கலந்தன. அப்படிப் போர் நடக்கும்போது பாண்டியன் சேனையின் ஒரு வியூகத்திற்குத் தலைவனாக இருந்த பலதேவனை அவன் கீழிருந்த ஒரு சேவகன் தன் வேலாலே தாக்க, அதனால் அவன் மூர்ச்சிக்கவும், படை முழுதும்குழம்பவும் சங்கதி ஆயிற்று. அப்படித்தாக்கநேரிட்ட காரணமேதென்றால், பலதேவன் களவுவழிக் காமம் துய்க்கும் துன்மார்க்கனாதலால் அப்படைஞனது சகோதரியைக் கற்பழித்துக் கெடுத்துவிட்டது பற்றி யுண்டான வைரமே என்பது, படைஞன் வேலாற் பலதேவனைத் தாக்கிய பொழுது, கூறிய வன்மொழியாலும் அவன் தங்கைக்கு அரண்மனையினின்றும் பலதேவன் திருடிப் பரிசாக அளித்த ஒரு பொற்றொடி அவன் கையில் அக் காலம் இருந்தமையாலும் வெளிப்படுகின்றது. படை நியதி கடந்த அச்சேவகனை அருகுநின்ற வீரர் அக்கணமே கொன்றுவிட்டார்கள். பலதேவனும் மூர்ச்சை தெளிந்து கொண்டான். ஆயினும் படையிற் பிறந்த குழப்பம் தணியாது பெருகி விட்டதனால் பாண்டியன் சேனை சின்ன பின்னப்பட்டுச் சிதறுண்டு ஜீவகன் உயிர் தப்புவதும் அரிதாகும்படி தோல்வி நேர்ந்தது. சத்தியவாதியாகிய நாராயணன் என்னும் ஒரு சுத்த வீரர் அக்காலம் வந்து உதவி செய்யாவிடில் அப் போர்க் களத்தில் ஜீவகன் மாண்டேயிருப்பான்.

இந் நாராயணன் யாரென்றால், நடராஜனுடைய நண்பன். இவன் குடிலனுடைய சூதுகள் தெரிந்தவன். அரசன் நிந்தித்துத் தள்ளினும் அவனைக் காப்பாற்றும் பொருட்டு அவனை விட்டு நீங்காது மதுரையினின்றும் அவனோடு தொடர்ந்து வந்த பரோபகாரி. குடிலன் இவன் திறமும் மெய்ம்மையும் அறிந்துள்ளானாதலால், இந் நாராயணன் போர்முகத்திருக்கில் தான் எண்ணியபடி ஜீவகனுயிருக்குக் கேடுவரவொட்டான் எனக் கருதிச் சண்டை ஆரம்பிக்கும் முன்னமே அவனைக் கோட்டைக் காவலுக்காக நியமித்தனுப்பினான். ஆயினும் போர்க்களமே கண்ணாக இருந்த நாராயணன் சேனையிற் குழப்பம் பிறந்தது

கண்டு சில குதிரைப் படைகளைத் திரட்டிக் கொண்டு திடீரென்று பாய்ந்து சென்று அரசனையும் எஞ்சிய சேவகரையும் காப்பாற்றிக் கோட்டைக்குட் கொண்டு வந்து விடுத்தான். சுத்த வீரனாகிய அரசன் இங்ஙனம் தான் பகைவருக்கு முதுகிட்ட இழிவை நினைந்து நினைந்து துக்கமும் தூண்டவே தற்கொலை புரிய யத்தனிக்கும் எல்லை நாராயணன் மனோன்மணியினது ஆதரவின்மையை அரசனுக்கு நினைப்பூட்டி அக்கொடுந்தொழிலிலிருந்து விலக்கிக் காத்தான். அவனது நயவுரையால் அரசன் ஒருவாறு தெளிவடைந்திருக்கும்போது சேரன் விடுத்த ஒரு தூதுவன் வந்து, ஒரு குடத் தாமிரவர்ணி நீரும் ஒரு வேப்பந்தாரும் போரிலே தோற்றதற்கு அறிகுறியாகக் கொடுத்தால் சமர் நிறுத்துவதாகவும், அன்றேல் மறுநாட் காலையிற் கோட்டை முதலிய யாவும் வெற்றிடமாம்படி தும்பை சூடிப் போர் முடிப்பதாகவும் கூறினான். போரில் ஒருமுறை தான் புறங்கொடுத்த புகழ்க்கெடுதியை உயிர் விடுத்தேனும் நீக்கத் துணிவு கொண்ட ஜீவகன் அதற்குடன் படாமல் மறுத்துவிட்டு, பின்னும் சமருக்கே யத்தனித்துத் தன் அரண்களைச் சோதித்து, நோக்குங்கால் அவை ஒருநாள் முற்றுகைக்கேனும் தகுதியற்று அழிந்திருப்பதைக் கண்ணுற்று, அவ்வளவாகத் தன் படை முற்றும் தோற்க நேரிட்ட காரணம் வினவலாயினான். தன் கருத்திற்கெதிராக அரசனைக் காப்பாற்றியவரும் நாராயணன் மேற் தனக்குள்ள பழம்பகை முடிக்க இதுவே தருணம் எனக் கண்டு அரண் காவலுக்கு நியமிக்கப்பட்ட நாராயணன் காவல் விடுவித்துக் கடமை மீறி யுத்த களம் வந்ததே காரணமாகக் காட்டிக் கோபமூட்டிப் படையிற் பிறந்த குழப்பத்திற்கு ஏதுவாகப் பலதேவனை ஒரு சேவகன் வேலாற்றாக்கினதும் தெரிவித்து, அதுவும் வியூகத் தலைவனாக ஆக்கப் பெறாத பொறாமையால் நாராயணன் ஏவிவிட்ட காரியமே எனவும் அத்தொழிலுக்குப் பரிசாக அவன் அரண்மனையினின்றும் திருடிக் கொடுத்ததே அவன் கையிலிருந்த அரண்மனை முத்திரை பொறித்த பொற்றொடி எனவும் குடிலன் ஒரு பொய்க்கதை கட்டி அதனை

அவன் நம்பும்படி செய்தான். அவ்வாறே களவு கொலை அஞ்ஞாலங் கனம் முதலிய குற்றங்களை நாராயணன் மேற் சுமத்தி அவற்றிற்காக அவனைக் கழுவேற்றும்படி விதியும் பிறந்தது.

இத்தருணத்தில் சுந்தர முனிவர் அத்தியந்த ஆவசிக மான ஓர் ரகசியாலோசனைக்கு அரசனை யழைப்பதாகச் செய்தி வந்தமையால் நாராயணனை அவ்விதிப்படி கழுவேற்றவில்லை. முனிவர் இப்போது வந்த காரணம் என்னவென்றால், ஜீவகன் குடிலன் வசத்தனாய், நெல் வேலிக் கோட்டையே சாசுவதமென இறுமாந்திருந்தமை கண்டு பரிதாபம் கொண்டு, தமக்கென இரந்து வேண்டிக் கொண்ட அறைமுதல், தமாச்சிரமவெளி வரையும், ஆபத்காலோப யோகமாக அதிரகசியமான ஒரு சுருங்கை உழைத்துச் சமைத்துக் கொண்டு, பற்றுக்கோடற்று நின்ற ஜீவகனையும் அவன் மகளையும் கேடுற்றகோட்டையினின்றும் தமது ஆச்சிரமத்திற்கு அச்சுருங்கை வழியழைத்துச் செல்ல வுன்னியே சுந்தரர் இத்தருணம் எழுந்தருளினார். கோட்டை யின் நிலையாமையுணர்ந்தும் அதின்மேல் வைத்த அபிமானம் ஒழியாமையால் அஃதுடன் தான் முடியினும் இன்னும் ஒரு முறை போருக்கஞ்சிப் புறங்கொடுத்தல் தகாதென ஜீவகன் துணிந்து மறுக்க, மனோன்மணி, பாண்டியர் குலத்திற்கு ஏக சந்ததியாக இருப்பதனால் மற்றையர் எக்கேடுறினும் அவளையேனும் காப்பாற்றுதல் தம் கடமையென ஒரு தலையா, உறுத்து முனிவர் கூறமன்னவன் அங்ஙனம் இயைந்து நடுநிசியில் முனிவரோடு தன் மகளை ஆச்சிரமம் அனுப்புவ தாக ஒப்புக் கொண்டான். முனிவரும் சம்மதித்து அகன் றார்; உடனே நிசாமும் தோன்றிற்று. தன் அருமை மகளைப் பிரியும் வருத்தம் ஒருபுறமும், பிரியாதிருக்கில் அவட்குண் டாகும் கெடுதியைக் குறித்த அச்சம் மற்றொரு புறமாக, ஜீவகன் சித்தத்தைப் பிடித்தலைக்கக் கலக்கமுற்று, குரு மொழியிலும் ஐயம் பிறந்து, குடிலனை வரவழைத்து முனிவர் அதிரகசியமாகக் கூறிய சுருங்கை முதல் சகல சங்கதியும்

தெரிவித்து அவனது அபிப்பிராயம் உசாவுவானாயினன். அதற்கு அப்பாதகன் இதுவே தன் மனக்கோள் நிறைவேற்றற்குரிய காலமெனத் துணிந்துகொண்டு மனோன்மணியை இடம் பெயர்ப்பது தற்கால நிலைமைக்கு எவ்விஷயத்திலும் உத்தம மெனவும், ஆயினும் மணவினை முடியா முன்னம் அனுப்புதலால், கன்னியாகிய அவளுக்குப் பழிப்புரைக் கிடமாவதேயல்லால் அரசனுக்குச் சற்றும் சித்த சமாதானத் திற்கிடமில்லை யெனவும் அவன் நெஞ்சில் சஞ்சலம் விளைவித்து, ஜீவகன் தானாகவே பலதேவனுக்கு மனோன்மணியை அன்றிரவே கல்யாணம் செய்துகொடுத்து முனிவர் ஆச்சிரமத்திற்கு மகளையும் மருமகனையும் சேர்த்து அனுப்புவதாகத் துணியும்படி தூண்டிவிட்டுத் தான் நெடுங்காலமாகக் கொண்டிருந்த அபிலாஷத்தைப் பூர்த்திப் படுத்திக் கொண்டான்.

ஆயினும் அவ்வளவோடு நில்லாமல், தன்னையறியாமல் முனிவர் வகுத்த கள்ள வழியைக் கண்டறிய வேண்டுமென்று விருப்புற்று, அது அவர் வந்த அன்றே தமக்காகப் பெற்றுக்கொண்ட அறைக்குச் சம்பந்தப்பட்டிருப்பதே இயல்பென ஊகித்து, அவ்வறையில் சென்று நோக்கி அச் சுருங்கையைக் கண்டுபிடித்து அவ்வழியே போய் வெளியேறிப் பார்க்குங்கால், சத்துரு பாசறை அருகே தோன்றிற்று. அன்று பகலில் தன் மகனுக்குச் சண்டையில் நேரிட்ட மோசடிபோலத் தனக்கு இனி வரக்கிடக்கும் போரில் உட்பகையாலோ வெளிப்பகையாலோ யாதேனும் அபாயம் நேரிட்டுவிடலாமென்ற பயத்தாலும் மனோன் மணி விவாகம் எப்படியும் அன்றிரவே நடந்தேறுமென்ற துணிவாலும், நடந்தேறில் ஜீவகனது பிரிதியால் சிந்திக்கத் தக்கது வேறொன்றுமில்லை யென்ற இறுதியாலும், கோட்டைக்குத் திரும்ப வேண்டுமென்ற எண்ணம் விடுபட, தான் வருந்திக் கண்டுபிடித்த கற்படையைச் சேரனுக்குக் காட்டி அவ்வழியே அவனை அழைத்துச் சென்று யாதொரு உயிர்ச் சேதத்திற்கு மிடமில்லாமல்,

பாண்டியனையும் அவன் கோட்டையினையும் சுலபமாகப் பகைவன் கையில் ஒப்புவித்து விட்டால், ஒரு குடம் ஜலத்திற்கும் ஒரு பூமாலைக்குமாகச் சமரை நிறுத்தித் தன்னூருக்குச் சிங்காதனம் சேர்க்காதொழிவனோ என்ற பேராசை பிடர்பிடித்துந்தவும் ஊழ்வலி யொத்து நிற்கவும் செய்தனினால் அத்துரோகியாகிய குடிலன் மெள்ள மெள்ளப் பாசறை நோக்கிப் போகவே கனாவில் மனோன்மணியினது உருவங்கண்டு காமுற்ற நாள் முதலாக யாதொன்றிலும் மனஞ் செல்லாதவனாய் இரவெல்லாம் நித்திரை யற்றுத் தனியே திரிந்து வருந்தும் புருடோத்தமனை நடுவழியிற் சந்தித்துக் கொண்டான். அதுவும் தனது பாக்கியக் குறியாகவே மதித்து மகிழ்ந்த குடிலன், எதிர்ப்பட்ட சேரனிடம் தனது துரோக சிந்தனையை வெளிப்படுத்த, தன்னயங்கருதாச் சதுரனாகிய புருடோத்தமன் தன் சேவகரைக் கூவிக் குடிலன் காலிலும் கையிலும் விலங்கிடுவித்து, "வீரமே உயிராகவுடைய வஞ்சி வேந்தருக்கு வெற்றி யன்று விருப்பு, இவ்வித இராஜ துரோகிகளைக் காட்டிக் கொடுத்து, மாற்றலராகிய மன்னவரையும் இரட்சித்துப் பின்பு வேண்டுமெற் பொருது தமது வீரம் நாட்டலேயாம்" என அவனுக்கு விடைகூறி, அவன் கூறிய சுருங்கை வழியே ஜீவகன் சபைக்கு வழிகாட்டி வரும்படி கட்டளையிட்டான். இம் மொழி கேட்ட பாவி இடியொலி கேட்ட பாம்புபோலத் திடுக்கிட்டுத் திகைத்து நின்றான். ஆயினும் தானிட்ட கட்டளை மீறில் சித்ரவதையே சிஷையாமென்று சேரன் சினந்து கூற, அதற்கு அஞ்சி அவ்வாறே கற்படைக்கு வழிகாட்டி நடப்பானாயினன்.

இப்பால் ஜீவகன் தன் மகளைப் பலதேவனுக்கு மணஞ் செய்வித்து இருவரையும் முனிவர் ஆச்சிரமம் அனுப்புவதே தகுதியெனத் தெளிந்தவாறே அச் செய்தியை மனோன்மணிக்கறிவிக்க அது அவள் செவிக்குக் காய்ச்சின நாராசம்போலிருந்ததாயினும் தன் பிதாவுக்கு நேர்ந்த ஆபத்துக் காலத்தை நன்குணர்ந்து அவனுக்கேற்றபடி நடந்து

அவனைத் தேற்றுவதே தற்கால நிலைக்கேற்ற தனது கடமைப்பாடெனத் தெளிந்து அங்ஙனம் ஒப்புக் கொண்டதுமன்றி, தன் பாடு எங்ஙனம் ஆயினும் தன்னைச் சார்ந்தவர் சுகத்தைப் பாராட்டும் பெருங்குணத்தால் காதல் கொண்டிருக்கும் வாணி தன் கருத்திற்கிசைய நடராஜனை மணஞ் செய்து கொள்ளவும், நெடுங்காலமாகத் தன் குடும்ப ஊழியம் தலைக்கொண்டு நின்ற நாராயணன் செய்த தவறு யாதேயாயினும் அதனைப் பொறுத்து அவனைச் சிறைவிடவும் தன் பிதாவினிடம் விரும்பிக் கேட்டுக் கொண்டனள். அப்படியே ஜீவகன் அனுமதி கொடுத்து அகமகிழ்ந்து மணவினைக்கு ஆயத்தம் செய்யவே, நடுநிசி சமீபிக்க முனிவரும் நடராஜனும் வந்து சேர்ந்தார்கள். தாம் போய் மீளுவதற்குள்ளாகக் குடிலன் செய்த துராலோசனையும், அதற்குடன்பட்ட மன்னவனுடைய ஏழ்மையும், கருணாவிலாசம் இருந்தமையும் கண்டு வியந்து, அரசன் நிச்சயித்த வண்ணமே நடத்த சுந்தரர் இசைந்தார்.

கற்படைக் கருகில் உள்ள மணவறையை விவாக முகூர்த்தத்திற் கிசைந்தவாறு அலங்கரித்து, அதில் குடிலன் ஒழிய மற்ற மந்திரப் பிரதானிகளுடன் முனிவர் ஜீவகன் நடராஜன் பலதேவன் நாராயணன் முதலிய அனைவரும் கூடிக் குடிலன் வரவிற்குச் சற்று எதிர்பார்த்திருந்தும் வரக் காணாமையால் மணவினைச் சடங்குகள் தொடங்கி, பலதேவனுக்கு மாலைசூட்ட மனோன்மணியை வரவழைக்கும் எல்லை, குடிலன் வழிகாட்ட, கற்படைவழி வந்த புருடோத்தமனும் முனிவ ரறையில் வந்து சேர்ந்து அடுத்த அறையாகிய மணவறையில் நடக்கும் ஆகோஷம் என்னவென்று நோக்கவே, தன் திரைவிட்டு வெளிவந்து பலதேவனெதிரே மணமாலையும் கையுமாய்ச் சித்திரப் பிரதிமைபோல உணர்வற்றுச் செயலற்று நின்ற தன் காதலியாகிய மனோன்மணியைக் கண்ணிரண்டும் களிக்கக் காணலும், பள்ளத்துட்பாயும்

பெருவெள்ளம் போல் அவாப் பெருகி யீர்த்தெழ, திடீ ரென்று கடிதிற் குதித்து யாரும் அறியாது சபையுட் புகுந்து கையற்ற சோகத்தால் மனமிறந்து நின்ற மனோன்மணி தன் கண் முன் சென்று நின்றனன். தன்னுள்ளத்திருந்த தலை வன் இங்ஙனம் பிரத்தியக்ஷப்படலும் அக்கணமே ஆனந்தப் பரவசப்பட்டு மனோன்மணி தன் கைக்கொண்ட மண மாலையை அவன் கழுத்தோடு சேர்த்துத் தற்போதமிழந்து அவன் தோண்மேல் வீழ்ந்து மூர்ச்சையாயினள். இங்ஙனம் அயலான் ஒருவன் சபையுட் புகுந்ததும், மனோன்மணி அவனுக்கு மாலைசூட்டி மூர்ச்சித்ததும் கண்டு ஜீவக னாதியர் திடுக்கிட்டுச் சூதெனக் கருதிப் பொருதற் கெழுங் கால், சுந்தர முனிவர் கையமைத்துச் சமாதானம் பிறப் பிக்கப் புருடோத்தமன், குடிலன் தன்னிடத்தில் வந்துகூறிய துரோகச் சிந்தனையும் தான் அதற்கிசையாது அவனையே கால்யாய்ப்பிட்டு ஜீவகனுடன் ஒப்புவிக்கக் கொணர்ந்த மையும் கூறித் தனக்குயிர்நிலையா நின்ற மனோன்மணி யுடன் தன் பாசறைக்கு மீள யத்தனிக்குமளவில், சுந்தர முனிவர் ஆஞ்ஞையால் ஜீவகன் மனந்தெளிந்து. மகளையும் மருமகனையும் வாழ்த்த அதுகண்ட யாவரும் கண் படைத்த பெரும்பயன் அடைந்து அருட்டிறம் புகழ்ந்து ஆனந்தம் அடைந்தனர்.

இதுவே இந் நாடகத்துள் வரும் கதையின் சுருக்கம். இக் கதையை வேண்டுழி வேண்டுழி விரித்து ஆங்கிலேய நாடகரீதியாம் ஜீவகனாதியராகிய கதாபுருஷர்களுடைய குணாதிசயங்கள் அவர் அவர் வாய்மொழிகளால் வெளிப் படும்படி செய்திருப்பதுமன்றி, 'வாழ்த்து வணக்கத்துடன்' தொடங்கி, ''நாற்பொருள் பயக்கும் நடை''யினைக் கூடிய அளவும் தழுவி, ''தன்னிகரில்லாத் தலைவனையும்'' தலைவியையும் உடைத்தாய், ''மலைகடனாடு வளநகர் பருவம் இரு சுடர்த் தோற்றம்'' என்றின்னவும் பிறவும் ஏற்புழிப் புனைந்து, ''நன்மணம் புணர்தலே'' முடிவாகக் கொண்டு, ''மந்திரம் தூது செலவிகன் வென்றி'' எனச்

சந்தியிற்றொடர்ந்து "அங்கம் களம்" என்னும் பாகுபாடுடைத்தாய் நிற்கும் இந்நாடகத்தில் தமிழ்க் காவிய உறுப்புக்கள் பற்பல ஆங்காங்கு வருவித்திருப்பதும் அன்போடு பார்ப்போம் கண்ணுக்குப் புலப்படலாம்.

இல்லறம் துறவறம் பத்தி ஞான முதலிய மோக்ஷ சாதனங்கள் பொருத்தமுடைய சந்திகளில் வெளிப்படையாக அமைந்திருப்பதுமல்லாமல் இக் கதையினையே ரூபகமாலாலங்காரமாகக் கருதில், தத்துவ சோதனை செய்யும் முமுக்ஷுகளுக்கு அநுகூலமாகப் பலிக்கவும் கூடும். அப்படி உருவக மாலையாகக் கொள்ளுங்கால், ஜீவகனைச் சார்போதனமான ஜீவாத்மா ஆகவும் அவனைத் தன் வசப்படுத்தி யாட்டுவித்த குடிலனை மாயா சக்தியாகவும், மனோன்மணியை ஜீவாத்மாவின் பரிபக்குவ காலத் துதிக்கும் முத்திக்குரிய உத்தம பாகமான சுத்த தத்துவமாகவும், அவள் தோழி வாணியைப் புத்தித்தத்துவமாகவும், அவள் காதலனாகிய நடராஜனை ஞானதாதக்வான உபாசனா மூர்த்தியாகவும் புருடோத்தமனை அனுக்கிரக சத்தியாகவும், சுந்தர முனிவரைக் கருணாநிதியாகிய ஞானாசாரியராகவும், ஜீவகனுக்குத் தலைநகராகக் கூறிய முத்திபுரம் என்னும் மதுரையை ஜீவாத்மா வுதித் தொடுங்கும் மூலத்தானமாகவும், அவனும் குடிலனும் சேர்ந்து கட்டிய நெல்வேலிக் கோட்டையை மாயாகாரியமான அன்னமயாதி பஞ்சகோசத்தாலமைந்த சரீரமாகவும், அதிலிருந்து மனோன்மணி கண்ட கனாவைச் சுத்தாந்தக்கரண ஜநிதமான பரோக்ஷஞானமாகவும், சேரதேசத்தில் புருடோத்தமன் கண்ட கனாவைப் பரம பசுபதியான ஈசுவரனது அருளின் நிறைவாகவும், மனோன்மணியும் புருடோத்தமனும் சந்திக்கக் காரணமாக முடிந்த முனிவர் காட்டிய சுருங்கையைப் பிரத்தியக்ஷானுபூதிக் கேதுவான பாச விமோசன பந்தாவாகவும், பிறவும் இம்முறையே பாவித்து உய்த்துணர்ந்து கொள்ள வேண்டியது.

ஏறக்குறைய வாசக நடைக்குச் சமமான அகவற்பாவால் இந் நாடகம் பெரும்பாலும் ஆக்கப்பட்டிருக்கிறதினால் ஒருவர் மொழியாக வரும் ஒருவரியில் அகவல் அடி முடியாவிடங்களில் அடுத்த வரியில் வரும் சீரோடு சேர்த்து ஆசிரிய அளவடியாக்கி முடித்துக் கொள்க.

பல்வேறு தொழில்களிடையிலும் பிணி கவலையாதிகள் நடுவிலும் ஆங்காங்கு அகப்பட்ட அவகாசங்களிற் செய்யப்பட்டமையால் இந் நாடகத்துட் பல பாகங்கள் என் சிற்றறிவிற்கே திருப்தி தருவன அல்ல. ஆயினும் கல்வி கேள்விகளிற் சிறந்த கனவான்கள் இக்கூறிய குறைவுகளைப் பாராட்டாது என்னை இம்முயற்சிக்குத் தூண்டி விட்ட நன்னோக்கத்தையே கருதி இந்நவீன நாடகத்தை அநாதரவு செய்யாது கடைக்கணித்து அருள்புரியப் பலமுறை பிரார்த்திக்கின்றேன்.

"பொறியின்மை யார்க்கும் பழியன்(று) அறிவறிந்
தாள்வினை யின்மை பழி."

குருசுந்தர சரணாலயம்.

# களத்திற் கூறப்பட்ட பொருள்கள்

**அங்கம்** **களம்**

I காவியங்களுக்குரிய மலை நதி அரண் இவற்றின் வருணனை (1)
மன்மதோதா பாலம்பனமும் சேசாதிபாத வருணனையும் (2)
கனாக்கண்டு காமங்கொண்ட மனோன்மணியின் காமசுர வருணனை (3)
சாதல் நிலைமை வாணியின் வாசகத்தால் வருணிக்கப் படுகிறது (4)
குடிலன் துர்க்குணம் அவனது மொழிகளாலேயே விளக்கப் படுகிறது (5)

II நாட்டுவளம்—திணைமயக்கம்—தூதிலக்கணம்—செங் கோன்மை—அமைச்சு முதலியன (1)
சூர்யோதய வருணனையும் இல்லற இயல்பும். (2)
பலதேவன் தூதும் புருஷோத்தமன் போருக்கு எழுதலும் (3)

III புருஷோத்தமன் தூதும் அதனைப் பற்றிய ஜீவககுடிலர் சம்பாஷணையும், (1)
சூரியாத்தமனமும், சராசரங்களில் தோற்றும் திருவருள் வைபவமும், (2)
சந்தியாவருணனையும் மனோன்மணியின் சோக நிலையும், பத்தியின் சுபாவமும், உபயார்த்தமுடைய சிவகாமி சரிதமும். (3)
சுந்தர முனிவர் சீடர்கள் போரைப்பற்றியும், மற்றும் உலகியல்களைப் பற்றியும் உரையாடல். (4)

IV நாற்படை வருணனையும் நாட்டபிமான விளக்கமும் வீரரசமும் (1)
தருமயுத்தத்தின் நீதியும், படைக்குள் குழப்பம் பிறக்க அரசனுக் கபாயம் நேர்ந்தவழி நாராயணன் காக்கச் சென்ற கதையும் (2)
ஜீவகன் சோகமும், குடிலனுடைய தந்திர நடபடியும், பல தேவனுடைய கீழ்ப்படியாத் துர்க்குணமும் (3)
குடிலன் நாராயணன் மேல் பொய்க்குற்றம் காட்டி நிலை நிறுத்திய தந்திரமும் ராஜபத்தியின் இயல்பும் (4)
அரசர் கடமையும் ஆண்மையும், ஜீவகனது ஏழைமையும் குடிலனுடைய சமயோசித சாமர்த்தியமும் (5)

V புருஷோத்தமனுடைய காம நிலைமையையும், குடிலன் அகப் பட்டுக் கொண்ட கதையும் (1)
மனோன்மணியின் பரிபக்குவ நிலைமை, உத்தம தபசின் இலக்கணமும், (2)
மனோன்மணி தெய்வ அருளால் புருடோத்தமனைச் சந்தித்து மாலை சூட்டினமை. (3)

# மனோன்மணீயம்

## பாயிரம்

### கடவுள் வணக்கம

(நேரிசை வெண்பா)

வேத சிகையும்[1] விரிகலையும் மெய்யன்பர்
போதமும்[2] போய்த்தீண்டாப் பூரணமே—பேதமற
வந்தெனை நீ கூடுங்கால் வாழ்த்துவர்யார் வாராக்கால்
சிந்தனையான் செய்ம்முறையென் செப்பு.

### தமிழ்த்தெய்வ வணக்கம்

(பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா)

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே. (1)

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே. (2)

(இவ்விரண்டும் ஆறடித்தரவு)

---

1. வேதங்களின் உச்சியான உபநிடதம் 2. அறிவு.

முதற்பாட்டில், கடலால் சூழப்பட்ட உலகம் தாயாகவும் பரத கண்டம் அத்தாயின் திருமுகமாகவும் தக்காணமாகிய தென்னிந்தியா அத் திருமுகத்தில் அழகுற அமைந்துள்ள நெற்றியாகவும், தமிழ்த் திருநாடு அந்நெற்றியில் விளங்கும் பொட்டாகவும் தமிழ்மொழி அப் பொட்டிலிருந்து எழும் புதுமணமாகவும் உருவகித்துக் கூறப் பட்டுள்ளமை காண்க.

கடல்குடித்த குடமுனி[1] யுன் கரைகாணக் குருநாடில்
தொடுகடலை[2] யுனக்குவமை சொல்லுவதும் புகழாமே. (1)

ஒருபிழைக்கா அரனார்[3] முன் உரையிழந்து விழிப்பாரேல்
அரியதுன திலக்கணமென் றறைவதுமற் புதமாமே. (2)

சதுமறை[4] யா ரியம்வருமுன் சகமுழுது நினதாயின்
முதுமொழிநீ அநாதியென மொழிதவதம் வியப்பாமே (3)

வேகவதி[5]க் கெதிரேற விட்டதொரு சிற்றேடு
காலநதி நினைக்கரவாக் காரணத்தி னறிகுறியே. (4)

கடையூழி[6] வருந்தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள்[7]
உடையாருன்[8] வாசகத்தி லொருபிரதி கருதினதே. (5)

தக்கவழி விரிந்திலகுஞ் சங்கத்தார் சிறுபலகை
மிக்கநலஞ் சிறந்தவுன்றன் மெய்ச்சரித வியஞ்சனமே[9] (6)

வடமொழிதென் மொழியெனவே வந்தவிரு விழியவற்றுள்
கெடுவழக்குத் தொடர்பவரே கிழக் கொடுமேற் குணராரே.
(7)

வீறுடைய கலைமகட்கு விழியிரண்டு மொழியானால்
கூறுவட மொருவலமாக் கொள்வர்குண திசையறியார். (8)

கலைமகடன் பூர்வதிசை[10] காணுங்கா லவள்விழியுள்
வலதுவிழி தென்மொழியா மதியாரோ மதியுடையார். (9)

பத்துப்பாட் டாதிமனம் பற்றினார் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே.
(10)

வள்ளுவர்செய் திருக்குறளை மறுவற[11] நன்குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி யொருகுலத்துக் கொருநீதி. (11)

மனங்கரைத்து மலம்[12]கெடுக்கும் வாசகத்தில் மாண்டோர்கள்
கனஞ்சடை[13] யென் றுருவேற்றிக் கண்மூடிக்
கதறுவரோ. (12)

(இவை பன்னிரண்டும் தமிழிசை)

---

1. அகத்தியர் 2. (சகர புத்திரரால்) தோண்டப்பெற்ற கடல், 3. சிவபெருமான் 4. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நால் வேதங்கள் 5. வையை யாறு 6. யுகமுடிவு 7. தில்லை 8. சிவபெருமான் 9. அறிகுறி 10. கிழக்குத்திசை 11. குற்றமற 12. மும்மலம், ஆணவம், கன்மம், மாயை 13. வேதத்தை உரு வேற்றும் முறை.

எனவாங்கு

(இது தனிச் சொல்)

நிற்புகழ்ந் தேத்துநின் நெடுந்தகை மைந்தர்
பற்பலர் நின்பெரும் பழம்பணி புதுக்கியும்
பொற்புடை நாற்கவிப் புதுப்பணி குயிற்றியும்
நிற்பவர் நிற்க நீபெறும் புதல்வரில்
அடியேன் கடையேன் அறியாச் சிறியேன்
கொடுமலை யாளக் குடியிருப் புடையேன்
ஆயினும் நீயே தாயெனுந் தன்மையின்
மேயபே ராசையென் மீக்கொள ஓர்வழி
உழைத்தலே தகுதியென் றிழைத்தவிந் நாடகம்
வெள்ளிய தெனினும் விளங்குநின் கணைக்காற்கு
ஒள்ளிய சிறுவிர லணியாக்
கொள்மதி யன்பே குறியெனக் குறித்தே.

(இது ஆசிரியச் சரிகதம்)

## அவையஞ்சின நெஞ்சொடு கிளத்தல்

(நேரிசை வெண்பா)

அமைய அருளனைத்தும் ஆட்டுமேல் நெஞ்சே
சுமைநீ பொறுப்பதெவன் சொல்லாய்—நமையுமிந்த
நாடகமே செய்ய நயத்தால் அதற்கிசைய
ஆடும்வா நாணம் அவம்

பாயிரம் முற்றிற்று

* * *

| | |
|---|---|
| வெண்பா | 2—க்கு அடி 8 |
| கலிப்பா | 1—க்கு அடி 49 |
| ஆகப் பாயிரம் 1-க்கு அடி | 57 |

## நாடக உறுப்பினர்கள்

| | |
|---|---|
| ஜீவகவழுதி | : பாண்டி நாட்டரசன் |
| குடிலன் | : ஜீவகனின் முதன் மந்திரி |
| சுந்தரமுனிவர் | : ஜீவகவழுதியின் குலகுரு |
| நிஷ்டாபரர் | : } சுந்தர முனிவரின் சீடர்கள் |
| கருணாகரர் | : } சுந்தர முனிவரின் சீடர்கள் |
| நடராஜன் | : வாணியின் காதலன் |
| நாராயணன் | : ஜீவகனின் துணைவன் |
| பலதேவன் | : குடிலன் மகன் |
| சகடன் | : வாணியின் தந்தை |
| முருகன் | : ஜீவகனின் படைவீரருள் ஒருவன் |
| புருடோத்தமவர்மன் | : சேரதேசத் தரசன் |
| அருள்வரதன் | : சேரதேசத்துச் சேனாதிபதி |
| மனோன்மணி | : ஜீவகன் மகள் |
| வாணி | : மனோன்மணியின் தோழி |

சேவகர், படைவீரர், ஒற்றர், உழவர், செவிலித்தாய், தோழியர், நகரவாசிகள் முதலியோர்.

நாடக நிகழ்ச்சி :

திருநெல்வேலியிலும் திருவனந்தபுரத்திலும்.

# மனோன்மணீயம்

## முதல் அங்கம்

### முதற்களம்

இடம் : பாண்டியன் கொலு மண்டபம். காலம் காலை.

[சேவகர்கள் கொலு மண்டபம் அலங்கரித்து நிற்க]

(நேரிசை ஆசிரியப்பா)

**முதற் சேவகன் :**

புகழ்மிகு அமைதரு பொற்சிங் காதனம்
திகழ்தர இவ்விடஞ் சேர்மின், சீரிதே.

**இரண்டாம் சேவ :**

அடியிணை யருச்சனைக் காகுங் கடிமலர்[1]
எவ்விடம் வைத்தனை?

**மூன்றாம் சேவ :** ஈதோ! நோக்குதி.

**நான்காம் சேவ :**

அவ்விடத் திருப்பதென்?

**3-ம் சேவ :** ஆரம். பொறு! பொறு!

விழவறா[2] வீதியில் மழையொலி யென்னக்
கழைகறி[3] களிறுகள் பிளிறுபே ரொலியும்,
கொய்யுளைப்[4] புரவியின் குரத்தெழும் ஓசையும்,
மொய்திரண் முரசின் முழக்கும் அவித்துச்
'சுந்தர முனிவா! வந்தனம் வந்தனம்'
எனுமொலி யேசிறந் தெழுந்தது. கேண்மி

**2-ம் சேவ :**

முனிவரர் என்றிடிற் கனிவுறுங் கல்லும்!

**3-ம் சேவ :**

எத்தனை பத்தி; எத்தனை கூட்டம்!
எள்விழற் கிடமில்லை. யான்போய்க் கண்டேன்!

---

1. மணம் மிக்க மலர்கள் 2. விழாக்கோலம் நீங்கப் பெறாத.
3. கரும்பைக் கடிக்கும் 4. கத்திரித்து மட்டஞ் செய்யப்பட்ட

3-ம் சேவ :
உனக்கென் கவலை? நினைக்குமுன் ஓடலாம்.

முதல் சேவ :
அரசனும் ஈதோ அணைந்தனன்[1] காணீர்!
ஒருசார் ஒதுங்குமின் ஒருபுறம்! ஒருபுறம்!
[ஜீவகன் வர]

யாவரும் : (தொழுது)
ஜய! ஜய! விஜயீ! பவரா ஜேந்திரா!!
[சுந்தர முனிவர், கருணாகரர், குடிலன்,
நகரவாசிகள் முதலியோர் வர]
ஜய! ஜய! விஜயீ! தவரா ஜேந்திரா!!

ஜீவகன் :
வருக! வருக! குருகிரு பாநிதே!
திருவடி தீண்டப் பெற்றவிச் சிறுகுடில்
அருமறைச் சிகரமோ ஆலநன் னீழலோ
குருகுல விஜயன் கொடித்தேர்ப் பீடமோ
யாதென ஓதுவன்? தீதற வாதனத்து
இருந்தருள் இறைவ! என்பவ பாசம்[2]
இரிந்திட[3] நின்பதம் இறைஞ்சுவல் அடியேன்!
[ஜீவகன் பாத பூசை செய்ய]

சுந்தர முனிவர் :
வாழ்க! வாழ்க! மன்னவ! வருதுயர்
சூழ்பிணி யாவுந் தொலைந்து வாழ்க!
சுகமே போலும், மனோன்மணி?

ஜீவ : சுகம். சுகம்.

சுந்தர :
இந்நக ருளாரும் யாவரும் க்ஷேமம்?

ஜீவ : உன்னரு ளுடையோர்க் கென்குறை? க்ஷேமம்.
கூடல் மாநகர் குடிவிட் டிப்பால்
பீடுயர் நெல்லையில் வந்தபின் பேணி
அமைத்தன னிவ்வரண் இமைப்பறு தேவரும்
கடக்கரும் இதன்றிறம் கடைக்கண் சாத்தி
ஆசிநீ யருள நேசித் தேன்நனி.

---

1. வந்தனன் 2. பிறப்பிற்குக் காரணமான ஆசை,
3. மூறித்தோட

எத்தனை புரிதான் இருக்கினும் எமக்கெலாம்
அத்த![1] நின் அருள்போல் அரணெது? குடில!
இவ்வழி யெழுந்தநம் இறைவர், கடிபுரி[2]
செவ்விதின் நோக்கக் காட்டுக தெரிந்தே.

**குடிலன் :**

ஊன்வரு பெருநோய் தான்விட அடைந்த
அன்பரின் புறஇவ் வருளுருத் தாங்கி
வந்தருள் கிருபா சுந்தர மூர்த்தி!
நீயறி யாததொன் றில்லை. ஆயினும்,
உன்னடி பரவி யுரைப்பது கேண்மோ;
தென்பாண்டி நாடே சிவலோக மாமென
முன்வாத வூரர்[3] மொழிந்தனர். அன்றியுந்
தரணியே பசுவெனச் சாற்றலும் மற்றதிற்
பரதமே மடியெனப் பகர்வதுஞ் சரதமேல்,[4]
பால்சொரி சுரைதென் பாண்டி யென்பது
மேல்விளம் பாதே விளங்கும் ஒருகால்
எல்லா மாகிய கண்ணுதல் இறைவனும்[5]
பல்லா யிரத்த தேவரும் பிறரும்
நிலைபெற நின்ற பனிவரை[6] துலையின்[7]
ஒருதலை யாக, உருவஞ் சிறிய
குருமுனி தனியா யுறுமலை மற்றோர்
தலையாச் சமமாய் நின்றதேல், மலைகளில்
மலையமோ[8] அலதுபொன் வரை[9]யோ பெரிது?
சந்து[10] செவிவழித் தந்த கங்கையும்,
பின்னொரு வாயசங்[11] கவிழ்ந்த பொன்னியும்,[12]
வருந்திய தேவரோ டருந்தவர் வேண்ட,
அமிழ்கினுஞ் சிறந்த தமிழ்மொழி பிறந்த
மலையம்நின் றிழிந்து, விலையர் முத்தும்
வேழவெண் மருப்பும்[13] வீசிக் காழகிற்[14]

---

1. தலைவன் 2. காவல் மிக்க கோட்டை 3. மாணிக்க வாசகர் 4. உண்மை 5. சிவபெருமான் 6. மேருமலை. 7. துலாக்கோல் (தராசு) 8. பொதியமலை 9. மேருமலை 10. ஒரு முனிவர் 11. காகம் 12. காவிரி 13. யானைத் தந்தம். 14. வைரம் பொருந்திய அகிற்கட்டை.

சந்தனா டவி[1] யுஞ் சாடி[2] வந்துயர்
குங்கும முறித்துச் சங்கின மலறுந்
தடம்பனை[3] தவழ்ந்து மடமயில் நடம்பயில
வளம்பொழில் கடந்து குளம்பத நிரப்பி,
இருகரை வாரமுந் திருமக ளுறையுளாய்

பண்ணுமிப் புண்ணிய தாமிர வர்ணியும்
எண்ணிடி லேயுமென் றிசைக்கவும் படுமோ?
இந்நதி வலம்வர விருந்தநம் தொன்னகர்
பொன்னகர்[4] தன்னிலும் பொலிவுறல் கண்டனை
தொடுகட லோவெனத் துணுக்குறும் அடையலர்[5]

கலக்கத் தெல்லையுங் கட்செவிச் சுடிகையும்[6]
புலம்பட வகன்றாழ் புதுவக ழுடுத்த
மஞ்சு[7]கண் துஞ்சுநம் இஞ்சி யுரிஞ்சி[8]
உதயனு[9] முடல்சிவந் தனனே! அதன்புறம்
நாட்டிய பதாகையில்[10] தீட்டிய மீனம்,

உவாமதிக்[11] குறுமா சவாவொடு நக்கும்.
வெயில்[12]விரி யெயி[13]லினங் காக்க இயற்றிய
எந்திரப்[14] படைகளுந் தந்திரக் கருவியும்
பொறிகளும் வெறிகொளுங் கிறிகளு[15] மெண்ணில

சுந்தர : (எழுந்து)

சம்போ! சங்கர! அம்பிகா பதேஎ!

நன்று மன்னவ! உன்றன் றொல்குலங்
காக்கநீ யாக்கிய இவைவெலாம் கண்டுளேம்.
அல்லா துறுதி யுளதோ? சொல்லுதி!

ஜீவ : என்னை! என்னை! எமக்கருள் குரவ!
இன்னும் வேண்டிய தியாதோ? துன்னலர்[16]

---

1. சந்தனக்காடு 2. மோதி 3. அகன்ற வயல்.
4. தேவலோகத்தின் தலைநகரமான அமராவதி நகர்.
5. பகைவர் 6. உச்சிக்கொண்டை 7. மேகம்.
8. மதிலைத் தேய்த்து 9. கதிரவன் 10. கொடிச்சீலை
11. நிறை நிலா 12. ஒளி 13. மதில் 14. பல்வகைப் பொறிகள். 15. வஞ்சக வழிகள். 16. பகைவர்.

வெருவுவர் [1]கேட்கினும், பொருவை வென்றுகைக்
கொள்ளுவ ரென்பதும் உள்ளற் பாற்றோ?
ஆயினும் அரணி லுளபுரை[2] நோக்கி
நீயினி இயம்பிடில் நீக்குவன் நொடியே.

**சுந்தர :** காலம் என்பது கரங்கு[3]போற் சுழன்று
மேலது கீழாக் கீழது மேலா
மாற்றிடுந் தோற்ற மென்பது மறந்தனை
வினைதெரிந் தாற்றும் வேந்தன் முனமுனம்,
ஆயற்பாற்ற தழிவும் அஃதொழி
வாயிலு மாமென வையகம் புகலும்,
உன்னையு முன்குலத் துதித்தநம் மனோன்மணி
தன்னையுஞ் சங்கரன் காக்க! தயாநிதே!
அன்பும் அறமுமே யாக்கையாக் கொண்ட
நின்புதல் வியையான் காணநே சித்தேன்,
அத்திரு உறையும் அப்புறம் போதற்
கொத்ததா மோஇக் காலம்? உணர்த்தாய்.

**ஜீவ :** ஆம்! ஆம்! சேவக! அறைதி சென்று
தேமொழிக் கன்னிதன் சேடியர் தமக்கு
நங்குல முனிவர் இங்குள ரெனவே,

[அரசனும், முனிவரும், சீடரும் அப்புறம் போக]

**குடிலன் :** (தனதுள்)
நங்கா ரியம்ஐயம் எங்கா கினுஞ் செல!

(சேவகனை நோக்கி)

சேவகா! முனிவர் சிவிகையுஞ் சின்னமும்
யாவுமவ் வாயிலிற் றொணர்தி,

**சேவ :** சுவாமி

[குடிலன் முதலியோர் போக]

**1-ம் நகர்வாசி :**
கடன்மடை விண்டெனக் குடிலன் கழறிய
நயப்புரை! ஆ! ஆ! வியப்பே மிகவும்
நாட்டைச் சிறப்பித் துரைத்தது கேட்டியோ?

---

1. அஞ்சுவர் 2. குற்றம் 3. காற்றாடி 4. பல்லக்கு

2-ம் நக :

கேட்டோம்; கேட்டோம், நாட்டிற் கென்குறை
விடு! விடு! புராணம் விளம்பினன் வீணாய்

3-ம் நக :

குடிலன் செய்யும் படிறுகள்[1] முனிவர்
அறியா தவரோ? சிறிதா யினுமவன்
உரைத்தது கருத்திடைக் கொண்டிலர் உவர்த்தே[2]

1-ம் நக :

ஆம்! ஆம்! அவன் முகம் ஏமா றினதே.

2-ம் நக :

முனிவரங் கோதிய தென்னை முற்றுந்
துனிபடு நெருக்கிற் கேட்டிலன்

3-ம் நக :

யாதோ
மனேன்மணி எனப் பெயர் வழங்கினர், அறிவை கொல்?

4-ம் நக :

வாழ்த்தினர் போலும், மற்றென்? பாழ்த்த இத்

2-ம் நக :

தந்தையிற் பரிவுளர் மனோன்மணி தன்மேல்.

3-ம் நக :

ஐயமற் றதற்கென்? யார்பரி வுறார்கள்?
வையகத் தவள்போல் மங்கைய ருளரோ?
அன்பே யுயிரா அழகே யாக்கையா[3]
மன்பே ருலகுசெய் மாதவம் அதனான்
மலைமகள் கருணையுங் கலைமக ளுணர்வுங்
கம[4]லையி னெழிலும் அமையவோ ருருவாய்ப்
பாண்டியன் தொல்குல மாகிய பாற்கடல்
ஈண்டெழு மதியென ஈண்டவ தரித்த
மனோன்மணி யன்னையை வாழ்த்தார் யாரோ?

---

1. வஞ்சனை 2. வெறுத்து 3. உடல் 4. இலக்குமி.

2-ம் நக :

அன்றியும் முனிகட் கவள்மேல் வாஞ்சை
இன்றுமற் றன்றே, இமையவர்க் காக
முன்னொரு வேள்வி முயன்றுழி வன்னி[1]
தவசிகள் தனித்தனி யவிசு சொரிந்துந்
தழையா தவிதல் கண்டுளந் தளர்ந்து
மன்னனுங் குடிலனுந் துன்னிய யாவரும்
வெய்துயிர்த்[2] திருக்க, விளையாட் டாக
மைதிகழ் கண்ணி பேதை மனோன்மணி
நெய்பெய் போழ்தில் நெடுஞ்சுழி சுழித்து
மங்கிய அங்கி வலமாய்ப் பொங்கிப்
புங்கவர்[3] மகிழ்ச்சியைப் பொறித்தது முதலா
முனிவர் யாவரும் மணியென மொழியில்
தங்கள் தலைமிசைக் கொள்வார், தரணியில்
எங்குள தவட்கொப் பியம்புதற் கென்றே.

4-ம் நக :

ஒக்கும்! ஒக்கும்! இக்குங்[4] கைக்கு
மென்னும் இன்மொழிக் கன்னிக் கெங்கே
ஒப்புள துரைக்க! ஓ! ஓ! முனிவர்
அவ்வழி யேகுநர் போலும்
இவ்வழி வம்மின் காண்குதும் இனிதே.

[நகரவாசிகள் போக]

முதல் அங்கம் : முதற் களம் முற்றிற்று

1. நெருப்பு 2. பெருமூச்சுவிட்டு 3. உயர்ந்தவர் 4. கரும்பு

# முதல் அங்கம்

## இரண்டாம் களம்

இடம் : கன்னிமாடம் காலம் : எற்பாடு

[மனோன்மணியும் வாணியும் கழல் விளையாடி இருக்க]

(ஆசிரியத் தாழிசை)

**மனோன்மணி :**
(கழல் விளையாடிப் பாட)
துணையறும் மகளிர்மேற் சுடுகணை தூர்ப்பவன்[1]
அணைகில னரன்முன்னென் றாடாய் கழல்
அணைந்துநீ றானென் றாடாய் கழல். (1)

**வாணி :**
(ஷ) நீறாயி னாலென்னை நேர்மலர் பட்டபுண்
ஆறா வடுவேயென் றாடாய் கழல்
அழலாடுந் தேவர்க்கென் றாடாய் கழல். (2)

**மனோன் :**
இருளில் தனித்துறை ஏழையர் தங்கள்மேற்
பொருதலோ வீரமென் றாடாய் கழல்
போயெரிந் தான்பண்டென் றாடாய் கடல். (3)

**வாணி :** எரிந்தன னாயிலென் என்றென்றுந் தம்முடல்
எரிந்தது பாதியென் றாடாய் கழல்,
கடுவுண்ட கண்டர்க்கென் றாடாய் கழல். (4)

**மனோன் :**
தெருவில் பலிகொண்டு திரிதரும் அம்பலத்
தொருவர்க் குடைந்தானென் றாடாய் கழல்
உருவங் கரந்தானென் றாடாய் கழல். (5)

**வாணி :** உருவங் கரந்தாலென் ஓர்மல ரம்பினால
அரையுரு வானாரென் றாடாய் கழல்
(அந்நடராஜரென்) றாடாய் கழல் (6)

[பெருமூச்செறிய]

---

1. மன்மதன்.

(நேரிசை ஆசிரியப்பா)

**மனோன் :**
(சிரித்து) ஏதடி வாணி! ஓதிய பாட்டில்
ஒரு பெய ரொளித்தனை பெருமூச்செறிந்து
நன்று! நன்று! நின் நாணம்,
மன்றலு மானது போலும்வார் குழலே! (1)

**வாணி :**
ஏதம் மாநீ! சூது நினைத்தனை?
ஒருபொரு ளும்யான் கருதினே னல்லேன்
இச்சகத் தெவரே பாடினும்,
உச்சத் தொனியில் உயிர்ப்பெழல் இயல்பே. (2)

**மனோன் :**
மறையேல்! மறையேல்! பிழைபழி நுதலாய்!
திங்கள் கண்டு பொங்கிய கடலெனச்
செம்புனல் பரக்கச் செந்தா மரைபோற்
சிறந்தவுன் கபோல[1] நுவன்று நின்மனக்
களவெலாம் வெளியாக் கக்கிய பின்னர்
ஏதுநீ யொளிக்குதல்? இயம்பாய்
காதலன் நேற்றுனக் கோதிய தெனக்கே, (3)

**வாணி :**
ஐயோ! கொடுமை! அம்மா! அதிசயம்
எருதீன் றெனுமுனம் என்னகன் றென்று
திருபவ ரொப்பநீ செப்பினை!
நான்கண் டேநாள் நாளைந் தாமே! (4)

**மனோன் :**
ஏதடி நுமது காதல் கழிந்ததோ?
காணா தொருபோ திரேமேனுங் கட்டுரை
வீணா யினதோ? பிழைத்தவர் யாவர்?
காதள வோடிய கண்ணாய்!
ஓதுவாய் என்பா லுரைக்கற் பாற்றே. (5)

**வாணி :**
எதனையான் இயம்புகோ! என்றலை விதியே
(கண்ணீர் சிந்தி)

---

1. கன்னம்

வா : விளை யாடுவோம் வாராய்,
யார்முறை யாடுதல்? வார்சூழற்[1] றிருவே! (6)

**மனோன் :**

ஏனிது! ஏனிது வாணீ! எட்பூ
ஏசிய நாசியாய்! இயம்புக
மனத்திடை யடக்கலை! வழங்குதி வகுத்தே. (7)

**வாணி :**

எப்படி யுனக்கியான் செப்புவே னம்மா?
தலைவிதி தடுக்கற் பாற்றோ? தொலைய
அனுபவித் தன்றோ அகலும்? மனையில்
தந்தையுங் கொடியன்; தாயுங் கொடியள்!
சிந்தியார் சிறிதும் யான்படும் இடும்பை.
என்னுயிர்க் குயிராம் என்கா தலர்க்கும்
இன்ன லிழைத்தனர் எண்ணிய வெண்ணம்
முதலையின் பிடிபோல் முடிக்கத் துணிந்தனர்
யாரொடு நோவேன்? யார்க்கெடுத் துரைப்பேன்?
வார்கடல் உலகில் வாழ்கிலன்,
மாளுவன் திண்ணம். மாளுவன் வறிதே. (8)

**மனோன் :**

முல்லையின் முகையும் முருக்கின்[2] இதழுங்
காட்டுங் கைரவ[3] வாயாய்! உனக்கும்
முரண்டேன்? பலதே வனுக்கே மாலை
சூடிடிற் கேடேன்? காதால்
வள்ளையி னழ கெலாங் கொள்ளைகொ ளணங்கே!

**வாணி :**

அம்மொழி வெம்மொழி.[4] அம்மா! ஒழிதி.
நஞ்சும் அஞ்சிலேன்; நின்சொல் அஞ்சினேன்,
இறக்கினும் இசையேன், தாமே துறக்கினும்
மறப்பனோ என்னுளம் மன்னிய[5] ஒருவரை?
ஆடவ ராகமற் றெவரையும்
நாடுமோ நானுள வளவுமென் உளமே? (10)

**மனோன் :**

வலம்புரிப் புறதெழு கலந்திகழ் மதியென
வதியும் வதன மங்காய்! வாணீ!

---

1. நீண்ட கூந்தல் 2. செம்முருங்கை 3. ஆம்பல் மலர் 4. கொடுஞ் சொல் 5. நிலைபெற்ற.

பேய்கொண்டனையோ? பித்தே றினையோ?
நீயென் நினைத்தனை? நிகரில் குடிலன்
தன்மக னாகிச் சாலவும் வலியனாய்
மன்னனுக் கினியனாய் மன்பல தேவனும்
உன்னுளங் கவர்ந்த ஒருவனும் ஒப்போ?
பேய்கொண் டனையோ? பேதாய்!
வேய்கொள் தோளி[1] விளம்பா யெனக்கே. (11)

வாணி :

அறியா யொன்றும், அம்ம! அரிவையர்
நிறையழி காதல் நேருந் தன்மை
ஒன்றுங் கருதி யன்றவ ருளஞ்
சென்று பாய்ந்து சேருதல், திரியுங்
காற்றும் பெட்புங்[2] காரணங் இன்மையில்
ஆற்றவும் ஒக்குமென் றறைவர்.
மாற்றமென்? நீயே மதிமனோன் மணியே! (12)

மனோன் :

புதுமைநீ புகன்றது பூவைமார் காதல்
இதுவே யாமெனில் இகழ்தற் பாற்றே!
காதல் கொள்ளுதற் கேதுவும் இல்லையாம்!
தானறி யாப்பே யாட்டந் தானாம்!
ஆயினும் அமைந்தநீ ஆய்ந்துணர்ந் தோதுதி
உண்டோ இவர்தமி லொப்பு?
கண்டோ[3] எனுமொழிக் காரிகை யணங்கே! (13)

வாணி :

ஒப்புயா னெப்படிச் செப்புவன்? அம்ம!
என்னுளம் போயிறந் ததுவே
மன்னிய ஒருவன் வடிவுடன் பண்டே. (14)

மனோன் :

பித்தே பிதற்றினை, எத்திற மாயினும்
தாந்த முளத்தைத் தடைசெயில் எங்ஙனம்
காந்தள் காட்டுங் கையாய்!
தவிர்ந்தது சாடி யோடிடும் வகையே? (15)

1. மூங்கில் போன்ற தோள்களையுடையவள் 2. ஆசை
3. கற்கண்டு.

**வாணி :**

ஈதெல்லாம் உனக்குயா ரோதுதற் கறிவர்!
மாதர்க் குரியதிக் காதல்,
என்பதொன் றறியும் மன்பதை யுலகே. (16)

**மனோன் :**

மின்புரை யிடையாய்[1]! என்கருத் துண்மையில்
வனத்தி லெய்தி வற்கலை[2] புனைந்து
மனத்தை யடக்கி மாதவஞ் செயற்கே.
சுந்தர முனிவன் சிந்துர அடியும்,[3]
வாரிசம்[4] போல மலர்ந்த வதனமும்,
கருணை யலையெறிந் தொழுகுங் கண்ணும்
பரிவுடன் முகிழ்க்கு முறுவலும், பால்போல்
நரை தரு தலையும், புரையறும் உரையும்,
சாந்தமுந் தயையும் தங்கிய உடலும்,
மாந்தளிர் வாட்டு மேனி வாணி
எண்ணுந் தோறுங் குதித்து
நண்ணு மென்னுளம் மன்னிய தவத்தே (17)

**வாணி :**

சின்னாட் செலுமுனந் தேர்குவன் நீசொல்
கட்டுரைத் திண்ணம், மட்டள வின்றிக்
காதல் கதுவுங் காலை[5]
ஓதுவை நீயே யுறுமதன் சுவையே (18)

**மனோன் :**

வேண்டுமேற் காண்டி, அவையெலாம் வீண், வீண்,
காதலென் பதுவென்? பூதமோ? பேயோ?
வெருட்டினால் நாய்போ லோடிடும்; வெயிலில்
துரத்துங் குரைக்குந் தொடரும் வெகுதொலை,
அடிக்கடி முனிவரிங் கணுகுவர் அஃதோ
அடுத்தவவ் வறையில் யாதோ சக்கரம்
இருத்திடத் திறவுகோல் வாங்கினர். கண்டனை!
படர்சுழி யோடு பாய்திரை காட்டும்
வடதள வுதர வாணி![6] மங்காய்!

---

1. மின்னலைப் போன்ற இடையினை உடையவளே; 2. மரவுரி
3. சிவந்த பாதங்கள் 4. தாமரை 5. பற்றும் போதே
6. ஆலிலை போன்ற வயிற்றினை யுடையவளே! வாணீ!

வரும்பொரு தரும்பொருள் கேட்போம்
வாசிட் டாதிவை ராக்கிய நூற்கே. (19)

**வாணி :**

நூறாக் கேட்கினும் நூலறி வென்செயும்?
நீறா கின்றதென் நெஞ்சம், நாளை
என்னுயிர் தாங்குவ தெவ்விதம்?
மன்னவன் கட்டளை மறுப்பதெவ் விதமே? (20)

**மனோன் :**

உன்றன் சிந்தையும் உந்தைதன் கருத்தும்,
மன்றல் வழுதிக் குரைக்க வருவதும்,
ஆமையின் புறச்சார் பலவ [1]னொதுங்குவது
ஏயு மெழிற்கால் வாணீ!
நீயுரைத் தனையோ நின்னே சனுக்கே? (21)

**வாணி :**

அதுவே யம்ம என் உளநின் றறுப்பது.
வதுவையும்[2] வேண்டிலர்! வாழ்க்கையும்
வேண்டிலர்!
ஒருமொழி வேண்டினர் உரைத்திலேன் பாவி.
நச்சினே[3]னெனுமொழிக் கேயவர்க் கிச்சை.
பிச்சி[4]யான், ஓகோ! பேசினே னிலையே!
இனியென் செய்வேன் என்நினைப் பாரோ?
மனைவரா வண்ணமென் னன்னையு முரைத்தாள்.
ஊர்வரா வண்ணங் குடிலனும் ஓட்டினன்.
யார்பா லுரைப்பன்? யார்போ யுரைப்பர்?
உயிரே யெனக்கிங் கொருதுணை.
அயிரா வதத்தனும்[5] அறியா வமுதே! (அழ) (22)

**மனோன் :**

அழுங்கலை![6] அழுங்கலை! அனிச்சமும்
நெரிஞ்சிலும்
அஞ்சிய அடியாய்! அழுங்கலை! அழுதுகண்
அஞ்சனங் கரைந்துநின் கஞ்சனக் கதுப்புங்[7]
கருத்ததே! ஏனிது! கருணைக் கடவுள் நின்
கருத்தே முடிப்பக் காண்டி, அஃதோ

---

1. தண்டு 2. திருமணம் 3. விரும்பினேன் 4. பித்தேறியவள் 5. இந்திரன் 6. வருந்தாதே 7. கண்ணாடிக் கன்னம்.

மணங்கமழ் கோதையர் வந்தனர்.
அணங்குறல்[1] பொன்னிகர் சுணங்கா[2] ரணங்கே!

[செவிலியும் தோழிப் பெண்களும் வர]

**செவிலி :**

தாயே! வந்துபார் நீயே வளர்த்த
முல்லையு நறுமுகை முகிழ்த்தது. வல்லை[3]
காதலிற் கவிழ்வை போலும்!
போது[4]நீத் தெம்மனை புகுந்தநற் றிருவே (24)

**மனோன் :**

போடி! நீ யாது புகன்றனை? தவத்தை
நாடிநா னிருக்க நணுகுமோ என்மனந்
துச்சமாம்[5] இச்சையாற் சோர்வு?
நெருப்பையுங் கறையான் அரிக்குமோ நேர்ந்தே!

**முதல் தோழி :**

பொய்யன் றம்ம! மையுண் கண்ணால்
வந்துநீ நோக்கு சந்தமார் [6]முல்லை
நிரம்ப அரும்பி நிற்கும் தன்மை
இன்றிரா வலரு மெல்லாம்
துன்றிரா [7]நிகர்குழற் றோகாய்! வருகவே, (26)

[எல்லோரும் போக]

முதல் அங்கம் : இரண்டாம் களம் முற்றிற்று.

---

1. வருந்தற்க 2. அழகுத் தேமல் 3. விரைவில்
4. தாமரை மலர் 5. அற்பமாம் 6. அழகு நிறைந்த
7. நெருங்கிய இருள்.

# முதல் அங்கம்

## மூன்றாம் களம்

**இடம்:** கொலுமண்டபம் **காலம்: காலை**

[ஜீவகன், குடிலன், நாராயணன் சம்பாஷித்திருக்க.]

(நிலைமண்டில ஆசிரியப்பா)

**ஜீவகன் :**

நமக்கத னாலென்? நன்றே யாமெனத்
தமக்குச் சரியா மிடத்திற் றங்குக
எங்கே யாகினுந் தங்குக நமக்கென்?
ஆவலோ டமைத்தநம் புரிசையை யவர்மிகக்
கேவலம் ஆக்கினர். அதற்குள கேடேன்?
குறையென்? குடில! கூறாய் குறித்தே.

**குடிலன் :**

குறையா தொன்றுங் கண்டிலன். கொற்றவ!
நறையார்[1] வேப்பந் தாராய் நமதிடங்
கூடலன் றெனுங் குறையொன் றுளது
நாடி லஃதலா னானொன் றறியேன்
மேலுந் தவசிகள் வேடந் தாங்கினோர்
ஆலயம் ஒன்றையே அறிவர் முன்னொரு
கோவி லமைத்ததிற் குறைவிலா உற்சவம்
ஓவ லிலாதே[3] உஞற்றுமி[4] னென்றவர்
ஏவினர் அஃதொழித் தியற்றின மிப்புரி.
ஆதலா லிங்கனம் ஓதினர் அதனை
அழுக்கா றென்றுநா மையமற் றறைதல்[5]
ஒழுக்க மன்றே குருவன் றோவவர்?

**ஜீவ :**

ஐயரும்[6] அழுக்கா[7] றடைந்தார். மெய்ம்மை
கோவில் தானா காவலர் கடமை?
கேவலம்! கேவலம்! முனிவரும் ஆ! ஆ!

---

1. தேன் நிறைந்த 2. வேப்பமாலையையுடைய 3. இடையறுதலின்றி 4 செய்யுங்கள் 5. சொல்லுதல் 6. தலைவர் குரு (சுண்டு, சுந்தர முனிவர்) 7. பொறாமை.

**குடில :**

அதிசய மன்றுபூ பதியே! இதுவும்.
துறந்தார் முற்றுந் துரந்தவ ரல்லர்.
மறந்தார் சிற்சில, வறிதே தமக்கு
மனோகர[1] மாகிய சினகர[2] மொன்றில்
உலகுள பொருளெலாம் உய்ப்பினும் பின்னும்
நிலைபெற நிரம்பா தவர்க்குள வாசை,
வசிட்ட மன்னர் வாளாப் புதைத்தனர்
முசிப்பிலா[3] மன்னர் திரவிய முற்றும்.
கௌசிகன்[4] இரக்கவோர் மௌலி வேந்தன்[5]
பட்டபா டுலகில் யாவரே பட்டுளர்?
சிட்ட[6] முனிவர் செயலாற் பலகால்
புரந்தரன்[7] தனதுருக் கரந்து திரிந்தனன்.
முனிவரே யாயினும் மனிதரே மீண்டும்.
இச்சை யற்றவர் இச்சகத்து[8] யாவர்?

**ஜீவ :**

ஒவ்வும்![9] ஒவ்வும்நீ உரைத்தது முற்றும்.

**நாராயணன் :**

ஐயோ! பாவி! அருந்தவ முனிவரைப்
**(தனதுள்)**
பொய்யன் ஆக்குவன் புரவல னோவெனில்
எடுப்பார் கைப்பிள்ளை[10] தடுப்பார் யாரோ?

(நேரிசை வெண்பா)

**நாரா :** (அரசனை நோக்கி)
கொல்லா யெனப்பகைஞர் கொற்றொடியார்[11] [கும்பிட்டுப்
பல்லிளிக்கக் கண்சிவக்கும் பார்த்திபனே[12] —பொல்லா
வெறுமெலும்பை நாய்கௌவும் வேளைநீ செல்ல
உறுமுவதென் நீயே யுரை. [சேவகன் வர]

(நிலைமண்டில ஆசிரியப்பா தொடர்ச்சி)

**சேவகன் :**

மன்னிய கலைதேர் சகடர் வந்தனர்.

---

1. மனம் கவர்தல் 2. கோயில் 3. முடிவிலாத 4. விசுவாமித்திரன் 5. அரிச்சந்திரன் 6. கற்றறிவுடைமை 7. இந்திரன் 8. இந்தவுலகில் 9. பொருந்தும் 10. சிறுபிள்ளை 11. திரண்ட வளையலையணிந்த பெண்கள் 12. அரசன்.

ஜீவ : (நாராயணனை நோக்கி)
வரச்சொல் சேவக! உரைத்தநின் உவமையிற்
சற்றே குற்ற முள்ளது நாரணா!

குடில : (தனதுள்)
அரசன் மாறாய்ப் பொருள்கிர கித்தனன்.
(அரசனை நோக்கி)
வெற்றுரை வீணாய் விளம்பினன். அதனிற்
குற்றங் காணக் குறுகுதல் முற்றும்
மணற்சோற் றிற்கல் தேடுதல் மானும்.

ஜீவ : (சகடரை நோக்கி) [சகடர் வர]
சுகமோ யாவரும் முதிய சகடரே!
மகிழ்வுற வும்மை நோக்கி வெகுநாள்
ஆயின தன்றே!

சகடர் : ஆம்! ஆம்! அடியேன்

ஜீவ :
மேயின விசேடமென்? விளம்புதிர்[1] என்குறை?

சகட :
அறத்தா[2] றகலா தகலிடங் காத்துப்
பொறுத்ததோட் புரவல! உன்குடைநீழற்
பொருந்து மெங்கட் கரந்தையு[3] முளதோ
சுகமிது காறும். அகமகிழ் வுற்றுன்
மந்திரத் தலைவன் குடிலன் மகற்கே
எந்தன் புதல்வி வாணியை வதுவையிற்
கொடுக்கவோ ராசை கொற்றவ! மற்றது
முடிக்கநின் கருணையே முற்றும்வேண் டுவவே.

ஜீவ :
சீலஞ் சிந்தை கோல மனைத்துஞ்
சாலவும் பொருந்தும் சகடரே! அதனால்
களித்தோம் மெத்த, ஏ! ஏ! குடில!
ஒளித்த தென்நீ உரையா தெமக்கே?

குடில :
ஆவ தாயின் அறிவியா தொழிவனோ?

---

1. சொல்லுங்கள் 2. அறநெறி 3. துன்பம்.

**ஜீவ :**

இடையூ றென்கொல்? இடியே றன்ன
படையடு பலதே வன்றான் ஏதோ
விரும்பினன் போலும் வேறோர் கரும்பே!

**குடில :**

இல்லையெம் இறைவ? எங்ஙனம் உரைக்கேன்!
சொல்லிற் பழிப்பாம் சகடரே சொல்லுக.

**ஜீவ :**

என்னை? சகடரே! இடையூ றென்னை;

**சகட :**

பரம்பரை யாயுன் தொழும்பூண் டொழுகும்
அடியனேன் சொல்பழு தாயின தில்லை
முடிவிலாப் பரிவுடன் வளர்த்தவென் மொய்குழல்
ஒருத்தியே யென்சொல் வியர்த்தம் ஆக்குவள்
ஒருதலை யாயிம் மணத்திற் குடன்படாள்.
விரிதலைப் போய்போல் வேண்டிய விளம்பியும்
ஓரா ளொன்றும்; உணராள் தன்னையும்;
நேரா ளொருவழி; பாராள் நெறிமுறை;
என்னயான் செய்கேன்? இதன்மே லெனக்குப்
இன்னல் தருவதொன் றில்லை, தாதையர்
மாற்றங் கேளா மக்கள் கூற்றுவர்[3]
எனுமொழி யெனக்கே யனுபவம் இறைவ,
உரைத்தவென் கட்டுரை பிழைத்திடப்பின்னுயிர்
தரித்திருந் தென்பயன்? சாவே சமீபம்.
நரைத்த தென்சிரம்; திரைத்த[3] தென்னுடல்
தள்ளருங் காலம்; பிள்ளையும் வேறிலை.
என்னுரை காத்துநீ யிம்மண முடிக்க
மன்னவ! கிருபையேல் வாழ்து மிவ்வயின்,
இல்லையேல் முதிய வென் னில்லா ளுடனிச்
[கண்ணீர் துளிக்க]
செல்ல விடையளி செல்லிதுங் காசி.

**ஜீவ :**

ஏனிது சகடரே! என்கா ரியமிது!

---

1. அடிமை பூண்டு 2. இயமன் 3. சுருங்கிற்று

தேன்மொழி வாணி செவ்விய குணத்தாள்
காணி லுரைப்பாம் வீணிவ் வழுகை.

**நாராயணன் :** (தனதுள்)

பாதகன் கிழவன் பணத்திற்காக
ஏதுஞ் செய்வன், இறைவனோ அறியான்
ஓதுவங் குறுப்பாய் உணரி னுணர்க.

(நேரிசை வெண்பா)

(அரசனை நோக்கி)

மாற்றலர்தம் மங்கையர்க்கு மங்கலநா ணங்கவிழ
ஏற்றிய நாண் விற்பூட்டு மேந்தலே—சொற்றதற்காய்த்
தன்மகவை விற்றவரிச் சந்திர னு முன்னவையில்
என்மகிமை யுள்ளா னினி.

(நிலைமண்டில ஆசிரியப்பா தொடர்ச்சி)

**ஜீவ :**

தனிமொழி யென்னை?

**நாரா :**

சற்றும் பிசகிலை.
நீட்டல் விகாரமாய் நினையினும் அமையும்

**ஜீவ :**

காட்டுவ தெல்லாம் விகாரமே. காணாய்
கிழவனின் அழுகை

**நாரா :** சில வருடந்தான்

நெடுநாள் நிற்கும் இளையவ ரழுகை

**ஜீவ :**

விடு, விடு. நின்மொழியெல்லாம் விகடம்

(சகடரை நோக்கி) [நாராயணன் போக]

அறிவிர்கொல் அவளுளம்?

**சகட :** சிறிதியா னறிவன்;

திருநட ராசனென் றொருவனிங் குள்ளான்,
பொருவரும்[2] புருடன்மற் றவனே யென்றவள்
சொல்வது கேட்டுளர் சிற்சில தோழியர்.

1. சொல்லியதற்காக 2. ஒப்பற்ற

குடில : (அரசனை நோக்கி)
நல்லதப் படியே நடக்கிலென்? இவர்க்கும்
பொல்லா முரண்டேன்?

சகட ; (குடிலனை நோக்கி) போம்! போம்! உமது
குழந்தையேல், இங்ஙனம் கூறீர்! முற்றும்.
இழந்திட வோவெனக் கித்தனை பாடு?
பூவையை வளர்த்துப் பூனைக் கீயவோ?
(அரசனை நோக்கி)
காவலா! அவனைப் போலயான் கண்டிலன்;
சுத்தமே பித்தன்; சொல்லுக் கடங்கான்;
தனியே யுரைப்பன்; தனியே சிரிப்பன்;
எங்கேனு மொருபூ இலைகனி யகப்படில்
அங்கங் கதனையே நோக்கி நோக்கித்
தங்கா மகிழ்ச்சியில் தலைதடு மாறுவன்;
பரற்கலும்[1] அவனுக் ககப்படாத் திரவியம்
ஆயிரந் தடவை யாயினும் நோக்குவன்;
பேயனுக் களிக்கவோ பெற்றனம் பெண்ணை?

ஜீவ :
ஆமாம்! யாமுங் கண்டுளேஞ் சிலகால்
நின்றால் நின்றபடியே; அன்றி
இருக்கினும் இருப்பன் எண்ணிலாக் காலம்;
சிரிக்கினு ம் விழிக்கினும் நலமிலை தீயதே.
அவனன் றோமுன் அஞ்சைக் களத்தில்...

குடில :
அவன்றான்! அவன்றான்! அழகன்! ஆனந்தன்.

ஜீவ :
அழகிருந் தென்பயன்? தொழிலெலாம் அழிவே;

குடில : இங்குளன் என்றனர்
சிதம்பரத் தனுப்பினேன்; சென்றிலன் நின்றான்;
இதந்[2] தரு நின்கட் டளையெப் படியோ?

ஜீவ :
மெத்தவும் நன்மை; அப்படி யேசெய்.

1. கூழாங்கல் 2. சுகம்

குடில :

சித்தம்; ஆயினுஞ் செல்கிலன்; முனிவர்
பிரியனா தலினாற் பெயர்ந்திலன் போலும்.
சரியல; இராச்சிய தந்திரம்[1] அவர்க்கென்?

ஜீவ : (சகடரை நோக்கி)

நல்லது சகடரே! சொல்லிய படியே
மொழிகுவம் வாணிபால்? மொழிகுழற் சிறுமி
அழகினில் மயங்கினள்; அதற்கென்? நும்மனப்
படியிது நடத்துவம் விடுமினித் துயரம்;

சகட :

இவ்வுரை யொன்றுமே என்னுயிர்க் குறுதி
திவ்விய திருவடி வாழுக சிறந்தே!

[சகடர் போக செவிலி வர]

ஜீவ : (செவிலியின் முக நோக்கி)

என்னை இவள்முகம் இப்படி யிருப்பது?
தோற்றம்நன் றன்றே!

செவிலி : நேற்றிரா முதனா

ஜீவ :

பிணி[2]யோ என் கண்மணிக்கு?

செவிலி : பிணியா

யாதுமொன் றில்லை; ஏதோ சிறுசுரம்

ஜீவ :

சுரம்! சுரம்! ஓ!ஓ! சொல்லுதி யாவும்
அரந்தையொன் றறியாள்! ஐயோ விளைந்தவை
உரையாய் விரைவில்; ஒளிக்கலை யொன்றும்;
வந்தவா றென்னை? நடந்தவா றென்னை?

செவிலி :

அறியேம் யாங்கள், ஐய! அம் மாயம்
நறவுமிழ் நளினம்[3] பொலிவிழந் திருப்ப
நம்மனை புகுந்த செல்வி, எம்முடன்
மாலையி லிலைச் சோலை யுலாவி

---

1. இராச்சிய காரியம் 2. நோய் 3. தாமரை

அமுதமுற் றிருக்குங் குமுதவாய் விண்டு[1]
நயவுரை பலவுங் குயிலின் மிழற்றி
மலைய மாருதம் வந்துவந் துந்த
நிலவொளி நீந்திநந் நெடுமுற் றத்துப்
பந்துவந் தாடிமேன் மந்திர[2] மடைந்தே
துணைபுண ரன்னத் தூவி[3] யணைமிசைக்
கண்படு மெல்லை[4] கனவோ நினைவோ—
'நண்ப! என்னுயிர் நாத' வென் றேங்கிப்
புண்படு மவள்போற் புலம்பறல் கேட்டுத்
துண்ணென[5] யாந்துயி லகற்றப் புக்குழி,
குழலுஞ் சரியும்; கழலும் வளையும்;
மாலையுங் கரியும்; நாலியும்[6] பொரியும்;
விழியும் பிறழும்; மொழியுங் குழறும்
கட்டழ லெரியும்; நெட்டுயிர்ப் பெறியும்;
நயனநீர் மல்கும்; சயனமே லொல்கும்[7]
இவ்வழி யவ்வயிற் கண்டுகை நெரியா;
தெய்வம் நொந்தேம்; செய்கட னேர்ந்தேம்;
அயினிநீர்[8] கழற்றி அணிந்தேம் பூதி[9]
மயிலினை மற்றோ ரமளியிற்[10] சேர்த்துப்
பனிநீர் சொரிந்து நனிசேர் சாந்தம்
பூசினேம்; சாமரை[11] வீசினேம்; அவையெலாம்,
எரிமே லிட்ட இழுதா[12]யவட்கு
வரவர மம்மர் வளர்க்கக் கண்டு
நொந்தியா மிருக்க, வந்தன வாயசம்
'கா கா இவளைக் கா'வெனக் கரைந்த;
சேவலுந் திகைத்துத் திசைதிசை கூவின;
கங்குல் விடிந்தும் அங்கவள் துயரஞ்
சற்றுஞ் சாந்த முற்றில ததனால்
அரச! நீ அறியிலெஞ் சிரசிரா[13]வென்றே
வெருவி யாங்கள் விளைவ துரைக்கும்
நிமித்திகர்க்[14] கூஉய்க் கேட்டோம் நிமித்தம்;
பெண்ணை யந்தார்[15] சூடிட நுந்தம்
பெண்ணை யந்தார் சூட்டெனப் பேசினர்
எண்ணம் மற்றவர்க் கியாதோ அறியேம்;

---

1. திறந்து 2. மேல்மாடி 3. அன்னப்பறவையின் மயிர் 4. உறங்கும்போது 5. விரைவாக 6. முத்து 7. தளரும் 8. ஆலத்தி நீர் 9. திருநீறு 10. படுக்கை 11. விசிறு 12. நெய் 13. சிரச்சேதம் 14. குறி சொல்வோர் 15. பனம் பூமாலை.

பனம்பூச் சூடியும் முனம்போ லவேசுரம்;
ஏது மறியாப் பேதை நேற்றுத்
தவஞ்செய ஆசை யென்றவள் தனக்குக்
காதனோய் காணவோ ரேதுவுமில்லை,
எந்தாய் இருக்கு நிலைமை இனிநீ
வந்தே காண்குதி மன்னவ ரேறே!

ஜீவ :

ஆ! ஆ! நோவிது காறுமொன் றறிகிலள்.
இதுவென் புதுமை? என்செய் கோயான்?

குடில :

தவஞ்செய ஆசையென் றுதாய் நவின்ற
வாக்கு நோக்கின் முனிவர் மந்திரச்
செய்கையோ என்றோர் ஐயம் ஜனிக்கும்;
நேற்றங் கவட்கவர் சாற்றிய மாற்றம்
அறியலாந் தகைத்தோ?

ஜீவ : வறிதவ் ஐயம்

மொழியொரு சிறிதும் மொழிந்திலர்; கண்டுழி
அழுதனர்; அழுதாள் உடன்நன் மமுதும்;
ஆசி பேசியங்ககலுங் காலை
ஏதோ யந்திரம் எழுதிவைத் திடவோர்
அறையுட ணங்கணந்[1] திறவுகோ லோடு
தமக்கென வேண்டினர்; அளித்தன முடனே
நமக்க தனாலென்? நாமறி யாததோ?
என்னோ அறியேன் இந்நோய் விளைவு?

[ஜீவகனும் செவிலியும் போக]

குடில : (தனதுள்)

யந்திரத் தாபன மோவவ ரெண்ணினர்?
அவ்வள வறிவி லாரே முனிவர்?
அவ்வள வேதான்; அன்றியென்? ஆயினும்;
எத்தனை பித்தனிவ் வரசன்! பேதையின்
இத்திறங் காமம் என்பதிங் கறியான்;
உரைக்குமுன் கருதுவம் தமக்குறு நலமே

[குடிலன் போக]

முதல் அங்கம்: மூன்றாம் களம் முற்றிற்று.

---

1. முற்றம்

# முதல் அங்கம்

## நான்காம் களம்

இடம் : கன்னிமாடம் காலம் : மாலை

[மனோன்மணி சயனித்திருக்க, ஜீவகன், வாணி, செவிலி சுற்றி நிற்க]

(நேரிசை ஆசிரியப்பா)

**ஜீவகன் :**

உன்னன் பிதுவோ? என்னுயி ரமிர்தே!
உனக்குறு துயரம் எனக்குரை யாதென்?
விரும்பிய தென்னென் றுரைக்கில் விசும்பில்
அரும்பிய அம்புலி யாயினும் கொணர்வன்;
வருத்துவ தென்னென வழக்கின் மாய்ப்பன்

உறுத்துங் கூற்றுவ னாயினும் ஒறுத்தே
தாய்க்கு மொளித்த சூலோ? தையால்!
வாய்க்கு மொளித்த உணவோ? மங்காய்!
ஏதா யினுமெனக் கோதா துளதோ?
பளிங்கு பழித்த நெஞ்சாய் உனக்குங்

களங்கம் வந்த காரண மெதுவோ?
பஞ்ச வணக்கிளி[1] செஞ்சொல் மிழற்றி
இசையது விரித்தோர் பிசித[2] மரமேல்
இருந்து பாடு மெல்லை, ஓர் வானவன்[3]
திருந்திய இன்னிசை யமுதிற் செப்பிய

போயது கண்டு, சேயதோர் போந்தையில்
தனியே பறந்து போய்த் தங்கி, அங்கவன்
பாடிய இசையே கூவிட உன்னி
நாடி நாடிப் பாடியும் வராது
வாடி வாயது மூடி, மௌனமாய்

வருந்தி யிருந்ததாய்க் கண்ட கனாவும்
நேற்றன் றோவெனக் கியம்பினை! நெஞ்சில்

---

1. ஐந்து வண்ணமுடைய கிளி 2. வேம்பு 3. தேவன் (ஈண்டு, சேரன்) 4. பனைமரம்.

தோற்றிய தெல்லாம் இங்ஙனஞ் சொல்லும்
பேதாய்! இன்றெனக் கென்னோ
ஓதா யுன்றன் உளமுறு துயரே!

**செவிலி :**

உன்பிதா உலகாள் வேந்தன் அன்பாய்ச்
சொல்லா யென்னில் துப்பிதழ்[1] துடித்துச்
சொல்ல உன்னியுஞ் சொல்லா தடக்கில்
யாம்படுந் துயரம் அறிந்துங்
காம்படு தோளீ[2] கருதாய் போன்மே. (2)

**ஜீவ :**

ஐயோ! இதற்கென் செய்வேன்? ஆ! ஆ!
பொய்யோ பண்ணிய புண்ணிய மனைத்தும்
பிள்ளை யில்லா செல்வங் கள்ளியிற்
சோறே போலப் போரே யன்றி
வேறே யென்பயன் விளைக்கு மென்றுனி

நெடுநாள் நைந்து நொந்து கெடுவேன்!
பட்டபா டெல்லாங் கெட்டுப் பரிதி[3]
வந்துழி யகலும் பனியெனச் சுந்தர
முனிவன் முயன்ற வேள்வியாற் பிள்ளைக்
கனியென வுனையான் கண்டநாள் தொட்டு

நின்முக நோக்கியும் நின்சொற் கேட்டும்
என்மிகை[4] நீக்கி இன்ப மெய்தி,
உன்மன மகிழ்ச்சிக் குதவுவ உஞற்ற
உயிர் தரித் திருந்தேன்; செயிர்தீ ரறமும்
வாய்மையும் மாறா நேசமுந் தூய்மையுந்

தங்கிய உன்னுளம் என்னுளந் தன்னுடன்
எங்குங் கலந்த இயல்பா லன்றோ
மறந்தே னுன்தாய் இறந்த பிரிவும்!
உன்னை யன்றி யென்னுயிர்க் குலகில்,
எதுவோ வுறுதி யியம்பாய்?

மதிகுலம் விளங்க வருமனோன் மணியே! (3)

1. பவளம் போன்ற உதடுகள் 2. மூங்கிலைப் பழிக்கின்ற தோள்களை உடையவளே 3. ஞாயிறு, 4. துன்பம்.

**மனோன்மணி :** (கண்ணீர் துளும்பி)
எந்தையே! எனதன் பினுக்கோ ரிழுக்கு[1]
வந்த தன்று; மேல்வருவது மிலை; இலை;
உரைக்கற் பாற்ற தொன்றில்லை;
உரைப்பதெப் படியான் உணரா தொழியிலே?

**ஜீவ :**
குழந்தாய்! என்குலக் கொழுந்தே! அழாய்நீ;
அழுவையே லாற்றேன்; நீயழல் இதுவரை
கண்டது மிலை; யான் கேட்டது மிலையே;
பெண்களின் பேதமை யென்னே! தங்களைப்
பெற்றா ருற்றார் களுக்குந் தமக்கும்,
விழுமம்[2] விளைத்துத் தாமே யழுவர்.
(வாணியை நோக்கி)
என்னே யவர்தம் ஏழைமை![3] மின்னேய்
மருங்குல்[4] வாணி! வாராய் இப்புறம்.
அருங்கலை யாய்ந்தநின் தந்தைசொன் மதியும்,
உன்புத் தியுமுகுத் துழல்வதென் வம்பில்?
நலமே சிறந்த குலமே பிறந்த
பலதே வனாமொரு பாக்கிய சிலாக்கியன்
தன்னை நீ விடுத்துப் பின்னையோர் பித்தனை
நச்சிய தென்னை? சீச்சீ
நகையே யாகும் நீ செயும் வகையே. (5)

**வாணி :**
அகலிடந் தனிபுரந் தாளும் வேந்தே
நிகழுமென் சிறிய நினைவெலாம் விரிந்து
விநயமாய்[5] நின்பால் விளம்ப எனது
நாணம் நாவெழா தடக்கு மாயினும்
பேணி யொருமொழி பேசுவன்,
நேசமில் வதுவை[6] நாசகா ரணமே. (6)

**ஜீவ :**
புதுமைநீ புகன்றாய் வதுவைமங் கையர்க்குப்
பெற்றா ராற்றுவர்; ஆற்றிய வழியே
தையலார் மையலாய் நேயம் பூண்டு
வாழ்வது கடமை; அதனில்
தாழ்வது தகுதியோ தருமமோ சாற்றே. (7)

---

1. குற்றம் 2. துன்பம் 3. அறியாமை 4. இடை 5. பணிவன்பாய 6. விரும்பாத திருமணம்.

வாணி :

கற்பனைக்[1] கெதிராய் அற்பமும் மொழியேன்;
ஆயினும் ஐயமொன் றுண்டு; நேயமும்
ஆக்கப் படுப் பொரு ளாமோ? நோக்கில்
துன்பே நிறையும் மன்பே ருலகாம்
எரியுங் கானல் விரியும் பாலையில்
திரியும் மனிதர் நெஞ்சஞ் சிறிது
தங்கி அங்கவர் அங்கங் குளிரத்
தாரு[2] வாய்த் தழைத்தும், ஓயாத் தொழிலில்
நேருந் தாகம் நீக்குவான் நிமல[3]
ஊற்றா யிருந்தவ ருள்ளம் ஆற்றியும்,
ஆறலை கள்வர்[4] அறுபகை மீறில்
உறுதுணை யாயவர் நெறிமுறை காத்தும்,
முயற்சியாம் வழியில் அயர்ச்சி[5] நேரிடில்
ஊன்றுகோ லாயவர் ஊக்க முயர்த்தியும்
இவ்விதம் யாரையுஞ் செவ்விதிற் படுத்தி,
இகத்துள சுகத்திற்கு அளவுகோ லாகி,
பரத்துள சுகத்தை வரித்தசித் திரமாய்
இல்லற மென்பதன் நல்லுயி ரேயாய்,
நின்ற காதலின் நிலைமை, நினையில்,
இரும்பும் காந்தமும் பொருந்துந் தன்மைபோல்
இருவர் சிந்தையும் இயல்பா யுருகி
ஒன்றாந் தன்மை யன்றி, ஒருவரால்
ஆக்கப் படும்பொரு ளாமோ?
வீக்கிய கழற்கால் வேந்தர் வேந்தே! (8)

ஜீவ :

ஆமோ அன்றோ யாமஃ தறியேம்;
பிஞ்சிற் பழுத்த பேச்சொழி; மிஞ்சலை;
மங்கைய ரென்றுஞ் சுதந்தர பங்கர்;
பேதையர் எளிதிற் பிறழ்ந்திடு முளத்தர்;
முதியவுன் தந்தை மதியிலுன் மதியோ
பெரிது? மற் றவர்தமிழ் உன்னல பேண
உரியவர் யாவர்? ஓதிய படியே
பலதே வனுக்கே உடன்படல் கடமை.

1. கட்டளை 2. மரம் 3. குற்றமற்ற 4. வழிப்பறி செய்வோர் 5. சோர்வு

**வாணி :**

இல்லையெனில்?

**ஜீவ :**

கன்னியாய் இருப்பாய் என்றும்

**வாணி :**

சம்மதம்

**ஜீவ :**

கிணற்றிலோர் மதிகொடு சாடில்[1]
எம்மதி கொண்டுநீ யெழுவாய்? பேதாய்
கன்னியா யிருக்கில் உன்னழ கென்னாம்?
அரைக்கி லன்றோ சந்தனங் கமழும்?

**வாணி :**

விரைதருமோ[2] சிறு கறையான் அரிக்கில்?

**ஜீவ :**

நானே பிடித்த முயற்கு மூன்றுகால்
ஆனால் எங்ஙனம்?

**வாணி :**

அரிவையர் பிழைப்பார். [சேடி வர]

**சேடி :**

சுந்தர முனிவர் வந்தனர் வாயிலில்;
கால நோக்கினர்.

**ஜீவ :**

சாலவு மினிதே !
ஆசனங் கொணர்தி.
(வாணியை நோக்கி) யோசனை வேண்டாம்
எப்படி யாயினுஞ் சகடர் சொற்படி
நடத்துவம் மன்றல்; நன்குநீ யுணர்தி;
ஆயினுந் தந்தனம் ஐந்துநாள்
ஆய்ந்தறி விப்பாய் வாய்ந்தவுன் கருத்தே (9)

**வாணி :**

இறக்கினும் இறைவ! அதற்கியா னிசையேன்;
பொறுத்தருள் யானிவன் புகன்ற

---

1. வீழ்ந்தால். 2. மணம் தருமோ

மறுத்துரை யனைத்தும் மாற்றல[1] ரேறே[2]
(சுந்தர முனிவர் வர)

**ஜீவ :** (முனிவரைத் தொழுது)
வணங்குது முன்றன் மணங்கமழ் சேவடி;
இருந்தரு ளுதியெம் இறைவ!
பரிந்துநீ வந்ததெம் பாக்கியப் பயனே. (11)

**சுந்தர :** (மனோன்மணியை நோக்கி)
தீதிலை யாதும்? க்ஷேமமே போலும்
ஏதோ மனோன்மணி? ஓதாய்
வேறுபா டாய்நீ விளங்குமாறே. (12)

**மனோன்மணி :** (வணங்கி)
கருணையே யுருவாய் வருமுனி சுரரே
எல்லா மறியும் உம்பாற்
சொல்ல வல்லதொன் றில்லை சுகமே.

**செவிலி :** (மனோன்மணியை நோக்கி)
கரும்பே, யாங்கள் விரும்புங் கனியே!
முனிவர் பாலுநீ யொளிப்பையே லினியிங்கு
யார்வயி னுரைப்பாய்! ஐயோ! இதுவென்?

**(முனிவரை நோக்கி)**
ஆர்வமும் ஞானமும் அணிகல னாகக்கொள்
தேசிக[3] வடிவே! செப்புமா றறிகிலம்

மாசறு மனோன்மணி தன்னுரு மாறி
நேற்றிரா முதலாத் தோற்றுந் தோற்றம்.
மண்ணாள்[4] மேனியும்; உண்ணாள் அமுதும்;
நண்ணாள் ஊசலும்; எண்ணாள் பந்தும்;
முடியாள் குழலும், படியாள் இசையும்;

தடவாள் யாழும்; நடவாள் பொழிலும்;
அணியாள் பணி[5]யும்; பணியாள் ஏவலும்;
மறந்தாள் கிளியும்; துறந்தாள் அனமும்;
தூங்குவள் போன்றே ஏங்குவள் எளியை

நோக்குவள் போன்றே நோக்குவள் வெளியை;
மீட்டுங் கேட்பள்; மீட்டும் பார்ப்பள்

---

1. பகைவர் 2. சிங்கம் 3. குரு 4. நீராடாள் 5. அணிகலன்

தனியே யிருப்பள்; தனியே சிரிப்பள்;
விழிநீர் பொழிவள்; மெய்விதிர்த் தழுவள்;
இங்ஙன மிருக்கில் எங்ஙன மாமோ?

வாணியும் யானும் வருந்திக் கேட்டும்
பேணி யிதுவரை ஒருமொழி பேசிலள்
அரசன் கேட்டும் உரைத்திலள். அன்பாய்
முனிவ! நீ வினவியும் மொழியா ளாயின்
எவருடன் இனிமேல் இசைப்பள்?

தவவுரு வாய்வரு தனிமுதற் சுடரே! (14)

சுந்தர: (ஜீவகனை நோக்கி)

குழவிப் பருவம் நழுவுங் காலை
களிமிகு கன்னிய ருளமும் வாக்கும்
புளியம் பழமுந் தோடும் போலாம்.
காதல் வெள்ளங் கதித்துப்[1] பரந்து

மாத ருள்ளம் வாக்கெனும் நீண்ட
இருகரை புரண்டு பெருமூச் செறியில்
எண்ண மெங்ஙனம் நண்ணும் நாவினை?
தாத அன்பு போதா தாகுங்
காலங் கன்னியாக் குளதெனும் பெற்றி

சாலவு மறந்தனை போலும்; தழைத்துப்
பருவக் கொடி பருவம் அணையில், நட்ட
இடமது துறந்துநல் லின்ப மெய்த
அருகுள தருவை யவாவும் அடையின்
முருகவிழ்[2] முகையுஞ் சுவைதரு கனியும்

அகமகிழ்ந் தளித்து மிகவளர்ந் தோங்கும்;
இலையெனில் நலமிழந் தோல்கும் அதனால்
நிசிவே லரசா டவியில்
உசிதமா மொருதரு விரைந்துநீ யுணரே.

ஜீவ:

எங்குல குருவே! இயம்பிய தொவ்வும்;
வங்குள திக்கொடிக் கிசைந்த
பொங்கெழில் பொலியும் புரையறு தருவே.

1. மிகுந்து 2. தேன் மணம் விரியும்

சுந்தர :

உலகுள மற்றை யரசெலாம் நலமில்
கள்ளியுருங் கருவேற் காடுமா யொழிய.
சகமெலாந்[1] தங்க நிழலது பரப்பித்
தொலைவிலாத் துன்னலர்[2] வரினும் அவர்தலை
யிலையெனும் வீரமே இலையாய்த் தழைத்து,
புகழ்மணங் கமழுங் குணம்பல பூத்து,
துணிவரு முயிர்க்குள துன்பந் துடைப்பான்
கனியுங் கருணையே கனியாகக் காய்த்து;
தருமநா டென்னும் ஒருநா மங்கொள்
திருவாழ் கோடாஞ் சேரதே சத்துப்
புருடோத் தமனெனும் பொருவிலாப் புருடன்,
நீங்கி லில்லை நினது
பூங்கொடி படரப் பாங்காந் தருவே. (17)

ஜீவ :

நல்லது! தேவரீர் சொல்லிய படியே
இடுக்கண் களைந்த இறைவ!
நடத்துவன் யோசனை பண்ணி நன்றே. (18)

சுந்தர :

யோசனை வேண்டிய தன்று நடேசன்
என்றுள னொருவன்; ஏவில்
சென்றவன் முடிப்பன் மன்றல்[3] சிறக்கவே. (19)

ஜீவ :

கெடலறு சூழ்ச்சிக் குடிலனோ டுசாவி...

சுந்தர :

அரகர! குருபர கிருபா நிதியே!
(எழுந்து) காவாய் காவலன் ஈன்ற
பாவையை நீயே காவாய் பசுபதே! (20)

[சுந்தர முனிவர் போக]

ஜீவ :

தொழுதோம் தொழுதோம்; செவிலி யவ்வறைக்
கெழுதுங் கருவிகள் கொணராய்
பழுதிலாக் குடிலற் குணர்த்துவம் பரிந்தே.

[ஜீவகன் முதலியோர் போக]

முதல் அங்கம் : நான்காம் களம் முற்றிற்று

1. உலகமெல்லாம் 2. பகைவர் 3. திருமணம்.

# முதல் அங்கம்

## ஐந்தாம் களம்

**இடம் :** குடிலன் மனை　　　　காலம் : மாலை

[குடிலன் உலாவ]

### (இணைக்குறள் ஆசிரியப்பா)

**குடில :** (தனிமொழி)

புத்தியே சகல சக்தியும்![1] இதுவரை
நினைத்தவை யனைத்தும் நிறைவே றினவே.
உட்பகை மூட்டிப் பெட்புற் றிருந்த
மதுரையாம் முதுநகர் விடுத்து மன்னனை
புதியதோர் பதிக்குக் கொணர்ந்து புரிசையுங்
கட்டுவித் தோம்நம் இட்டமாம் வகையே;
நாமே யரசும் நாமே யாவும்;
மன்னவன் நமது நிழலின் மறைந்தான்;
பிடித்தாற் கற்றை[2] விட்டாற் கூளம்;
மதுரையை நெல்லை இனிமேல் வணங்குமோ?
இது தனக் கிறைவன் இறக்கில் யாரே
அரச ராகுவர்?　　　　[மௌனம்
புரவலன் கிளைஞர்[3] புரிசையைக் கேட்கினும்
வெருளுவர் வெல்லார் ஆயினும்—
முழுதும் நம்மையே தொழும்வகை யிலையே!
கருவியுங் காலமும் அறியில் அரியதென்?
ஆ! ஆ! அயர்த்தோம் அயர்த்தோம்!
மயக்கம் மனோன்மணி கொண்டதை முற்றும்
அயர்த்தோம்[4] ஆ! ஆ! ஆயிழை யொருவனைக்
கண்டு காமங் கொண்டவ ளல்லள்;
பருவம் வருதலாற் பற்றல் விழைந்தனள்,
அருகுள தெட்டியே யாயினும் முல்லைப்
படர்கொடி படரும்; பலதே வனையவள்
இடமே பலமுறை யேவி லுடன்படல்

---

1. வலிமை　2. ஒன்று சேர்ந்தது　3. அரசனின் உறவினர்
4. மறந்தோம்

கூடும். கூடிலென் கூடா?
யாவன்அஃதோ வருமொரு சேவகன்! [சேவகன்வர]

சேவகன் : ஐய? ஐய! விஜயீ பவகுடி லேந்திரா!
[திருமுகம் கொடுக்க]

குடில : (வாசித்து நோக்கி)
நல்ல தப்புறம் நில்லாய்! ஓ! ஓ!
சொல்லிய தார்கொல்? சுந்தர னேயாம்.
[சேவகன் ஒரு சாரிருந்து தூங்க]
அடுத்தது போலும் இம்மணம். அவசியம்
நடக்கும். நடக்கிலென்? நமக்கது நன்றே
அரசர்கட் காயுள் அற்பமென் றறைவர்;
பிரியமாந் தன்மகட் பிரிந்து வெகுநாள்
வாழான் வழுதி; வஞ்சிநாட் டார்க்குத்
தாழார் இந்நாட்டுள்ள ஜனங்களும்.
அதுவும் நன்றே—ஆயினுங்
கால தாமதஞ் சாலவு மாகும்;
வேறொரு தந்திரம் வேண்டும்; ஆ! ஆ!
மாறன் மாண்டான்; மன்றலும் போனது;
சேரன் இறுமாப்[1] புடையதோர் வீரன்
ஆமெனப் பலரும் அறைவர். அதனால்
நாமவன் பால்விடுந் தூதுவர் நலம்போன்
மெள்ள அவன்றன் செருக்கினைக் கிள்ளிற்
படைகொடு வருவன் திண்ணம்; பாண்டியன்
அடைவதப் போதியாம் அறிவம்.
போர்வந் திடிலின் நேர்வந் திடுமெலாம்
யார்இற வார்கள்? யார்அறி வார்கள்?
முடிதன் அடிவிழில் யாரெடுத் தணியார்?
அரச வமிசக் கிரமம் ஓரில்[2]
இப்படி யேமுத லுற்பவம்[3] இருக்கும்
சிலதலை முறையாப் பலவரு டஞ்செலில்
இந்து[4]வில் இரவி[5]யில் வந்தோ ரெனவே,
மூட உலகம் மொழியும், யாரே
நாடுவர் ஆதியை? நன்று நன்றிது!

1. செருக்கு 2. எண்ணிப் பார்த்தல் 3. தோற்றம் (தொடக்கம்)
4. சந்திரன் 5. சூரியன்.

தோடம்![1]—சுடு! சுடு!
தீது நன்றென ஓதுவ வெல்லாம்
அறியார் கரையும் வெறுமொழி யலவோ?
பாச்சி பாச்சி என்றழும் பாலர்க்குப்
பூச்சி பூச்சி என்பது போலாம்;
மன்னரை உலகம் வணங்கவும் பார்ப்பார்க்
கின்னங் கிடைக்கவும் அங்ஙனம் மறைந்து
மதியி லாரை மயக்குவர் வஞ்சமாய்;
அதனால் நமக்கென்? அப்படி நினைக்கில்
இதுவரை இத்தனை நன்மையெப் படிவரும்?
பார்க்குதும் ஒருகை சுந்தரன் யந்திரங்
காக்கும் வகையுங் காண்போம்; சுவான[2]
சக்கரங் குக்கலைத்[3] தடுத்திடும் வகையே
யந்திரத் தந்திரம் இருப்பதென் றறியான்.
பித்தன் மெத்தவும்! நமக்கினி இதுவே
உத்தம உபாயம் ஓகோ! சேவக
சித்தம் மெத்தக் களித்தோம் இந்த
மணவுரை கேட்டென மன்னன் துணியப்
பாவனை பண்ணுவோம்! ஏ? ஏ! சேவக!
[சேவகன் எழுந்து வர]
இன்று நாம் உற்றஇவ் வின்பம் போல
என்றும் பெற்றிலம். இணையறு மாலை
இந்தா! தந்தோம். இயம்பாய்;
வந்தோம் விடியுமுன் மன்னவைக் கென்றே (1)

(நேரிசை ஆசிரியப்பா)

**சேவகன் :**

வாழ்க! வள்ளால்! நின் உதா ரம்[4] போல்
ஏழுல கெவற்றிலும் உண்டோ?
வாழ்க! எப்போதும் மங்கலம் வரவே.

**குடில :**

நல்லது; விரைந்து செல்வாய்! நொடியில்
(தனி மொழி) [சேவகன் போக]
மதியிலி! என்னே மனிதர் மடமை!
இதுவும் உதாரமாய் எண்ணினன்; இங்ஙனம்
தருமந் தானம் என்றுல கறியுங்

---

1. குற்றம் 2. நாய் 3. நாய் 4. அன்பு

கருமம் அனைத்துஞ் செய்பவன் கருத்தைக்
காணின் நாணமாம்; அவரவர் தமக்கா
எண்ணிய எண்ணம் எய்துவான் பலவும்
பண்ணுவர் புண்ணியம் போல எல்லாந்
தந்நயங் கருதி யன்றித் தமைபோற்
பின்னொரு வனையெண்ணிப் பேணுவ ருளரோ?

புண்ணியஞ் சீவகா ருண்ணிய மெனப்பல
பிதற்றுதல் முற்றும் பித்தே அலதேல்
யாத்திரை போன நூற்றுவர் சோறடு
பாத்திரந் தன்னிற் பங்கு பங்காக
ஒருவரை யொருவர் ஒளித்துப் பருமணல்

இட்ட கதையா யிருக்குமோ? அவ்வளவு
எட்டுமோ உலகின் கட்டைச் சிறுமதி?—
ஆயினும், அரசனைப் போலிலை
பெயர் பெரிய மேதினி யெங்குமே. (3)

முதல் அங்கம் ஐந்தாம் களம் முற்றிற்று.

(கலித்துறை)

[illegible]ரும் வதுவையுஞ் சேர்முறை செப்பியுஞ் சீவகன்றான்
போரும் நிதனமும்[1] புந்தி[2] செய் மந்திரம் போற்றினனே
சாருந் தனுசர ணங்களைத் தானெனுந் தன்மைவந்தால்
யாரும் அருள்வழி நிற்கிலர் மாயை யடைவிதுவே.

முதல் அங்கம் முற்றிற்று

---

| | | | |
|---|---|---|---|
| ஆசிரியப்பா | 52-க்கு | அடி | 830 |
| ஆசிரியத் தாழிசை | 6-க்கு | ,, | 18 |
| வெண்பா | 2-க்கு | ,, | 8 |
| கலித்துறை | 1-க்கு | ,, | 4 |
| ஆக, அங்கம் 1-க்கு: | ப. 61-க்கு | | 860 |

---

1. அழிவு 2. புத்தி, அறிவு.

# இரண்டாம் அங்கம்

## முதற் களம்

இடம் : அரண்மனை　　　　காலம் : வைகறை

[ஜீவகனும் குடிலனும் மந்திராலோசனை]

(நேரிசை ஆசிரியப்பா)

**ஜீவகன் :**

சொல்லிய தெல்லாஞ் சுந்தர முனிவரே!
புருடோத் தமனெனும் பொறையனே[1] நமக்கு
மருமா னாக மதித்ததும் அவரே;
என்றுங் குழந்தை யன்றே; மன்றல்
விரைவில் ஆற்ற வேண்டும்; நாம்இது
வரையும் மறதியா யிருந்தது தவறே.
யாம்இனித் தாமதமின் றியிம் மணமே
கருமமாய்க் கருதி முடிப்பாம்;
வருமுன் கருதும் மந்திர வமைச்சே!

**குடிலன் :**

இறைவ! இதுகேட் டெனக்குள இன்பம்
அறைவதெப் படியான்? அநேக நாளாய்ப்
பலமுறை நினைந்த துண்டிப் பரிசே;[2]
நலமுறப் புரிசை நன்கு முடியும்
அற்றம்[3] நோக்கி யிருந்தே னன்றிச்
சற்றும் மறந்தே னன்று; தனியே
கட்டளை பிறந்துங் கடிமணந் தன்னை
விட்டுள தோஇனி வேறொரு காரியம்?
புருடோத் தமனெனும் பொருநைத் துறைவன்
காண்டரும் ஆண்டகை யென்றும், ஞானம்
மாண்ட சிந்தைய னென்றும், யாண்டுந்
திரியுந் தவசிகள் உரைசெய யானுங்
கேட்ட துண்டு; மற்றவன் நாட்டிற்கு
இன்றே தூது வரேவின், மங்கையை

---

1. சேரன் 2. தன்மை 3. சமயம் (காலம்)

மன்றல் செய்வான் மனதோ வன்றோ
என்றியாம் அறியலாம் எளிதில்; அறியார்
பலவும் பழிப்பர்; நமக்கதி லொன்றும்
இலை இன் றேதூ தேவும்
பனந்தார் வேய்ந்தோன் அனந்தைப் பதிக்கே.

ஜீவ :

பழிப்ப ரென்ற மொழிப்பய னென்னை?
பகருதி வெளிப்படப் பண்பாய்
நிகரிலாச் சூழ்ச்சி நெடுந்தகை யோனே! (3)

குடில :

எண்ணு தற் கில்லை இறைவ! அவையெலாம்!
கண்ணகன் ஞாலங் கழறும் பலவிதம்;
மணஞ்செய முதன்முதற் பேசி வருதல்,
இணங்கிய ஆடவ ரில்லுள் ளாரே!

அன்றி யாடவர்த் தேடி மன்றல்
சாற்றுதல் தகாதெனப் போற்றுமிவ் வுலகம்;
முன்னை வழக்கும் அன்னதே; ஆயினும்,
ஆத்திரந் தனக்குச் சாத்திர மென்னை?

ஜீவ :

கூடா தஃதொரு காலும்; குடில!
கேடாம் நமது கீர்த்திக் கொன்றும்;
மாசறு மனோன்மணி தனக்கும் மாசாம்;
என்னே ஆத்திரம்? நமது
கன்னியை விழையும் மன்னருங் குறைவோ?

குடில :

குறைவோ அதற்கு இறைவ! ஓஹோ!
மூவருந் தேவரும் யாவரும் விரும்புநங்
கொழுந்தை விழைந்து வந்த வேந்தரைக்
கணக்கிட லாமோ? கலிங்கன், சோழன்,
கன்னடன் வடிவில் ஒவ்வார்; காந்தர்
மன்னவன் வயதிற் கிசையான்; மச்சன்

குலத்திற் பொருந்தான்; கோசலன் பலத்திற்
கிணங்கான்; விதர்ப்பன் வீர மில்லான்;
வணங்கலில் நிடதன்; மராடன் கல்வியில்

நேரான்; மகதன் தீராத் தரித்திரன்;
இன்னம் பலரும் இங்ஙனம் நமது
கன்னியை விழைந்துங் கல்வி வடிவு
குணம்பலங் குலம்பொரு ளென்றிவை பலவும்
இணங்கா ரேமாந்திருந்தார். அரசருள்
கொங்கன்[1] றனக்கே இங்கிவை யாவும்
பொருத்த மாயினும் இதுவரைப் பாலியன்
ஆகையில் இவ்வகையின் அணைந்திலன், எங்ஙனந்
திருத்தமா யவன்கருத் தறிந்திடு முன்னம்
ஏவுதுந் தூதரை? ஏதில னன்றே,

ஜீவ:

படுமோ அஃதொரு காலும்? குடில
மற்றவன் கருத்தினை யுணர
உற்றதோ ருபாயம் என்னுள துரையே. (5)

குடில:

உண்டு பலவும் உபாயம்; பண்டே
இதனைக் கருதியே யிருந்தேன்; புதிய
கடிபுரி முடியும் முன்னர்க் கழறல்
தகுதி யன்றெனக் கருதிச்
சாற்றா தொழிந்தேன் மாற்றல ரேறே (6)

ஜீவ:

நல்லது! குடில! இல்லை யுனைப்போல்
எங்குஞ் சூழ்ச்சித் துணைவர்
பங்கமி லுபாயம் என்கொல்? பகரே. (7)

குடில:

வஞ்சிநா டதனில் நன்செய் நாடெனச்[2]
செந்தமிழ் வழங்குந் தேயமொன் றுளதுஅதன்
அந்தமில் பெருவளம் அறியார் யாரே?
மருதமும் நெய்தலும் மயங்கியங் கெங்கும்
புரையறு செல்வம் நிலைபெற வதிரும்;
மழலைவெண் டானம்[3] புலர்மீன்[4] கவர
ஓம்புபு நுளைச்சியர்[5] எறிகுழை[6] தேன்பொழி
புன்னைநுண் தாதாற் பொன்னிறம் பெற்ற
எருமையின் புறத்திருந் திருஞ்சிறை புலர்த்தும்

---

1. கொங்கு நாட்டரசன் (சேர மன்னன் புருடோத்தமன்)
2. நாஞ்சில் நாடு 3. நாரை 4. உலர்ந்த மீன் (கருவாடு)
5. செம்படவப் பெண்கள் 6. காதணி

அலைகடற் காக்கை கலக்கண் விளக்கும்;
கேதகை[1] மலர்நிழல் இனமெனக் கருதித்
தாராத் தழுவிடச் சார்தரச் சிரித்த
ஆம்பல்வாய் கொட்டிடும் கோங்கலர்த் தாதே;
வால்வளை சூலுளைந் தீன்றவெண் முத்தம்
ஓதிமக் குடம்பை[2]யென் றுன்னுபு காலாற்
பருந்தினங் கவர்ந்து சென்றடம்பிடைப்[3] புதைக்கும்
கரும்படு சாலையின் பெரும்புகை மண்டக்
கூம்பிய நெய்தற் பூந்தளிர் குளிர
மேய்ந்தகல் காரா[4] தீம்பால் துளிக்கும்;
அலமுகந்[5] தாக்குழி யலமரும்[6] ஆமை
நுளைச்சியர் கணவரோ டிழைத்திடும் ஊடலில்
வழித்தெறி குங்குமச் சேற்றிடை யொளிக்கும்;
பூஞ்சினை மருதிடை வாழ்ந்திடும் அன்றில்
நளிமீன் கோட்பறை விளிகேட் டுறங்கா;
வேயென[7] வளர்ந்த சாய்த்துலைச் சாலியில்,[8]
உப்பார் பஃறி[9] யொருநிரை பிணிப்பர்,
இப்பெருந் கேயத் தெங்கும் இராப்பகல்
தப்பினும் மாரி தன்கடன் தவறா.
கொண்மூ[10] வென்னுங் கொள்கலங் கொண்ட
அமிழ்தினை யவ்வயிற் கவிழ்த்தபின் செல்வுழி
வடியும்நீ ரேநம் மிடிதீர் சாரல்
நன்னீர்ப் பெருக்கும் முந்நீர் நீத்தமும்[11]
எய்யா தென்றும் எதிர்த்திடும் பிணக்கில்
நடுக்கடல் நன்னீர் சுவைத்திடு மொருகால்,
மரக்கலம் வந்திடும் வயற்கரை யொருகால்,
வாய்த்தலை விம்மிய மதகுபாய் வெள்ளம்
ஓமென வேஇறந் தொலிக்கப் பிரணவ
நாதமே தொனிக்குமந் நாட்டிடை யொருசார்,
நறுமலர்க் குவளையும் நானிறத் திரணமும்[12]
படர்தரும் பழனக்[13] கம்பளம் பரப்பித்
தாமரை தூமுகை[14] தூமமில்[15] விளக்கா,
நிலவொளி முத்தும் கவடி[16]யும் பணமா
அலவன்[17] பலவிர லாலாய்த் தெண்ண,

---

1. தாழை 2. அன்னத்தின் முட்டை 3. கொடி 4. எருமை 5. கலப்பை நுனி 6. மனம் தடுமாறும் 7. மூங்கில் போன்று 8. நெல் 9. ஓடம் 10. மேசம் 11. வெள்ளம் 12. உப்பளம் 13. வயல் 14. மொக்கு 15. புகையில்லாத 16. சோழிகள் 17. நண்டு

துகிர்க்கா லன்னமும் புகர்க்[1] கால் கொக்குஞ்
செங்கட் போத்துங் கம்புட் கோழியுங்
கனைகுரல் நாரையுஞ் சினமிகு காடையும்
பொய்யாப் புள்ளும் உள்ளான் குருகும்
என்றிவை பலவும் எண்ணில் குழீஇச்
சிரஞ்சிறி தசைத்துஞ் சிறகை யடித்தும்
அந்தியங் காடி[2]யின் சத்தம் காட்டித்
தந்தங் குழூஉக்குரல் தமைவிரித் தெழுப்பும்
பேரொலி யென்றுமே யார்தரு[3] மொருசார்;
வீறுடை யெருத்தினம் வரிவரி நிறுத்தி
ஈறிலாச் சகரர் எண்ணிலா ராமெனப்
போற்றி குரவையே[4] பொலிதரு மொருசார்;
சேற்றிடை யடர்ந்த நாற்றடைத் தெடுக்குநர்
நாறூஉ கூறாக்குநர் வேறுபுலம் படுக்குநர்
நடுவர் களைப்பகை யடுபவ ராதியாக்
கள்ளுண் கடைசியர்[5] பள்ளும் பாட்டும்
தருமொலி பரந்தே தங்குவ தொருசார்;
குன்றென அரிந்து குவித்திடுஞ் செந்நெற்
போர்மிசைக் காரா காரெனப் பொலியக்
கரங்குங்[6] கிணைப்பறை[7] முழவுடன் பிறங்கும்
மங்கல வொலியே மல்குவ தொருசார்;
தூவியால் தம்முடல் நீவிடில் சிரிக்குஞ்
சிறுமிய ரென்ன அச் செழுநில நங்கை
உழுபடைக் கொழுமுனை தொடுமுனங் கூசி
உடல் குழைந் தெங்கும் உலப்பறு[8] செல்வப்
பயிர்மயிர் சிலிர்த்துப் பல்வளம் நல்குவள்
எனிலினி யானிங் கியம்புவ தென்னை?
அனையவந் நாடெலாம் அரச! மற் றுனக்கே
உரித்தென அங்குள பாடையே உரைக்கும்,
சின்னா ளாகச் சேரனாண் டிடினும்
இந்நாள் வரையும் அந்நாட் டுரிமை
கொடுத்தது மில்லை நாம் விடுத்தது மில்லை,
பண்டைநம் உரிமைபா ராட்டிட வென்றே
கண்டனன் இப்புரி ஆயினும் அதுஇம்

1. மங்கிய செந்நிறம் 2. மாலை நேரக்கடை (Evening Bazaar) 3. நிறையும் 4. குழுப்பாட்டு 5. உழத்தியர் 6. ஒலிக்கும் 7. தடாரி என்னும் மருதநிலப் பறை 8. கேடில்லாத

மணத்திற் குதவியாய் வந்தது நன்றே,
ஆதலின் அவன்பால் தூதரை விடுத்துக்
கிழமையும் பழமையும் எடுத்துக் கிளத்தில்,
நாட்டிய நமது நகர்வலி கருதி
மீட்டும் விடுப்பினும் விடுப்பன் அன்றி
வாதமே பலவும் ஓதினும் ஒருவிதம்
ஒப்புர வாகா தொழியான் பின்னர்,
அந்நியோந் நிய[1] சமா தானச் சின்னம்
ஆகவோர் விவாக மாயின் நன்றெனக்
குறிப்பாற் பொதுவாய்க் கூறிடின்,
மறுத்திடா னுடன்மண முடித்தும் நன்றே. (8)

ஜீவ:

மெத்தவுங் களித்தோம்! உத்தமோ பாயம்
இதுவே! குடில! இதனால்
வதுவையும் நடந்ததா மதித்தேம் மனத்தே. (9)

குடில:

அப்படி யன்றே செப்பிய உபாயம்
போது மாயினும் ஏகுந் தூதுவர்
திறத்தாற் சித்தி யாகவேண டியதே.
வினை தெரிந் துரைத்தல் பெரிதல, அஃது
தனைநன் காற்றலே சாற்றல். அதனால்,
அன்புங் குடிமைப் பிறப்பும் அரசவாம்
பண்பும் அறிவும் பரவுநூ லுணர்வும்
தூய்மையும் மன்னவை யஞ்சாத் திண்மையும்
வாய்மையுஞ் சொல்லில் வழுவா வன்மையுந்
துணிவுங் காலமுங் களமுந் தூணியுங்
குணமும் மந்திரத் தலைவர் துணைமையுங்
உடையனே வினையாள் தூதனென் றோதினர்,
அன்ன தூதரை யனுப்பின் மன்னவ!
உன்ன தெண்ண முறுமே யுறுதி;
அன்றெனி லன்றே; அதனால்
வென்றிவை வேலாய் விடுவாய் தெரிந்தே, (10)

1. அடுத்தவரல்லாத தன்மை, நெருக்கம்.

ஜீவ:

அத்திறம் முற்றும் ஒத்தவ னாய்நமக்
குரிமை பூண்டநின் அருமை மகன்பல
தேவனே யுள்ளான். மேவலர்[1] பலர்பால்
முன்னம் பன்முறை தூதிலும் முயன்றுளான்.
அன்னவன் றன்னை அமைச்ச!
ஏவிடத் தயையா யிசைவாய் நீயே. (11)

குடில:

ஐய மதற்கென்? ஐய என்னுடல்
ஆவியும் பொருளும் மேவிய சுற்றமும்
நினதே யன்றோ! உனதே வலுக்கியான்
இசையா தொழிவனோ! வசையறு புதல்வன்
பாலியன் மிகவும்; காரியம் பெரிது.

ஜீவ:

பெரிதென்? அங்கவன் பேசவேண் டியவெலாம்
விரிவா யெடுத்துந் விளம்பி விடுக்கில்,
நலமா யுரைப்பன் நம்பல தேவன்.
வருத்தம் இவையெலாங் கருத்திலுணராது.
உரைத்தனர் முனிவர் உதிய[2]னவைக்கே
யோசனை யின்றி நடேசனை யேவில்
நன்றாய் முடிப்பனிம் மன்றல்
என்றார், அவர்கருத் திருந்த வாறே! (12)

குடில:

குற்றமோ அதுவுங் கொற்றவ! முனிவர்
அறிந்ததவ் வளவே யாகும் ஏழை!
துறந்தா ரறிவாரோ தூதின் தன்மை?
இகழ்ச்சியும் புகழ்ச்சியு மின்பமுந் துன்பமும்
எல்லா மில்லை ஆதலால் எவருங்
கட்டுக கோவில், வெட்டுக ஏரி,
என்று திரிதரும் இவர்களோ நமது
நன்றுந் தீதும் நாடி யுரைப்பர்?
இராச்சிய பாண சூத்திரம் யார்க்கும்
நீச்சே யன்றி நிலையோ? நடேசன்!
யோசனை நன்று! நடேசன்! ஆ! ஆ!

---

1. பகைவர் 2. சேரன்

ஏதோ இவ்வயிற் சூதாப் பேதையர்
உள்ளம் மெள்ள உண்டு மற்றவர்
அம்மை யப்பரை அணுகா தகன்று

தம்மையும் மறந்தே தலைதடு மாறச்
செய்யுமோர் சேவக முண்டுமற் றவன்பால்.
ஐயமொன் றில்லை அதனால் மொய்குழல்
மாதற்பாற் றூதுசெல் வல்லமை கூடும்,
பித்த னெப்படிச் சுந்தரர்க்கு (13)

ஒத்த தோழனா யுற்றனன் வியப்பே!
முனிவரும் வரவர மதியிழந் தனரே.

ஜீவ:

இருக்கும், இருக்கும், இணையறு குடில!
பொருக்கெனப் போயுன் புதல்வற் குணர்த்தி
விடுத்திடு தூது விரைந்து
கால விளம்பனஞ்[1] சாலவுந் தீதே. (14)

குடில:

ஈதோ அனுப்பினேன்; இன்றிம் மாலையில்
தூது செல்வான் தொழுதுன் அநுமதி
பெறவரு வான்நீ காண்க:
இறைவ! மங்கல மென்றுமுன் னடிக்கே! (15)
[குடிலன் போக]

ஜீவ: (தனதுள்)

நல்லது! ஆ! ஆ! நமது பாக்கியம்
அல்லவோ இவனைநாம் அமைச்சனாப் பெற்றதும்
என்னே! இவன்மதி முன்னிற் பவையெவை?

[சில பிரபுக்களும் நாராயணனும் வந்து வணங்க]

(பிரபுக்களை நோக்கி)

வம்மின், வம்மின், வந்து சிறிது
காலமானது போலும். நமது

மந்திரியுடன் சில சிந்தனை செய்திங்கு
இருந்தோம் இதுவரை, குடிலன் மிகவும்
அருந்திறற் சூழ்ச்சியன்.

---

1. காலத்தை வீணே தாழ்த்தல் (delay)

**முதற் பிரபு :** அதற்கெனையம்?

சுரகுரு[1] பிரசுரன்[2] முதல்வர் சூழ்ச்சி
இரவா யிவன்கிறி தீந்தாற் பெறுவர்.
எல்லை யுளதோ இவன்மதிக் கிறைவ!
வல்லவன் யாதிலும்.

**நாராயணன் :** (தனதுள்) நல்லது கருதான்
வல்லமை யென்பயன்!

**2—ஆம் பிரபு :** மன்னவ! அதிலும்
உன்தொல் குலத்தில் உன்திரு மேனியில்
வைத்த பரிவும் பக்தியு மெத்தனை!
குடிலனுன் குடிக்கே யடிமை பூண்ட
ஆஞ்ச னேயனோ அறியேம்!

**நாரா :** (தனதுள்) முழுப்பொய்
வாஞ்சையாய் மன்னனிவ் வாயுரை முகமன்
விடுப்பனோ விடமன்? குடிப்பனே!

**சேவகன் :** கொற்றவ!
நேற்று மாலையில் நின்றிரு வாணையிற்
சென்றுழித் திருமுகம் நோக்கி யேதோ
சிந்தனை செய்துதன் சித்த மகிழ்ச்சியால்
தந்தன னெனக்கித் தரள மாலை.[3]

**நாரா :** (தனதுள்)
எதுவோ பொல்லாங் கெண்ணினன் திண்ணம்.

**ஜீவ :**
பார்மின், பார்மின், நம்மிசை வைத்த
ஆர்வமும் அன்பும், ஆ! ஆ!

**நாரா :** (தனதுள்) யாதும்
பேசா திருக்கி லேசுமே நம்மனம்;
குறியாற் கூறுவம்: அறிகி லறிக.

(நாராயணன் செல்ல)

---

1. தேவகுரு : வியாழன் (பிரகஸ்பதி) 2. அசுர குரு (சுக்கிராச்சாரி) 3. முத்துமாலை.

**3-ஆம் பிரபு :**

சாட்சியு மோகண் காட்சியாம் இதற்கும்!
அங்கைப்[1] புண்ணுக் காடியும்[2] வேண்டுமோ?
எங்கு மில்லையே யிவன்போற் சுவாமி
பத்தி பண்ணுநர் சுமித்திரை பயந்த
புத்திரன்,[3] வீரவா கிவர்[4] முதற் போற்றிய
எத்திறத் தவரும் இறைவ! இவனுக்
கிணையோ தன்னய மெண்ணாப் பெருமையில்?

(நாராயணன் மூக்கிற் கரி தேய்த்து வர)

**ஜீவ :** (நாராயணனை நோக்கி)
ஏ! ஏ நாரணா கரியா யுன்மூக்
கிருந்தவா றென்னை? ஏ! ஏ! இதுவென்!

**நாரா :**

மூக்கிற் கரிய ருளரென நாயனார்
தூக்கிய குறளின் சொற்படி, எல்லாம்
உள்ள நின்னருகவ ரில்லா ராவரோ?

**ஜீவ :**

ஓகோ! ஓகோ! உனக்கென்ன பைத்தியம்!

**யாவரும் :**

ஓகோ! ஓகோ! ஓகோ! ஓகோ!

(யாவரும் நகைக்க)

**ஜீவ :** (பிரபுக்களை நோக்கி)
நாரணா! நீயும் நடேசன் தோழனே.
நல்லது: விசேடமொன் றில்லை போலும்.

**முதற்பிரபு :**

இல்லையெம் இறைவ! எல்லாப் புவியுநின்
வாகுவே[5] தாங்க! மங்கலம் வரவே!

(பிரபுக்கள் போக)

**ஜீவ :**

நாராயணா! உனக் கேனிப்பித்து?
தீரா இடும்பையே தெளிவுற விலையேல்,

---

1. உள்ளங்கை 2. கண்ணாடி 3. இலக்குவன் 4. சூரபதுமனோடு முருகன் செய்த போரில் துணைநின்றவர் 5. தோள்

நாரா :

எனைவகை தேறியக் கண்ணும், வினைவகை
கோடிய மாதர் கோடியின் மேலாம்.

ஜீவ :

எதற்குந் திருக்குறள் இடந்தரும்! விடுவிடு.
விரும்பி யெவருந் தின்னுங்
கரும்பு கைப்பதுன் வாய்க்குற் றம்மே. (16)

[அரசனும் சேவகர்களும் போக]

நாரா :

(தனிமொழி)

ஐயோ! இதற்கென் செய்வன்! அரசன்,
உறுதியா நம்பினன், சிறிதும் பிறழான்,
வெளுத்த தெல்லாம் பாலெனும் மெய்ம்மை
யுளத்தன்! களங்கம் ஓரான். குடிலனோ
சூதே யுருவாத் தோற்றினன் அவன்றான்
ஓதுவ உன்னுவ செய்குவ யாவுந்
தன்னயங் கருதியன்றி மன்னனைச்
சற்று மெண்ணான் முற்றுஞ் சாலமா
நல்லவன் போலவே நடிப்பான், பொல்லா
வஞ்சகன், மன்ன னருகுளோர் அதனை
நெஞ்சிலும் நினையார்; நினையினும் உரையார்
இறைவன் குறிப்பிற் கிசைய அறைவர்
வடித்து வடித்து மாற்றொலி போன்றே
தடுத்து மெய்ம்மை சாற்றுவர் யாரே?
என்னே யரசர் தன்மை! மன்னுயிர்க்
ஆக்கமும் அழிவும் அவர்தங் கடைக்கண்
நோக்கி லுண்டாம் வல்லமை நோற்றுப்
பெற்றார்; பெற்றவப் பெருமையின் பாரம்
உற்றுநோக் குவரேல் உடல்நடுங் காரோ?
கருப்போ தேனோ என்றவர் களிப்பது.
நெருப்பா றும்மயிர்ப் பாலமும் அன்றோ?
விழிப்பா யிருக்கிற் பிழைப்பர்; விழியிமை
கொட்டிற் கோடி பிறழுமே, கொட்டும்
வாலாற் றேளும், வாயாற் பாம்புங்

காலும் விடமெனக் கருதி யாவும்
அடிமுதன் முடிவரை ஆய்ந்தா ராய்ந்து
பாரா ராளும் பாரென் படாவே?

யாரையான் நோவ! அதிலுங் கொடுமை!
அரசர்க் கமைச்சர் அவயவம் அலரோ?
உறுப்புகள் தாமே உயிரினை யுண்ண
ஒருப்படில் விலக்குவ ருளரோ? தன்னயம்
மறந்து வன்னுயிர்ச் சகமே மதித்தங்

கிறந்தசிந் தையனோ இவனோ அமைச்சன்?
குடிலன் செய்யும் படிறுகள் வெளியாப்
பொய்யும் மெய்யும் புலப்பட உரைக்க
என்றால், நோக்க நின்றார் நிலையில்
தோன்றுஞ் சித்திர வொளிபோ லியார்க்குஞ்

சான்றொடு காட்டுந் தன்மைய வலவே,
சித்திரப் பார்வை யழுந்தார்க்[1] கெத்தனை
காட்டினுங் கீறிய வரையலாற் காணார்.
என்செய்? இனியான் எப்படிச் செப்புவன்?
நிந்தையா நடேசனைப் பேசிய குறிப்புஞ்

சிந்தனை செய்வதாச் செப்பிய செய்தியும்
ஓரில் யாதோ பெரிய உறுகண்
நேரிடு மென்றென் நெஞ்சம் பதறும்;
என்னே யொருவன் வல்லமை!
இன்னும் பிழைப்பன் மன்னன் விழிக்கிலே... (17)

[நாராயணன் போக]

இரண்டாம் அங்கம் : முதல் களம் முற்றிற்று

1. ஓவியத்துறை உணர்ச்சியற்றவர்கள்

# இரண்டாம் அங்கம்

## இரண்டாம் களம்

**இடம் :** ஊர்ப்புறத்து ஒரு சார். காலம் : **வைகறை.**

[நடராசன் அருணோதயங் கண்டு நிற்க.]

(இணைக்குறள் ஆசிரியப்பா)

**நடராசன் :**

(தனிமொழி)

**பரிதியி னுதயம் பார்க்கக் கருதில்
இவ்வுடஞ் சாலவு மினிதே உதயஞ்
செவ்விதிற் கண்டுபின் செல்வோம்.
ஓவியத் தொழில்வலோன் நீ வியக் கிழியில்[1]
தீட்டுவான் புகுந்த சித்திரம், நீட்டுந்**

**தூரியந் தொடத் தொடத் துலங்குதல் போல,
சூரியன் பன்னிறக் கதிர்கள் தொடத்தொட
உருவுதோன் றாவணம் ஒன்றாய்ச் செறிந்து
கருகிருள் மயங்கிய காட்சி கழிந்து
சிறிது சிறிதா யுறுப்புகள் தெளியத்**

**தோன்றுமித் தோற்றம் நன்றே!
சூட்டைச்[2] சேவல் சுரைக்கொடி படர்ந்தவவ்
வீட்டுச் சியின்மேல் வீம்பாய்[3] நடந்தபின்
இருசிறை யடித்து நெடுவா யங்காந்து
ஒருமுறை கூவி உழையுளார்[4] புகழ**

**உற்றுநோக் குவர்போற் சுற்றுநோக் குதலும்
இருட்பகை யிரவி இருளெனத் தம்மையுங்
கருதிக் காய்வனோ என்றயிர்த் திருசிறைக்
கையான் மார்பிற் புடைத்துக் கலங்கி
மெய்யாந் தம்பெயர் விளம்பி வாயசம்**

**பதறியெத் திசையிலும் சிதறியோடுதலும்,
பன்னிறச் சிறகர்ப் பறவைத் தொழுதி**

---

1. திரைச்சீலை 2. உச்சிக்கொண்டை 3. தெம்புடன் 4. பக்கத்தில் உள்ளவர்.

தம்மினந் தழுவிச் சூழ்ந்து வட்டமாய்
அங்கங் கிருந்து தங்கண் முறைமுறை
அஞ்சிறை யொத்தறுத்[1] தடியா எஞ்சலில்
இசையறி மாக்களின் ஈட்டம் போல
வசையறு பாடல் வழங்கலும் இனிதே!
அதுவென்! ஆஹா? அலகா லடிக்கடி
தந்தையுந்[2] தஞ்சிறை தடவி விளக்கிக்
கதுவுங் காத லாணையிட் டன்றந்து
பின்புசென் றோயா தன்புபா ராட்டும்
இவ்விரு குருகுங் காதலர்.
கண்டும் அவர்நிலை காணார் போல்துகிர்த்
துண்டங் கொண்டு பாலைச் சொரிந்த
பழமெனப் பாவனை பண்ணிக் கொத்தி
உழையுழை ஒதுங்கி யோடிப் போலிக்
கூச்சங் காட்டுமிக் குருகுகா தலியே.
ஆடவர் காத லறைதலுந் தையலர்
கூடமாய்க்[3] கொள்ளலும் இயல்பே போலும்.
வாணீ! மங்காய்! வாழி நின்குணம்!
ஒருதினம் இவ்வயின் உனைகான் கண்டுழி
முருகவிழ் குவளைநின் மொய்குழற் சூட்டத்
தந்ததை யன்பாய் மந்தகா சத்தொடு
வாங்கியு மதியா தவள்போ லாங்கே
ஓடுமவ் வாய்க்கால் நீரிடை விடுத்துச்
சிறுமியர் குறும்பு காட்டிச் சிரித்தனை.
ஏதியா னெண்ணுவ னோவென வுடன்நீ
கலங்கிய கலக்கமென் கண்ணுள தின்றும்.
அழுங்கலை வாணீ! அறிவேன்! அறிவேன்!
உளத்தோ டுளஞ்சென் றொன்றிடிற் பின்னர்
வியர்த்தமே செய்கையும் மொழியும் —

(உற்றுச் செவி கொடுத்து)

"வாணி" என்றபேர் கேட்டனன்! யாரது?
காணின் நன்றாம். காரிகை யார்கொல்?

[பலதேவனும் ஒரு நற்றாயும்...தோழனும் தொலைவில் வர]

சொல்வதென்! சூழ்ச்சியென்! கேட்டுதும்
மறைந்து

---

1. ஓசையிட்டு 2. நெருங்கும் 3. அறிந்தும் அறியாதிருத்தல்

(ஆசிரியத்துறை)

நற்றாய் :

நாணமு மென்மகள் தன்னல முமுருகத் துன்[1]னை [நம்பி
வீணில் விழைந்தஇக் கேடவள் தன்னுடன் வீவுறுமே[2]
பேணிய என்குடிப் பேர்பெரி தாதலினால்
வாணியின் வம்புரை[3] யாமினியஞ்சுதும் [வாரலையோ

(ஆசிரியப்பாவின் தொடர்ச்சி)

நட: (தனதுள்)

55. ஐயோ! இதுவென்! கட்டம்! கட்டம்

(ஆசிரியத்துறை)

நற்றாய் :

நாணிக் கவிழ்த்தவள் தன்றலைதொட்டு நவின்றவுன்றன்
ஆணைக் கவள்சிரம் அற்றினி வீழினு மஞ்சலம்யாம்
காணப் பிறர்பொருள் கள்ளல மாதலினால்
வாணிக் குரித்தனக் கேட்டபின் வெளவலம் வாரலையோ.

(ஆசிரியப்பாவின் தொடர்ச்சி)

நட : (தனதுள்)

நாரா யணன் அன்றுரைத்தது மெய்யே!

(ஆசிரியத்துறை)

நற்றாய் :

நாணமி லாமகள் சாவுக் கினிவெகு நாள்களில்லை
காணிய நீயும் விரும்பலை யோலையிற் கண்டுகொள்வை
பேணிய நின்வாழ் வேபெரி தாதலினால்
வாணி யொளித்துநீ வாசித் தறிந்துகொள் வாரலையோ.

---

1. சிந்தி 2. செடும் 3. வீண்பேச்சு

(ஆசிரியப்பாவின் தொடர்ச்சி)

**நட :** (தனதுள்)
ஆயினும் இத்தனை பாதகனோ இவன்!

**பலதேவன் :**
எவருனக் குரைத்தார் இத்தனை பழங்கதை!
சவமவ ளெனக்கேன்? இவள்சுக மெங்கே?
பொய்பொய் நம்பலை, ஐயமெல் லாம்விடு.

பணத்திற் காக்கிழப் பிணந்துடிக் கின்றது.
சேரன் பதிக்கோர் செய்திசொல் லுதற்காச்
சென்றிதோ இரண்டு நாளையிற் றிரும்புவன்.
இச்சிறு பொற்றொடி மைச்சினிக் குக்கொடு
தருகுவன் ஈதோ! மறக்கன்மின் என்னை!

[நற்றாய் போக, பலதேவனும் தோழனும் நடக்க]

**தோழன் :**
செவ்விது! செவ்விது! இவ்விட மெத்தனை
ஐந்தோ? ஆறோ?

**பலதே :** அறியேன். போ! போ!
இச்சுக மேசுகம், மெய்ச்சுகம் விளம்பில்.

**தோழன் :**
வாணியை மணந்தபின் பூணுவை விலங்கு.

**பலதே :**
வாணி யாயினென்? மனோன்மணி யாயினென்?
அதைவிடப் படித்த அலகையா[1] யினுமென்?
கணிசத்[2] திற்கது; காரியத் திற்கிது;
வாவா போவோம், வழிபார்த் திருக்குஞ்
சேவக ராதியர் செய்குவ ரைய'',
எத்தனை பொழுதிங் கானது வீடுவிட்டு?
ஏகுவம் விரைவில், இனித்தா மதமிலை.

[பலதேவனும் தோழனும் போக]

**நட :**
கொடுமை! கொடுமை இக்கொடும்பா தகன்சொல்

---

1. பேய் 2. கண்ணியம்

கடு[1] வெனப் பரந்தென் கைகால் நடுங்கின.
கைத்த[2] தென் கண்ணுங் காதும்.
இத்தனை துட்டரும் இருப்பரோ உலகில்?
ஐந்தோ! ஆறோ! அறியான் பாதகன்
நொந்தது புண்ணா யென்னுளங் கேட்க.
மெய்ச்சுகம் இதுவாம்! விளம்புவ தென்னினி?
இச் சண் டாளனும் வாணியும்! ஏற்கும்!
ஒருபிடி யாயவன் உயிரினை வாங்க
ஓடிய தெண்ணம்; உறுத்தின தென்கை!
தீண்டவும் வேண்டுமோ தீயனை?
என்னிவன் அனந்தைக் கேகுங் காரியம்?
யாருடன் வினவ? நாரண னோ அது?

[நாராயணன் வர]

வா வா, நாரணா!

**நாராயணன் :** ஏ! ஏ! என்னை?
சினந்தனை தனியாய்?

**நட :** ஏன் இத்தீயவன்
அனந்தைக் கேகும் காரணம்?

**நாரா :** யார்? யார்?

**நட :** அறிவை! நீவிளை யாடலை? அறைதி.

**நாரா :**
வதுவை மனோன்மணி தனக்கு வழங்கிட...

**நட :**
அதுவும் நன்றே! கெடுவனிவ் வரசன்!

**நாரா :**
அடுத்து வாணியின் மணமும், அறைந்துளேன்.

**நட :**
விடுத்திடவ் வெண்ணம் : தடுக்கையா னறிவன்;
விடுத்தனன் கண்டும்; எரித்திடு வேன்நொடி.
உறுதியொன் றுளதேல்! உரையாய் நடந்தவை

நாரா :
முதியவ ருசிதனு[1]க் குரைக்க மற்றவன்
வதுவை யவ்வழியே யாற்றிட வாணியை
அதட்டினன்.

நட : அதற்கவள்?

நாரா : மறுத்தனள்?

நட : எங்ஙனம்?

நாரா :
'இறக்கினும் அதற்கியா னிசையேன்' என்றாள்.

நட :
அரைக்கண முன்னம் அறிந்திலே னிம்மொழி.

நாரா :
என்னே யுன்மதி! ஏந்திழை யார்சொல்
நீர்மே லெழுத்தாம்; யாரறி வாருளம்?
மாறி நாடொறும் வேறுபா டுறுமதி
யெண்ணுட் பட்டு நுண்ணயங்[2] கூடலாந்
பெண்கள் நிலையிற் பெரிதுந் திடனே.
புண்கொள் நெஞ்சோடு புலம்புகின் றாய்மிக
காதலா லழிக் கனன்முன் வையாய்
மாதரார் கட்டுரை மாயா தென்செயும்?
அக்கண முற்ற துக்கந் தூண்டக்
கன்னியா டிருப்ப னென்றா ளன்றி
யன்ன தவள்கருத் தாமோ?

நட : அறியாய்.
புருடரே புலையர் : நிலையிலாப் பதடிகள்;
இருளடை நெஞ்சினர் ; ஈரமி லுளத்தர்;
ஆணையு மவர்க்கொரு வீணுரை; அறிந்தேன்.
தந்நய மன்றிப் பின்னொன் றறியாக்
காதகர்[3] கடையர்; கல்வியில் கசடர்.

நாரா :
ஓதி யுணரினும் மாத ருள்ளம்
அலையெறி கடலினுஞ் சலனமென்ப.

---

1. பாண்டியன் 2. வரையறை 3. கொலையாளர்

திரைபொரல் கரையிலும் வெளியிலு மன்றி
கயத்திலும்[1] அகத்திலுங் கலக்க மவர்க்கிலை;
இயக்கமும் மயக்கமுஞ் செறிவ தரிவையர்

உள்ளப் பரப்பி லொருபுறத் தன்றி
பள்ளத் தாழ்ச்சியிற் பரிவும், கொள்கை
விள்ளா முரணும்[2] மெய்ம்மையும் தெளிவும்,
உள்ளார்; அவர் தம்உறுதிநீ யுணராய்.
சுற்றிச் சுழலினுங் கறங்கொரு நிலையைப்

பற்றியே சுழலும்; அப் படியலர் புருடர்.
கேடவ ருறுவதிங் காடவ ருருவுகொண்
டலைதருங் கொடியஇவ் வலகைகள் வழியே
புருடரோ இவரும்! கருவுறுங் குழவிமெய்
மென்றிட நன்றெனக் கொன்றுதின் றிடுவர்.

அவாவிற் களவிலை, அன்போ அறியார்.
மணமும் அவர்க்கொரு வாணிகம்! அந்தோ
சீ! சீ! என் இத் தீயவர் செய்கை!
மாசிலா வையகத் திவ்வுயிர் வாழ்க்கை
ஆம்பெருங் கடலுள் போம்மரக் கலனாம்

ஆடவர் நெஞ்சம், அறத்துறை யகன்று
நீள் திசை சுழற்று நிலையிலாக் காற்றாம்
நிண்ணயமற்ற எண்ணம் இயக்கச்
சென்றுழிச் சென்று நன்றறி வின்றி
அலையா வண்ணம் அறத்துறைக் குடாவில்

நிலைபெற நிறுத்துநங் கூரமாய் பின்னுஞ்
செய்வினை முயற்சியிற் பொய்வகைப் புன்னெறிக்
கெற்றுண் ட[3]கன்று பற்றொன் றின்றி
ஆசையாந் திசைதொறும் அலைந்து திரிந்து
கெடாவணங் கடாவிக் கெழுமிய அன்புசேர்

அறப்பிடி கடைப்பிடி யாகக் காட்டிச்
சிறப்புயர் சுகத்துறை சேர்த்துசுக் கானாய்,
நின்றது மங்கையர் நிலைமை யென்று

1. ஆழத்திலும் 2. முரண்பட்ட கொள்கைகளைக் கைவிடாது பற்றியிருத்தல் 3. மோதப்பட்டு.

நினையா மனிதர், விலங்கினுங் கீழாய்
அனையார் தருசிற் றின்பமே யவாவி
வாழ்க்கைத் துணையா வந்தவர் தம்மைத்
தாழ்த்துஞ் சேறா மாற்றுவர் தவத்தால்
மந்திரவாள் பெற்று மாற்றலர் வெல்லாது
அந்தோ! தம்மெய் யரிவார் போலத்
தனியே தளருந் தமக்குத் துணையாய்
வருபவர் தமையும் பகைவரா நலிந்து[1]
பாலையும் நஞ்சாப் பண்ணுவர் அவர்தம்
மதிகே டென்னை! துதிபெறு மன்புநர்
குணமு முளாரில் துணைவ ராயின்
இல்லதென் னுலகில் அவற்றுடன் கல்விசேர்
நல்லறி வுளதேற் பொன்மலர் நாற்றம்
பெற்றவா றன்றோ? எற்றே[2] மடமை!
கேட்டிட வேட்டவை யாவையும் ஈயுங்
கற்பக தருவென அற்பமுங் கருதாது
அடியுடன் முறித்து முடிபுற[3] வெரித்துக்
கரிபெற முயன்ற கம்மிய[4] னேயென,
தனக்கென வாழுந் தனிமிருகத்தின்
மனக்கோள்[5] நிமிர்த்து மற்றைய ரின்பமுந்
துன்பமுந் தனதா அன்புபா ராட்ட,
மெள்ளமெள் ளத்தன் உள்ளம் விரித்துப்
பொறையுஞ் சாந்தியும் படிப்படி புகட்டிச்
சிறிது சிறிதுதன் சித்தந் தெளித்துத்
தானெனு நினைப்புந் தனக்கெனு மிச்சையும்
ஒய்வுறச் செய்து, மற் றொன்றாய் நின்ற
எங்கு நிறைந்தபே ரின்ப வெள்ளம்
மூங்கி யதனுள் மூழ்கிட யாரையும்
பக்குவஞ் செய்யுநற் பள்ளிச் சாலை, இவ்
இல்லற மென்பதோர் நல்லுணர் வின்றி,
உடற்றின வடக்குமா உரைஞ்சிடு தடியென
மடத்தனங் கருதித் தம்மையும் பிறரையும்

1. வருந்தி 2. எத்தன்மைத்தோ 3. முடிவுடைய 4. கொல்லன் மனக்குற்றம்.

கெடுத்திடு மாந்தரின் கெடுமதி யென்னே!
நாரணா! இவ்வயிற் கேட்டதுங் கண்டதுந்
தீராத் துயரமே செய்வது செல்குவன்,
ஏதா யினுமினி எய்தில்,
190. ஓதாய் முனிவர் உறையு ளூற்றே.

[நடராசன் போக]

(நேரிசை ஆசிரியப்பா)

நாரா :
(தனிமொழி)

நல்லது மிகவும்! செல்லிடந் தோறுங்
கதையா யிருந்தது. கண்டதென்? கேட்டதென்?
புதுமையிங் கிதுவும்! பொருந்துவ
தெதுவா யினுஞ்சரி, ஏகுவம் மனைக்கே.

[நாராயணன் போக]

இரண்டாம் அங்கம் : இரண்டாம் களம் முற்றிற்று.

# இரண்டாம் அங்கம்

## மூன்றாம் களம்

**இடம் :** திருவனந்தையிற் சேரன் அரண்மனை. காலம் : காலை

(நேரிசை ஆசிரியப்பா)

[புருடோத்தமன் சிந்தித்திருக்க]

**புருடோத்தமன் :**
**(தனிமொழி)**

யார் கொலோ அறியேம்! யார்கொலோ அறியேம்!
வார்குழல் துகிலொடு சோர மாசிலா
மதிமுகங் கவிழ்த்து நுதிவேற் கண்கள்
விரகதா பத்தால்[1] தரளநீர் இறைப்ப
பரிபுர மணிந்த பங்கயம் வருந்துபு

விரல்நிலங் கிழிப்ப வெட்கந் துறந்து
விண்ணணங் கனைய கன்னியர் பலரென்
கண்முன் னின்றநங் கிரக்கினுங் கலங்காச்
சித்தம் மத்துறு தயிரில் திரிந்து
பித்துறச் செய்தவிப் பேதை யார்கொலோ?

எவ்வுல கினளோ? அறியேம். இணையிலா
நவ்வியும்[2] நண்பும் நலனு முடையவள்
யார்கொலோ? நாள்பல வானவே ஆ! ஆ!
விழிப்போ டென்கண் காணில்! வீண்! வீண்!
பழிப்பாம் பிறருடன் பகர்தல். பகர்வதென்?

கனவு பொய்யெனக் கழறுவர். பொய்யோ?
நனவினும் ஒழுங்காய் நாடொறுந் தோற்றும்.
பொய்யல; பொய்யல; ஐய மெனக்கிலை
நாடொறும் ஒருகலை கூடிவளரும்
மதியென எழில்தினம் வளர்வது போலும்

முதனாள் முறுவல் கண்டிலம்; கடைக்கணில்
ஆர்வம் அலையெறி பார்வையன் றிருந்தது,

---

1. காதல் வேட்கை 2. அழகு

நேற்றிராக் கண்ட தோற்றமென் நெஞ்சம்
பருகின தையோ! கரிய கூந்தலின்
சிறுசுருள் பிறைநிகர் நறுநுதற் புரளப்
பொருசிலைப் புருவம் ஒருதலை நெகிழ்த்துச்
செவ்வரி படர்ந்த மைவிழி நெடுவிழி
உழுவலோ டென்முகம் நோக்க எழுங்கால்
என்னோக் கெதிர்படத் தன்னோக் ககற்றி,
வெய்யோன் வாரி[1]யில் விழுங்கால் துய்ய
சேணிடைத் தோன்றுஞ் செக்கர்போற் கன்னம்
நாணொடு சிவக்க ஊர்க்கோள் நாப்பண்[2]
தோன்றிய உவாமதி போன்றங் கெழிலொளி
சுற்றிய வதனஞ் சற்றுக் கவிழ்த்தி,
அமுதமூற் றிருக்குங் குமுதவா யலர்ந்து
மந்த காசந் தந்தவள் நின்ற
நிலைமையென் நெஞ்சம் நீங்குவ தன்றே!
தேவ கன்னியர் முதலாந் தெரிவையர்
யாவரே யாயினும் என்கண் தனக்கு
மைந்தரா மாற்றுமிச் சுந்தரி யார்கொலோ!
அறியுமா றிலையே? அயர்க்குமா[3] றிலையே!
உண்டெனில் கண்டிடல் வேண்டும் இலையெனில்
இன்றே மறத்தல் நன்றே. ஆம்! இனி
மறத்தலே கருமம், மறப்பதும் எப்படி?
போரெவ ருடனே யாயினும் புரியிலவ்
ஆரவா ரத்தில் அயர்ப்போ மன்றி...

[சேவகன் வர]

சேவ :

எழுதரு மேனி இறைவ! நின் வாயிலில்
வழுதியின் தூதுவன் வந்துகாக் கின்றான்.

புரு : யாரவன்?

சேவ :

பேர்பல தேவனென் றறைந்தான்.

புரு : (தனதுள்)
சோரன் :

---

1. கடல் 2. பரிவேடமத்தியில் 3. மறக்குமாறு

(சேவகனை நோக்கி) வரச்சொல்.
(தனதுள்) தூதேன்? எதற்கிக்
கயவனைக் கைதவன்[1] அனுப்பினான்?
நயந்தீ துணர்ந்து நட்டிலன் போன்மே.

[பலதேவன் வர]

பலதேவன் :

மங்கலம், மங்கலம்! மலய மன்னவ!
பொங்கலைப் புணிரிசூழ் புவிபுகழ் சுமக்கத்
தன்தோள் தாரணி தாங்க எங்கும்
ஒன்னார் தலையொடு திகிரி யுருட்டிக்
குடங்கை யணைமிற் குறும்பர்[2] தூங்க
இடம்பார்த் தொதுங்குந் தடமுற் றத்து
மேம்படு திருநெல் வேலிவீற் றிருக்கும்
வேம்பார் ஜீவக வேந்தன் விடுத்த
தூதியான் என்பே ரோதில் அவ் வழுதியின்
மந்திரச் சிகாமணி தந்திரத் தலைவன்
பொருந்தலர் துணுக்குறு மருந்திறற் சூழ்ச்சியன்
குடிலேந் திரன் மகன்...

புரு : (தனதுள்) மடையன்

பலதே : வந்ததென்?

அப்பெரு வழுதி யொப்பறு மாநகர்
நெல்லையிற் கண்டு புல்லார்[3] ஈட்டமும்[4]
அரவின தரசும்[5] வெருவி ஞெரேலெனப்
பிறவிப் பௌவத் தெல்லையும் வறிதாம்
ஆணவத் தாழ்ச்சியும் நாண அகழ்வலந்
தொட்டஞ் ஞானத் தொடர்பினு முரமாய்க்[6]
கட்டிய மதிற்கணங் காக்க விடியத்து
எட்டிய மூத்தி இழுக்கும், புலன்களின்
யந்திரப் படைகள் எண்ணில இயற்றி...

புரு : வந்த அலுவலென்?

பலதே : மன்னவர்! நீயான்

வஞ்சி நாடதற்குத் தென்கீழ் வாய்ந்த
நன்செய்நா டென்றொரு நாடுள தன்றே?

1. பாண்டியர் 2. சிற்றரசர் 3. பகைவர் 4. கூட்டம்
5. ஆதிசேடன் 6. பலமாய்

எங்கட் கந்நா டுரித்தாம். அங்கு
பரவு பாடையும்[1] விரவுமா சாரமும்[2]
நோக்கில் வேறொரு சாக்கியம்[3] வேண்டா...

**புரு:**
நல்லது! சொல்லாய்.

**பலதே:** தொல்லையாங் கிழமை[4]பா
ராட்டித் தங்கோல் நாட்டி நடத்த
வல்ல மன்னவரின்மையால் வழுதிநாட்டு
எல்லையுட் புகுத்தங் கிறுத்துச் சின்னாள்
சதியாய் நீயர சாண்டாய்...

**புரு:** அதனால்?

**பலதே:**
அன்னதன் உரிமை மீட்க உன்னியே
முதுநக ராமெழில் மதுரை துறந்து
நெல்லையைத் தலைநகர் வல்லையில் ஆக்கி
ஈட்டினன்[5] ஆங்கே

**புரு:** வேண்டிய தென்னை?
உரையாய் விரைவில்.

**பலதே:** உதியனும் செழியனும்
போர்தனி புரியில் யாமகால் பிழைப்பர்?
பங்கமில் இரவியுந் திங்களுந் துருவி
எதிர்ப்படுங் காலை, கதிர்க்கடுங் கடவுள்
மறைப இவ் வுலகில் வயங்கிருள் நிறையும்
அவரந் நிலையில் அமர்ந்திடில் அவ்விருள்
தவறாத் தன்மைபோல் நீவிர் இருவருஞ்
சமர்செயி லுலகம் தாங்கா தென்றே
எமையிங் கேவி இவ்வவைக் கேற்றவை
நீதியா யெடுத்தெலாம் ஓதி, நன் செய்நாடு
உடையார்க் குரிமை நோக்கி யளிப்பதே
கடனெனக் கழறிப் பின்னிக ழுன்கருத்து
அறிந்து மீளவே விடுத்தான்.

**புரு:** ஆ! ஹா!
முடிந்ததோ? இலையெனின் முற்றும் செப்புவாய்!

1. வழங்கும் மொழி 2. நடைமுறை ஒழுகலாறு 3. சான்று 4. உரிமை 5. நெருங்கினன்

பலதே :
மேலும் ஒருமொழி விளம்புதும் வேந்தே!
சாலவும் நீவிர் பகைக்கின் சகமெலாம்
ஆழ்துயர் மூழ்கலும் அன்றி உங்கட்கு
ஏது விளையுமோ அறியேம் ஆதலின்,
அஞ்சா அரியே றன்னஜீ வகனுடன்
வெஞ்சமர் விளைத்தல் நன்றல.

புரு : (பயந்தாற்போல்) ஆ! ஆ!

பலதே :
நன்செய்நா டினிமேல் மீட்டு நல்கலும்
எஞ்சலில் பெரும்புகழ்க் கேற்ற தன்றெனில்
உரைக்குது முபாயமொன் றுசிதன் மனையில்
திரைக்கடல் அமுதே உருக் கொண் டதுபோல்
ஒருமலர் மலர்ந்தங் குறைந்தது. தேனுண்
விரைமலர்[1] தேட்ளி[2] வீற்றிங் கிருந்தது
அன்னவன் மன்ன! நின் அரியணை யமரில்
தென்னவன் மனமும் திருந்தும், நன்செய்நா
டுன்னதும் ஆகும்.

புரு : உண்மை! ஓஹோ!
வண்டு மலரிடை யணையஉன் நாட்டில்
கொண்டு விடுவரே போலும். நன்று!
கோதறு[3] மிருபுறக் காதல் அன்றியெம்
நாட்டிடை வேட்டல்[4]மற் றில்லை. மேலும்நம்
அரியணை இருவர்க் கிடங்கொடா தறிகுதி.

பலதே : (தனதுள்)
கரிகுழல் வதுவைபோனது, சுகம்! சுகம்!

புரு :
ஆதலின் முடிவில்நீ ஓதியதொழிக.
நன்செய்நா டதற்கா நாடிநீ நவின்ற
வெஞ்சொல் நினைதொறும் மேலிடும் நகையே.
அடைக்கலம் என்றுநம் அமைச்சரை யடைந்து
நடைப்பிணம் போலக் கடைத்தலை திரிந்து

---

1. மணம் பொருந்திய மலர் 2. வண்டு 3. குற்றமற்ற
4. மணத்தல்

முடியுடன் செங்கோல் அடியிறை வைத்துப்
புரவலர் பலர்வாய் புதைத்து நிற்க.

அனையர்தம் மனைவியர் அவாவிய மங்கல
நாணை இரந்து நாணம் துறந்து
கொஞ்சுமெஞ் சபையில், அஞ்சா தெமது
நன்செய்நா டதனை நாவுகூ சாமற்
பாண்டியற் களிக்க என்றுரை பகர்ந்தும்,

ஈண்டுநீ பின்னும் உயிர்ப்பது தூதுவன்
என்றபே ரொன்றால் என்றே அறிகுதி.
கருதா துணையிங் கேவிய கைதவன்
ஒருவா ரத்திற் குள்ளாய் அவன்முடி
யார்பகை இன்மையால் இதுகா றணிந்து

பார்வகித் தானெனப் பகரா தறிவன்.
விரித்துநீ யெம்மிட முரைத்த புரிசையும்,
அரிக்கு[2]நே ரென்னநீ யறைந்த அரசனும்
இருப்பரேல் காண்குவம் அவர்வலி யினையும்

(சேவகனை நோக்கி)

அருள்வர தனையிங் கழையாய்! சேவக!

[அருள்வரதன் வர]

**பலதே :** (தனதுள்)

சிந்தனை முடிந்தது.

**அருள்வரதன் :** வந்தனம்! வந்தனம்;

**புரு :**

நல்லது! செழியன் நெல்லையை நோக்கி
நாளையாம் ஏகுவம் நமதுபோர் வீரரவ்
வேளையா யத்தமாய் வைப்பாய்.

**அருள் :** ஆஞ்ஞை.

**புரு :** (பலதேவனை நோக்கி)

செல்வாய் விரைவில், தென்னன் போர்க்கு
வல்லா னென்னில் வாரமொன் றிற்குள்
துன்னிய சேனையும் தானும்நீ சொன்ன
கடிபுரி பலமாக் காக்க. இல்லையேல்,

---

1. கப்பம் 2. சிங்கத்திற்கு

மூடிநம் அடியில் வைத்து நாமிடும்
ஆணைக் கடங்கி யமர்க. எமதிடம்
வீணுக் குன்னை விடுத்தகை தவற்கு
வஞ்சியான் மொழிந்த மாற்றமீ தெனவே
எஞ்சா தியம்புதி ஏகமாய். ஏகாய்!

[பலதேவன் போக]

(தனதுள்)

முட்டாள் இவனை விட்டவன் குட்டுப்
பட்டபோ தன்றிப் பாரான் உண்மை.
பச்சாத் தாபப் படுத்துவம்; நிச்சயம்.
நண்ணிய நமது கனாவின்
எண்ண மேகினும் ஏகும் இனியே. (2)

[புருடோத்தமன் போக]

காவற் படைஞரும், சேவகர்களும் அருள்வரதனைச் சுற்றி நிற்க

(நிலைமண்டில ஆசிரியப்பா)

**அருள் :**
தீர்ந்தது சூரரே! நுந்தோள் தினவு;
நேர்ந்தது வெம்போர்.

**யாவரும் :** வாழ்கநம் வேந்தே!

**முதற்படைஞன் :**
நொந்தோம்; நொந்தோ மிதுகா றுறங்கி.

**யாவரும் :**
உய்ந்தோம்; உய்ந்தோம்; வாழுக உன்சொல்!

**2-ம் படை :**
பெரும்போர் இலாநாள் பிறவா நாளே,

**3-ம் படை :**
மெய்யோ? பொய்யோ? ஐய! இதுவும்.

**4-ம் படை :**
யாவரோ, பகைவர்? அருளா பரணா,
தேவரோ, அசுரரோ, மூவரோ, யாவர்?

**அருள் :** பாண்டியன்.

யாவரும் : (இகழ்ச்சியால்)
பாண்டியன்! சீச்சீ! பகடி[1]

அருள் :
சண்டுவந் தவனவன் தூதன். யதார்த்தம்...

யாவரும் :
வியப்பு! வியப்பு!

3-ம் படை : வேற்றா ளொருவனென்
அயற்புறம் போனான், அவன் முகம் நோக்குழி
வியர்த்தனன்; தூதுடை கண்டு விடுத்தேன்.

முதற்படை :
அவன்றான்! அவன்றான்! அவன்றான்! தூதன்.
யாதோ காரணம்? ஓதாய் தலைவ!

2-ம் படை :
அப்பந் தின்னவோ? அலால்குழி எண்ணவோ
செப்பிய துனக்கு? நமக்கேன் சீ ச் சீ!

அருள் :
நல்லது வீரரே! நாளை வைகறை
நெல்லையை வளைந்து நெடும்போர் குறித்துச்
செல்லற் குரியன திட்டம்[2] செய்வான்
வல்லையில் ஏகுதும். மங்கலம் உமக்கே. (3)

[அருள் வரதன் முதலியோர் போக]

இரண்டாம் அங்கம் : மூன்றாம் களம் முற்றிற்று.

(கலித்துறை)

அடைய மனோன்மணி அம்மையுஞ் சேரனும் ஆசைகொள்ள
இடையில் நிகழ்ந்த கனாத்திற வைபவம்[3] என்னையென்க!
உடலு ளுலண்டென வேயுழல் கின்ற வுயிர்களன்புந்
தடையில் கருணையுஞ் சந்தித்தல் எங்ஙனஞ் சாற்றுதுமே.

இரண்டாம் அங்கம் முற்றிற்று.

---

1. கேலி 2. ஏற்பாடு 3. நிகழ்ச்சி

| | | | |
|---|---|---|---|
| ஆசிரியப்பா | 22-க்கு | அடி | 708 |
| ஆசிரியத்துறை | 3-க்கு | ,, | 12 |
| கலித்துறை | 1-க்கு | ,, | 4 |
| ஆக அங்கம் 1-க்கு : | பா 26-க்கு | ,, | 724 |

# மூன்றாம் அங்கம்

## முதற் களம்

இடம் : பாண்டியன் அரண்மனை. காலம் : காலை

(ஜீவகனும் குடிலனும் மந்திராலோசனை)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

**ஜீவகன் :**

ஐயமென்? அருஞ்சூழ் அமைச்ச! நின் தனையன்[1]
பெய்வளைக் கன்னியென் பேதையின் வதுவைக்
குரியன முற்றும் ஒருங்கே முடித்து
வருவதற் கமைந்த வலிமையும் கல்வியும்
உபாயமும் யாவும் உடையான்; அதனால்
அபாயம் கருதிநீ ஐயுறல் வீண்! வீண்!

**குடில :**

பலதேவ னாலொரு பழுதுறும் எனவெனக்
கிலையிலை ஐயம் சிறிதும் உலகத்து
இயற்கை யறியா இளையோ னாகிலும்
முயற்சியின் மதியின் முதியோன் எனவே
மொழிகுவர்; அவனாற் பழுதிலை கொற்றவ!
வஞ்சிநாட் டுள்ளார் வஞ்சனைக் கஞ்சார்
நஞ்சினும் கொடிய நெஞ்சினர், அவர்தாம்
கெஞ்சிடின் மிஞ்சுவர்; மிஞ்சிடிற் கெஞ்சுவர்;
என்னும் தொன்மொழி[2] ஒன்றுண் டதனால்
மன்னவ! சற்றே மருளும்[3] என்னுள்ளம்.
அன்றியும் புருடோத் தமனெனும் அரசன்
கன்றுஞ்[4] சினத்தோன் என்றார் பலரும்.

**ஜீவ :**

சினத்தோன் ஆயினென்? தேவரும் தத்தம்
மனத்தே அவாவி மயங்குநம் மனோன்மணி

1. மகன் (ஈண்டு பலதேவன்) 2. பழமொழி 3. மயங்கும் 4. கோபிக்கும்.

திருவும் வெருவும் உருவும், பெருகும்
அருளுறை யகமும், மருளறு முணர்வும்,
முன்னமே இருடிகள் மொழியக் கேட்டுளன்...
அன்னவன் தன்னிடைப் பின்னரும் பெயர்த்துக்
குறிப்பால் நமது கொள்கை யுணர்த்தில்.
செறித்திடும் சிறை[1]யினை யுடைத்திடும் புனல்போல்
தாங்கா மதிழ்ச்சியுள் தாழ்ந்தவன் இப்பால்
தலையா லோடி வருவன்; உனக்கு
மலைவேன் மந்திரக் குடிலேந் திரனே!

குடில :

முனிவர்க ளாங்கே முன்னர் மொழிந்தனர்
என நாம் நினைப்பதற்கில்லை, நம் அமுதின்
எழிலெலாம் எங்ஙனம் முனிவோர் மொழிவர்?
துறந்தார் கவைதாம் தோற்றுமோ மறந்தும்?
சிறந்த நூல் உணர்வும் தெளிந்தோர் உளமும்
செப்பினர் என்றிடில் ஒப்பெலாந் தகைத்தே.
ஆயினும், மலைநாட் டரசன் நமது
தாயின் தன்மை சகலமும் இப்போது
அறியா தொழியான்; அயிர்ப்பொன் றில்லை.
நெறிமுறை சிறிதும் பிறழா நினது
தூதுவன் யாவும் ஓதுவன் திண்ணம்
அம்மா! தனியே அவன்பல பொழுதும்
மம்மர்[2] உழன்றவன் போன்று மனோன்மணி
அவயவத் தழகெலாம் மாறா தறைந்தறைந்து
இமையவர் தமக்கும் இசையுமோ இவளது
பணிவிடை? நமது பாக்கிய மன்றோ
அணிதாய் அருந்திவட் காம்பணி யாற்றுதும்?
என்றுமிப் படியே இவள்பணி விடையில்
நின்றுநம் உயிர்விடில் அன்றோ நன்றாம்?
என்றவன் பலமுறை யியம்பல் கேட்டுளனே.

ஜீவ :

ஐயமோ? குடிலா மெய்ம்மையும் இராஜ
பத்தியு நிறைந்த பலதே வன்றன்
சித்த மென்குல திலகமாந் திருவுடன்

1. தடை 2. மயக்கம்.

பரிவுறல் இயல்பே, அரிதாம் நினது
புத்திர னென்னில், இத்திற மென்றிங்கு
ஓதவும் வேண்டுவ துளதோ? ஏதிதும்?

குடில :

அதுகுறித் தன்றோ யறைந்ததெம் இறைவ!
மதிகுலக் கொழுந் தாம் மனோன்மணி சீரெலாம்
அறியினும் சேரன் வெறிகொளும் சிந்தையன்
ஆதலின் வதுவைக் கவன்தான் அயிர்க்கும்;
யாதோ எனவென் மனந்தான் அயிர்க்கும்;
அவன்குணம் ஒருபடித் தன்றே, அவனுளம்
உவந்தன வெல்லாம் உஞற்றுவன் என்றே
நாட்டுளார் நவில்வது கேட்டுளாய் நீயும்.

ஜீவ :

ஆம்! ஆம்! அறிந்துளேம். ஏமாப் படைந்த
தன்னுளம் வியந்தவை இன்னவென் றில்லை
வேதம் வகுத்த வியாசன் வியந்து
போற்றினும் பொருட்டாய் எண்ணான்; புலையன்
சாற்றுதல் ஒருகால் தான்மகிழ்ந் திடுவன்;
ஒருவன் தனதடி யிணையடைந் துறவே
பெரிது விரும்பினும் பெருமைபா ராட்டுவன்;
மற்றோர் மனிதன் சற்றுமெண் ணாதே
செருப்பால் மிதிக்கினும் விருப்பா யிருப்பன்,
மலரிடிற் காய்வன்; பரலிடின் மகிழ்வன்;
பெரியோர் சிறியோர் பேதையர் அறிஞர்
உரியோர் அயலோர் என்றவன் ஒன்றும்
உன்னான், ஆயினும் இன்னவை யாவும்
பிரபுத் துவமலாற் பிறவல குடிலா!

குடில :

அடியேற் கவ்விடத் தையமொன் றுளது.
முடிபுனை மன்னரிற் கடிநகர்ச் செருக்கும்
இணையிலாச் சேனையும் ஈறிலா நிதியுந்
துணிவறா உளனும் பணிகிலா உரனும்[1]
உனைவிட எவர்க்குள? ஓதுவாய், உன்வயின்
திணையள வேனும் சேரா தாகும்

1. வலி

ஒரு குணம் பிரபுத் துவமென யாரே
உரைதர உன்னுவர்? ஒவ்வுவ தெவ்விதம்?

மலையன் தந்தைகீழ் வளர்ந்தவன்
அலனெனும் தன்மைநீ ஆய்ந்திலை போலும்.
நன்றுதீ தென்றவன் ஒன்றையு நாடான்
என்றிடில் நாம்சொலும் நன்மையும் எங்ஙனம்
நாடுவன் எனவெனக்கு ஓடுமோர் நினைவே.

**ஜீவ :**

ஒக்கும்! ஒக்கும்நீ யுரைத்தவை முற்றும்.
குலகுரு கூறுதல் கொண்டில மென்னில்
நலமன் றென்றே நாடி யனுப்பினோம்.
நயந்தில னாகில் அவன்விதி நமக்கென்?
இயைந்த கணவர்வே றாயிரம், காண்குதும்.

**குடில :**

அதற்கென் ஐயம்? ஆயிரம் ஆயிரம்!
இதுமாத் திரமன் றிறைவ! சேரன்
சென்றவர்க் கெங்ஙனந் தீதிழைப் பானோ
என்றே யென்மனம் பதறும், ஏவுமுன்
உறைக்க உன்னினேன் எனினும் உன்றன்
திருக்குறிப் பிற்கெதிர் செப்பிட அஞ்சினேன்.

**ஜீவ :**

வெருவலை குடிலா! அரிதாம் நமது
தூதுவர்க் கிழிபவன் செய்யத் துணியும்
போதலோ காணுதி, பொருநைத் துறைவன்
செருக்கும் திண்ணமும் வெறுப்பையும் போம்விதம்!

விடுவனோ சிறிதில? குடில! உன் மகற்குத்
திணைத்துணை தீங்கவன் செய்யின்என் மகட்கும்
பனைத்துணை செய்ததாப் பழிபா ராட்டுவன்
[ஒற்றன் வர]

**ஒற்றன் :**

மங்கலம்! மங்கலம்! மதிகுல மன்னவா!

**ஜீவ :**

எங்குளார் நமது தூதுவர்!

ஒற்றன் : இதோ! இம்
மாலையில் வருவார். வாய்ந்தவை முற்றுமிவ்
ஓலையில் விளங்கும் ஒன்னல ரேறே!
[ஒற்றன் போக, ஜீவகன் ஓலை வாசிக்க]

குடில :
(தனதுள்)
ஒற்றன் முகக்குறி ஓரிலெம் எண்ணம்
முற்றும் முடிந்ததற் கற்றமொன் றில்லை.
போரும் வந்தது நேரும் புரவலற்
கிறுதியும் எமக்குநல் லுறுதியும் நேர்ந்தன.

ஜீவ :
(தனதுள்)
துட்டன்! கெட்டான் விட்டநந் தூதனை
ஏசினான்; இகழ்ந்தான்; பேசிய வதுவையும்.
அடியில்நம் முடிவைத் தவனா ணையிற்கீழ்ப்
படியில் விடுவனாம்; படைகொடு வருவனாம்;
முடிபறித் திடுவனாம்; முடிபறித் திடுவன்!

(குடிலனை நோக்கி)
குடிலா! உனைப்போற் கூரிய மதியோர்
கிடையார், கிடையார் அடையவும் நோக்காய்;
கடையவன் விடுத்த விடையதி வியப்பே!
[குடிலன் ஓலை நோக்க]

குடில :
நண்ணலர் கூற்றே! எண்ணுதற் கென்னே!
உண்ணவா என்றியாம் உறவுபா ராட்டிற்
குத்தவா எனும்உன் மத்தனன்[1] றேயிவன்!
யுத்தந் தனக்கெள் ளத்தனை யேனும்
வெருவினோம் அல்லோம். திருவினுஞ் சீரிய
உருவினாள் தனக்கிங் குரைத்ததோர் குற்றமும்
இழிவையும் எண்ணியே அழியும் என்னுளம்!

ஜீவ :
பொறு! பொறு! குடில! மறுவிலா நமக்கும்
ஒருமறுக் கூறினோன் குலம்வே ரோடுங்
கருவறுத் திடலுன் கண்ணாற் காண்டி.

1. பைத்தியக்காரன்.

குடில :

செருமுகத் தெதிர்க்கிற் பிழைப்பனோ சிறுவன்?
ஒருமயக் கதனாற் பொருவதற் கெழுந்தான்
வெற்றியாம் முற்றிலுங் கொள்வேம் எனினும்,
ஆலவா யுள்ள[1] படைகளை யழைக்கில்
சாலவும் நன்றாம்; காலமிங் கிலையே.

ஜீவ :

வேண்டிய தில்லை யீண்டவர் உதவி.
தகாதே யந்தநி காதர்[2] தஞ் சகாயம்
ஒருநாட் பொருதிடில் வெருவி யோடுவன்.
பின்னழைத் திடுவோம்; அதுவே நன்மை-
புலிவேட்டைக்குப் பொருந்துந் தலிலடி[3]
எலிவேட்டைக்கும் இசையுமோ? இயம்பாய்.

குடில :

அன்றியு முடனே அவன்புறப் படலால்
வென்றிகொள் சேனை மிக இரா தவன்பால்.

ஜீவ :

இருக்கினென்? குடிலா! பயமோ இவற்கும்?
பொருக்கெனச் சென்று நீ போர்க்கு வேண்டிய
[வெலாம்
ஆயத்த மாக்குதி; யாமிதோ வந்தனம்.

[ஜீவகன் போக, வாயிற்காத்த சேவகன் வணங்கி வந்து]

சேவகன் :

விழுமிய மதியின் மிக்கோய்! நினைப்போற்
பழுதிலாச் சூழ்ச்சியர் யாவர்? நின்மனம்
நினைந்தவை யனைத்தும் நிகழுக வொழுங்கே.
நல்லது! நல்லது! செல்லா யப்பால்

[சேவகன் போக]

(தனதுள்)

சொல்லிய தென்னை? சோரன் நமது
நினைவறிந் துளனோ? நிருபர்க்[4] குரைப்பனோ?
இனையவன் எங்ஙனம் உணருவன்? வினையறி

1. மதுரையிலுள்ள 2. வஞ்சசர் 3. கொட்டு 4. அரசர்.

நாரணனோர்ந்து நவின்றனன் போலும்...
காரணம் அதற்கும் கண்டிலம். ஆ! ஆ!
மாலைக் காக வாழ்த்தினன் இவனும்!

புலமையிற் சான்றோர் புகல்வது பொய்யல.
"கள்ள மனந்தான் துள்ளு" மென்பதும்
"நன்னுளந் தன்னையே தின்னு" மென்பதும்
"குற்றம் உள்ளோர் கோழையர்" என்பதும்
சற்றும் பொய்யல; சான்று நம்மிடத்தே

கண்டனம். அவனெம் அண்டையின் அம்மொழி
விளம்பிய காலை விதிர்விதிர்ப் பெய்தி[1]
உளம்பட படத்தென் னூக்கமும் போனதே.
சிச்சீ! இச்சைசெய் அச்சஞ் சிறிதோ!
வஞ்சனை யாற்பெறும் வாழ்வீ தென்னே!

நஞ்சுசோரால் துணைந்து நெஞ்சங் கொதிக்கக்
கனவிலும் நனவிலும் நினைவுகள் பலவெழத்
தானுளே பன்முறை சாவடைந் தடைந்து
பிறர்பொருள் வெளவும் பேதையிற் பேதை
எறிகடல் உலகில் இலையிலை, நில்! நில்!...

நீதியை நினைத்தோ நின்றேன்? பள! பள!
ஏதிது? என்மனம் அங்ஙனம் திரிந்தது!
கொன்றபின் அன்றோ முதலை நின்றழும்
வா வா காலம் வறிதாக் கினையே.
ஓவா[2] திவையெலாம் உளறுதற் குரிய
காலம் வரும்வரும். சாலவும் இனிவே!

[குடிலன் போக]

மூன்றாம் அங்கம் : முதற் களம் முற்றிற்று.

---

1. நடுநடுங்கி 2. இடையறாது.

# மூன்றாம் அங்கம்

## இரண்டாம் களம்

**இடம் :** ஊர்ப்புறம் ஒரு சார் **காலம் :** எற்பாடு

(நேரிசை ஆசிரியப்பா)

**நடராஜன் :**
(தனிமொழி)

காலையிற் கடிநகர் கடந்து நமது
வேலை முடிக்கும், வேண்டின் விரைவாய்
இன்றிரா முடிக்கினும் முடியும். துன்றராக்[1]
கவ்விய முழுமதிக் காட்சியிற் செவ்விதாம்[2]
பின்னிய கூந்தல் பேதையின் இளமுகம்

என்னுளத் திருந்திங் கியற்றுவ திப்பணி[3]
அதனால் அன்றோ இதுபோல் விரைவில்
இவ்வினை இவ்வயின் இனிதின் முடிந்தது?
எவ்வினை யோர்க்கும் இம்மையிற் றம்மை
இயக்குதற் கின்பம் பயக்குமோர் இலக்கு[4]

வேண்டும் உயிர்க்கது தூண்டுகோல் போலாம்.
ஈண்டெப் பொருள்தான் இலக்கற் றிருப்பது?
இதோ ஓ! இக்கரை முளைத்தஇச் சிறுபுல்
சதா தன் குறிப்பொடு[5] சாருதல் காண்டி

அதன்சிறு பூக்குலை யடியொன் றுயர்த்தி
இதமுறத் தேன்றுளி தாங்கி ஈக்களை
நலமுற அழைத்து நல்லூண் அருத்திப்
பலமுறத்[6] தனதுபூம் பாரகம்[7] பரப்பித்து
ஆசிலாச்[8] சிறுகா யாக்கி இதோ! என்
தூசி[9]டைச் சிக்கும் தோட்டி"யும்[10] கொடுத்தே

"இவ்வயின் யாமெலாம் செவ்விதில் துன்னில்
தழைப்பதற் கிடமிலை. சிறார்நீர் பிழைப்பதற்கு
ஏகுமின் புள்ஆ எருதுஅயத்[11] தொருசார்
சிக்கிநீர் செலமின்!? எனத்தன் சிறுவரைப்
புக்கவிட் டிருக்குமிப் புல்லின் பரிவும்

---

1. நெருங்கிய பாம்பு 2 அழகிதாம் 3. தொழில் 4. குறிக்கோள் (aim) 4. நோக்கமொடு 6. பயனுற 7. பூந்தாது 8. உள்வீடில்லாத 9. துணி 10. துறட்டி 11. குதிரை, ஆடு.

பொறுமையும் புலனுங் காண்போர் ஒன்றையும்
சிறுமையாச் சிந்தனை செயாதுஆங் காங்கு
தோற்றுபே ரழகும் ஆற்றல்சால் அன்பும்
போற்றுதங் குறிப்பிற் கேற்றதோர் முயற்சியும்
பார்த்துப் பார்த்துத் தம்கண் பனிப்பர்,[1]

ஆர்த்தெழு மன்பினா லனைத்தையும் கலந்துதம்
என்பெலாம் கரைக்குநல் இன்பம் திளைப்பர்.
தமக்கூண் நல்கும் வயற்குப யோகம்,
எனப்பலர் கருதும் இச்சிறு வாய்க்கால்
செய்தொழில் எத்தனை விசித்திரம்! ஐயோ!

அலைகடல் மலையா மலையலை கடலாப்
புரட்டிட வன்றோ நடப்பதிச் சிறுகால்!
பாரிதோ! பரற்களை நெறுநெறன் றரைத்துத்
சீரிய தூளியாத் தெள்ளிப் பொடித்துத்
தன் வலிக் கடங்கிய மண்கல் புல்புழு

இன்னதென் றில்லை, யாவையும் ஈர்த்துத்
தன்னுட் படுத்தி முந்நீர் மடுவுள்[2]
காலத் தச்சன் கட்டிடும் மலைக்குச்
சாலத் தகும்இவை எனவோர்ந் துருட்டிக்
கொண்டு சென்று இட்டுமற் றையா!

அண்ட யோனியின் ஆணையின் மழையாய்ச்
சென்றபின் பெருமலைச் சிகர முதலாக்
குன்றுவீ ழருவியாய்த் தூங்கியும்,[3] குகைமுகம்
இழிந்தும், பூமியின் குடர்[4] பல நுழைந்தும்
கதித்தெழு சுனையாய்க் குதித்தெழுந் தோடியும்

ஊறிடுஞ் சிறிய ஊற்றாய்ப் பரந்தும்,
ஆறாய் நடந்தும், மடுவாய்க் கிடந்தும்
மதகிடைச் சாடியும், வாய்க்கால் ஓடியும்
பற்பல படியான் பட்டங் கீட்டியது
அற்பமே யாயினும் ஆதரவாய்க் கொள்;

இன்னமு மீதோ ஏகுவன்? எனவிடை
பின்னரும் பெற்றுப் பெயர்த்தும் எழிலியாய்
வந்திவண் அடைந்துமற் றிராப்பகல் மறந்து
நிரந்தரம்[5] உழைக்குமிந் நிலைமையர் யாவர்?

---

1. துளிக்க 2. கடலாகிய பள்ளம் 3. தொங்கியும் 4. நில வெடிப்பு 5. எப்போதும்

(நீரைக் கையாற்றடுத்து)

நிரந்தரம்! ஐயோ! நொந்தனை! நில்! நில்!
இரைந்ததென்? அழுவையோ? ஆயின் ஏகுதி
நீரே! நீரே! என்னையுன் நிலைமை?
யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்?
நீக்கமில் அன்பும் ஊக்கமும் உறுதியும்
உனைப்போல் உளவேல் பினைப்பே றென்னை?

(நாங்கூழ்ப் புழுவை நோக்கி)

ஓகோ! நாங்கூழ்ப் புழுவே! உன்பாடு
ஓவாப் பாடே[1] உணர்வேன்! உணர்வேன்!
உழைப்போர் உழைப்பில் உழுவோர் தொழில் மிகும்
உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்துநீ.
எம்மண் ணாயினும் நன்மண் ணாக்குவை
விடுத்தனை யிதற்கா, எடுத்தஉன் யாக்கை.
உழுதுழுது உண்டுமண் மெழுகினும் நேரிய
விழுமிய சேறாய் வேதித்[2] துருட்டி
வெளிக் கொணர்ந் தும்புகழ் வேண்டார்போல
ஒளிக்குவை உன்குழி வாயுமோர் உருண்டையால்
இப்புற் பயிர்நீ இங்ஙனம் உழாயேல்
எப்படி யுண்டாம்? எண்ணா துனக்கும்
குறும்புசெய் எறும்புங் கோடி கோடியாய்
புழுக்களும் பூச்சியும் பிழைக்குமா றென்னை?
ஒழுக்கமும் பொறையும் உனைப்போ லியார்க்குள

(நாங்கூழ்ப்புழு குழிக்குள் மறைதலை நோக்கி)

விழுப்புகழ் வேண்டலை அறிவோம். ஏனிது?
துதிக்கலம்.[3] உன்தொழில் நடத்துதி ஆ! ஆ!
எங்கு மிங்ஙனனே இணையிலா இன்பம்
பங்கமில் அன்புந் தங்குதல் திருந்தக்
காணார் பேணும் வாணாள் என்னே!
அலகிலாத்[4] தோற்றமோ டிலகிய[5] உலகிற்
சிதறிய குணக்கதிர் செறிந்து திரள
வைத்தசிற் றாடியின்[6] மையமே[7] யொத்த
உள்ளமும் உடலும் பெற்றுங் கள்வர்...
நினைக்கலை, தீயினை நினைப்பதுந் தீதே!

---

1. ஒழியாத துன்பம் 2. வேறுபடுத்தி 3. போற்றுகின்றோமில்லை. 4. எல்லையில்லாத 5. விளங்கிய 6. கைக்கண்ணாடி (Hand lence) 7. நடுவிடம் (Focus)

சினக்கல் எழும்பும், நமக்கேன் இச்சினம்?
கிருபணன்[1] தீனன்.[2] விடுவிடு. அஃதென்?
என்கொல் அத்தோற்றம்? புகையோ? மங்குலுக்கு
இந்நிற மில்லை. செந்நிறப் படாமென,[4]
பொதியில்நன் முகடாம் பொற்புறு கரு[5]விற்
கதிமிகு தினமெனும் பொன்வினைக் கம்மியன்
உருக்கி விடுதற் குயர்த்திய ஆடகப்[6]
பெருக் கென விளங்கிய அருக்கன தொளியைப்
பொருக்கெனப் புதைத்தவிப் புழுதி யென்னே?
இதோ! துவண்டங்[7] கிடையிடைத் தோற்றுவ
பதாகையின்[8] தொகுதி யன்றோ பார்க்கின்?
இடியுருண் டதுபோல் எழுமொழி தெறொலி?
அடுபடை கொண்டிங் கடந்தவன் யாவன்?
வருதிசை நோக்கில் வஞ்சிய னேயாம்...
பொருதற் கன்றவன் வருவது சரிசரி
வதுவைக் கமைந்து வந்தான் போலும்.
இதுவென்? ஓகோ? மணப்பாட் டன்றிது;
[வஞ்சிநாட்டுச் சேனை அணிவகுத்து வழியில்
ஒரு புறம் போகப் படைப்பாணர் பாட]

(வஞ்சித் தாழிசை)

**படைப்பாணர் :**

அஞ்சலி லரிகாள்! நும்
சஞ்சிதப்[9] பெருவாழ்வெம்
வஞ்சிய சினத்தாற்கண்
துஞ்சிய கனவேகாண்

**படைகள் :** ஜே! ஜே! ஜே!

**பாணர் :**

எஞ்சலில்[10] பகைகாள்! நும்
மஞ்சு[11]ள மணிகுடம்.
வஞ்சியன் சினத்தானீர்
கஞ்சியுண் கடிகையேகாண் (2)

**படை :** ஜே! ஜே! ஜே!

---

1. லோபி 2. ஏழை 3. மேகம் 4. துகில் 5. முகடு, உச்சி 6. பொன் 7. அசைந்து 8. கொடி 9. மிஞ்சியிருப்பது 10. தவிர்க்க முடியாத 11. அழகு.

**பாணர் :**

மிஞ்சிய பகைகாள்! நும்
துஞ்சிய பிதிர்க்கூட்டம்
வஞ்சியன் சினந்தாலென்.
நெஞ்சிலும் நினையார்காண். (3)

**படை :**

ஜே! ஜே! புருஷோத்தமர்க்கு ஜே! ஜே
(நேரிசை ஆசிரியப்பா தொடர்ச்சி)

**நடை :** பார்ப்புதைத் தெழுந்த வீரர்தம் ஆர்ப்பும்,
வார்கழல் ஒலியும், வயப்படை[1] யொளியும்.
பாடிய பாட்டின் பண்ணும், தலைமிசைச்
சூடிய வஞ்சித் தொடையும் தண்ணுமை[2]
பொருவு[3] தம் புயத்தில் வெண்கலப் பொருப்பில்
உரும[4]வீழ்ந் தென்னத் தட்டிய ஓதையும்
இருகனல் நடமிடும் ஒருகரு முகிலில்
மின்னுதித்து அடங்கல்போல் துன்னிய சினநகை
காட்டிய முகக்குறி யாவும் நன்றல
வேட்டலோ இதுவும் விளையுமா றெவனோ!
நினைவிலும் விரைவாய் நனிசெலுங் குரத்த[5]
கொய்யுளைத் திரைக்கடற் கூட்டமும் பெய்மத
மைம்முகில் ஈட்டமும் வான்தொடு விலோதனப்[6]
பெருஞ்சிறை விரித்து நெடுந்திசை புதைத்துச்
செல்லும் அசலத் திரளும்[7] செறிந்து
நெல்லையை வெல்லவே செல்வது திண்ணம்
அந்தோ! அந்தோ! மனோன்மணி வதுவை
வந்தவா றிதுவே! வந்தவா றிதுவோ!

[இரண்டுழவர்கள் வர]

**முதலுழவன் :**

வியப்பென்? சுவாமி?

**நட :** வயப்படை வந்தது
அறிவையோ நீயும்?

**முதல் உழ :**

அறிவேன் போருக்கு
அழைத்திடில் யாவர் அணுகார்?

---

1. வெற்றி தரும் படை 2. மத்தளம் 3. ஒத்த 4. இடி 5. காற் குளம்பு 6. கொடி 7. மாலை போன்ற தேர்க் கூட்டம்

நட : வழுதி

மணமொழி வழங்க அன்றோ விடுத்தான்?

2 வது உழ :

மணமொழி பிணமொழி யானது: குடிலன்
கைதொடின் மஞ்சளும் கரியா கும்மே!

நட : செய்ததென்?

முதல் உழ : ஐயா! அது நாம் அறியோம்;

குடிலன் படிறன்; கொற்றவன் நாடும்
முடியும் கவர்ந்து மொய்குழல் மனோன்மணி
தன்னையும் தன்மகற்கு ஆக்கச் சமைந்தான்
மன்னனைக் கொல்ல மலையனைத் தனக்குச்
சூதாய் துணைவரக் கூவினான்.

நட : சீச்சீ!

ஏதிது? வஞ்சியான் வஞ்சனைக் கிசையான்;
பொய்பொய்; புகன்றதார்?

முதல் உழ : பொய்யல, பொய்யல,

ஐய! நா னறைவது கேட்டி; எனது
மைத்துன னவன் தாய் மரித்த மாசம்
உற்றதால் அந்தத் திதியினை யுணரச்
சென்றனன் புரோகித சேஷைய னிடத்தில்.
அன்று நாள் ஆதித்த வாரம்; அன்றுதான்

(2-வது உழவனை நோக்கி)

சாத்தன் உன்னுடன் சண்டை யிட்டது

(நடராஜனை நோக்கி)

சாத்திரி தரையி லிருக்கிறார்; அவரது
மாமனார் கிட்டவே ஆமைப் பலகையில்...

(நாற்புறமும் நோக்கி, செவியில்)

இருந்து பல பல இரகசியம் இயம்புவார்...

நட : திருந்தச் செப்பாய்; யாருளார் இவ்வயின்

2வது-உழ :

இந்த மாமனார் மந்திரி மனைவிக்கு
உற்ற ஜோசியர்

முதல் உழ : பொறு! யான் உரைப்பன்.

மற்றவ் வெல்லையென் மைத்துனன் ஒதுங்கி

அருகே நின்றனன். அப்போ, தறைவர்:
"மருகா! நேற்று மந்திரி மனைவி
பலபல பேச்சுப் பகருங் காலை
பலதே வன்றன் ஜாதக பலத்தில்
அரச யோகம் உண்டென் றறைந்தது
விரைவில் வருமோ என்று வினவினள்;
வரும்வரும் விரைவில் என்றேன் யானும்:
மறுமொழி கூறாது இருந்துபின் மனோன்மணி
வதுவைக் காரியம் பேசினள். மற்றுஅது
நடக்குமோ? என்றவள் கேட்டு நகைத்தாள்.
நடப்ப தரிதென நான்மொழிந் ததற்கு
வருத்தமுற்ற வள்போல் தோற்றினும், கருத்திற்
சிரித்தனள் என்பது முகத்தில் தெரிந்தேன்"
எனப்பல இரகசியம் இயம்பி. "வலியோர்
மனக்குறி, முகக்குறி, வறிதாம் சொற்கள்
இவைபோல் வருபவை யெவைதாம் காட்டும்?"
என உரைத் திருவரு மெழுந்துபின் நகைத்தார்.
பினையென் மைத்துனன் பேசிமீண் டுடனே
எனக்கிங் கிவையெலாம் இயம்பினன் உனக்குச்
சாக்கி வேண்டுமேற் காக்கைச் சுப்பனும்
உண்டு;மற் றவனைக் கண்டுநீ வினவே.

2-வது உழ :

வேண்டாம்! வேண்டாம் ஐயமற் றதற்கு.
மீண்டும் ஒரு மொழிகேள்: இவ்வழியாய்த்
தூதுவர் போகும் காலைத் தாக
ஏதுவால், இரும்படி இராமன் என்றன்
தங்கை மனைக்கு வந்தவத் தருணம்
அங்கியான் இருந்தேன். "அரண்மனைச் செய்தி
என்ன?" என்றேற்கவன் இயம்பும் "மன்னன்
தெத்தெடுத் திடும்படி யத்தன முண்" டென,
"எப்போது யாரை?" என்றேற்கு ஒன்றுஞ்
செப்பா தெழுந்து சிரித்தனன் அகன்றான்.

முதல் உழ :

பலதே வற்கிவன் நலமிகு சேவகன்.

2-வது உழ :
குடிலனாள் வதைவிடக் குடக[1]னாள் வதுநலம்

முதல் உழ :
ஆயினும், நமக்கஃ திழிவே; மேலும்
தாயினுஞ் சிறந்த தயாநிதி மனோன்மணிக்
குறுதுயர் ஒருவரும் ஆற்றார்.

2-வது உழ : அறிவிலாத்
தந்தையர் தம்வினை மக்களைச் சாரும்;
சுந்தர வாணியின் சிந்தைநோய் வழுதியை
விடுமோ? சொல்லாய்.

முதல் உழவ : விதியெனப் பலவும்
படியோர்[2] பாவனை பண்ணித் தமது
கடமையின் விலகுதல் மடமை; அதனால்
நாட்டில் போர்வரின் நன்குபா ராட்டி
எஞ்சா வெஞ்சமர் இயற்றலே தகுதி

2-வது உழ :
அரசன், அரசனேற் சரியே; சுவாமி!
உரையீர் நீரே திருவார் வாணியை
அறியீர் போலும்:

கட : அறிவோம், அறிவோம்!
நல்ல தப்புறம் செல்லுமின் நீவிர்...............
(உழவர் போக)

(தனதுள்)
ஏழைகள்! தங்கள் ஆழமில் கருத்தில்
தோற்றுவ தனைத்தும் சாற்றுவர். அவர்தம்
தோற்றமில் மாற்றம் சிறுமியர் மழலைபோல்
சுகம்[3] தருமொழிபோல், சுகந்தரும் சூழ்ச்சியும்
அனுமா னிக்கும் அளவையும் முனும்பினும்
கூட்டிக் காரண காரியக் கொள்கைகள்
காட்டலும் காணக் களிப்பே! ஆயினும்
பழுதல பகர்ந்தவை முழுதும் முன்னோர்
ஜனமொழி தெய்வ மொழியெனச் செப்புவர்.
அரசியல் இரகசியம் அங்காடி யம்பலம்
வரும்வித மிதுவே! மட்குடத் துளநீர்

---

1. குட நாட்டரசன் (சேரன்) 2. உலகோர் 3. கிளி

புரை[1]வழி கசிந்து புறம்வருந் தன்மைபோல்,
அரசர் அமைச்சர் ஆதியர் தங்கள்
சிந்தையிற் புதைத்த அந்தரங் கப்பொருள்
விழிமுகம் நகைமொழி தொழில் நடைஇவை வழி
ஒழுகிடும் அவைகளை உழையுளார்[2] தமக்குத்
தோற்றிய பலவொடும் தொடுத்துக் காற்றில்
தூற்றுவர் எனினும் சொன்னவை முற்றும்
குடிலன் குணமுடன் கூடலால் அவையும்,
படையிவண் வரநாம் பார்த்ததும்
அடையவும் முனிவற் கறைகுவம் சென்றே,

[நடராஜன் போக.]

மூன்றாம் அங்கம் : இரண்டாம் களம் முற்றிற்று.

---

1. ஓட்டை 2. அரசன் பக்கமிருக்கும் அமைச்சர் முதலியோர்.

# மூன்றாம் அங்கம்

## மூன்றாம் களம்

இடம் : கன்னிமாடம் நிலா முற்றம்          காலம் : யாமம்

[மனோன்மணி உலாவ ; வாணி நிற்க ; செவிலி படுத்துறங்க]

(நேரிசை ஆசிரியப்பா)

**செவிலி :**

ஏதம்மா! நள்ளிரா எழுந்து லாவினை?

**(படுத்தபடியே)**

தூக்கம் ஒழிவையேல் சுடுமே யுடலம்

**மனோன்மணி :**

உடலால் என்பயன! சுடவே தகுமது
வேர்க்கிற திவ்விடம்; வெளியே இருப்பல்,
போர்த்துநீ தூங்கு!

[செவிலி தூங்க]

வாணீ! உனக்கும்
உறக்கமில்லையோ?

**வாணி :**

எனக்கது பழக்கம்

**மனோன் :**

வருதி இப்புறம், இரு இரு...

[இருவரும் நிலாமுற்றத்திருக்க]

இதுவரை
எங்கிருந் தனவிவ் அன்றிற் பேய்கள்!
நஞ்சோ நாவிடை? நெஞ்சந் துளைக்கும்!
உறக்கங் கொண்டனள் செவிலி! குறட்டை கேள்!

கையறு நித்திரை! வாணீ மற்றிது
வைகறை யன்றோ?

**வாணி :**

நடுநிசி அம்மா

**மனோன் :**

இத்தனை யரவமேன்? முனிவர றையில்
நித்தமு முண்டிது! நிதியெடுப் பவர்போல்
தோண்டலு மண்ணினைக் கீண்டலும் கேட்டுளேன்
ஊரிலேன் இன்றிவ் உற்சவ அரவம்![1]

**வாணி :**

(தனதுள்) போரெனிற் பொறுப்பாளோ? உரைப்பனோ?
[ஒளிப்பனோ

**மனோன் :**

கண்டதோ நகருங் காணாக் கனவு?

**வாணி :** கண்டது கனவோ தாயே?

**மனோன் :** கண்டது...

கனவெனிற் கனவு மன்று; மற்று
நனவெனில் நனவு மன்று,

**வாணி :** நன்றே

கண்ணாற் கண்டிலை போலும்! அம்ம!

**மனோன் :**

கண்ணால் எங்ஙனம் காணுவன்? கண்ணுளார்?

**வாணி :** எண்ணம் மாத்திரமோ? இதுவென் புதுமை!

**மனோன் :**

எண்ணவும் படாஅர்! எண்ணும் உளாஅர்!

**வாணி :** புதுமை ஆயினும் எதுபோ லவ்வுரு!

**மனோன் :**

இதுவென வொண்ணா உவமையி லொருவரை
எத்திற மென்றியான் இயம்ப! நீயுஞ்
சித்திர ரேகை[2] யலையே, விடுவிடு!
பண்ணியல் வாணி! வாவா! உன்றன்
பாட்டது கேட்டுப் பலநா ளாயின!

---

1. ஒலி 2. வாணாசூரன் மகள்; உஷையின் தோழி.

**வாணி :** என்பா[1]டிருக்க யாவரு மறிவார்!
உன்பா அதுவே ஒருவரு மாறியார்!

**மனோன் :**
பாக்கிய சாலிநீ! பழகியும் உனையே!
நீக்குக இத்தீ நினைவு! யாமுடன்
தேக்கிய[2] இசையிற் செப்பொரு சரிதம்
[வாணி வீணை மீட்ட]
அவ்விசை யேசரி ஒவ்வு[3]மித் தருணம்!
[வாணிபாட]

## சிவகாமி சரிதம்

(குறள் வெண் செந்துறை)

வாழி நின் மலரடிகள்[1] மௌனதவ முனிவ!
மனமிரங்கி அருள்புரிந்தோர் வார்த்தையெனக் கீயில்
பாழடவி[4] இதிற்சுழன்று பாதைவிடுத் தலையும்
பாவியொரு வனைவளித்த பலனுறுவை பெரிதே. (1)

சாரும் வரை குறியாது தன்னிலை யளக்குந்
தன்மையென நான் நடக்கத் தான்வளரும் அடவி,[5]
ஆரிருளில் இனிநடக்க ஆவதிலை உடலம்
ஆறும்வகை வீடுளதே லடையுநெறி யருளாய்," (2)

என்றமொழி கேட்டமுனி யெதிர்விடையங் கியம்பும்: —
"ஏகாந்தப் பெருங்ககனம்; இதிலுலக ரணையார்;
சென்றுறைய மடமுமிலை; திகழ்வெளியென் வீடு;
சிந்தையற நொந்தவர்க்குச் சேரவிலை பந்தம். (3)

அறங்கிடந்த சிந்தையரா யாசையெலாந் துறந்த
அதிவீர ரொழியஎவ ராயினுமிங் கடையார்
உறங்க அவர் பணிப்பாயும் பூவணையும் உன்னார்
உண்ணவெனில் பாலமிழ்தும் ஒன்றாக மதியார். (4)

ஆதலிலென் பாலுறுவ தியாதெனினு மைந்த!
அன்புடநீ யென்பிறகே யாணையிலஃதுனதாம்,
வேதனையும் மெய்ச்சலிப்பும் விட்டகல இருளும்
விடியும்[5] உடன் மனமிருக்கில் வேண்டுமிடம் ஏகாய்" (5)

---

1. துன்பம் 2. தங்கிய 3. பொருந்தும் 4. காடு 5. நீங்கும்.

என்றுரைத்த இனியமொழி யிருசெவியுங் குளிர,
ஏதோ தன் பழநினைவும் எழவிருகண் பனித்து[1]
நன்றெனவே தவவடிவாய் நின்றமகன் வணங்கா
நன்முனிவன் செல்வழியே நடந்துநனி தொடர்ந்தான்.

இந்திரநற் சாலவித்தை யெதுவோவொன் றிழைக்க
இட்டதிரை யெனத்திசைக ளெட்டுமிருள் விரிய
அந்தரத்தே கண்சிமிட்டிச் சுந்தரதா ரகைகள்
அரியரக சியந்தமக்குள் ளறைந்துநகை புரிய; (7)

என்புருகப் பிணைந்த அன்றில் இணைசிறிது பிரிய
ஏங்கியுயிர் விடுப்பவர்போ லிடையிடையே கூவ,
அன்புநிலை யாரறிவ ரென்பனபோல் மரங்கள்
அலர்மலர்க்கண் நீரருவி அகமுடைந்து தூவ; (8)

விந்தைநடப் பதுதெரிக்க விளிப்பவரில் வாவல்
விரைந்தலைய மின்மினியும் விளக்கொடுபின் ஆட;
இந்தவகை அந்தியைமுன் ஏவிஇர வென்னும்
இறைவியும்வந் திறுத்தனள்மற் றிளைஞருயிர் வாட (9)

பொறியரவின்[2] கடிகையுறு பொலன்மணியி னொளியும்
பொலிமதத்தின் கறையடி[3]யின் புலைமருப்பி னொளியும்
அறிவரிய சினஉழுவை[4] அழல்விழியி னொளியும்
அலைதிலையவ் அடவியிடை யயல்காட்டு மொளியே (10)

பிரிவரிய ஊசிவழி பின்தொடரும் நூல்போல்
பேரயர்வின் மனமிறந்து பின்தொடரும் மைந்தன்,
அரியபுத ரிடையகற்றி அன்பொடழைத் தேகும்
அம்முனிவ னடியின்றி அயலொன்றும் அறியான். (11)

ஒருங்கார நிறைமுளரி[5] உழையொதுக்கி நுழைந்தும்,
உயர்மலையின் குகை குதித்தும் ஓங்கார ஒலியே
தருங்கான நதி[6] பலவுந் தாண்டிஅவ ரடைந்தார்
சார்பிலர்க்குத் தனித்துணையாந் தவமுனிவ னிடமே.

நேயமுடனெவ்வழியும் நேர்ந்தவரைத் தன்நுண்
நிறுவுதலை வளைத்தழைக்கு நெறப்பொன்றும் அன்றி
வாயிலெனப் பூட்டென்ன மதிலென்ன வழங்கும்
மனையென்னும் பெயர்க்குரிய மரபொன்று மின்றி. (13)

---

1. நீர்த்துளித்து 2. புள்ளியையுடைய பாம்பு 3. யானை 4. புலி 5. முட்காடு 6. காட்டாறு.

நின்றதனி யிடமிவர்கள் நேர்ந்தவுடன் முனிவன்
நெருப்பின்னும் எழுப்புதற்கு நிமலவிற[1] கடுக்கி
ஒன்றியமெய்ப் பத்தரில்தன் உளங்கூசி யொருசார்
ஒதுங்குகின்ற மைந்தனகம் உவப்பஇவை உரைக்கும்: (14)

"இனிநடக்க வழியுமிலை; இனித்துயரும் இல்லை;
இதுவேநம் மிடம்மைந்த! இக்கனலி னருகே
பனிபொழியும் வழிநடந்த பனிப்பகல்[2] இருந்து
பலமூல[3] மிதுபுசிக்கிற் பறக்குமுன திளைப்பே. (15)

தந்நாவி லொருவிரலத் தாண்டவறி யாமல்
சாகரமும் மலைபலவுந் தாண்டியலை கின்றார்
என்னேயிம் மனிதர்மதி!" எனநகைத்து முனிவன்
இனியகந்த முதலனந்த இனம்வகுத்தங் கிருந்தான். (16)

இருந்தமுனி வருந்தினவ! ஏதுனது கூச்சம்?
இருவருமே யொருவரெனி லெவர்பெரியர் சிறியர்?
திருந்தஅன லருகிலினிச் செறிந்துறைதி மைந்த!
சேர்ந்தார்க்குக் களிப்புதவுஞ் சேரார்க்குப் பனிப்பே" (17)

எனஇரங்கி இரண்டுமுறை இயம்பியுந்தன் னருகே
யேகாம லெதிரொன்று மிசையாமல் தனியே
மனமிறந்து புறமொதுங்கி மறைந்துவறி திருந்த
மகன்மலைவு[4] தெளிந்துவெளி வரும்வகைகள் பகர்ந்தான்.

பகர்ந்தநய மொழிசிறிதும் புகுந்ததிலை செவியில்;
பாதிமுக மதியொருகைப் பதுமமலர் மறைப்பத்
திகழ்ந்தசுவ ரோவியம்போ லிருந்தவனை நோக்கிச்
சிந்தைநனி நொந்துமுனி சிறிதுகரு திடுவான் (19)

செந்தழலு மந்தவெல்லை திகழ்ந்தடங்கி யோங்கி
'திகைககளலி பிடித்தலைக்குஞ் சிறுபூனை' யெனவே
விந்தையொடு நடம்புரிந்து வீங்கிருளை வாங்கி[5]
மீண்டுவர விடுத்தெடுத்து விழுங்கிவிளங் கினதே (20)

மொழியாதும் புகலாது விழிமாரி பொழிய
முகங்கவிழ வதிந்தகுறி முனிநோக்கி வினவும்
"எழிலாரு மிளமையினில் இடையூறா திகளால்
இல்லமகன் றிவ்வுருவு மெடுத்திவண்வந் தனையோ? (21)

---

1. ஆல், அரசமர விறகு 2. நடுக்கம் நீங்க 3. கிழங்கு
4. மயக்கம் 5. தணித்து.

ஏதுனது கவலை? உளந் திருப்பதெனக் கோதாய்
இழந்தனையோ அரும்பொருளை? இழந்தனரோ நண்பர்?
காதல்கொள நீவிழைந்த மாதுபெருஞ் சூதாய்க்
கைவிடுத்துக் கழன்றனளோ? மெய்விடுத்துக் கழறாய்(22)

ஐயோஇவ் வையகத்தி லமைந்தசுக மனைத்தும்
அழலாலிங் கெழுந்தடங்கு நிழலாக நினையாய்.
கையாரும் பொருளென்னக் கருதிமணல் வகையைக்
காப்பதெலா மிலவுகிளி காத்தலினும் வறிதே (23)

நண்பருற வினர்கள்நமை நாடியுற வாடல்
நறுநெயுறு குடத்தெறும்பு நண்ணலென எண்ணாய்!
பெண்களகக் காதலெலாம் பேசுமுயற் கொம்பே!
பெருங்கபட மிடுகலனோ பிறங்குமவ ருடலம்!" (24)

எரியுமுளம் நொந்தடிக ளிசைத்தவசை யுட்கொண்டு
ஏதில[1]னீள் கனவிழித் தெழுந்தவன்போல் விழித்து
விரிவெயிலில் விளக்கொளியும் மின்னொளியிற் கண்ணும்
வெளிப்பட்ட கள்வனும்போல் வெட்கிமுகம்
வெளுத்தான். (25)

இசைத்தவசைச் செயலுணர எண்ணிமுகம் நோக்கி
இருந்தயதி[2]யிக்குறிகண் டிறும்பூது[3]ளெய்தி
விசைத்தியங்கு மெரியெழுப்பி மீண்டுமவன் நோக்க
வேஷரகசியங்களெல்லாம் வெட்டவெளி யான (26)

நின்மலவி பூதியுள்ளே பொன்மயமெய் தோன்றி
நீறுபடி நெருப்பெனவே நிலவியொளி விரிக்கும்
உண்மைதிகழ் குருவிழிக்கு ளூட்கூசி யொடுங்கும்
உண்மைபெறு கண்ணினையும் பெண்மையுருத் தெரிக்கும்

கூசுமுக நாணமொடு கோணியெழில்வீச
குழற்பாரஞ் சரிந்துசடைக் கோலமஃ தொழிக்கும்
வீசுலையின் மூக்கெனவே விம்மியவெய் துயிர்ப்பு
வீங்கவெழு கொங்கைபுனை வேடமுழு தழிக்கும். (28)

இவ்விதந்தன் மெய்விளங்க இருந்தமக ளெழுந்தே
யிருடிபதந் தலைவணங்கி யிம்மொழியங் கியம்பும்;
"தெய்வமொடு நீவசிக்குந் திருக்கோயில் புகுந்த
தீவினையேன் செய்தபிழை செமித்தருள் வைமுனியே!(29)

---

1. வறிஞன் 2. முனிவர் 3. வியப்பு.

மண்ணுலகிற் காவிரிப்பூ மாநகரிற் செல்வ
வணிககுல திலகமென வாழ்வனொரு மங்கை.
எண்ணரிய குணமுடையவள் இவள்வயிற்றி லுதித்தோர்
இருமகளி ரொருபுருட ரென்ன அவர் மூவர். (30)

ஒப்பரிய இப்புருடர்க் கோர்புதல்வ ருதித்தார்
ஒருத்திமகள் யான்பாவி; ஒருத்திமுழு மலடி.
செப்பரிய அம்மலடி செல்வமிக வுடையள்;
செகமனைத்து மவள்படைத்த செல்வமென மொழிவர்

உடல்பிரியா நிழல்போல ஓதியஅப் புதல்வர்
உடன்கூடி விளையாடி யொன்றாக வளர்ந்தேன்.
அடல்[1]பெரியர் அருளுருவர் அலகில்[2]வடி வுடையர்.
அவருடைய திருநாமம் அறைவேனோ அடிகாள்?'' (32)

உரைத்தமொழி கேட்டிருடி யுடல்புளக மூடி
ஊறிவிழி நீர்வதன மொழுகவஃ தொளிக்க
எரிக்கவிற கெடுப்பவன்போ லெழுந்துநடந் திருந்தான்
இளம்பிடியுந் தன் கதையை யெடுத்தனள் முன்
தொடுத்தே. (33)

"மலடிசிறு தாய்படைத்த மதிப்பரிய செல்வம்
மடமகளென் றெனக்களித்தாள் மயங்கியதில் மகிழ்ந்து
தலைதடுமா றாச்சிறிய தமியளது நிலையும்
தலைவனெனுந் தன்மையையும் தகமையையு மறந்தேன்.

குறிப்பாயுள் ளுணர்த்தியும்யான் கொள்ளாது விடுத்தேன்.
குறும்புமதி யாலெனது குடிமுழுதுங் கெடுத்தேன்.
வெறுப்பாக நினைந்தேன்மேல் வேதனைப்பட்ட வரும்
வெறும்படிறென் உள்ளமென விட்டுவில கினரே. (35)

பொருள்விரும்பிக் குலம்விரும்பிப் பொலம் விரும்பிவந்தோர்
பொய்க்காதல் பேசினதோ புகலிலள வில்லை
அருளரும்பி யெனைவிரும்பி ஆளுமென ததிபர்
அவரொழிய வேறிலையென் றறிந்துமயர்ந் திருந்தேன்.

ஒருவாரம் ஒருமாதம் ஒருவருட காலம்
ஓயாமல் உன்னியழிந் தேன் உருவங் காணேன்.
திருவாருஞ் சேடியர்க்குச் செப்பஅவர் சேரும்
திசைதேயம் எவரறிந்து தெரிப்பரெனச் சிரித்தார்; (37)

1. வலிமை, வெற்றி 2. அளவில்லாத.

ஆயத்தார் கூடியெனை ஆயவுந்தான் ஒட்டார்
அகல்வேலை[1]யோ எறியும் அகோராத்திரங்[2] கெடுத்து;
தீயைத்தா னேயுமிழுஞ் சிறந்தகலை மதியும்;
திரிந்துலவுங் காலுமுயிர் தின்னுநம னென்ன. (38)

கண்டவரைக் கேட்டவரைக் காசினியில் தேடிக்
கண்டிடச்சென் றேயலைந்த கட்டமெனைத் தென்க?
கண்டெனத்தம் யூகநெறி உரைப்பவரே அல்லால்
உள்ளபடி கண்டறிந்தோர் ஒருவரையும் காணேன் (39)

கண்டெனிலோ கண்டிடுவன்; இல்லையெனில் ஒல்லை
உயிர்விடுத லேநலமென்று றுன்னியுளந் தேறி
கண்துயிலும் இல்லிடந்தீ கதுவ[3] வெளியோடும்
கணக்காஇவ் வேடமொடு கரந்துபுறப் பட்டேன். (40)

தீர்த்தகுலம் மூர்த்திதலம் பார்த்துடலம் சலித்தேன்.
திருக்கறுபற் குருக்கள்மடம் திரிந்துமனம் அலுத்தேன்
வார்த்தைகத்தும் வாதியர்தம் மன்றனைத்தும் வறிய
மறுத்துறங்கும் யோகியர்போய் வாழ்குகைபாழேயும் (41)

மான்றவாக் கலையினமே! வாழ்பிடிவிட் டகலா
மதம்பெருகு மாகுலமே! வன்பிகமே! சுகமே!
நான்மறவா நாதனையேஞ் ஞான்றுமறி வீரோ?
நவில்வீரெனப் பின்தொடர்ந்து நாளனந்தங் கழித்தேன்.

இவ்விடமும் அவ்விடமும் எவ்விடமும் ஓடி
இதுவரையும் தேடியுமென் அதிபரைககண் டிலேனே.
எவ்விடம்யான் நண்ணவினி? எவ்விடம்யான் உண்ண?
யூக்காயம்[4] இனியெனக்கு மிக்கஅரு வருப்பே. (43)

ஐயோவென் உள்ளநிலை அறியாரோ இனியும்?
ஆசைகொண்டு நானலைந்த தத்தனையும் பொய்யோ?
பொய்யேதான் ஆயினும் புனிதரவர் தந்த
போத[5]மலால் வேறெனக்கும் ஓதுமறி வுளதோ? (44)

நல்லார் அருளுடையரென நம்பி இதுவரையும்
நானுழைப்ப தறிவரெனில் ஏனெதிர்வந் திலரோ?
இல்லையெனில் என்னளவும் இவ்வுலகம் அனைத்தும்
எந்நலமும் கொல்லவென எடுத்தசுடு காடே. (45)

என்னுடைய உயிர்த்துணைவர் எண்ணிய அருளில்
ஏதோசிற் சாயையுன திடத்திருத்தல் கண்டு

1. கடல் 2. இரவுபகல் 3. பற்ற 4. உடம்பு 5. அறிவு.

மன்னுதவ மாமுனிவ! மனத்துயரம் உன்பால்
வகுத்தாறினேன்சிறிது மறுசாட்சியில்லை. (46)

இனியிருந்து பெரும்பயனென்? இவ்வழலே கதி"யென்று
எரியுமழல் எதிரேநின் றிசைத்தமொழி முழுதும்
முனிசெவியுற் புகுமுனமே மூதுருவம் விளக்கி
முகமலர்ந்தங் கவளெதிரே முந்திமொழி குளறி[1] (47)

"சிவகாமி யானுனது சிதம்பரனே" என்னச்
செப்புமுனம் இருவருமற் றோருருவம் ஆனார்!
எவர்தாமுன் அணைந்தனரென் றிதுகாறும் அறியோம்.
இருவருமொன் றாயினரென் றேயறையும் சுருதி. (48)

பரிந்து வந்து பார்வதியும் பாரதியும் கஞ்சப்
பார்க்கவியும்[2]யார்க்கிதுபோல் வாய்க்குமென வாழ்த்த,
அருந்ததியும் அம்ம! இஃது அருங்கதியென் றஞ்ச
ஆர்வமுலகார்கவென ஆரணங்கள் ஆர்த்த. (49)

ஆழிபுடை சூழுலகம் யாவுநலமேவ!
அறத்துறை புகுந்துயிர்கள் அன்புவெளம் மூழ்க!
பாழிலலை வேனுடைய பந்தனைகள்[3] சிந்த
பரிந்தருள் சுரந்தமை நிரந்தரமும் வாழ்க! (50)

(ஆசிரியப்பாவின் தொடர்ச்சி)

மனோன் :
வாணி! மங்காய்! பாடிய பாட்டும்,
வீணையின் இசையும் விளங்குநின் குரலும்
தேனினும் இனியவாய்ச் சேர்ந்தொருவழி படர்ந்து[4]
ஊனையும் உயிரையும் உருக்கும் ஆ! ஆ!
[இருவரும் சற்று, மௌனமாயிருக்க]
உனதுகாதலனெங் குளனோ? உணர்வைகொல்?

வாணி : எனது சிந்தையில் இருந்தனர்; மாறார்,

மனோன் :
ஆயினும் வெளியில்?

வாணி : அறியேன். அம்ம!

மனோன் :
போயின இடம்நீ அறிவாய்?

---

1. தடுமாறி 2. தாமரை மலரில் உறையும் இலக்குமி 3. கட்டுகள் 4. சென்று.

வாணி : நாரணன்
முனிவர் தம்மடத் தேகினர் தனியென
ஓதினன் ஓர்கால்

மனோன் : ஓகோ! ஓகோ!
(மௌனம்)
கடைநாள் நிகழ்ந்தவை யென்னை? கழறாய்.

வாணி : அடியனேற் கந்நாள் கெடுநாள் மிகவும்!
ஒருநாள் அந்தியில் இருவரும் எதிர்ச்சையாக்[1]
கடிபுரி கடந்துபோய் நெடுவயற் பாயும்
ஒருசிறு வாய்க்காற் கரைகண் டாங்கே,
பெருமலை பிறந்த சிறுகாற் செல்வன்
தெண்ணீர்க் கன்னி பண்ணிய நிலாநிழற்
சிற்றில் பன்முறை சிதைப்பவன் போன்று
சிற்றலை யெழுப்பச் சிறுமி முறுமுறுத்து
அழுவதுபோல் விழுமிய பரல்மேல்
ஒழுகும் தீம்புனல் ஓதையும் கேட்டுப்
பழுதிலாப் பால்நிலா விழுவது நோக்கி
இருவரும் மௌனமாய் நெடும்பொழு திருந்தோம்
கரையிடை அலர்ந்த காவி[2] யொன் றடர்த்தென்
அருகே கொணர்ந்தெனக் கன்பா யீந்தனர்.
வருவதிங் கறியா மதியிலி அதனைக்
கண்ணிணை ஒற்றிலன், உள்மனம் உகந்திலன்;
மார்பொடு சேர்த்திலன்; வார்குழற் சார்த்திலன்.
ஆர்வமும் அன்பும் அறியார் மான[3]
ஓடும் தீம்புனல் மாடே விடுத்துச்
சிறுமியர் குறும்பு காட்டிச் சிரித்தேன்
முறுவலோ டவரும் ஏதோ மொழிய
உன்னும் முன்னரென் அன்னையங் கடைந்தாள்
தீமொழி பலவும் செப்பினள். யானோ?
நாவெழல் இன்றி நின்றேன். நண்பர்
மறுமொழி ஒன்றும் வழங்கா தேகினர்,
அதுமுதல் அதுகாறும் அவர்தமை ஐயோ!
கண்டிலேன் இனிமேற் காண்பனோ? அறியேன்.

1. எதிர்பாராமல் 2. குவளை 3. போல (உவமஉருபு)

ஒருமுறை கண்டென் உளக்கருத் தவருடன்
உரைத்தப்போ தன்றி ஒழியா துயிரே!

**மனோன் :**

உரைப்பதென் வாணீ! உளமும் உளமும்
நேர்பட அறியா என்றோ நினைத்தாய்?

**வாணி :**

ஓர்வழிப் படரின் உணருமென் றுரைப்பர்.

**மனோன் :**

ஏனதில் ஐயம்? எனக்கது துணிபே
பூதப் பொருட்கே புலன்துணை அன்றி
போதப் பொருட்குப் போதும் போதம்
இரவியை நோக்கற் கேன்விளக் குதவி?
கருவிநுண் மையைப் போற்காட்சியும் விளங்கும்
பட்டே உணரும் முட்டா ளர்கள்போல்
தொட்டே உணரும் துவக்கிந் திரியம்.[1]
நுண்ணிய கருவியாம் கண்ணோ உணரும்
எண்ணறச் செய்தாம் நுண்ணிய ஒளியை!
கண்ணிலும் எத்தனை நுண்ணிய துள்ளம்!
களங்கம் அறுந்தொறும் விளங்குமங் கெதுவும்.
உண்மையாய் நமதுள முருகிலவ் வுருக்கம்
அண்மை சேய்மை என்றிலை; சென்றிடும்
எத்தனை பெட்டியுள் வைத்துநாம் பூட்டினும்
வானுள மின்னொளி வடக்கு நோக்கி,[2] யைத்
தானசைத் தாட்டும் தன்மைநீ கண்டுளை!
போதங் கரைத்து மேற்பொங்கிடும் அன்பை
பூத யாக்கையோ தடுத்திடும்? புகலாய்!

**வாணி :**

கூடும் கூடும்! கூடுமக் கொள்கை;
நம்பலாம் தகைத்தே!

**மனோன் :** நம்புவ தன்றிமற்று
என்செய நினைத்தாய்? இவ்வரும் பொருள்கள்.
தருக்கவா தத்தால் தாபித் திடுவோர்
கரத்தால் பூமணம் காண்பவ ரேயாம்!
அரும்பிற் பூமண மாய்குத லேய்ப்பத்
தரும்பக் குவமிலார் தமதுளம் போய்

---

1. தொட்டு உணரும் உணர்வு (ஸ்பரிசம்) 2. Mariner's compas

வழியே வாளா மனக்கணக் கிட்டு
மொழிவார் முற்றும் துணிவா யெனயான்
இச்சிறு தினத்தின் இயைந்தவை தம்மால்
நிச்சயித் துணர்ந்தேன் வாணீ! ஐயோ!
நம்பலென் பதுவே அன்பின் நிலைமை!
தெளிந்தவை கொண்டு தெளிதற் கரியவை
உளந்தனில் நம்பி உறுதியாய்ப் பிடித்துச்
சிறிது சிறிதுதன் அறிவினை வளர்த்தே
அனுபவ வழியாய் அறிவதை அந்தோ!
அனுமா னாதியால் ஆய்ந்தறிந் திடுவோம்
அலதெனில் இலையென அயிர்ப்போம் எனத்திரி
வாதியார் அன்பொரு போதுமே அறியார்
தாய்முலைப் பாலுள் நஞ்சு ஆய்பவ ரவரே.
முற்றுங் களங்கம் ஆற்றிடில் ஆ! ஆ!
[உடல் புளகாங்கிதமாய் நடுங்க]
ஏதோ வாணீ! இப்படி என்னுடல்?...

**வாணி :**
சீதமோ? தாயே

**மனோன் :**
சீ! சீ! இன்றெலாம்
இப்படி அடிக்கடி என்னுடல் நடுங்கும்.

**வாணி :**
இக்குளிர் காற்றின் இடையே இருத்தல்
தக்க தன்றினி தாயே பாராய்!
அம்மழை பெய்யும் இம்மெனும் முன்னம்.

**மனோன் :**
நனைந்திடில் என்னை? கரைந்திடும் மோவுடல்?
[எழுந்து மேகம் பார்க்க]

**வாணி :**
(தனதுள்)
ஐயோ! ஏன்நான் அத்திசை காட்டினேன்?
பொய்யெப் படியான் புகல்வன்!

**மனோன் :**
வாணீ!
ஊர்ப்புறம் அத்தனை யொளிஏன்? ஓ!ஓ!
ஆர்ப்பேன்? ஆ!ஆ! அயிர்ப்பேன்? அறைகுதி.

---

1. அனுமானம் முதலிய அளவுகளால்.

போர்க்குறி போலும், புகலுதி உண்மை,
[மழை இரைந்து பெய்ய]
அஞ்சலை அஞ்சலை, இதோஎன் நெஞ்சிடை
வெஞ்சரம்[1] பாயினும் அஞ்சிலேன் விளம்பு.

**வாணி :**
இம்மழை நிற்கலை அம்ம! அறைகுவன்...
விளம்புவன் வீட்டுள் வருக!
தெளிந்தோர் சிந்தைத் திரநற் றிருவே!
[இருவரும் போக]

மூன்றாம் அங்கம் : மூன்றாம் களம் முற்றிற்று.

1. சரம்-அம்பு.

# மூன்றாம் அங்கம்

## நான்காம் களம்

இடம் : சுந்தரமுனிவர் ஆசிரமம். காலம் : வைகறை

[நிஷ்டாபரர், கருணாகரர் இருவரும் அளவளாவி இருக்க.]

(நேரிசை ஆசிரியப்பா)

**நிஷ்டாபரர் :**

ஏதிது உமக்குமோ இத்தனை மயக்கம்!
வேதவே தாந்தம் ஓதிநீர் தெளிந்தும்
இரவெலாம் இப்படி இமையிமை யாதே
பரிதபித் திருந்தீர்[1]! கருணா கரரே!
பாரினிற் புதிதோ போரெனப் புகல்வது!
போரிலை ஆயினென்? யாருறார் மரணம்?
எத்தினம் உலகில் எமன்வரா நற்றினம்?
இத்தினம் இறந்தோர் எத்தனை என்பீர்?
ஒவ்வொரு தினமும் இவ்வனம் ஒன்றில்
எறும்பு முதலா எண்ணிலா உயிர்கள்
உறுந்துயர் கணக்கிட் டுரைப்போர் யாவர்?
சற்றிதோ மனங்கொடுத் துற்றுநீர் பாரும்.
குரூரக் கூற்றின் விரூபமிச்[2]சிலந்தி!
பலகுழி நிறைந்த பசையறு தன்முகத்து
அல்[3]குடி யிருக்க அருளிலாக் குண்டுகண்
தீயெழத் திரித்துப் பேழ்வாய்[4] திறந்து
கருக்கொளும் சினைஈ வெருக்கொளக் கௌவி
விரித்தெண் திசையிலும் நிறுத்திய கரங்களின்
முன்னிரு கையில் வெந்நுறக் கிடத்தி
மார்பொடு வயிறும் சோர்வுறக் கடித்துப்
பறித்திழுத் திடுத்துக் கறிக்க[5]மற் றவ்ஈ
நொந்துநொந் தந்தோ! சிந்தனை மயங்கி
எய்யா தையோ! என்றழு குரலிங்கு
யார்கேட் கின்றார்? யார்காக் கின்றார்?
கைகால் மிகில்நம் மெய்வே றாமோ?

---

1. வருந்தியிருந்தீர் 2. அவலட்சணம் 3. இருட்டு 4. பிளந்தவாய்
5. இழுத்துக் கடிக்க.

நோவும் சாவும் ஒன்றே. அன்றியும்
உலகெலாம் நோக்கில் நம்உட லொரு பொருளோ?
பஞ்சா சத்கோடி[1] யெனப்பலர் போற்ற
எஞ்சா திருந்த இப்புவி அனைத்தும்
இரவியின் மண்டலத் தொருசிறு திவலை
பரவிய வானிடை விரவிய மீனினம்
இரவியில் எத்தனை பெரியதுஒவ் வொன்றும்!
இரவியும் இம்மீன் இனங்களும் கூடில்
ஒருபிர மாண்டமென் றுரைப்பர். இதுபோல்
ஆயிரத் தெட்டுமற் றுண்டென அறைவர்.
ஆயிரத் தெட்டெனல் அலகிலை என்பதே.
இப்பெரும் உலகெலாம் ஒப்பறு திருமால்
உந்தி[2]யந் தடாகத் துதித்தபன் முளரியில்
வந்ததோர் நறுமலர் தந்தபல் லிதழில்
ஓரிதழ் அதனில் ஓர்சார் உதித்த
நான்முகச் சிலந்தி நாற்றிய[3] சிறுவலை
ஏன்மிக? நாமிங் கோதிய மாலும்
ஒருபெருங் கடலில் உறுதுரும் பென்ப
அப்பெருங் கடலும் மெய்ப்பொருட் கெதிரில்
எப்படிப் பார்க்கினும் மிசையாப் பேய்த்தேர்.
இங்கிவை உண்மையேல், எங்குநாம் உள்ளோம்!
நீர்யார்? நான்யார்; ஊரெது? பேரெது?
போரெனப் பொறுக்கலீர்! ஓ!ஓ! பாரும்!
மறுவறு மாயா மகோததி[5] யதனிற்
புற்புதம்[6] அனைய பற்பல அண்டம்
வெடித்தடங் கிடுமிங் கடிக்கடி; அதனைத்
தடுப்பவர் யாவர்? தாங்குநர் யாவர்?
விடுத்திடும், விடுத்திடும் வீணிவ் விசனம்.
இந்திர ஜாலமிவ் எந்திர விசேடம்
தன்தொழில் சலிப்பற இயற்றும். மற் றதனுள்
படுபவர் திரிகை[7]யுட் படுசிறு பயறே.
விடுபவர் யாவர்பின்! விம்மி விம்மிநீர்
அழுதீர், தொழுதீர், ஆடினீர், பாடினீர்,
யாரென் செய்வர்! யாரென் செயலாம்!
அடித்திடில் உம்மையும் பிடிக்குமிம் மாயை

1. ஐம்பதுகோடி 2. கொப்பூழ் 3. தொங்கவிட்ட 4. கானல்நீர் 5. பெருங்கடல் 6. நீர்க்குமிழி 7. திரிக்கும் இயந்திரம்.

பிடித்திடிற் பின்னும் படிப்பும் ஞானமும்
குருட்ட ரசனுக்குக் கொளுத்திய விளக்கும்
இருட்டறை யிருந்துகண் சிமிட்டலும் என்ன
ஆர்க்குமிங் குமக்கும் பிறர்க்குமென் பயக்கும்?
பார்க்கப் பார்க்கஇப் படியே துயரம்
மீக்கொளும்[1] அதனால் விடுமுல கெண்ணம்.
சுட்டதோர் சட்டிகை விட்டிடல் என்னத்
துறப்பதிவ் வுலகம் மறைப்பதற் கன்றோ?
மறக்கிற் சுயமே மறையும். மறைய
இறக்கும் நும்முளம், இறக்குமக் கணமே
பிறக்கும் பிறத்தியக் பிரபோ தோதயம்!
நீரும் உலகமும் நிகழ்த்திய போரும்
யாருமங் கில்லை. அகண்டசித் கனமாய்
எதிரது கழிந்தபே ரின்பமே திகழும்!
உரையுணர் விறந்தவுந் நிருபா திகம்யான்
உரைதரல், பிறவிக் குருடற் கொருவன்
பால்நிறம் கொக்குப் போலெனப் பகர்ந்த
கதையாய் முடியும்! அதனாற் சற்றே
பதையா திருந்துநீர் பாரும்
சுதமாம்[3] இவ்வநு பூதியின் சுகமே.

**கருணாகரர் :**

சுகம்யான் வேண்டிலேன் சுவாமி! எனக்குமற்
றிகம்பரம் இரண்டும் இலையெனில் ஏகுக.
யானென ஒருபொருள் உளதாம் அளவும்,
ஞான தயாநிதி நங்குரு நாதன்
ஈனனாம் என்னையும் இழுத்தடி சேர்த்த
வானநற் கருணையே வாழ்த்தியிங் கென்னால்
ஆனதோர் சிறுபணி ஆற்றலே எனக்கு
மோனநற் சித்தி[4]யும் முத்தியும் யாவும்
ஐயோ! உலகெலாம் பொய்யா யினுமென்.
பொய்யோ பாரும்! புரையறு குரவன்
பரித்துநம் தமக்கே சுரந்தவிக் கருணை!
இப்பெருந் தன்மைமுன் இங்குமக் கேது?
செப்பிய நிட்டையும் சித்தநற் சுத்தியும்

---

1. மேலாகும் 2. எல்லையற்ற அறிவு 3. தானே பலிக்கும். 4. ஞான வரம்பு.

எப்படி நீரிங் கெய்தினீர்? எல்லாம்
ஒப்பறு நுந்திறம் என்றோ உன்னினீர்?

அந்தோ! அந்தோ! அயர்ப்பிது வியப்பே?
சுந்தரர் கடைக்கண் தந்திடு முன்னம்
பட்டபா டெங்ஙனம் மறந்தீர்? பதைப்பறு
நிட்டையா யினுமென்? நிமலவீ டாயினென்?
ஆவா? யாம்முன் அல்லும் பகலும்
ஓவாப் பாவமே உஞற்றியெப் போதும்
ஒருசாண் வயிறே பெரிதாக் கருதியும்
பிறர்புக ழதுவே அறமெனப் பேணியும்;
மகிழ்கினும் துயருழந் தழுகினும் சினகரம்[1]

தொழுகினும் நன்னெறி ஒழுகினும் வழுவினும்
எத்தொழில் புரியினும் எத்திசை திரியினும்
"நாமே உலகின் நடுநா யகம்நம்
சேமமே சகசிருட் டியினோர் பெரும்பயன்"
என்னஅங் கெண்ணி எமக்கெமக் கென்னும்

தந்நயம் அன்றிப் பின்நினை வின்றி
முடிவிலா ஆசைக் கடலிடைப் பட்டும்;
தடைசிறி தடையிற் சகிப்பறு கோபத்
தீயிடைத் துடித்தும்! சயஞ்சிறி தடையில்
வாய்மண் நிறைய மதக்குழி அதனுள்
குதித்துக் குதித்துக் குப்புற விழுந்தும்;

பிறர்புகழ் காணப் பெரிதகம்[2] உடைந்தும்
பிறர்பழி காணப் பெரிதக மகிழ்ந்தும்;
சிறியரைக் காணிற் செருக்கியும்; பெரியரைக்
காணிற் பொறாமையுட் கலங்கி நாணியும்;

எனைத்தென எண்ணுகேன்! நினைக்கினும் உடலம்
நடுங்குவ தந்தோ! நம்மை இங்ஙனம்
கொடும்பேய் ஆயிரம் கூத்தாட் டியவழி,
விடும்பரி சின்றி[3] நாம் வேதனைப் படுநாள்
"ஏ! ஏ! கெடுவாய்! இதுவல உன்நெறி
வா! வா! இங்ஙனம்" என்மனம் இரங்கிக்

கூவிய தார்கொல்? குடிகொண் டிருந்த
காமமா திகளுடன் கடும்போர் விளைக்க

1. கோயில் 2. உள்ளம் 3. விடும்தன்மையின்றி.

ஏவிய தார்கொல்? இடைவிடா தவைகள்
மேவிய காலை மெலிந்துகை யறுநம்
ஆவியுள் தைரியம் அளித்தவர் யார்கொல்?
சுந்தரர் கருணையோ நந்திற மோஇவை?
உளமெனப் படுவதோ அளவிலாப் பெருவெளி;
கோட்டையும் இல்லை பூட்டுதாழ் அதற்கிலை;
நஞ்சே அனைய பஞ்சேந் திரியம்;
அஞ்சோ வாயில்? ஆயிரம்; ஆயிரம்;
அரைநொடி அதனுள் நரகென நம்முளம்
மாற்றிடக் கணந்தொறும் வருந்தீ நினைவோ
சாற்றிடக் கணிதசங் கேத[1]மேயிலை
இப்பெரும் விபத்தில் எப்படிப் பிழைப்பீர்?
அருளா தரவால் யாதோ இங்ஙனம்
இருள்தீர்ந் திருந்தீர்; இலையெனில் நிலையெது?
விட்டதும் தொட்டதும் வெளிப்படல் இன்றி
நிட்டையும் நீரும் கெட்டலைந் திடுவீர்!
கட்டம்! கட்டம் கரதலா மலகமாய்க்[2]
கண்டுமோ அருளிற் கொண்டீர் ஐயம்!
"யார்கேட் கின்றார்? யார்காக் கின்றார்?"
என்றீர் நன்றாய் நண்பரே! நம்நிலை
கண்டுளம் இரங்கிக் காத்தருள் புரிந்து
தொண்டுகொண் டாண்ட சுந்தரன் கருணை
நமக்கென உரித்தோ? நானா உயிர்கள்
எவர்க்கும் அதுபொது அன்றோ? இயம்பீர்.
எங்கிலை அவனருள்? எல்லையில் அண்டம்
தங்குவ தனைத்தும் அவனருட் சார்பில்
அண்டகோ டிகளிங் கொன்றோ டொன்று
விண்டிடா வண்ணம்[3] வீக்கிய பாசம்,
அறியில் அருளலாற் பிறிதெதுஆ கருஷணம்?[4]
ஒன்றோ டொன்றியாப புற்றுயர் அன்பில்
நின்றஇவ் வுலகம், நிகழ்த்திய கருணை
பயிற்றிடு பள்ளியே அன்றிப் பயனறக்
குயிற்றிய[5] பொல்லாக் கொடியயந் திரமோ?
பாரும்! பாரும்! நீரே கூறிய
சுலநதியின் பரிவே இலங்கிடு முறைமை!

1. குறியீடு 2. அங்கை நெல்லிக்கனி 3. அறாவண்ணம் கட்டெப்பற்ற கயிறு 4. ஈர்க்கும் ஆற்றல் 5. செய்த.

பூரிய உயிரஃ தாயினும், தனது
சீரிய வலையிற் சிக்குண் டிறந்த
ஈயினை ஈதோ இனியதன் குஞ்சுகள்
ஆயிரம் அருந்த அருகிருந் தூட்டி
மிக்கநல் அன்பெனும் விரிந்தநூல் தெளிய
அக்கரம்[1] பயில்வ ததிசயம்! அதிசயம்!
இப்படி முதற்படி, இதுமுத லாநம்
ஒப்பறும் யாக்கையாம் உயர்படி வரையும்
கற்பதிங் கிந்நூற் கருத்தே. அதனால்
இத்தனி உலகில் எத்துயர் காணினும்
அத்தனை துயரும், நம் அழுக்கெலாம் எரித்துச்
சுற்றநற் சுவர்ணமாச் சோதித் தெடுக்க
வைத்தஅக் கினியென மதித்தலே உயிர்கட்கு
உத்தம பக்தியென் றுள்ளுவர்[2] ஒருகால்
காரண காரியம் காண்குவம் அல்லேம்.
யாரிவை அனைத்தும் ஆய்ந்திட வல்லார்?
பாரிசா தாதிப் பனிமலர் அந்தியின்
அலர்தலே அன்னவை விளர்நிறம் கிளர
நறுமணம் கமழ்தற் குறுகா ரணமென
நேற்றிரா நடேசர் சாற்றிடும் முன்னர்
நினைத்தோம் கொல்லோ? உரைத்தபின் மற்றதன்
உசிதம்[3]யார் உணரார்? நிசி[4]யலர் மலர்க்கு
வெண்மையும் நன்மணம் உண்மையும் இலவேல்
எவ்வணம் அவற்றின் இஷ்டநா யகராம்
ஈயின மறிந்துவந் தெய்திடும்? அங்ஙனம்
மேவிடில் அன்றோ காய்தரும் கருவாம்?
இவ்விதம் நோக்கிடில் எவ்வித தோற்றமும்
செவ்விதிற் பற்பல காரணச் செறிவால்
அவ்வவற் றுள்நிறை அன்பே ஆக்கும்.
சிற்றறி வாதலான் முற்றுநாம் உணரோம்.
அந்தியில் இம்மலர் அலர்வதேன் என்பதிங்
கறிகிலோம் ஆயினும் அதற்குமோர் காரணம்
உளதென நம்பலே யூகம் அதனால்
உலகிடைத் தோன்றும் உறுகணுக் கேது
நலமுற நமக்கிங் கிலகா ததனாற்

---

1. எழுதப் படிப்பது 2. நினைப்பர் 3. மேன்மை 4. இரவு

பலமுறை நம்மையே பரிந்திழுத் தாண்டவர்
இலையுல கிடையென எண்ணுவ தெங்ஙனம்?
யாரிங் குலகெலாம் அறிந்திட வல்லார்?

பாருமிங் கீதோ! பரம தயாநிதி
நங்குரு நாத னென்பதார் ஒவ்வார்?
நம்புவம் நீரும் நானுமிங் கொருப்போல்.
ஆயினும் பாரும்! அம்மணி மனோன்மணி,
ஏதோ ஊழ்வினை இசைவால் தனது

காதாற் கேட்கவும் கண்ணாற் காணவும்
இல்லா ஒருவனை எண்ணி மயங்கினள்
அல்லல் இதுவே போதும். அஃதுடன்
அப்புரு டன்றான் ஆரென ஆயில்
ஒப்பறு புருடோத் தமனே என்ன

எப்படி நோக்கினும் இசையும். அப்படியே
செப்பினர் யாவும் தெரிந்தநம் குருவும்
ஏதோ ஒருவன் சூதா ஏவிய
தூதால் வந்ததே ஈதோ பெரும்போர்!
போர்புரிந் திடவரு புருடோத் தமனும்

வார்குழல் மனோன்மணி மாதும், நோக்கில்
நம்மிலும் எத்தனை நம்பிய அன்பர்!
இம்மென ஒருமொழி இசைத்திவர் தம்மை
ஒருவரை ஒருவர் உணர்த்திடப் பண்ணில்
வெருவிய போரும் விளைதுயர் அனைத்தும்

இருவர்தம் துக்கமும் எல்லாம் ஏகும்.
இப்படிச் சுலபசாத் தியமா[1]யிருக்க
அப்படி ஒன்றும் அடிகளெண் ணாமல்
சுருங்கை தொட்டிடவே துவக்கித் தன்திரு
அருங்கை வருந்தவும் ஆற்றுமப் பணியே.

சுருங்கை இதற்குஞ் சொல்லிய துயர்க்கும்
நெருங்கிய பந்தம் நினைத்தற் கென்னை?
ஒன்றும் தோற்றுவ தன்றுஎன் தனக்கே
என்றுநான் எண்ணி எம்குரு நாதன்
திருமொழி மறுத்தென் சிற்றறி வினையே
பெரிதெனக் கருதலோ, அலதவர் பேணிய

1. முடியக்கூடியது.

இவ்வழி நம்பதிக் கெட்டா விடினும்
செவ்வி திதுவெனத் தெளிதலோ தகுதி?
இப்படி யேயாம் இவ்வுல கின்நிலை.
அற்பமும் அதிலை ஐயம். நமதுமற்

றெய்ப்பினில் வைப்பா[1]யிருந்தபே ரருளைக்
கைப்படு கனியெனக் கண்டபின், உலகில்
எப்பொரு ளையுமிப் படியே இவ்வருள்
தாங்கிடும் என்பதில் சமுசயம்[2] என்னை?
இல்லா மாயை என்செய வல்லதாம்?

எல்லாம் அவனருள் அல்லா தில்லை.
என்னனு பவமிது மன்னிய இவ்வருள்
தன்னிடை மூழ்கித் தானெனல் மறந்து,
நெருப்பிடை இழுதென[3] நெக்குநெக் குருகி
இருப்பவர் பிறர்க்காய் இராப்பகல் உழைப்பர்

ஒருபயன் கருதார். அருள்கரு துவதென்?
அகிலமும் தாங்கும அருளிலோர் அங்கமாச்
சகலமும் செய்வர், அஃதவர் சமாதி
எங்கெலாம் துக்கம் காணினும் அங்கெலாம்
அங்கம் கரையநின் றரற்றி[4] "ஐயோ!

எம்மையும் காத்த இன்னருள் இவரையும்
செம்மையிற் காக்க" எனமொழி குளறி,
அழுதுவேண் டுவதே அன்றி
விழுமிய முத்தியும் வேண்டார் தமக்கே.

[சுந்தர முனிவரும் நடராசரும், வர; கருணாகரர், நிஷ்டாபரர் இருவரும் எழுந்து வணங்க]

**சுந்தர:**
எல்லாம் நடேசரே! உமது பேரருளே!
அல்லா தென்னால் ஆகுமோ? சுருங்கை
இத்தினம் எப்படி முடியும்நீர் இலரேல்?
எத்தனை கருணை? என்னைகைம் மாறு?

**நட:**
நல்லது! நல்லது! சொல்லிய முகமன்![5]
வேலை எனதோ? உமதோ? விநோதம்.

1. இளைத்த காலத்து உதவும் பொருள் 2. ஐயம் 3. நெய்
4. வாய்விட்டுச் சொல்லியழுது 5. நயவுரை

ஏவிய வழியான் போவதே அல்லால்
ஆவதென் என்னால்; ஆ! ஆ! நன்றே!

**சுந்தர :**

கருணா கரரே! களைப்பற நீரிங்கு
ஒருவா றுறங்கவென் றுன்னி அன்றோ
இவ்விடம் அனுப்பினோம்? என்னை சிறிதும்
செவ்விதில் தூங்கா திருந்தீர்! சீச்சீ!
எத்தனை நாளா யிணநீர் தூங்கி!
இத்தனை வருந்தியும் ஏனிலை தூக்கம்?
பன்னாள் இரவும் பகலும் உழைத்தீர்;
எந்நா ளாறுவீர் இவ்வலுப் பினிமேல்?

**கருணா :**

அடியேற் கலுப்பென்? அருளால் அனைத்தும்
முடிவது மேலும், யான்வரும் வேளை
இட்டமாம் நிட்டா பரரும் தனியாய்
நிட்டைவிட் டெழுந்தார்; இருவரும் அதனால்
ஏதோ சிலமொழி ஓதுமற் றிருந்தோம்;
ஈதோ உதயமும் ஆனதே; இனியென்?

**சுந்தர :**

விடிந்த தன்றிது; வெள்ளியின் உதயம்
படும், படும்; மிகவும் பட்டீர் வருத்தம்.
உங்கள்பேச் சறிவோம்; ஓயாப் பேச்சே!
இங்கது முடியுமோ? ஏனுங் கட்கும்
சமயிகட்[1] காம்சச் சரவு?
அமையும் உங்கட் கவரவர் நிலையே. (2)
[யாவரும் போக]

மூன்றாம் அங்கம் நான்காம் களம் முற்றிற்று.

(கலித்துறை)

**சாற்றரும் ஆபதந்[2] தான் தவிர்த் தின்பந் தரமுயன்று**
**தோற்றருங் கற்புடை[3]யேதோ அமைத்தனன் சுந்தரனே**
**வேற்றுரு வாயகம் வேதித்து[4] நம்மை விளக்குமவன்**
**மாற்ற[5] மனுபவம் வந்தபின் னன்றி மதிப்பரிதே.**

மூன்றாம் அங்கம் முற்றிற்று

1. சமயத்தார் 2. ஆபத்து 3. சுருங்கை, இரகசிய வழி (secret way) 4. வேறுபடுத்தி 5. சொல்.

| | | | |
|---|---|---|---|
| ஆசிரியப்பா | 6-க்கு | அடி | 819 |
| வஞ்சித் தாழிசை | 3-க்கு | ,, | 12 |
| குறள் வெண்செந்துறை | 50-க்கு | ,, | 100 |
| கலித்துறை | 1-க்கு | ,, | 4 |
| ஆக, அங்கம் 1-க்கு : பா. 60-க்கு | | ,, | 935 |

# நான்காம் அங்கம்

## முதற் களம்

இடம் : படை பயில் களம். காலம் : காலை

[பலதேவன் படையணிவகுக்க, குடிலன் அரசனை
எதிர்பார்த் தொருபுறம் நிற்க.]

(நேரிசை ஆசிரியப்பா)

**குடிலன் :**
(தனிமொழி)

பருதியும் எழுந்தது பொருதலும் வந்தது...
[பெருமூச்செறிந்து]
கருதுதற் கென்னுள காணுதும். ஆ! ஆ!
ஒருவன் தாசைப் பெருக்கால் உலகில்
வருதுயர் கடலிற் பெரிதே! வானின்
எழுந்தவிவ் இரவி விழுந்திடு முன்னர்

ஈண்டணி வகுக்குமிக் காண்டகும் இளைஞரில்
மாண்டிடு மவர்தொகை மதிப்பார் யாரே!
மாண்டிடல் அன்றே வலிது. மடுவுள்[1]
இட்டகல் லாலெழும் வட்டமாம் விரிதிரை
வரவரப் பெரிதாய்க் கரைவரை வரல்போல்,

நின்றவில் வீரரை ஒன்றிய மனைவியர்
உற்றார் பெற்றார் நட்டார் என்றிப்
படியே பரவுமே படியெலாம் துயரம்!...
[சற்று நிற்க]
என்னை என்மதி இங்ஙனம் அடிக்கடி
என்னையும் எடுத்தெறிந் தேகுதல்? சிச்சீ!

மன்னவர்க் காக மாள்வ திவர்கடன்.
மன்னவன் என்போன் மதியில் வலியோன்,
அன்றியும் பலநா ளாகநம் அன்னம்
தின்றிங் கிருந்திவர் செய்ததென்? அவர்தம்
உடன்பா டிதுவே கடம்[2]பாடாற்றும்

---

1. குளத்தில், 2. கடமை.

காலம் விடுவதார்; மேலும் இயல்பாய்ப்
பலபெயர் துக்கப் பட்டால் அன்றி
உலகில் எவரே ஒருசுகம் அணைவார்?
இயல்பிது வாயின் இரங்கல் என்பயன்?
வயலுழும் உழவோர் வருத்தமும் குனிந்திருந்து
ஆடை நெய்வோர் பீடையும் வாகனம்
தாங்குவோர் தமக்குள தீங்கும் நோக்கி
உலகிடை வாழா தோடுவ ரோபிறர்?
அலகிலா மானிடர் யாவரும் அவரவர்
நலமே யாண்டும் நாடுவர். மதிவலோர்
களத்தொடு காலமும் கண்டுமீன் உண்ணக்
குளக்கரை இருக்கும் கொக்கென அடங்கிச்
சம்பவம்[1] சங்கதி[2] என்பவை நோக்கி
இருப்பர்: நலம்வரிற் பொருக்கெனக்[3] கொள்வர்
நண்ணார் இதுபோல் நலமிலா ஐயம்.
எண்ணார் துணிந்தபின் பண்ணார் தாமதம்.
ஏழையர் அலரோ இரங்குவர் இங்ஙனம்?
கோழையர் இங்ஙனம் கூடுவார் இன்பம்?
வந்தனன் அஃதோ மன்னனும்,
[ஜீவகன் வர]
வந்தனம் வந்தனம் உன்திருவ டிக்கே.

(நிலைமண்டில ஆசிரியப்பா)

**ஜீவகன் :**
குடிலா? நமது குறைவிலாப் படைகள்
அடையவும் அணிவகுத் தானவோ?

**குடில :** அடியேன்.
நாரணர்க் கன்றோ நீளரண் காப்பு!
சொன்னதப் படியென உன்னினன்,

**ஜீவ :** ஆமாம்!
அதற்கேன் ஐயம்?

**குடில :** அவர்க்கது முற்றும்
இதற்கே டெ[4]ன்றனர். ஆயினும் போயினர்,
[படைகள் வணங்கி]

**படைகள் :**
ஜயஜய! ஜீவக வேந்த! விஜயே!

---

1. காரணம் 2. வரலாறு 3. விரைவாக 4. நன்மைக்குக் கெடுதி.

குடிலன்:

அதிர்கழல் வீரரும் அரசரும் ஈதோ
எதிர்பார்த் திருந்தனர் இறைவ! நின்வரவே
நாற்றிசை தோறும் பாற்றினம்[1] சுழல[2]
நிணப்புலால் நாறிப் பணைத்[3] தெளி பரப்பும்
நெய்வழி பருதி வைவேல் ஏந்திக்
கூற்றின்நா என்னக் குருதிக்கொப் புளித்து
மாற்றலர்ப் பருகியும் ஆற்றா தலையும்
உறையுறு குறுவாள் ஒருபுறம் அசைத்துக்
காற்றினும் மிகவும் கடுகிக் கூற்றின்
பல்லினும் கூறிய பகழி மல்கிய
தூணி தோளில் தூக்கி, நாண்நின்று
எழுமொலி உருமுபோன் றெழுப்பி ஆர்த்தவர்
கடிபுரி காக்குநின் காற்படை யாளர்.
இருப்புக் கலினம் நெரித்துச் சுவைத்துக்
கருத்தும் விரைவு கற்கும குரத்தால்
பொடியெழப் புடைக்கும் புரவிகள் போக்கு
விடைகேட் டுதடு துடித்ததும் வியப்பே
நிணங்கமழ் கூன்பிறைத் துணைமருப் பசைத்து
மம்மர் வண்டினம் அரற்ற மும்மதம்
பொழியும் வாரணப் பயலினம் தத்தம்
நிழலொடு கறுவி[5] நிற்பதும் அழகே.
முன்னொரு வழுதிக்கு வெந்நிட் டோடிய[6]
புரந்தரன்[7] கைபடாப் பொருப்புகள் போன்ற
கொடிஞ்சி நெடுந்தேர் இருஞ்சுறை விரித்து
"வம்மின்! வம்மின்! வீரரே! நாமினி
இம்மெனும் முன்னமவ் விந்திர லோகமும்
செல்லுவம்! ஏறுமின்! வெல்லுவம்!" எனப்பல
கொடிக்கரம் காட்டி யழைப்பதும் காண்டி...

ஜீவ:

கண்டோம் கண்டோம் களித்தோம் மிகவும்
உண்டோ இவர்க்கெதிர்? உனக்கெதிர்? ஓ! ஓ!
[படைகளை நோக்கி]

---

1. பருந்துக் கூட்டங்கள் 2. வட்டமிட்டுப் பறக்க 3. பெருத்து 4. கன்ன மதம், கபோல மதம், கோச மதம், 5. கோபித்து 6. புறமுதுகு காட்டி ஓடிய 7. இந்திரன்.

வேற்படைத் தலைவரே! நாற்படை யாளரே!
கேட்பீர் ஒருசொல்! கிளர்போர்க் கோலம்
நோக்கியாம் மகிழ்ந்தோம், நுமதுபாக் கியமே
பாக்கியம். ஆ! ஆ! யார்க்கிது வாய்க்கும்?
யாக்கையின் அரும்பயன் வாய்த்ததிங் குமக்கே!
தாயினும் சிறந்த தயைபூண் டிருந்தநும்
தேயமாம் தேவிக்குத் தீவினை யிழைக்கத்
துணிந்தவிவ் வஞ்சரை எணுந்தொறும்

[எணுந்தொறும்

அகந்தனில் அடக்கியும் அடங்கா தெழுந்து,
பகைத்துயிர்ப் பொறியப் பொறிகண் பொரிய
நெடுந்திரட் புருவம் கொடுந்தொழில் குறிப்ப
வளங்கெழு மீசையும் கிளர்ந்தெழுந் தாடக்
களங்கமில் நும்முகம் காட்டுமிச் சினத்தீ
கண்டுஅப் பாண்டியே கொண்டனள் உவகை
அலையெறிந் தீதோ ஆர்த்தனள். கேண்மின்!
முலைசுரந் தூட்டிய முதுநதி மாதா[1]

படைகள் :

தாம்பிர பன்னிக்கு ஜே! ஜே!

ஜீவ : ஒருதுளி யேனும்நீர் உண்டுளீர் ஆயின்
கருதுவீர் தம்பிர பன்னியின் கட்டுரை.
"மக்காள்! அருந்தி வளர்மின்! நுமக்கு
மிக்கோர் இல்லா வீரமாய்ப் பரந்து
முதுசுதந் தரத்தின் முத்திரை ஆகி,
இதுபரி ணமித்துஉம் இதயத் துறைக!
அன்னியன் கைப்படா இந்நீர் கற்பிற்கு
இழிவுறின் மார்பினின் றிதுவே சோரியாய்ப்
பொழிகநீர் பொன்றிடும் அளவும்!" என்றன்றோ
வாழ்த்தி நுந்தமை வளர்த்தினள்? அவளுரை
தாழ்த்தா திவணீர் போர்த்தபோர்க் கோலம்
பார்த்தால் ஆர்த்தவள் வாழ்த்தா தென்!

[செய்வள்]

படைகள் : ஜே! ஜே!

ஜீவ : விந்தம் அடக்கினோன் தந்தநற் றமிழ்மொழி
தற்சுதந் தரமறும் அற்பர்வாய்ப் படுமோ?

படைகள் : தமிழ் மொழிக்கு ஜே! ஜே!

ஜீவ : பழையோர்[1] பெருமையும் கிழமையும் கீர்த்தியும்
மன்னிய அன்பின்நும் அன்னையர் பாடி
நித்திரை வருவகை ஒத்தறுத் துமது
தொட்டில்தா லாட்ட, அவ்இட்டமாம் முன்னோர்
தீரமும் செய்கையும் வீரமும் பரிவும்
எண்ணி இருகணும் கண்ணீர் நிறையக்
கண்துயி லாதுநீர் கனிவுடன் கேட்ட
வண்தமிழ் மொழியால் மறித்திக் காலம்
"ஆற்றிலம்; ஆண்மையும் உரிமையும் ஒருங்கே
தோற்றனம்" எனச்சொல்லத் துணிபவர் யாவர்?

படைகள் : சீச்சீ!

ஜீவ : பொதியமா மலையிற் புறப்பட் டிங்குதன்
படியே உலாவுமிச் சிறுகால், பணிந்துமற்று
"அடியேம்" எனத்திரி பவர்க்கோ உயிர்ப்பு!

படைகள் : ஹோ! ஹோ!

ஜீவ : கோட்டமில் உயிர்ப்போ கூறீர்; அன்ன
நாட்டபி மானமில் நடைப்பிண மூச்சும்?

படைகள் : சீச்சீ! சீச்சீ!

ஜீவ : சேனையோ டிவ்வழி திரிந்துநேற் றிரவில்நும்
திருவனை யார்களும் சேய்களும் கொண்ட
வெருவரு நித்திரைக் குறுகண் விளைத்துநும்
பாஷாபி மானமும் தேசாபி மானமும்
பொருளெனக் கருதா தருணிறை நுமது
தாய்முலைப் பாலுடன் வாய்மடுத் துண்டநல்
ஆண்மையும் சுதந்தரக் கேண்மையும் ஒருங்கே
நிந்தைவஞ் சியர்செய வந்தநும் கோபம்

1. பாண்டியர்

முற்றும் இயல்பே. மற்றுத்தன் குகையுள்
உற்றறி[1] முகமயிர் பற்றிடின் அதற்கக்
குறும்பால் எழுஞ்சினம் இறும்பூ தன்றே!
உரிமைமேல் ஆண்மைபா ராட்டார் சாந்தம்
பெருமையில் பிணத்திற் பிறந்ததோர் சீதம்
அந்தணர் வளர்க்கும் செந்தழல்[2] தன்னிலும்
நாட்டாபி மானமுள் மூட்டிய சினத்தீ
அன்றோ வானோர்க் கென்றுமே உவப்பு!
வந்தஇக் கயவர்நும் சிந்தையிற் கொளுத்திய
வெந்தழற் கவரே இந்தனம்[3] ஆகுக!

படைகள் : ஆகுக! ஆகுக!

ஜீவ : இன்றுநீர் சிந்தும் இரத்தமோர் துளியும்
நின்றுகம் பலவும் நிகழ்த்துமே "இந்தப்
பண்டியர் உரிமைபா ராட்டும் பண்பினர்;
தீண்டன்மின் திருந்தலீர்!, அவர்தம் செருக்கு,
சுதந்தரம் அவர்க்குயிர்; சுவாசமற் றன்று
நினையுமின் நன்றாய்க் கனவினும் இதனை"...
எனமுர சறையுமே எத்திசை யார்க்கும்
இத்தனிப் போரில்நீர் ஏற்றிடும் காயம்
சித்தங் களித்து, ஐயமா துமக்கு
முத்தமிட் டளித்த முத்திரை ஆகி
எத்தனை தலைமுறைக் கிலக்காய் நிற்கும்!

படைகள் : ஜே! ஜே!

ஜீவ : போர்க்குறிக் காயமே புகழின் காயம்
'யார்க்கது வாய்க்கும்; ஆ! ஆ! நோக்குமின்!
அனந்தம் தலைமுறை வருந்தனி மாக்கள்,
தினந்தினம் தாமனு பவிக்குஞ் சுதந்தரம்
தந்ததம் முன்னோர் நொந்தபுண் எண்ணிச்
சிந்தையன் புருகிச் சிந்துவர் கண்ணீர்,
என்றால் அப்புண் 'இரந்துகோட்டக்கது'
அன்றோ? அறைவீர். ஐயோ! அதுவும்
புண்ணோ? புகழின் கண்ணே. எவரே
புண்படா துலகிற் புகழுடம் படைந்தார்?
புகழுடம் பன்றியிவ் விகழுடம் போமெய்?

1. சிங்கம் 2. ஓமத்தீ 3. விறகு

கணங்கணம் தோன்றி கணங்கணம் மறையும்
பிணம்பல, இவரெலாம் பிறந்தார் என்பவோ!
உதும்பர தரு[1]வில் ஒருகனி அதனுட்

பிறத்திறும் அசகம்[2] இவரிலும் கோடி
பிறந்தார் என்போர் புகழுடன் சிறந்தோர்.
அப்பெரும் புகழுடம் பிப்படி இன்றிதோ!
சுலபமாய் நுமக்கெதிர் அணுகலால்; துதித்துப்
பலமுறை நுமது பாக்கியம் வியந்தோம்.

ஒழுக்கமற் றன்றது வெனினும், உம்மேல்
அழுக்கா றுஞ்சிறி தடைந்தோம். நும்மொடு
இத்தினம் அடையும் இணையிலாப் பெரும்புகழ்
எத்தனை ஆயிரம் ஆயிரம் கூறிட்
டொத்ததோர் பங்கே உறுமெனக் கெனவே

ஓடுமோர் நினைவிங் கதனால், வீரர்காள்!
நீடுபோர் குறித்திவண் நின்றோர் தம்முள்
யாரே ஆயினும் சீராம் தங்கள்
உயிருடம் பாதிகட் குறுமயர் வுன்னிச்
சஞ்சலம் எய்துவோர் உண்டெனிற் சாற்றுமின்.

வஞ்சகம் இல்லை. என் வார்த்தையீ துண்மை
மானமோ டனைரையிம் மாநக ரதனுட்
சேமமாய் இன்றிருத் திடுவம். திண்ணம்
உத்தம மாதர்கள் உண்டுமற் றாங்கே
எத்தனை யோபேர், இவர்க்கவர் துணையாம்.

**படைகள் :**

இல்லை! இல்லையிங் கத்தகைப் புல்லியர்!

**ஜீவ :** குறைவெனக் கருதன்மின். எம்புகழ்க் கூறு
சிறிதாம் எனவுனிச் செப்பினோம், அதனாற்
பிறிதுநீர் நினையீர். பேசுமின் உண்மை.

**படைத்தலைவர் :**

இல்லையெம் இறைவ! இந்நாடதனுள்
இல்லையத் தகையர்.

**யாவரும் :** இலையிலை! இலையே.

1. அத்திமரம் 2. கொசு

ஜீவ :

நல்லதப் படியேல் நாமே நுஞ்சுய
நாட்டில்நல் உரிமைபா ராட்டும் பெரிய
மேன்மையும் அதனால் விளைபுகழ் அதுவும்
195. மறுக்கிலம், பொறுக்குமின். வம்மின்! விஜய
இலக்குமி காத்திருக் கின்றாள்! அன்றியும்
ஒலிக்குநும் ஜயபே ரிகைகேட் டலதுமற்று
ஒய்கிலள் நேர்ன்புநம் தாய்மனோன் மணியே.

படைவீரர் : மனோன்மணிக்கு ஜே! ஜே! ஜே!

யாவரும் : இளவரசிக்கு ஜே! ஜே! ஜே!

(குறளடி வஞ்சிப்பா)

ஜீவ :

நந்தாய்தமர் நங்காதலர்
நஞ்சேய்பிறர் நந்தாவுரை
நந்தேயமேல் வந்தேநனி
நொந்தாழ்துயர் தந்தேஇவண்
நிந்தாநெறி[1] நின்றாரிவர்
தந்தாவளி[2] சிந்தாவிழ,
அடிப்போமடல் கெடுப்போமுகத்
திடிப்போங்குட லெடுப்போமிடுப்
பொடிப்போஞ்சிர முடைப்போம்பொடி
பொடிப்போம்வசை துடைப்போமுயிர்
குறிப்போம்வழி தடுப்போம்பழி
முடிப்போமினி நடப்போம்நொடி
எனவாங்கு,
பெருமுரசதிரப் பெயருமின்
கருமுகில் ஈர்த்தெழும் உரு[3]மென ஆர்த்தே.

(படைகள் முரசடித்து நடக்க,
படைப்பாணர் பாட)

(கலித்தாழிசை)

படைப்பாணர் :

தந்நகர மோகாக்கச் சமைந்தெழுவோர்
ஊதுமிந்தச்
சின்னமதி சயிக்குமெமன் செருக்கொழிமின்
தெவ்வீர்காள்!

1. நிந்தித்தலாகியவழி 2. பல்வரிசை 3. இடி

சின்னமதி சயிக்குமெமன் எனச்செருக்கி நிற்பீரேல்.
இன்னுணவிங் குமக்கினிமேல் எண்ணீரே எண்ணீரே
[இசைத்துளோமே.

படைகள் : ஜே! ஜே!

பாணர் :

மறுகுறுதம் ஊர்காக்கும் வயவாபுய மேவிஜயை[1]
உறைவிடமா இவர்வாளென் றோடிடுமுன் தெவ்வீர்காள்!
உறைவிடமா? இவர்வாளென் றோடிடீர் ஆயினினி
மறலி[2]திசை ஒருபோதும் மறவீரே மறவீரே வழங்கினோமே.

படைகள் : ஜே! ஜே!

பாணர் :

ஒல்லுமனை தான்காக்க உருவியகை வாளதற்குச்
செல்லுமுறை பின்னரிலை திரும்பிடுமின் தெவ்வீர்காள்!
செல்லுமிறை பின்னரிலை எனத்திரும்பீர் ஆயின் நுங்கள்
இல்லவர்க்கு மங்கலநாண் இற்றதுவே. இற்றதுவே
இயம்பினோமே.

படைகள் : ஜே! ஜே!

[படைகளும் ஜீவகன் முதலியோரும்
போர்க்களம் நோக்கிப் போக]

நான்காம் அங்கம் : முதற்களம் முற்றிற்று

1. விசயலக்குமி (வெற்றிச் செல்வி) 2. இயமன்.

# நான்காம் அங்கம்

## இரண்டாம் களம்

**இடம் :** கோட்டைவாசல். காலம் : காலை

(நேரிசை ஆசிரியப்பா)

**முதற் படைஞன் :**

இப்படை தோற்கின் எப்படை ஜயிக்கும்?
எப்படி இருந்த திராஜன் பேச்சு!
கல்லும் உருகிக் கண்ணீர் விடும். இப்
புல்லும் கேட்கிற் புறப்படும் போர்க்கு

**2-ஆம் படை :** முற்றும் கேட்டை கொல்?

**முதற் படை :** முற்றும் கேட்டேன்.

சற்றும் மனமிலை திரும்புதற் கெனக்கு
சரியல ஆணையில் தவறுதல் என்றே
வெருவிநான் மீண்டேன். இலையேல் உடன்சென்
றொருகை பார்ப்பேன். ஓகோ! சும்மா
விடுவனோ பார்க்கலாம் விளையாட் டப்போது.

என்செய! என்செய! எத்தனை பேரையான்
பஞ்சாய்ப் பறத்துவன்! துரத்துவன்! பாண்டியில்
வஞ்சவிவ் வஞ்சியர் என்செய வந்தார்?
நெஞ்சகம் பிளந்திந் நெடுவாள் தனக்குக்
கொஞ்சமோ ஊட்டுவன் குருதி! என்செய!

நினைதொறும் உடலெலாம் தின்பது தினவே!
பாக்கியம் இல்லையென் கைக்கும் வாட்கும்!

**2-ஆம் படை :**

பாக்கியம் அன்றது. பறைப்பயல் பாவி
குடிலனோ டுலாவும் கோணவாய்க் கொடியன்,
சடையன், தலைவனோ டெதுவோ சாற்றித்
தடுத்தே நமையெலாம் விடுத்தான் இப்பால்.

**3-ஆம் படை :**

கெடுத்தான் அவனே என்னையும், அன்றேல்
முடித்தே விடுவனென் சபதம் முற்றும்
சண்டிஅச் சங்கரனை வந்துளான் சமர்க்கு
கண்டேன். கையிற் கிடைக்கிற் பண்டென்
தாயையும் என்னையும் சந்தையிற் பழித்த
வாயினை வகிர்ந்து பார்பினைப் பிளந்து...

[வாய்மடித்துப் பற்கடிக்க]

**4-ஆம் படை :**

வஞ்சியர் அனைவரும் மானமில் பாக்கள்
பிஞ்சிற் பழுத்த பேச்சினர். யானெலாம்
நவறா யறவன் ஒவறார் என்னுடனே,
சென்றுளேன் ஜனார்த்தனம கண்டுளேன் வைக்கம்.

**3-ஆம் படை :**

விடுவேன் அல்லன். அடுபோர் முடியினும்
நடுநிசி ஆயினும் அடுகளம் முழுதும்
தேடுவன்; சங்கரன் செத்தான் ஆயினும்
நாடி யவன்தலை நசுக்கி மிதித்து
வாயிடை நெடுவேல் இறக்கி......

**முதற் படை :** சீ! சீ!

சேவக னாநீ! செப்பிய தென்னை!
யாவரே பிணத்தோ டாண்மைபா ராட்டுவர்?
பிணமோ பிணத்தோ டெதிர்க்க?

**3-ஆம் படை :** போ! போ!

பெருமை நீ பேசேல். பெற்றவுன் தாயேல்
அருமை நீ அறிகுவை

**முதற் படை :** யாரா யினுமென்?

பிணத்தொடு பிணக்கெது? சீ! சீ! அன்றியும்
ஒருவன் தனக்கா உண்டாய் குரோதம்
கருதியங் கெவன்வாள் உருவினன்? நமக்கெலாம்
யாதா இவ்வயின் மகாநா டிதுவே
ஏதோ அவனையும் நம்மையும் இகழ்ந்திவ்
வஞ்சியர் வஞ்சமாய் வந்தனர். அதனால்

நெஞ்சம் கொதித்து நெடியநம் சுதந்திரம்
தனக்காய் உயிரையும் உவப்போ டளிக்கத்
துணிந்தே நம்மையும் மறந்தே நின்றோம்
என்னில் அவரவர் இழுக்குஆர் கருதுவர்?
உன்னுதி நன்றாய் ஒருவன் தனக்கா
வந்தபோர் அன்றிஃ தூர்ப்போர். அதனால்
இதோ அங்கெய்தினோர் யாரே ஆயினும்
சுதேசாநு ராகத்[1] தொடர்பால் அன்றிப்
பலவாம் தனது பழம்பழி மீட்போர்
கொலைபா தகஞ்செய்யும் கொடுமைய ரேயாம்.

[நாராயணன் படைக்கோலமாகிக் குதிரையின்மேல் வர]

**2-ஆம் படை :**
பாரும்! பாரும்! நாரா யணரிதோ...

**நாராயணன் :**
உன்பெயர் முருக னன்றோ?

**முதற் படை :** அடியேன்.

**4-ஆம் படை :**
என் பெயர் சாத்தன், சுவாமி

**நாரா :**
எத்தனை பேருளர் இவ்வா யிலின்கண்?

**முதற் படை :**
பத்தைஞ் ஞூறுளர்; மெத்தவும் உத்தமர்.
மிகுதிறத் தார். போர் விரும்பினர். இவர்தம்
தகுதிக் கேற்ப தன்றிக் காவல்.

**நாரா :** ஓகோ!
பொறு! பொறு! முருகா புரையற் றோர்க்குமற்
றுறுபணி. இன்னதென் றுண்டோ? எதிலும்
சிறுமையும் பெருமையும் செய்பவர்க் கன்றிச்
செய்வினை தனக்கேது? மெய்ம்மையில் யாவும்
திருத்தமாச் செய்தலே பொருத்தமுத் தமர்க்கு

**2-ஆம் படை :**
வேணுமென் றாயினும் எங்களை விடுத்தல்,
நாணமும் நோவுமாம் நாரா யணரே!

---

1. தாய் நாட்டன்பு

நாரா : வேண்டுமென் றாரே விடுப்பர். சீச்சீ
அப்படி யேதான் ஆயினும் நமக்குக்
கைப்படு கடமையே கடமை...

முருகா!

எத்தனை பேரால் ஏலுமிக் காவல்?

முதற்படை :

நாலிலொன் றாயின் சாலவும் மிகுதி.

நாரா : அத்தனை வல்லவர் கொல்லோ? ஆயின்
இத்தனை பேர்க்குள தொழிலெலாம் தம்மேல்
ஏற்றிட வல்லவரை மாற்றிநீ நிறுத்திக்
காட்டுதி எனக்கு.

முதற் படை : காட்டுவன் ஈதோ!

[அணிவகுத்துக் காட்ட]

நாரா : (தனதுள்)

நல்லணித் தலைவன். வல்லவர் இருவரும்.

முதற் படை :

ஈதோ நின்றனர்!

(காவற்படைகளை விலக்கி நிறுத்திக் காட்ட)

நாரா : போதுமோ இவர்கள்?

முதற் படை :

போதும்! போதும்!

காவற்படைகள் : போதுமே யாங்கள்...

நாரா : எண்ணுமின் நன்றா யேற்குமுன்! பின்புநீர்
பண்ணும் தவறுநம் பாலாய் முடியும்,

காவற்படை :

தவிர்கிலம் கடமையில், சத்தியம், தலைவ!

நாரா : தகுதியன் றெனச்சிலர் சாற்றிய தொக்க
மிகுபழி நீவிரும் மொழிவிரோ என்மேல்?

**காவற்படை :**

மொழியோம் ஒன்றும். மொழியோம் நும்மேல்.

**நாரா :**

சரி! சரி! ஆயின் தாங்குமின் காவல்
பரிமற் றுறையர்க் கெலாம் உளவோ?

**3ஆம் படை :** ஒகோ

**4ஆம் படை :**

பெரியதென் பரிபோற் பிறிதில்லை.

**நாரா :** காணுதும்

அணிவகுத் திவ்வயின் அமர்மின்! முருகா!
மற்றைவா யிலிலும் மாற்றியிவ் விதம்யான்
வைத்துள படையும் அழைத்திப் புறநீ
நொடியினில் வருதி.

**முதற்படை :** அடியேன் அடியேன்,

(முதற்படைஞன் போக)

**நாரா :** ஆம்பொழு தழைப்போம், வாம்பரி[1] அமர்மின்;

(கோட்டைமேல் உலாவி நின்று)

**(தனதுள்)**

அரும்படை இரண்டும் அதோ! கை கலந்தன.
வரும்பழி யாதோ; மன்னவர்க் கேதோ?
ஆவதிங் கறியேன்! ஜீவக! ஜீவகா!

முற்றுநான் அறிவன்நின் குற்றமும் குணமும்
குற்றமற் றென்னுள கூறற் குன்வயின்?
வித்தையும் உன்பெருஞ் சத்திய விருப்பமும்
உத்தம ஒழுக்கமும் எத்துணைத் தையோ!
வறிதாக் கினையே வாளா அனைத்தும்

அறியா தொருவனை யமைச்சா நம்பி!
இன்னதொன் றன்றிமற் றென்பிழை உன்னுழை?
மன்னவன் நல்லனா வாய்க்குதல் போல
என்னுள தரியவற் றரியதிவ் வுலகில்?
வாய்த்துமிங் குனைப்போல் வாணாள் வறிதாத்

1. தாவும் குதிரை.

தீத்திறல் ஒருவன் சேர்க்கையால் வீதல்[1]
மண்ணுளோர் பண்ணிய புண்ணியக் குறைவே
சுதந்தரம் அறுவோர்க் கிதந்தீங் குண்டோ?
கூறுவோர் அறிவின் குறைவே; வேறென்?
அன்றியும் உன்மிசை நின்றிடும் பெரும்பிழை

ஆயிரம் ஆயினும் தாய்மனோன் மணிநிலை
கருதுவர் உன்னலம் கருதா தென்செய்வர்?
வருவது வருக! புரிகுவம் நன்மை.

(2-ம் படைஞனை நோக்கி) முருகன் வரவிலை?

2ஆம் படை : வருவன் விரைவில்.

நாரா :
அதுவென் ஆ! ஆ!

2-ஆம் படை : ஆ! ஆ! அறியேம்!

நாரா : பலதேவன் படை அலவோ?

2-ஆம் படை : ஆம்! ஆம்!

நாரா :
மன்னவன்?

2-ஆம் படை : நடுவே,

நாரா : வலப்புறம்?

2-ஆம் படை : குடிலன்

நாரா : என்னையிக் குழப்பம் இடப்புறம்?

2-ஆம் படை : ஏதோ!

நாரா : வருவது முருகன் போலும், முருகா! [முருகன் வர]

(படை வீரரை நோக்கி)

வயப்பரி வீரரே! மன்னவர்க் கபஜயம்,
இமைப்பள வின்கண் எய்தினும் எய்தும்.
இம்மெனும் முன்னநாம் எய்துவோம் வம்மின்!

---

1. கெடுதல்.

முதற்படை :
வந்தனர் ஈதோ மற்றைய வீரரும்

நாரா : தந்தனம் உனக்கவர் தலைமை நொடியில்
வலப்புறம் செலுத்துதி, மன்னவன் பத்திரம்
இருபுறம் காக்குதும், வருகவென் அருகே!

(முருகன் காதில்)
குடிலனை நம்பலை,

முதற்படை : அடியேன் அறியேன்

நாரா : அறிந்தவ றாற்றுதி! மறந்திடேல் மெய்ம்மை!
வம்மின் வீரரே! வம்மின்
உம்வயின் உளதுநம் செம்மல[1] துயிரே.

[யாவரும் விரைவாய்க் குதிரைமேற் செல்ல]

நான்காம் அங்கம் : இரண்டாம் களம் முற்றிற்று

---

1 அரசன்.

# நான்காம் அங்கம்

## மூன்றாம் களம்

இடம் : அரண்மனையில் ஒரு சார். காலம் ; நண்பகல்
[ஜீவகன் தனியாய்ச் சோர்ந்து கிடக்க; சேவகர் வாயில் காக்க]

(நேரிசை ஆசிரியப்பா)

**முதற் சேவகன் :**
செய்வதென்? செப்பீர். கைவதற்[1] கியாமோ
ஆறுதல் கூறுவம்?

**2-ஆம் சேவகன் :** கூறலும் வீணே!
பெருத்த துயரிற் பேசும் தேற்றம்
நெருப்பிடை நெய்சொரிந் தற்றே யென்பர்.

**3-ஆம் சேவ :**
பணிந்தியாம் அருகே நிற்போம் அன்றித்
துணிந்துமற் றதுதான் சொல்லுவர் யாவர்?

**4-ஆம் சேவ :**
நாரா யணரேல் தீரமாய் மொழிவர்.

**3-ஆம் சேவ :**
மெய்ம்மை! மெய்ம்மை! விளம்புவர் செம்மையாய்

**முதற் சேவ :**
எங்குமற் றவர்தாம் ஏகினர்? உணர்வைகொல்?

**4-ஆம் சேவ :**
மங்கைவாழ் மனைக்குநேர் ஓடுதல் கண்டேன்.

**2-ஆம் சேவ :**
சகிப்பனோ கேட்கில் தமியள்...

**3-ஆம் சேவ :** ஆயினும்
மகளால் அன்றி மன்னவன் தேறான்
அதற்கே சென்றனர் போலும், ஆ! ஆ!

---

1. பாண்டியன் (ஜீவகன்)

**2-ஆம் சேவ :**

நாரா யணரே நன்மதி உடையோர்.

**4-ஆம் சேவ :**

பாரீர்! இன்றவர் பண்ணிய சாகசம்[1]
இன்றியாம் பிழைத்ததிங் கிவரால் அன்றே...

[ஜீவகன் எழுந்து நடக்க]

**3-ஆம் சேவ :**

அரசன் அஃதோ எழுந்தான் காணிர்.

**முதற்சேவ :**

உரைதரு கின்றான் யாதோ? ஒதுங்குமின்.
அடுத்திவண் நிற்பீர். அமைதி! அமைதி!

**ஜீவகன் :**

கெடுத்தேன் ஐயோ! கெடுத்தேன். நாணம்
விடுத்துயிர் இன்னும் வீணில் தரித்தேன்.
ஆ! ஆ! என்போல் யாருளர் வீணர்!
யாருளர் வீணர்! யாருளர்! யாருளர்!
பாண்டியன் கொல்குலம் பட்டாபா டின்றுமற்
றிதுவோ! இதுவோ! மதிவரு குலமே!

மறுவறு நறவே! மாசறு மணியே!
அழியாப் பழிப்புனக் காக்கவோ உனது
வழியாய் உதித்தேன் மதியிலா யானும்!
அந்தோ! இந்து முதலா வந்த
முன்னோர் தம்முள் ஒன்னார்க் கிரிந்து[2]

மாண்டவர் அன்றி மீண்டவர் உளரோ;
யாதினிச் செய்குவன்! ஐயோ பொல்லாப்
பாதகன் மக்களுள் வெட்கமில் பதடி [பற்கடித்து]
போர்முகத் தோடிப் புறங்கொடுத் தேற்குக்
கார்முகம்[3] என்செய! கடிவாள் என்செய!

(வில்லும் வாளும் எறிந்து)

ஓ! ஓ! இதனால் உண்டோர் பெரும்பயன்.

[மறுபடியும் வாளை எடுத்து
நோக்கி நிற்க, சேவகர் ஓடிவர]

---

1. துணிவுச் செயல் 2. பின்வாங்கி 3. வில்

போ! போ! வெளியே போரிடைப் பொலியாது
வாளா இருந்த வாளுக் கீதோ

[நாராயணன் வர]

எனாதுயிர் ஈவேன் வினாவுவர் யாவர்?

நாரா :

மனோன்மணி தன்னை மறந்தாய் போலும்.

[விழுந்து மூர்ச்சிக்க]

ஜீவ : குழந்தாய்! குழந்தாய்!

சேவகர் : கொற்றவா! கொற்றவா!

நாரா : பேசன்மின்!

[அரசனை மடியில் தாங்கி]

முதற்சேவ :

பேசன்மின்!

நாரா : வீசுமின்! அகன்மின்!

முதற்சேவ :

வெளியே!

4-ஆம் சேவ

பனிநீர்...

நாரா : தெளிநீ சிறிது!

ஜீவ :

[எழுந்து சோர்வா யிருக்க]

நாரா :

இழந்தால் இருப்பளோ? என்செயத் துணிந்தாய்?

ஜீவ : நஞ்சே எனக்கியான் என்செய் வேனினி
இருதலைக் கொள்ளியில் எறும்பா னேனே!
செருமுகத்து இரிந்தென் மானம் செகுத்தும்

உயிரினை ஓம்பவோ உற்றது? ஓர்சிறு
மயிரினை இழக்கினும் மாயுமே கவரிமா.
பெருந்தகை பிரிந்தும் ஊன் சுமக்கும் பெற்றி
மருந்தாய் எனக்கே இருந்ததே நாரணா!

நாரா : மன்னவா! யார்க்கும் தன்னுடல் மாய்த்தல்
அரிதோ? பெரிதாம் அஞர்[1]வந் துற்றுழிக்
கருதிய தமரைக் காட்டிவிட் டோடி
ஒளிப்பதோ வீரமென் றுன்னினை?

ஜீவ : ஓ! ஓ!
போரிடை ஓடுவோன் வீரம்நா டுவனோ?

நாரா : காலமும் களமும் கண்டு திரும்புதல்
சாலவும் வீரமே தக்கவை உணரும்
தன்மையில் சௌரியம் மடமே. சூழ்ச்சிசேர்
வன்மையே வீரத் துயிராம் மன்னவ!

ஜீவ : போதும்! போதும்நின் போலி நியாயம்!
சாதலுக் கஞ்சியோர் தனையளுக் காகச்
சூதக உடம்பைச் சுமக்கத் துணிந்தேன்
மன்னனும் அல்லன் வழுதியும் அல்லன்!

[சேவகரை நோக்கி]

என்னுடன் இருமின்! ஏன்நிற் கின்றீர்?

முதற்சேவ :
இறைவ! ஈதென்னை!

ஜீவ : இறைவனென் றென்னை
இசைப்பது வசையே. இஃதோ காண்மின்!
அசைந்த தொருநிழல், அஃதோ யானெனப்
பாருமின் பாண்டியன் போரிடைப் பட்டான்.
வாரும்! வாரும்! இருமின் யாவரும்.

நாரா : வீணாய் வெற்றுரை விளம்பலை வேந்தே;
காணாய் அஃதோ! அவர்விடும் கண்ணீர்
[சேவகர் அழுதலை நோக்கி]

1. துன்பம்.

ஜீவ : வம்மின்! வம்மின்! எம்மனீர்! ஏனிது?

முதற்சேவ :
பருதிகண் டன்றோ பங்கயம் அலரும்?
அரசநீ துயருறில் அழுங்கார் யாரே?

ஜீவ : பிரியசே வகரே! பீடையேன்? துயரேன்?
இழந்தனம் முற்றும் என்றோ எண்ணினீர்!
அழிந்ததோ நம்மரண்? ஒழிந்ததோ நம்படை?
மும்மையில் இம்மியும் உண்மையில் இழந்திலம்,
வெல்லுவம் இனியும்; மீட்போம் நம்புகழ்!
அல்லையேற் காண்மின்!

நாரா : அதற்கென் ஐயம்?
இறைவ! இப்போதுநீ இசைத்தவை சற்றும்
குறைவிலை தகுதியே. கூறிய படியே
ஆவது காண்குவம். அழகார் அம்புயப்
பூவின் துயர்வு பொய்கையின் ஆழத்
தளவா வதுபோல், உளமது கலங்கா
ஊக்கம் ஒருவன் தாக்கத் தளவெனத்
துணிவார்க் குறுதுயர் தொடுமுன் எவ்வம்
அணியார் பந்துறும் அடிபோல, முயற்சியில்
இயக்கிய இன்பம் பயக்குமென் றிசைக்கும்
சான்றோர் சொல்லும் சான்றே அன்றோ?.
ஆதலின் இறைவநீ ஓதிய படியே
உள்ளத் தெழுச்சியும் உவகையோ டூக்கமும்
தள்ளா முயற்சியும் தக்கோர் சார்பும்,
[குடிலனும் பலதேவனும் வர]
உண்டேல் ஊழையும் வெல்லுவம், மண்டமர்
அடுவதோ அரிது வடிவேல் அரசே!

குடில : இப்பரி சாயர சிருப்பது வியப்பே!
(தனக்குள்)
தக்கோர் என்றனன் சாற்றிய தென்னோ!
[அழுவதாக பாவித்து ஒருபுறம்
ஒதுங்கி முகமறைந்து நிற்க]

---

1. உயரும்.

ஜீவ :
ஏனிது குடில! ஏன்பல தேவ!
ஆனதென்? அமைச்ச! ஆ! ஆ!

குடில : அடியேன்.

ஜீவ : வருதி இப்புறம்! வருதியென் அருகே!

குடில : (அழுது)
திருவடிச் சேவையில்...

ஜீவ : செய்தவை அறிவோம்.

குடில : (ஏங்கி)
ஜனித்தநாள் முதலா...

ஜீவ : உழைத்தனை! உண்மை.

குடில :
உடல்பொருள் ஆவி மூன்றையும் ஒருங்கே...

ஜீவ : விடுத்தனை உண்மை. விளம்பலென்?

குடில : உண்மையில்
பிசகிலன் என்பது...

ஜீவ : நிசம்! நிசம்! அறிவோம்!

குடில : (விம்மி)
எல்லாம் அறியும் ஈசனே சான்றெனக்கு
அல்லால் இல்லை...

ஜீவ : அனைவரும் அறிவர்.

குடில :
அருமை மகனிவன் ஒருவன்...

ஜீவ : அறிகுவம்.

குடில : பாராய் இறைவ!

ஜீவ : (பலதேவனை நோக்கி) வாராய்.

குடில : இப்புண்
[பலதேவன் மார்பினைச் சுட்டிக்காட்டி]
ஆறுமா றென்னை? தேறுமா[1] றென்னை?
உன்னருள் அன்றிமற் றென்னுள தெமக்கே—

---

1. தெளியும் வகை.

ஜீவ : அம்பின் குறியன்று, யாதிது?

குடில : அறியேம்.
அன்பின் குறியிது!

ஜீவ : ஆ! ஆ!

குடில : ஆயினும்
பொல்லாப பகைவர் பொய்யர் அவர்பலர்...
இல்லா தாக்குவர் இறைவ! என் மெய்ம்மை...

ஜீவ : [அழ
வெல்வோம் நாளை! விடுவிடு துயரம்.

குடில :
(தனதுள்)
அறிந்திலன் போலும் யாதும்!

ஜீவ : அழுங்களை
வெறுந்துய ரேனிது? விடு! விடு! உலகில்
வெற்றியும் தோல்வியும் உற்றிடல் இயல்பே
அழுவதோ அதற்கா விழுமிய மதியோய்!

குடில : (தனதுள்)
[சிறிதுளம் தெளிந்து
சற்றும் அறிந்திலன்! என்னையென் சமுசயம்!

ஜீவ :
முற்றிலும் வெல்லுதும் நாளை அதற்கா
ஐயுறேல்! அஞ்சலை! ஆயிரம் வஞ்சியர்
நணுகினும் நாளை...

குடில : நாயேற் கதனில்
அணுவள வேனும் இலையிலை அயிர்ப்பு.
நெடுநாள் ஆக நின்பணி விடைக்கே
உடலோ டாவியான் ஒப்பித் திருந்தும்
கெடுவேன். அவையிக் கிளர்போ ரதனில்
விடுமா றறியா வெட்கமில் பதடியாக்
கொடியார் சிலர்செய் கொடுஞ்சூ ததனால்

தடுமா றடைந்தென் தகைமையும் புகழும்
கொடுமா றுகுத்த கெடுமதி ஒன்றே
கருத்திடை நினைதொறும் கண்ணிடு மணல்போல்
உறுத்துவ திறைவ! ஒவ்வொரு கணமும்
பகைவர்தம் படைமேற் படுகிலா வுடலம்
கெடுவேற் கென்னோ கிடைத்ததிங் கறியேன்!
அடுபோர்க் களத்தியாண் டடைந்திலன் ஐயோ!
வடிவேல் ஒன்றென் மார்பிடை இதுபோல்

[பலதேவனைக் காட்டி]

படுமா றில்லாப் பாவியேன் எங்ஙனம்
நோக்குவன் நின்முகம்? காக்குதி! ஐயோ!
தாக்குறு பகைவர் தம்படை என்னுயிர்
போக்கில; நீயே போக்குதி! காக்குதி!
இரக்கமுற் றுன்திருக் கரத்துறை வாளிவ்
உரத்திடை ஊன்றிடில் உய்வன். அன்றேல்...

[அழுது]

ஜீவ : உத்தம பத்தியில் உனைப்போல் யாரே!

நாரா :

(தனதுள்)

மெத்தவும் நன்றிந் நாடகம் வியப்பே!
மற்றக் கோழைக் குற்றதெப் படிப்புண்?
போரிடை உளதன் றியார்செய் தனர்பின்?
உணர்குவம். இப்பேச் சோய்விலாப் பழங்கதை.

[நாராயணன் போக]

குடில : சித்தமற் றவ்வகை தேர்ந்துள தென்னில்,
இத்தனை கருணையும் எனக்கென அருளுதி
பாதநற் பணிவிடை படைத்தநாள் முதலா
யாதுமொன் றெனக்கா இரந்திலன் உணர்வை
ஓதிய படியென் உரங்கிழித் துய்ப்பையேல்
போதுமிங் கெனக்(கு)அப் போதலோ காண்குவர்
மன்னுல குள்ளார் என்னுள நிலைமை!

உன்பெயர்க் குரிய ஒவ்வோர் எழுத்தும்
என்னுரத் தழியா எழுத்தினில் எழுதி

இருப்பதும் உண்மையோ இலையோ என்பது
பொருக்கெனக் கிழித்திங் குணர்த்துதி புவிக்கே.
(முழந்தாளூன்றி நின்றழ)

**ஜீவ :** அழுவதேன்? எழு! எழு! யாரறி யார்கள்!
உன்னுளம் படும்பா டென்னுளம் அறியும்
என்னநு பவங்கேள்; குடிலா! ஈதோ

சற்றுமுன் யானே தற்கொலை புரியத்
துணிந்தவாள் உருவினேன், துண்ணெனன் நாரணன்
அணைந்திலன் ஆயினக் காலை...

**குடில :** ஐயோ!

**ஜீவ :** தடுத்தான், விடுத்தேன்!

**குடில :**
(தனதுள்) கெடுத்தான் இங்கும்!

**ஜீவ :**
அரியே றன்ன அமைச்ச! பெரியோர்

தரியார்; சகியார் சிறிதொரு சழக்கும்.
ஆயினும் அத்தனை நோவதற் கென்னே?
வாளுறை சேர்த்திலம்! நாளையும் போர்செயக்
கருதினோம்! உறுதி! வெருவியோ மீண்டோம்

**குடில :**
வஞ்சியர் நெஞ்சமே சான்றுமற் றதற்கு.

மீண்டதிற் குறைவென்? ஆ! ஆ! யாரே
வெருவினார்? சீ! சீ! வீணவ் வெண்ணம்
இருதிறம் பொருதனர் சிறுவனை வெலற்கென்
றொருமொழி கூறநம் உழையுளார் சிலர்செய்

[நாராயணன் நின்றவிடம் நோக்கி]

சதியே யெனக்குத் தாங்காத் தளர்ச்சி
அதுவலால் என்குறை மதிகுல மருந்தே!
சென்று நாம் இன்று திரும்பிய செயலிலே
நன்றெனப் போர்முறை நாடுவோர் நவில்வர்.
செவ்விதில் ஓடிநாய் கெளவிடும்; சிறந்த
மடங்கலோ[1] எதற்கும் மடங்கியே குதிக்கும்.
குதித்தலும் பகையினை வதைத்தலும் ஒருகணம்
நாளைநீ பாராய்! நாந்தூ தனுப்பும்
வேலையே அன்றி விரிதலை அனந்தை
ஊரார் இவ்வயின் உற்றதொன் றறியாச்
சீராய் முடியுநம் சிங்கச் செருத்திறம்!
மீண்டோம் என்றுனித் தூண்டிலின் மீனென
ஈண்டவன் இருக்குக. இருக்குக வைகறை
வரும்வரை இருக்கில் வந்தவிவ் வஞ்சியர்,
ஒருவரும் மீள்கிலர். ஓர்கால் இக்குறி
தனக்கே தட்டிடில் தப்புவன் என்பதே
எனக்குள துயரம், அதற்கென் செய்வோம்!
ஆதலின் இறைவ! அஞ்சினேம் என்றொரு
போதுமே நினையார் போர் முறை அறிந்தோர்.

ஜீவ :
எவ்விதம் ஆயினும் ஆகுக. வைகறை,
இதுவரை நிகழ்ந்தவிற் றெதுகுறை வெனினும்
அதுவெலாம் அகலநின் றரும்போர் ஆற்றுதும்

குடில :
வஞ்சியான் இரவே அஞ்சிமற் றொழிந்திடி
அதுவுமாம் விதமெது?

[சேவகன் வர]

சேவகன் : உதியன் தூதுவன்
உற்றுமற் றுன்றன் அற்றம்நோக் கினேனே.

குடில :
சரி! சமா தானம் சாற்றவே சார்ந்தான்.

ஜீவ : பெரிதே நின்மதி! ஆ! ஆ! வரச்சொல்,

[வஞ்சித்தூதன் வர]

1. சிங்கம்

**தூதன் :** தொழுதனன், தொழுதனன், வழுதி மன்னவா!
[வணங்கி]

அருளே அகமாத் தெருளே மதியா
அடலே உடலாத் தொடைபுக ழேயா
நின்றவென் இறைவன் நிகழ்த்திய மாற்றம்
ஒன்றுள துன்வயின் உரைக்க என்றே
விடுத்தனன் என்னை அடுத்தது துவனா.
இன்றுநீர் இருவரும் எதிர்த்தகால் யாவர்
வென்றனர் என்பது விளங்கிடும் உனக்கே
பொருதிட இனியும் கருதிடில் வருவதும்
அறிகுவை! அதனால் அறிகுறி உட்கொண்
டுறுவது முன்னுணர்ந் துறவா வதற்கே
உனன்டில தாம்பிர பன்னியி னின்றொரு
குப்ப நீருமோர் நிம்ப மாலையும்[1]
ஈந்தவன் ஆணையில் தாழ்ந்திடில் வாழ்வை!
மதிற்றிற பதித்திறு மாப்பையேல் நதியிடை
மட்பரி[2] நடாத்தினார்க் கொப்பா குவையே,
ஆதலின் எங்கோன ஓதிய மாற்றம்
யாதெனிற் கைதவா! வைகறை வருமுன்
தாரும் நீரும் தருவையேற் போரை
நிறுத்துவன், அல்லையேல் நின்புரம் முடிய
ஒறுத்திட உழிஞையும் சூடுவன் இரண்டில்
எப்படி உன்கருத் தப்படி அவற்கே.

**ஜீவ :**
நன்று! நன்று! நீ நவின்றனை. சிறுவன்
வென்றதை நினைத்தோ அலதுமேல் விளைவதைக்
கருதித் தன்னுளே வெருவியோ உன்னை
விடுத்தனன் என்பதிங் கெடுத்துரை யாதே
அடுத்திவண் உள்ளார் அறிகுவர்; ஆயினும்,
மறறவன் தந்தசொற் குற்ற நம்விடை
சாற்றுதும் கேட்டி. தனபொருள் ஆயின்
ஏற்றிரந் தவர்க்கியாம் யாதுமீந் திடுவோம்
அருந்திடச் சேரன் அவாவிய புனலும்

---

1. வேப்ப மாலை, 2. மண் குதிரை.

விரும்பிய கரும்பார் வேம்பும் விதுகுலம்
வரும்பரம் பரைக்காம் அல்லால் எனக்கே
உளவல; இதனால் ஒருவனீந் திடுதல்
களவெனக் காணுதி. மற்றுநீ கழறிய
உழிஞை[1] யங் குளதெனில் வழுதிபாற் பழுதில்
நொச்சியும்[2] உளதென நிச்சயம் கூறே!

**தூதன் :**
ஐயோ! கைதவா! ஆய்ந்திலை உன்றன்
மெய்யாம் இயல்பு, மிகுமுன் சேனையின்
தீரமும் திறமும் உன்தரும் வீரமும்
கண்முற் படுமுன் கவர்ந்தசே ரற்கிம்
மண்வலி கவர்தலோ வலிதென் றுன்னினை?
என்மதி குறித்தாய்! எடுத்தகைப் பிள்ளாய்!

**குடில :**
நில்லாய் தூதுவ! நின்தொழில் உன்னிறை
சொல்லிய வண்ணம் சொல்லி யாங்கள்
தரும்விடை கொடுபோய்ச் சாற்றலே அன்றி
விரவிய பழிப்புரை விளம்புதல் அன்றே,
அதனால் உன்னுயிர் அவாவினை யாயின்
விரைவா யேகுதி விடுத்தவன் இடத்தே.

**தூதன் :** குடிலா! உன்மனப் படியே! வந்தனம்.
மருவிய போரினி வைகறை வரையிலை.
இரவினில் வாழுமின் இவ்வர ணகத்தே,
[தூதுவன் போக]

**குடில :**
தூதிது சூதே, சொன்னேன் அன்றோ?

**ஜீவ :**
ஏதமில் மெய்ம்மையே ஆயினும் என்னை?
நீரும் தாரும் யாரே அளிப்பர்?
எனவோ அவைதாம்? யாதே வரினும்
மனவலி ஒல்கலை[3] மானமே பெரிது
சிதைவிடத் துரவோர் பதையார் சிறிதும்
புதைபடுங் கணைக்குப் புறங்கொடா தும்பல்.

1. மதிலை வளைத்தல் 2. மதில்காத்தல் 3. தளராதே.

மதிகுல மிதுகா றொருவரை வணங்கித்
தாழ்ந்துபின் நின்று வாழ்ந்ததும் அன்று!
மாற்றார் தமக்கு மதிகுல மாலையும்
ஆற்றுநீ ருடன்நம் ஆண்மையும் அளித்து
நாணா துலகம் ஆளல்போல் நடித்தல்
நாணாற் பாவை உயிர்மருட் டுதலே!
ஒட்டார் பின்சென் றுயிர்வாழ் தலினும்
கெட்டான் எனப்படல் அன்றே கீர்த்தி!
அதனாற் குடிலா! அறிகுதி துணிபாய்.
எதுவா யினும்வரின் வருக ஒருவனை
வணங்கியான் இணங்குவான் எனநீ மதியேல்
[எழுந்து]
வருவோம் நொடியில், மனோன்மணி நங்குலத்
திருவினைக் கண்டுளந் தேற்றி மீள்குவம்
கருதுவ பலவுள காணுதும்.
இருநீ அதுகா றிவ்வயின் இனிதே. [ஜீவகன் போக]

குடில : கருதுதற் கென்னே! வருவது கேடே
தப்பினாய் இருமுறை தப்பிலி நாரணன்
கெடுத்தான் பலவிதம் மடப்பயல் நீயே
[பலதேவனை நோக்கி]
அதற்கெலாம் காரணம்

பலதே : அறிகுவை, ஒருவன்
இதுபோல் வேலுன் நெஞ்சிடை இறக்கிடில்,

குடில : உன்நடக் கையினால்,

பலதே : உன்நடக் கையினால்!
மன்னனைக் குத்திட உன்னினை; ஊழ்வினை!
என்னையே குத்திட இசைந்தது; யார்பிழை?

குடில : பாழ்வாய் திறக்கலை, ஊழ்வினை! ஊழ்வினை!
பகைக்கலை எனநான் பலகாற் பகர்ந்துளேன்.

**பலதே :** பகையோ? பிரியப் படுகையோ? பாவி!

**குடில :** பிரியமும் நீயும்! பேய்ப்பயல்! பேய்ப்பயல்!
எரிவதென் உளமுனை எண்ணும் தோறும்
அரியவென் பணமெலாம் அழித்துமற் றின்று

**பலதே :**
பணம் பணம் என்றேன் பதைக்கிறாய் பிணமே!
நிணம்படு[1] நெஞ்சுடன் நின்றேன். மனத்திற்
கண்டுநீ பேசுதி! மிண்டலை[2] வறிதே!

[பலதேவன் போக]

**குடில :** இதுவரை நினைத்தவை யெல்லாம் போயின!
விதியிது! இவனுடன் விளம்பி யென்பயன்?
புதுவழி கருதுவம்! போயின போகுக!

[மௌனம்]

எதுவுமிந் நாரணன் இருக்கில்,
அபாயம் ஆ! ஆ! உபாயம் இதுவே. (2)

[குடிலன் போக]

நான்காம் அங்கம் : மூன்றாம் களம் முற்றிற்று.

---

1. கொழுப்புப் பொருந்திய 2. வீணாகப் பேசாதே.

# நான்காம் அங்கம்

## நான்காம் களம்

**இடம் :** அரண்மனையில் ஒரு சார். காலம் : **மாலை**

(*ஜீவகனும் குடிலனும் மந்திராலோசனை: பலதேவன் ஒருபுறம் நிற்க*)

(நேரிசை ஆசிரியப்பா)

**ஜீவகன்:** ஆதி இன்னதென் றோதுதற் கரிய
வழுதி[1]யின் தொழுகுல வாணாள் ஓரிரா
எனமதிப் பதற்கும் இருந்ததே! குடில!
இத்தனை கேடின் றெங்ஙனம் விளைந்தது?
சற்றும் அறிந்திலேன் தையலர்[2] புகலுமுன்

மாற்றார்[3] நமது மதிற்புறத் தகழைத்
தூர்த்தார் எனப்பலர் சொல்லுவ துண்மை கொல்?

**குடில :** ஓரிடம் அன்றே. உணர்ந்திலை போலும்.

(*தனதுள்*)

வேரறக் களைகுதும். இதுவே வேளை.

**ஜீவ :**
என்னை! என்னை!

**குடில :** மன்னவா! யானிங்

கென்னென ஓதுவன் இன்றையச் சூது?

**ஜீவ :** மருவரு மதிலுள கருவியென் செய்தன?

**குடில :** கருவிகள் என்செயும் கருத்தா இன்றியே!

**ஜீவ :** காவல் இல்லைகொல்? சேவகர் யாவர்?

---

1. பாண்டியன் 2. பெண்கள் 3. பகைவர்.

குடில :

ஏவலின் படியாம் எண்ணா யிரவர்
ஆதியர் காவலா ஆக்கியே அகன்றோம்.

ஜீவ : ஏதிது பின்னிவர் இருந்துமற் றிங்ஙனம்?

குடில :

இருந்திடில் இங்ஙனம் பொருந்துமோ இறைவ!

ஜீவ : செவ்விது! செய்ததென்!

குடில : எவ்விதம் செப்புகேன்?

நாரணர் காவலின் நாயகர் ஆக்கினோம்
போரிடைக் கண்டனை நாரணர் தம்மை.

ஜீவ : மெய்ம்மை! கண்டனம் விட்டதென் காவல்?

குடில : ஐய! யான் அறிகிலன் அவரிலும் நமக்கு
மெய்ம்மை யர் யாவர்? வேலியே தின்னில்
தெய்வமே காவல் செய்பயிர்க் கென்பர்.

ஜீவ : துரோகம்! துரோகம்!

குடில : துரோகமற் றன்று
விரோதம்! அடியேன் மேலுள விரோதம்!
திருவடி தனக்கவர் கருதலர் துரோகம்.

ஜீவ : கெடுபயல்! துரோகம்! விடுகிலன் சிறிதில்.

குடில :

மடையன்! ஐயோ! மடையன்! சுவாமீ!
எலிப்பகை தொலைக்க இருந்ததன் வீட்டில்
நெருப்பினை இடல்போல் அன்றோ நேர்ந்தது
விருப்பம்மற் றவர்க்குன் வெகுமதி ஆயின்,
திருத்தமாய் ஒருமொழி திருச்செவி சேர்க்கில்
அளிப்பையே களிப்புடன் அமைச்சும் தலைமையும்,

அத்தனை அன்புநீ வைத்துளை!

ஜீவ : [அழுது]

ஆ! ஆ!

எத்தனை துட்டன்! எண்ணிலன்! சற்றும்!

குடில : ஐயோ! எனக்கிவ் வமைச்சோ பெரிது?
தெய்வமே அறியுமென் சித்த நிலைமை!
வெளிப்பட ஒருமொழி விளம்பிடிற் யானே
களிப்புடன் அளிப்பனக் கணமே அனைத்தும்.
விடுவேம் அதற்கா வேண்டிலெம் உயிரும்!
போர்முகத் திங்ஙனம் புரிதலோ தகுதி?
(பலதேவன் மார்பைக் காட்டி)

ஜீவ : யார்? யார்? நாரணன்?
[பலதேவனை நோக்கி]

பலதே : ஆம்! அவன் ஏவலில்
வம்பனங் கொருவன்...

ஜீவ : நம்பகை அன்றுபின்?

குடில : நின்பகை அன்றுமற் றென்பகை அறைவ!

ஜீவ : உன்பகை என்பகை! ஓ! ஓ! கொடியவன்!
செய்குவன் இப்போ தேசிரச் சேதம்!
இடங்குழம் பியதிங் கிதனாற் போலும்?

குடில :
அடங்கலும் இதனால் ஐய! அன்றேல்
இடப்புறம் வலப்புறம் யாதோ குழம்பும்?
மடப்பயல் கெடுத்தான்! மன்ன! நம் மானம்
ஒருமொழி அல்லா திருமொழி ஆயின்
வெருவர வெம்படை வெல்லுவ தெங்ஙனம்

ஜீவ :
அழைநா ரணனை,
[முதற் சேவகனை நோக்கி]

முதற் சேவ : அடியேன்,

ஜீவ : நொடியில்.
[சேவகன் போக]

பழமையும் பண்பும்நாம் பார்க்கிலம்; பாவி!
இத்தனை துட்டனோ? ஏனிது செய்தான்?

குடில : சுத்தமே மடையன்! சுவாமீ! பொறுத்தருள்
என்னதே அப்பிழை மன்ன! நீ காக்குதி!
வருபவை உன்திரு வருளால், வருமுன்

தெரிவுறும் அறிவெனக் கிருந்தும், திருவுளம்
நிலவிய படியே பலதே வனைப்படைத்
தலைவனாய் ஆக்கிடச் சம்மதித் திருந்தேன்;
எனதே அப்பிழை, இலதேல் இவ்விதம்
நினையான் இவனுயிர் நீங்கிடப் பாவி!
அதன்பின் ஆயினும் ஐயோ! சும்மா
இதமுற இராதுபோர்க் களமெலாம் திரிந்து
கடிபுரி காவற் படைகளும் தானுமாய்
இடம்வலம் என்றிலை; இவுளி[1] தேர் என்றிலை;
கடகயம்[2] என்றிலை; அடையவும் கலைத்து
கைக்குட் கனியாய்ச் சிக்கிய வெற்றியை
[விம்மி]

ஜீவ : கண்டனம் யாமே.

குடில : காலம்! காலம்!

ஜீவ : கொண்டுவா நொடியில்

[2-ம் சேவகனை நோக்கி]

2-ம் சேவ : அடியேன்! அடியேன்!

[2-ம் சேவகன் போக]

குடில : சென்றது செல்லுக. ஐயிப்போம் நாளை
ஒன்று நீ கேட்கில் உளறுவன் ஆயிரம்.
நெடுநா உடையான். கேட்டினி என்பயன்?

ஜீவ : விடுவேம் அல்லேம், வெளிப்படை கேட்பதென்?
எழுமுன் அவன்கழு ஏறிடல் காண்குதும்.

குடில : தொழுதனன் இறைவ! பழமையன்! பாவம்!
சிறிது செய்கருணை. அறியான்! ஏழை!

ஜீவ : எதுவெலாம் பொறுக்கினும் இதுயாம் பொறுக்கிலம்.
எத்தனை சூதுளம்! எத்தனை கொடியன்!

குடில : சுத்தன்!

1. குதிரை 2. மதயானை.

ஜீவ : சுத்தனோ? துரோகி! துட்டன்!

[நாராயணன் உள்ளே வர]

இட்டநம் கட்டளை என்னையின் றுனக்கே?

[முருகன் முதலியோர் வாயிலில் நிற்க]

நாரா :

எப்போ திறைவ?

ஜீவ : இன்றுபோர்க் கேகுமுன்!

நாரா : அப்போ தாஞ்ஞையாய் அறைந்ததொன் றில்லை.
கடிபுரி காக்கவென் றேவினன், குடிலன்.

ஜீவ : குடிலனை யாரெனக் கொண்டனை, கொடியாய்!

நாரா : குடிலனைக் குடிலனென் றேயுட் கொண்டுளேன்.

ஜீவ :

கெடுவாய் இனிமேல் விடுவாய் பகடி!
குடிலனென் அமைச்சன்

நாரா : நெடுநாள் அறிவன்.

ஜீவ : நானே அவனிங் கவனே யானும்.

நாரா : ஆனால் நன்றே அரசமைச் சென்றிலை.

ஜீவ : கேட்டது உறுதி.

நாரா : கேட்டிலை போலும்.

கடிபுரி காத்தைகொல்?

நாரா : காத்தேன் நன்றாய்.

ஜீவ : காத்தையேல் அகழ்க்கணம் தூர்த்ததென் பகைவர்?

நாரா : தூர்த்ததுன் பகையல. துரத்திய படைப்பிணம்.
பார்த்துமேற் பகருதி.

ஜீவ : பார்த்தனம் உன்னை
ஆர்த்தபோர்க் களத்திடை. அதுவோ காவல்?

நாரா : உன்னையும் காத்திட உற்றனன் களத்தில்

ஜீவ : என்னையுன் கபட நாடகம்? இனிதே!
அவனுரம் நோக்குதி, அறிவைகொல்?
[பலதேவனைக் காட்டி]

நாரா : அறிவேன்.

ஜீவ : எவனது செய்தவன்?

நாரா : அவனே அறிகுவன்.

ஜீவ : ஒன்றும் நீ உணர்கிலை?

நாரா : உணர்வேன். இவன்பால்
நின்றதோர் வீரன்; இப்பொற்றொடி யுடையான்
''என்தங் கையினிழி விப்படி எனக்கே''
என்றுதன் கைவேல் இவனுரத்[1] தெற்றிப்
பொன்றினன் எனப்பலர் புகல்வது கேட்டேன்.

ஜீவ : நன்றுநன் றுன்கதை!

குடில : நன்றிது நன்றே.
[பொற்றொடி காட்டி]
பூணிது நினதே அரண்மனைப் பொற்றொடி.
காணுதி முத்திரை! வாணியும் சேர்ந்துளாள்.
இச்செயற் கிதுவே நிச்சயம் கூலி.
அடியேம் தமக்கினி விடையளி. அகலுதும்
அஞ்சிலேம் உடலுயிர்க் கஞ்சுவம் மானம்.
வஞ்சகர் கெடுப்பர். வந்தனம்.
[தன் முத்திரை மோதிரம் கழற்றி நீட்ட]

ஜீவ : நில்! நில்!

(நாராயணனை நோக்கி)

---

1. மார்பு.

இத்தனை சூதெலாம் எங்குவைத் திருந்தாய்?
உத்தமன் போலமற் றெத்தனை நடித்துளாய்.
சோரா! துட்டா! சுவாமித் துரோகி!
வாராய் அமைச்ச! வாரீர் படைகாள்!

[முருகன் முதலிய தலைவரும் படைஞரும் வர]

நாரா யணனிந் நன்றிகொல் பாதகன்,
இன்றியாம் இவனுக் கிட்டகட் டளையும்
நன்றியும் மறந்து நன்னகர் வாயிற்
காவல் கைவிடுத்துக் கடமையிற் பிறழ்ந்தும்,
மேவருந்[1] தொடியிதெங் கோவிலில் திருடியும்,
ஏவலர்க் கதனையீந் தேபல தேவன்
ஓவலில்[2] உயிரினை உண்டிடத் தூண்டியும்,
அநுமதி இன்றியின் றமர்க்களத் தெய்திக்
கணைகழற் படைபரி கரிரதம் கலைத்துச்
சுலபமா யிருந்தநம் வெற்றியும் தொலைத்துப்
பலவழி இராசத் துரோகமே பண்ணியும்
நின்றுளான். அதனால் நீதியா யவனை
இன்றே கொடுங்கழு வேற்றிட விதித்தோம்!
அறிமின் யாவரும்; அறிமின்! அறிமின்!
சிறிதன் றெமக்கிச் செயலால் துயரம்.
இன்றுநேற் றன்றெனக் கிவனுடன் நட்பு.

நாரா : வெருவிலேன் சிறிதும் வேந்தநின் விதிக்கே!
அறியாய் ஆயின் இதுகா றாயும்
வறிதே மொழிகுதல்; வாழ்க நின்குலம்!

ஜீவ :
நற்பல மக்களே யாயினென்? நடுநிலை
அற்பமும் அகலோம், ஆதலில் இவனை

[படைத்தலைவரை நோக்கி]

நொடியினிற் கொடுபோ யிடுமின் கழுவில்!

முருகன் :
அடியேம். நொடியினில் ஆற்றுதும் ஆஞ்ஞை.
குடிலரே வாரும்!

ஜீவ : மடையன் இவன் யார்?

---

1. பொருந்துதற்குரிய. 2. நீங்குதல் இயலாத.

முருக :
கூறிய பலவும், குடிலரோ டொவ்வும்,[1]
வெறியார் பிழைத்தனர் வேந்தமற் றின்றே?

குடில :
கேட்டனை இறைவ; கெடுபயல் கொடுமொழி.

(காதில்)
மூட்டினன் உட்பகை!

நாரா : முருகா! சீ! சீ!
[முருகனை அருகிழுத்து]

ஜீவ : மாட்டுதிர் இவனையும் வன்கழு வதனில்,
[சேவகனை நோக்கி]

முருக : ஆயிற் கழுபதி னாயிரம் வேண்டும்,
[வாயிற் சேவகன் வர]

சேவ :
சுந்தர முனிவர் வந்தனர் அவ்வறை,
சிந்தனை விரைவிற் செய்தற் குளதாம்.

ஜீவ : வந்ததெவ் வழியிவர்! வந்தனம் குடிலா!
நடத்துதி அதற்குள் விதிப்படி விரைவில்.

குடில : மடத்தனத் தாலிவர் கெடுத்தெனைப் புகல்வர்;
விடுத்திட அருளாய்!

ஜீவ : விடுகிலம்.

குடில : ஆயின்.
அடுத்துநின் றிதுநீ நடத்தலே அழகாம்.

ஜீவ :
(தன் சேவகனை நோக்கி)
அடைத்திடு சிறையினில். அணைகுதும் நொடியில்.
[ஜீவகன் போக]

குடில : சடையா! கொடுபோய் அடையாய் சிறையில்.
[சடையன் அருகே செல்ல]

1. பொருந்தும்.

முருக :

அணுகலை! விலகிநில்! அறிவோம் வழியாம்.

[சடையன் பின்னும் நெருங்க]

வேணுமோ கோணவாய் விக்கா!

சடையன் : கொக் கொக்.

[விக்கி]

முருக ; கூவலை; விடியுமுன் கூவலை.

சடையன் : கொக் கொக்.

சேவகர் :

சேவலோ! சேவலோ! சேவலோ! சேவலோ!

யாவரும் : [கைதட்டிச் சிரித்து]

குடில : ஏதிது? இங்ஙனம் யாவரு மெழுந்தார்!
வீதியிற் செல்லலை. வீணர் அபாயம்!
ஒழிகுவம் இவ்வழி! வழியிது! வா! வா!

[குடிலனும் பலதேவனும் மறைய]

சேவகரிற் சிலர் :

பிடிமின் சடையனை!

[சடையனும் குடிலனும் சேவகரும் ஓடிட,
சில படைஞர் துரத்திட, சிலரார்த்திட]

மற்றைய சேவகர் : பிடிமின்! பிடிமின்!

சேவகரிற் சிலர் :

குடிலனெங் குற்றான்?

குடில : கொல்வரே! ஐயோ!

[நன்றாய் மூலையில் மறைய]

சேவகரிற் சிலர் :

விடுகிலம் கள்வரை!

மற்றைய சேவ : பிடிமின்! பிடிமின்!

[கூக்குரல் நிரம்பிக் குழப்பமாக]

நாரா :

முருகா! நிகழ்பவை சரியல சிறிதும்,

(ஒரு திண்ணையிலேறி நின்று)

அருகில், சீ! சீ! அன்பரே அமைதி!

[குழப்பங் குறைந்து அமைதி சிறிது பிறக்க]

முருக : அமைதி! கேண்மின்!

முதற் சேவகன் : அமைதி! அமைதி!

நாரா : நல்லுயிர்த் துணைவரே! நண்பரே! ஒருமொழி
சொல்லிட ஆசை! சொல்லவோ!

[குழப்பந்தீர]

சேவகரிற் சிலர் : சொல்லுதி.

[சிறிது சிறிதாய்ப் படைஞர் நெருங்கிச் சூழ]

சேவகர் யாவ :

சொல்லாய்! சொல்லாய்! பல்லா யிரந்தாம்!

நாரா :

நல்லீர் மிகவும் அல்லா திங்ஙனம்
முன்பின் அறியா என்போ லிகள்மேல்
அன்புபா ராட்டினீர், அநேக வந்தனம்!

[கைகூப்பி]

சேவகர் :

அறியா?ருனையார்? அறிவார் யாரும்.

[முற்றிலும் அமைதி பிறக்க]

நாரா : அறிவீர் ஆயினும் யானென் செய்துளேன்?
என்செய வல்லவன்! என்கைம் மாறு
பாத்திர மோநும் பரிவிற் கித்தனை!

சேவகர் :

காத்தனை, காத்தனை, காவற் கடவுள்நீ!

நாரா : கெட்டார்க் குலகில் நட்டார்[1] இல்லை!

---

1. நட்டினர்.

ஆயினும், வீரர்நீ ராதலின், நும்முடன்
ஈண்டொரு வேண்டுகோள் இயம்பிட ஆசை
அளிப்பிரோ அறியேன்?

[படைஞர் நெருங்கிச் சூழ]

சேவகர் : அளிப்போம் உயிரும்.

குடில :
(பலதேவன் காதில்)
ஒளித்ததிங் குணர்வனோ? ஓ! பல தேவ!

நாரா : ஒருதின மேனும் பொருதுளேன் உம்முடன்
கருதுமின் என்னவ மானமுஞ் சிறிதே.

சேவகர் :
உரியதே எமக்கது, பெரிதன் றுயிரும்;

[யாவரும் கவனமாய்க் கேட்க]

குடில :
(தனதுள்)
எரியிடு வானோ இல்லிடை? ஐயோ!

நாரா : சொல்லுதும்!
அத்தனை அன்புநீர் வைத்துளீர் ஆயின்
என்மொழி தனக்குநீர் இசைமின் எனக்காத்
தீதோ ஆயினும் செமித்தருள் புரிமுன்!

சேவகர் :
யாதே ஆயினும் சொல்லுக!

நாரா : சொல்லுதும்.
போர்க்களத் துற்றவை யார்க்கும் வெளிப்படை
ஊர்ப்புறத் தின்னம் உறைந்தனர் பகைவர்;
நாற்புறம் நெருப்பு; நடுமயிர்த் தூக்கின்
மதிகுலக் கொழுந்தாம் மனோன்மணி நிலைமை.
இதனினும் அபாயமிங் கெய்துதற் கில்லை.

நுந்தமிழ் மொழியும் அந்தமில் புகழும்
சிந்திடும்; சிந்திடும் நுஞ்சுதந் தரமும்.
இத்தகை நிலைமையில் என்னை நுங்கடமை?

மெய்த்தகை வீரரே! உத்தம நண்பரே!
எண்ணுமின் சிறிதே! என்னைநம் நிலைமை!
களிக்கவும் கூவவும் காலமிங் கிதுவோ?
வெளிக்களத் துளபகை வீண்கூக் குரலிதைக்
கேட்டிடிற் சிறிதும் கேலியென் றெண்ணார்;
கோட்டையுட் படைவெட் டேயெனக் கொள்வர்.
பெரிதுநம் அபாயம்! பேணி அதற்குநீர்
உரியதோர் கௌரவம் உடையராய் நடமின்.
விடுமின் வெகுளியும் வீண்விளை யாட்டும்
படையெனப் படுவது கரையிலாக் கருங்கடல்
அடலோ தடையதற்கு? ஆணையே அணையாம்.
உடைபடின் உலகெலாம் கெடுமொரு கணத்தில்.
கருமருந் தறையிற் சிறுபொறி சிதறினும்
பெருநெருப் பன்றோ? பின்பார் தடுப்பார்
அதனால் அன்பரே! ஆணைக் கடங்குமின்.

**குடில :** (மூச்சுவிட்டு) ஆ!

**நாரா :** இதுபோல் இல்லை யெனக்குப காரம்
இரந்தேன், அடங்குமின்! இரங்குமின் எமக்கா!

**முதற்சேவ :**
நாரா யணரே! நவின்றவை மெய்யே!
ஆரே ஆயினும் சகிப்பர் அநீதி!

**நாரா :** ஏதுநீர் அநீதியென் றெண்ணினீர்? நண்பரே!
ஓதிய அரசன் ஆணையை மீறி
எனதுளப் படிபோர்க் கேகிய அதற்கா
மனுமுறைப் படிநம் மன்னவன் விதித்த
தண்டனை யோவநி யாயம்? அலதியான்
உண்டோற் றுரிமையும் ஒருங்கே மறந்துமற்
றண்டிய அரச குலத்திற் கபாயம்
உற்றதோர் காலை உட்பகை பெருக்கிக்
குற்றமில் பாண்டிக் கற்ற[1] மில் கேடு
பண்ணினேன் என்னப் பலதலை முறையோர்
எண்ணிடும் பெரும்பழிக் கென்பெயர் அதனை

1. முடிவு.

ஆளாக் கிடநீர் வாளா முயலலோ
யாதே அநீதி? ஓதுமின் அதனால்
என்புகழ் விரும்புவி ராயின் நண்பரே!
ஏகுமின அவரவர் இடத்திற் கொருங்கே!

முதற்சேவ :

எங்கினி ஏகுவம் இங்குனை இழந்தே?

2-ஆம் சேவ :

உன்கருத் திருப்பிற் குரியதோ இவ்விதி?

நாரா :

கருத்லொம் காண்போன் கடவுள், விரித்த
கருமமே உலகம் காணற் குரிய
ஒருவனோ அலதிவ் வுலகமோ பெரிது?
கருதுமின் நன்றாய். காக்குமின் அரசனை
சொல்லுமின நில்லீர்! செல்லிலென் றனக்கு
நலலீர் மிகவும்!

சேவகர் : நாராய ணரே!

உமக்காங் கொடிய கழுமரம் எமக்கும்
நன்றே என்றே நின்றோம் அன்றிக்
கெடுதியொன் றெண்ணிலம் கொடுமதற் கநுமதி.

நாரா : தென்னவன் சிறைசெயச் செப்பினன்; அதனால்
இன்னம் பிழைப்பேன் இக்கழு, உமக்கியான்
சொன்னவா றடங்கித் துண்ணென ஏகில்.
இல்லையேல் எனக்கின் எய்துவ தறியேன்.
வல்லைநீர்! செல்லுமின்! செல்லுமின்! வந்தனம்.
செல்லுமின்! சத்தியம் செயிக்கும் செயிக்கும்!
நல்லது! நல்லது!

[படைஞர் விடை பெற்றுப் போக]

முருக : நாரா யணரே!

நுஞ்சொல் என்சிரம். ஆயினும் நுஞ்செயல்
சரியோ என்றெனக் குறுவம்தரா ஐயம்.
சத்தியம் செயிக்கும் என்றீர் எத்திறம்!

குடிலன் தனக்கநு கூலமாய் அனைத்தும்
முடிவது கண்டும் மொழிந்தீர் முறைமை!

**நாரா :** பொறு! பொறு! முடிவில் அறிகுவை.

**முருக :** முடியும்
தருணம் யாதோ? மரணமோ என்றால்
மரணம் அன்றது; மறுபிறப் பென்பீர்.
யாதோ உண்மை?

**நாரா :** (இருவரும் நடந்து) ஓதுவம். வாவா!
நன்றிது தீதிது என்றிரு பான்மையாய்த்
தோற்றுதல் துணிபே அதனால்
தேற்றம் இதேயெனச் செய்கநல் வினையே!

[நாராயணனும் முருகனும் சிறைச்சாலைக்குப் போக]

**பலதே :** என்னையுன் பீதி? எழுவெழு இவர்க்குன்
பொன்னோ பொருட்டு?

[பலதேவனும் குடிலனும் வெளியே வந்து]

**குடில :** போ! போ! மடையா
உன்னினன் சூதே.

**பலதே :** உன்குணம், நாராயணன்
சொன்னது கேட்டிலை?

**குடில :** சொல்லிற் கென்குறை?
முன்னினும் பன்னிரு பங்கவன் துட்டன்.

**சேவகன் :** [சேவகன் வர]
மன்னவன் அழைத்தான் உன்னைமற் றப்புறம்

**குடில :** வந்தனம் ஈதோ! சுந்தரர் போயினர்?

**சேவ :**
போயினர்.

குடில: ஓ! ஓ! போ இதோ வந்தோம்

[சேவகன் போக]

(தனதுள்)

ஆயினை தென்னையோ அறிகிலம், ஆயினும்
சேயினும்[1] எளியேன் திரும்பவும் நொடியே. (2)

[குடிலனும் பலதேவனும் போக]

நான்காம் அங்கம்: நான்காம் களம் முற்றிற்று.

---

1. குழந்தையினும்

# நான்காம் அங்கம்

## ஐந்தாம் களம்

**இடம் :** அரண்மனையில் ஒரு சார். **காலம் :** மாலை

[ஜீவகனும் சுந்தர முனிவரும் மந்திராலோசனை]

(நேரிசை ஆசிரியப்பா)

**சுந்தரர் :** வளையும் வேய்நிமிரும்; வளையா நெடுமரம்
கிளையுடன் கெடுமே கிளர்காற் றதனில்!

**ஜீவகன் :**
முளையுமோர் மரமோ? முனிவ! புல்லினம்!
களைகுவர், களைகிலர் காழ்பெறுந் தருக்கள்
சேணுயர் தேக்கு திசையெறி சூறையில்
ஆணிவே ருடனெழுந் ததிர்ந்தசைந் திறினும்[1]
பேணுவர் அதனைப் பெரியோர்! யாரே
காணுவர் காழறு[2] நாணமில் நாணலை?
ஓருயிர்ப் பேனும் உண்டேல், அடிகாள்!
போரிடைப் போக்குவன்; புகழெனக் கதுவே!

**சுந்தரர் :** பொறு பொறு! ஜீவக! வெறுமொழி புகலேல்!
அரியது செய்வதே ஆண்மையும் புகழும்!
அரிதுயிர் தரித்தலோ மரித்தலோ அறைதி.
வேட்டையா ரோட்டிட வெருவுதிக் குருவி
நீட்டிய தன்சிர நீள்மணற் புதைத்துத்
தனதுகண் காணாத் தன்மையர் பிறரும்
தனதுடல் காணார் எனநினை வதுபோல்
என்னையிம் மயக்க மன்னவ! உனக்கும்!
சிறுபசி தாங்காச் சிறுமையர் பற்பலர்;
அறவழி இதுவென அறியாக் கயவர்;
பிறர்பொருள் வெளவியும் பிறவுயிர் கவர்ந்தும்
அலையும் தீமையர் அநேகர், அகப்படின்
மலைவற[3] மரணமும் வெருவார் மான,

---

1. செட்டாலும் 2. வைரம் நீங்கிய 3. மயக்கந் தீர.

கலக்கமொன் றின்றிக் கழுவே றிடுதல்
புலப்படக் கண்டுளாய் இலக்கமின் முறையே.

துரத்திடும் துயர்க்கணம் வந்திடும் காலை
மரித்தலோ அவையெலாம் சகித்தலோ தகுதி?
தன்னுயிர் ஈவர் தக்கோர் சார்ந்த
மன்னுயிர் காத்திடு மார்க்கமற் றஃதேல்.
வார்கடல் முகட்டில் மாநிதி வழிஞர்

ஆர்கலன், அலையெறி புயல்கால்[1] ஆதியாற்
சேர்திசை திரிந்து தியங்குமேல்[2], மீகான்[3]
களமும் காலமும் கருதித் தனக்குறு
தளர்வுபா ராட்டுதல் தவிர்த்து, சாய்ந்து, மற்
றெதிருறு காற்றிற் கிசைவுற வதிந்து[4],

தன்றிசை செல்லத் தக்ககால் வரும்வரை
சென்றொரு கரைசேர்ந் தொன்றுவ னல்லால்,
உவப்புறு நிதிகெட உழையுளார் களும்பரி
தவித்திட மரக்கலம் துரப்பனோ சாற்றாய்,
தக்கோர் செயலெலாம் தமக்கா அலவே!

முக்கியம் புகழோ தக்கவுன் கடமையோ?
அதனால் ஜீவக! அகற்றந் நினைப்பு.
மதிகுலம் வந்த மதிவலோர் பலரும்
செலாவழி நின்திமில்[5] செலுத்தினை; தீங்காய்
உலாவிய சுழல்காற் றோடொரு சுழியிடைப்

பட்டனை; நம்பிய பாய்மரம் பழுது
விட்டிடிக் கோட்டையாம் வெளிக்கட லோட்டம்.
மண்டிய பெருங்காற் றடங்கும் வரையும்
அண்டையில் உளதோர் கைவழி[6] அதனில்
ஒண்டிநீ ஒதுங்கி உன்றொல் நகராம்

துவாத சாந்தத் துறைபோய்
நிவாதமா[7] நிலைபெற லேநெறி முறையே! (1)

ஜீவ : நன்குல முனிவ! இயம்பிய மாற்றம்
நன்கே. உன்றன் நயப்பிற்[8] கென்செய
கழுமரக் கதையதைக் கண்டேன் இன்றே!

---

1. மழைக் காற்று 2. லங்குமானால் 3. கப்பலோட்டி 4. தங்கி 5. மரக்கலம் 6. சிறுவழி 7. காற்றற்ற இடம் 8. விருப்பம்.

பழுதுபாய் மரமெனப் பகர்ந்தும் உண்மை!
வழுவெனக் கண்டது மாற்றினன் அநேக
வந்தனம் வந்தனம்! ஆயினும் ஒருசொற்
சிந்தையிற் சேர்த்தெனைத் தெருட்டிட[1] வேண்டும்.
வேற்றுமை உருவாய் விளங்கிய காலம்
காற்றினும் கடுகிய கடுநடை உடைய
தன்றோ? அதிலகப் பட்டார் முந்திச்
சென்றா னின்றார்! சிறிதுசிந் தித்து
நிற்பரேல் பெரிதும் பிற்பட் டொழிவர்.
ஆதலால் அடிகாள்! பூதலத் துயர்ந்த
மேதை[2]யின் மிகுந்த மானிடர்க் கரசராய்
வந்தவர், தத்தமக் குற்ற மதித்திறம்
எட்டிய மட்டும் குற்றம் விடுத்துக்
கால கதிக்கநு கூலமால் நவீன
சீர்பல திருத்தி ஓரியல் புதிதா
நாட்டித் தமது நாட்டுளோர் சுகம்பா
ராட்டில ரேலவர் ஆண்டநாட் கெல்லை
காட்டுமோ கொடிய காலக் கரப்பே![3]
இவ்வழி தனக்கெனத் துணிந்ததோர் இயல்பே
அவ்வர சனுக்காம் யாக்கை. அஃதின்
அழிவே யவன தொழிவாம். அதனால்
எல்லாம் அறிந்த இறைவ! இவ் விடத்தியான்
பல்லா யிரநாட் பரிவுடன் உழைத்தே
அமைத்தவிப் புரியும் சமைத்தவிவ் வரணும்
நன்றே ஆயினும் ஆகும்; அன்றிப்
பொன்றினும் பொன்றுக; பொறித்தவென் அரசியல்
மற்றவை தம்மொடு மாண்டிடும்; மாண்டபின்
அற்றதோர் கவந்தம்[4] அமர்க்களத் தாடும்
பெற்றிபோல் மூச்செறி பிணமா யானும்
நடித்தலோ உன்திரு வடித்தா மரையைப்
பிடித்ததற் கழகாம் பேசாய் விடுத்தே!

சுந்தர : எடுத்ததன் முயற்சி யாதே யாகுக!
முடித்திடு முன்ன ரடுத்ததன் மதியால்

---

1. தெளிவுபடுத்த 2. அறிவு 3. மறைப்பு 4. உடற்குறை

தீங்கெனத் தேர்ந்திடி னாங்கவற் றுட்பின்
வாங்கலே யார்க்கும் ஆம்பணி யென்ப
தீமைகை விடற்கு வேளைசிந் திப்போர்
செய்மை உனிமனை திரும்பார் ஒப்பர்.
ஆதலால் ஜீவக! தீதென வருதற்
கியாதோர் ஐயமும் இலைநீ தொடரியல்
எனவின் றெய்திய வற்றால் உனது
மனத்திடை மயக்கற மதித்துளை ஆயின்,
ஒழுங்கா யிவையெலாம் ஒழித்தியான் குறித்த
மருங்கே அணைந்து வாழலே கருமம்.
வேறிலை தேறு மார்க்கம்
கூறுதி அதனால் உன்மனக் கோளே. (2)

ஜீவ :

ஐய!யான் உரைப்பதென்? அடுத்தவை
இவையெலாம்
கைவிடில் என்னுயிர் கழியும், அதனில்
இன்றியான் பட்டஇகழ்ச்சி முழுதும்
பொன்றிடப் பொருதுபின் பொன்றுதல் அன்றோ
சிறப்பது செப்புதி! சிறியேன் ஒருசொல்
மறுத்தது பொறுத்தருள் மாதவக் கொழுந்தே!

சுந்தர :

சங்கரா! சற்றோ தாதான் மியபலம்![1]
வெங்கரா[2] பிடித்தவை விடினும் விடுமே!
நல்லது ஜீவக! நண்டெனும் புல்லிய
அற்பமாம் சிற்றுயிர் அரியதன் உடலையும்
பிற்கிளைக்[3] கிரையென வீந்தவை பேணல்
கண்டும் புகழிற் கொண்டனை பிராந்தி[4]
இவ்வுயிர் இயலுல கியற்கையென் றெண்ணினேன்.
செவ்விதின் நின்னிலை தேர்ந்தபின் ஐயம்
வருவது. அதனால், மதிகுலம் வந்த
ஒருமலர் நின்னுழை உள்ளது; தமிழர்
ஆவோர் யார்க்கும் அஃதுரித் தாம்; நீ
காவா யாகிற் காப்பதெம் கடனே.

---

1. ஒற்றுமைப் படல் 2. கொடிய முதலை 3. மகவு 4. மயக்கம்

ஜீவ :

இதுபோ லில்லை அடிகள் செய்யும்
உதவி! தமியேற் குளதுயர் இதுவே;
கண்மணி தனையெணிப் புண்படும் உள்ளம்
அருளுதி காக்கும் உபாயம்,
இருணிறை இடுக்கணுக் கியைந்திடு மருந்தே!

சுந்தர :

நல்லது! கேட்டி! சொல்லுதும், உரியநீர்
விட்டான் முதலையும் விரும்பிய திலகப்
பட்டாற் களிறும் பலமில ஆகி
விடுமென அறிந்த கெடுவினை யாளர்
தொடர்பினால் அவரிடு தூண்டிலிற் சிக்கி
இடமது பெயர்ந்துழி, எடுத்தவெவ் வினைக்கும்
கேடுமுன் கருதிக் கோடலே முறையெனும்
அறிவோர் மொழியயர்ந் திருமாப் பகத்துட்
கொண்டுநீ நின்றதைக் கண்டிக் கடிபுரி
தொட்டென் உறையுள் மட்டுமோர் சுருங்கை
அதிரக சியமாய் அமைத்துளேன். அவ்வழி,
சதமென நம்புமிச் சாலி புரமும்[1]
அதன்புறம் ஊன்றிய அடர்புலப் படையும்,
அறிந்திடா வகையவை கடந்துசென் றுன்னை
மறந்திடா மாபதி[2] அடைந்திடச் செயுமே.

ஜீவ :

தேவரீர் செய்யும் திருவரு ளுக்குமா
றாவதும் உளதோ! ஆ! ஆ! அடிகாள்!
வழுதியர் பலர்பலர் வழிவழி காக்கும்
முழுமதித் தொழுகுலத் தெய்வநீ போலும்!
பழுதற நீயிவண் பகர்ந்ததோர் வழியிது
திருத்திட எடுத்த வருத்தமெத் தகைத்தே!

சுந்தர :

நல்லது! முகமன் நவின்றனை, நிற்க,
சொல்லிய சுருங்கை உனக்குமிவ் விடுக்கணில்
உதவுமோ அன்றோ உரைக்குதி விரைந்தே.

ஜீவ :

அடியேன் ஆசை திருவடி அறியும்.

---

1. திருநெல்வேலி 2. மதுரை

கடிபுரி விடிலுயிர் நொடியுமிங் கிராது.
பாண்டியர் குலமெனும் பாற்கடல் உதித்த
காண்டகு கன்னியை இவ்வழி உன்திரு
உளப்படி கொடுபோய் அளித்திரு ளுதியேல்,
இந்துவின் குலமெனும் முந்திய பெயர்போய்ச்
சுந்தரன் குலமெனச் சந்ததம் வழங்கும்.
நீங்கா திதுகா றென்னுளம் நிறைந்த
தாங்காப் பெருஞ்சுமை தவிர்தலாம்; யானும்
ஒருமனம் உடையனாய் மறலி[1]யும் வெருவ
ஆற்றுவன் அரும்போர் அகனிடை யமபுரம்
ஏற்றுவன் எங்குலம் தூற்றிய சேரனை;
வென்றிடின் மீளுவன் அன்றெனிற் பண்டே
அனையிலாத் தனையளுக் கம்மையும் அப்பனும்
தயாநிதி! நின்றிருச் சரணமே என்ன
வியாகுல[2] மறவே விடுவனென் உயிரே.

சுந்தர :

விடுகிலை, ஆகினும் வெளிக்கடல் ஓட்டம்.
நடுநிசி நாமினி வருகுதும். கொடிய
கரிபுடிக் கனலிடைக் காய்ந்திடும் உன்றன்
சிறுகொடி மறுவிடம் பெயர்த்தும் சிறந்த
அந்தமில் செழியரைத் தந்திட உரித்தே.

[எழுந்து]

ஜீவ : கட்டளைப் படியே? கட்டிய கற்படை
கண்டிட ஆசையொன் றுண்டடி யேற்கு.

சுந்தர : காட்டுதும் இன்றிரா கற்படை சேர்முறை.
ஒருவர் ஒருபொருள் அறியில் இரகசியம்;
இருவர் அறிந்திடிற் பரசியம் என்ப.
கைக்கெட் டியதுதன் வாய்க்கெட் டுதற்குள்
வந்துறும் அந்தமில் பிரதிபந் தங்களே[3]

[முனிவர் போக]

ஜீவ :

வந்தனம், வந்தனம், அடிகாள்! வந்தனம்.

(தனிமொழி)

---

1. எமன் 2. துன்பம் 3. தடை.

என்னே! என்னே! இந்நாள் இயன்றவை!
கொன்னே கழிந்தன் றோரிமைக் கொட்டும்.
குகுநாள்[1] மழையொடு மிகுகாற் றெறிந்த
பரவையின் பாடெலாம் பட்டதென் உளமே.
இரவினில் வருபவை எவையெலாம் கொல்லோ?
தாயே! தாயே! சார்வண சற்றும்
ஆயேன், எங்ஙனம் பிரிந்துயிர் ஆற்றுவேன்?
விடுக்குமா றெவனென் விளக்கே? உன்னைக்
கெடுக்குமா றெவனினி கிளர்போ ரிடை? அது
தடுக்குமா றெவனினி? சமழ்ப்[2]பற் றுடலம்
பொறுக்குமா றெவனிப் பொல்லா வல்லுயிர்
துறக்குமா றெவனுனைத் துணையற விடுத்தே?
அந்தோ! அந்தோ! என்றன் தலைவிதி!
நாற்புற நெருப்புறி னளி[3]யும் தனது
வாற்புற நஞ்சால் மாய்ந்திடும் என்ப,
நரனலன்; நரேந்திரன்; நானது போற்சுதந்
தரனலன் எனிலென் தலைவிதி கொடிதே!
பிரிவென என்னுளம் கருதிடு முனமே
பிரையுறு பாலென உரைவதென் உதிரம்
நாணா துன்முகம் காணுவ தெவ்விதம்?
நடுநிசிப் பொழுது தொடுகற் படைவழி
முனிவரன் பிறகுனைத் தனிவழி விடுத்திவண்
தங்குவன் யானும்! தங்குவை நீயும்!
இங்கதற் கிசையேன் இறக்கினும் நன்றே!

[மௌனம்]

கற்படை இதுதான் எப்புறத் ததுவோ
உரைத்திலர் முனிவர் ஒளித்தனர். இஃதும்
உளதோ? இலதோ? உணர்பவர் யாவர்?
முனமே முனிவன் மொழிமணம் அன்றோ
இனையவிப் போர்க்கெலாம் ஏதுவாய் நின்றது!
கூடிய தன்றது! ஏ! ஏ! [சேவகன் வர]
குடிலனை
ஓடியிங் கழையாய்!

[சேவகன் போக]

உண்மையெப் படியென

---

1. அமாவாசை 2. நாணம் 3. தேள்.

நாடுமுன் வாடி நலிதல் என்பயன்?
நம்புதல் எல்லாம் துன்பமே தருவது.
நம்பினோம் நாரா யணனை அதற்கா!
வம்பே செய்தான் மாபா தகனவன்
நட்பே நமக்கிங் குட்பகை யானது!
முனிவரோ முதுநகர் விடுத்தநாள் முதலா
களவழி இதுமுனி கட்டற் பாற்றோ!
மனத்திடைக் களங்கம் வைத்துளர் அஃதவர்
விளம்பிய மொழியே விளக்கிடும், நன்றாய்
ஆரா யாமுனம் அனுப்புதல் தவறே.

[குடிலன் வர]

வாராய் குடில! மந்திரி உனக்கு
நேர்தான் ஆரே! நிகழ்ந்தவை அறிவைகொல்?
சுந்தர முனிவரோர் சுருங்கை தொட்டுளராம்;
நந்தமை அழைத்தனர் ஒளித்திட அவ்வழி;
மறுத்திட, மனோன்மணி யேனுமங் கனுப்பென
ஒறுத்தவர் வேண்டினர். உரியநம் குலமுனி
ஆதலின் ஆகென இசைந்தோம்; அவ்வழி
யாதென வினாயதற் கோதா தேகினர்.
பாதிரா வருவராம். பகர்ந்தவிக் கற்படை
மெய்யோ பொய்யோ? மெய்யெனில் எவ்வயின்
உளதென உணர்தியோ? ஒழுங்கு கொல், நமது
இளவர சியையங் கனுப்புதல்?

**குடில :** இறைவ!
முன்னர்நாம் ஒருநாள் இந்நகர் காண
அழைத்தோம் அந்நாள் யாதோ பூசை
இழைத்திட வோரறை இரந்தனர்.

**ஜீவ :** ஆம்! ஆம்!

**குடில :** அவ்வறை எவ்வறை?

**ஜீவ :** அதுயான் அறிவேன்,
செவ்வே வடக்குத்[1] தேம்பொழிற் கிப்புறம்.
மறுமுறி மணவறை,

**குடில :** அறிவது வெகுநலம்
**(தனதுள்)**

---

1. நேர். வடக்கு.

(ஜீவகனை நோக்கி)
உறுவதங் கென்னென உணர்ந்தனை?

ஜீவ : உணர்ந்திலேன்!

குடில : அதுவே கற்படை அடைந்துளேன் பழுது
செயத்தகு வினையல ஆதலில் திருவுளம்
உணர்த்திலேன், முனிவர் ஓதிய திதுவே.
இவ்வரண் முற்றும் இயற்றிய நமக்குச்
செவ்விதில் இதுவோ செய்தற் கரியது?
சுந்தரர் நம்மையெல்லாம் புத்தியற் றவரென
நொந்து தாம் உழைத்ததை நோக்கிடில் நகைப்பே!

ஜீவ : நந்தொழில் பழித்தலே சிந்தை யெப்பொழுதும்!
பண்டே கண்டுளோம். பாங்கோ[2] அனுப்புதல்?

குடில : பழுதல; பாலுணும் குழவிகை யிருப்ப
மல்லுயுத் தஞ்செய வல்லுவர் யாரே?
அனையினை ஒருபாற் சேமமாய் அனுப்பிய
பினையிலை கவலையும் பீதியும் பிறவும்.
உட்பகை வெளிப்பகை எப்பகை ஆயினென்?
கவலையொன் றிலதேல் எவருனை வெல்வர்?
ஆதலால் முனிவர் ஓதிய படியே
அனுப்புதல் அவசியம் குணப்பிர தம்மே.
ஆனால் அறியா அரசகன் னியர்கள்
தேனார் தெரியல் சூடுமுன் இரவில்
தனிவழி யநியர் பால் தங்குதல்...?

ஜீவ : தவறே.

குடில : முனிவரே ஆயினும். அநியரே உலகம்
பைத்தியம்; பழித்திடும்; சத்தியம்உணராது,

ஜீவ : மெய்ம்மை, வதுவைமுன் விதியன் றனுப்புதல்.

குடில : அனுப்பினும் அதனால் ஆம்பயன் என்னே?
மனத்துள் கவலை மாறுமோ? கவலை
முன்னிலும் பன்னிரு பங்காய் முதிரும்.

ஜீவ : அதுவே சரி! சரி! ஐயமொன் றில்லை.
வதுவைக் கிதுவோ தருணம்?

குடில : மன்னவ

---

1. புத்தி 2. முறையோ?

அடியேன் அறிவிப் பதுவுமிங் கதுவே!
கொடிதே நம்நிலை. குற்றமெப் புறமும்,
அடிகள் அறைந்தவா றனுப்பா திருக்கில்
உட்பகைச் சதியால்[1] ஒருகால் வெற்றி
தப்பிடின் நங்குலம் எப்படி ஆகுமோ?
வைப்பிடம் எங்குபின்? எய்ப்பிடம் எங்கே?
திருமா முனிவரோ கருநா[2] உடையர்.
நம்பிய தலைவரோ வம்பினர்; துரோகர்.
இத்தனை பொழுதுமங் கெத்தனை கூச்சல்!
எத்தனை கூட்டம்! எத்தனை குழப்பம்!
முருகனும் நாரா யணனும் மொழிந்த
அருவருப் புரையிங் கறையேன் அவர்தாம்
சேவகர் குழாங்களைத் திரட்டி யென்மேல்
ஏவினர்; அதற்கவர் இசைந்திலர் பிழைத்தேன்!
வேண்டினர் பின்னையும்; தூண்டினர் உன்னெதிர்.

ஜீவ :
காண்டும்! கார்ண்டும்! கடுஞ்சிறை சேர்த்தனை.

குடில : சேரா திவரைமற் றியாரே விடுவர்.
ஆயினும் தலைவர் நிலைமை இஃதே.
வெல்லுவ தெலாநம் வீரமே அல்லால்
இல்லை அவர்துணை என்பது தெளிவே.
அல்லொடு பகல்போல் அல்லல்செய் கவலையும்
வீரமும் எங்ஙனம் சேருமோ அறியேன்.
கவலைதீர் உபாயம் கருதில் நுவல்தரு
கல்லறை நன்றே கடிமண முடியின்...
கடிமண மதற்கோ முடிபுனை மன்னர்
வேண்டுமென் றன்றோ ஆண்டகை நினைத்துளை?
வருடக் கணக்காய் வேண்டுமற் றதற்கே.
ஒருநலம் காணின் ஒருநலம் காணேம்.
ஏற்ற குணமெலாம் இருப்பினும் இதுபோல்
மாற்றல னாய்விடின் மனோன்மணி யென்படும்?
பிரிதலே அரிதாம் பெற்றியீர்! பிரிந்தபின்
பொருதலே ஆய்விடிற் பொறுப்பளோ தனியள்!
புருவ புண்ணியம் அன்றோ மன்றல்

1. வஞ்சனையால் 2. விடநாக்கு

நேருமுன் இங்ஙனம் நெறியிலான் துர்க்குணம்
வெளியாயினதும்? எளிதோ இறைவ!
வேந்தராய்ப் பிறந்தோர்க் குனைப்போற் சாந்தமும்
பிறர்துயர் பேணும் பெருமையும் ஒழியா
அறம்நிறை அகமும் அறிவும் அமைதல்.
பாண்டமேல் மாற்றலாம் கொண்டபின் என்செய.
ஆண்டுகள் பழகியும் அறிகிலம் சிலரை.
ஐயோ இனிநாம் அந்நிய ராயின்
நன்றாய் உசாவியே நடத்துதல் வேண்டும்.
அன்றேற் பெரும்பிழை.

ஜீவ: ஆ! ஆ! சரியே!

குடில: ஆதலின் இறைவ! ஆய்விடத் தெங்கும்
ஏதமே தோன்றிவ தென்னே இந்நிலை?

ஜீவ: அரசல எனின்மக் காம்பிழை என்னை?

குடில: திருவுளப் பிரியம், தீங்கென் அதனில்?
உன்றன் குலத்திற் கூன்றுகோல் போன்று
குடிமன் னவர்மலர் அடிதொழ நினது
தோழமை பூண்டுநல் ஊழியம் இயற்றும்
வீரமும் மேதையும் தீரமும் திறமும்
குலமும் நலமும் குணமும் கொள்கையும்
நிரப்பிய நெஞ்சுடைப் பரம்பரை யாளராய்
நிற்பவர் தமக்குமற் றொப்பெவ் வரசர்?
அற்பமோ ஐய! நின் அடிச்சே வகமே?

ஜீவ: என்னோ மனோன்மணிக் கிச்சை? அறிதிலேன்!

குடில: மன்னா! மற்றது வெளிப்படை அன்றோ?
அன்னவட் கிச்சை உன்னுடன் யாண்டும்
இருப்பதே என்பதற் கென்தடை அதற்கு
விருத்தமாய்[1] நீகொள் கருத்தினைச் சிந்தையிற்

1. வீணாய்.

பேணியே கலுழுநள் போலும்! பிறர்பால்
நாணியிங் கோதாள் வாணியேல் நவில்வள்.

ஜீவ : உத்தமம்! உத்தமம்! மெத்தவும் உத்தமம்!
பலதே வன்தன் நலமவள் கண்டுளாள்!

குடில :
பலகால் கண்டுளான். கண்டுளான் இவனும்.
ஆர்வமோ டஃதோ மார்பிடைப் பட்டபுண்.

'மனோன்மணி மனோன்மணி' எனுமந் திரத்தால்
ஆற்றுவான் போலவே அவ்வறை யிருந்தவன்
சாற்றலும் சற்றுமுன் ஜாடையாய்க் கேட்டேன்.
ஆயினும், அரச! பேயுல கென்குணம்
அறியா ததனால் வறிதே பலவும்

சாற்றும், தன்னயம் கருதல்போற் பிறர்க்குத்
தோற்றும். அதனால் தூற்றுவர் அதுவும்
மாற்றலே மந்திரத் தலைவர்தம் மாட்சி
ஆதலின், இறைவ, அவைக்களத் தநேக...

ஜீவ :
ஓதலை ஓதலை உனதன் றத்தொழில்,
தனையைக் குரியது தந்தையே உணருவன்.
இனையதே என்மகட் கிந்நிலைக் கேற்பதும்
அரசனா யாய்கினும் சரியிம் முடிபு.
மிகைதெரிந் தவற்றுள் மிக்கது கொளலெனும்
தகைமையில் தகுவதும் இதுவே. அதனால்,

குடிலா! மறுக்கலை.

குடில : அடியேன், அடியேன்!

ஜீவ : இந்நிசி இரண்டாஞ் சாமம் அன்றோ
முன்னநாம் வைத்த முகூர்த்தம்?

குடில : ஆம்! ஆம்!

ஜீவ : செவ்விது செவ்விது! தெய்வசம் மதமே!
ஆவா! எவ்வள வாறின தென்னுளம்!

ஓவா என்றுயர்க் குறுமருந் திதுவே!
பிரிந்திடல் ஒன்றே பெருந்துயர்.

**குடில :** பிரிந்துநீர்

இருந்திடல் எல்லாம் ஒருநாள். அதற்குள்
வெல்லுதும் காண்டி! மீட்குதும் உடனே.

**ஜீவ :**

நல்லது! வேறிலை நமக்காம் மார்க்கம்.

ஒருமொழி மனோன்மணி உடன்கேட் டிஃதோ
வருகுதும் அதற்குள் வதுவைக்
கமைக்குதி அவ்வறை அமைச்ச ரேறே! (4)

(ஜீவகன் போக)

**குடில :**

(தனிமொழி)

தப்பினன் நாரணன், சாற்றற் கிடமில்லை.
இப்படி நேருமென் றெண்ணினர் யாவர்?

முனிவரன் வந்ததும் நனிநலம் நமக்கே!
மறுப்பளோ மனோன்மணி? சீசீ மனதுள்
வெறுப்புள ளேனும் விடுத்தவ ளொன்றும்
மொழியாள் சம்மதக் குறியே மௌனம்.
அழுவாள்; அதுவும் பிரிவாற் றாமையே

ஆய்விடும், அரச னாய்விலா உளத்துள்
நடுநிசி வருமுன் கடிமணம் இவண்நாம்
முடிக்கின் முனிவன் தடுப்பதும் எவ்விதம்?
ஏய்த்திட எண்ணினன் என்னையும்! பேய்ப்பயல்
வாய்த்ததிங் கெனக்கே மற்றவன கற்படை

[மௌனம்]

ஊகம் சென்றவா றுரைத்தோம் உறுதி
யாகமற் றதநிலை அறிவதார்? உளதல
துரைப்பரோ முனிவர்? உளதெனின் உரைத்தவா
றிருத்தலே இயல்பாம்? எதற்குமீ துதவும்

[மௌனம்]

சென்றுகண் டிடுவம். திறவுகோல் இரண்டு

செய்த தெற்கெலாம் உய்வகை ஆனதே!
எத்தனை திரவியம் எடுத்துளேம்! கொடுத்துளேம்!
அத்தனை கொடுத்தும் அறிவிலாப படைஞர்,
நன்றியில் நாய்கள் இன்றஃ தொன்றும்
உன்னா தென்னையே ஒட்டிடத் துணிந்தனர்,

என்னோ[1] நாரணன் தனக்குமிங் கிவர்க்கும்?
எளியனென் றெண்ணினேன், வழிபல தடுத்தான்,
கெடுபயல் பாக்கியம், கடிமணம் இங்ஙனம்
நடுவழி வந்ததும்! விடுகிலம்.
கொடியனை[2] இனிமேல் விடுகிலம் வறிதே. (5)

நான்காம் அங்கம் : ஐந்தாம் களம் முற்றிற்று

---

## கலித்துறை

அரிதா நினைத்ததன் அங்கங்கள் யாவும் அழிந்தபின்னும்
புரியே பொருளெனப் போற்றிய ஜீவகன் புத்தியென்னே!
பிரியாத சார்பு பெயர்ந்து விராகம் பிறந்திடினும்
தெரியாது தன்னிலை ஆணவம் செய்யும் திறஞ்சிறிதே!

நான்காம் அங்கம் முற்றிற்று

| | | | |
|---|---|---|---|
| ஆசிரியப்பா | 12-க்கு | அடி | 1297 |
| வஞ்சிப்பா | 1-க்கு | ,, | 14 |
| கலித்தாழிசை | 3-க்கு | ,, | 12 |
| கலித்துறை | 1-க்கு | ,, | 4 |
| ஆக அங்கம் 1க்கு : பா 17க்கு | | ,, | 1327 |

---

1. பலதேவன் 2. நாராயணன்.

# ஐந்தாம் அங்கம்

## முதற் களம்

*இடம் : கோட்டைக்கும் வஞ்சியர் பாசறைக்கும் நடுவிலுள்ள வெளி* — *காலம் : யாமம்*

[குடிலன் தனியே நடக்க]

(நேரிசை ஆசிரியப்பா)

**குடில :**
(தனிமொழி)

திருமணம் கெடினும் தீங்கிலை ஈங்கினி
இருசரம்[1] இன்றி எப்போ ரிடையும்
ஏகார் மதியோர் அதில்வர கேடென்?
ஆகா வழியும் அன்றிது சேரனை
அணைந்தவன் மனக்கோள் உணர்ந்ததன் பின்னர்

சுருங்கையின் தன்மை சொல்லுதும் ஒருங்கே.
இசைவனேற் காட்டுதும் இன்றேல் மீள்குதும்
பகையிலா மனத்தன்! பணிதலே விரும்புவன்!
பாண்டிநா டாளவோ படையெடுத் தானிவன்.
தூண்டிடு சினத்தன்! தொழுதிடில் மீள்வன்.

வேண்டிய நீரும் விழைந்ததோர் தாரும்
பாண்டில்[2] பாண்டிலா யாண்டுகள் தோறும்
அனுப்புதும். குறையென் அதனில்? இதுவே
மனக்குறை நீக்கு மார்க்கம்—வதுவை
போயினென்? ஆயினென்? பேயன் நம்மகன்

எடுத்தெறிந் திடுவனிப் போதே நம்மொழி
அடுத்தநம் படைஞரோ பகைவர்; அவர்நமைக்
கெடுத்தநா ரணற்கே கேளொடு கிளைஞர்.
ஆதலின் இஃதே தீதறு முறுதி......
என்னை நம் ஊகம்! என்னை நம் ஊக்கம்!

முன்னர்யாம் அறியா இன்னநற் சுருங்கையில்

---

1. இருவழி, ஈரம்பு 2. வண்டி.

துன்னிருள் வழிதனி தொடர்ந்திவண் சேர்ந்தோம்.
ஊக்கமே பாக்கியம். உணர்விலார் வேறு
பாக்கியம் ஊழெனப் பகர்வதெல் லாம்பாழ்.
சாக்கியம் வேறென்? சாத்தியா சாத்தியம்
அறிகுறி பலவால் ஆய்ந்தறிந் தாற்றும்
திறமுள ஊகமே யோகம்; அன்றி

(நட்சத்திரங்களை நோக்கி)

வான்கா ட[1] தனில் வறிதே சுழலும்
மீன்காள்! வேறும் உளதோ விளம்பீர்?
மதியிலா மாக்கள் விதியென நும்மேற்
சுமத்தும் சுமையும் தூற்றும் சும்மையும்
உமக்கிடு பெயரும் உருவமும் தொழிலும்
அமைக்கும் குணமும் அதில்வரு வாதமும்
யுக்தியும் ஊகமும் பக்தியும் பகைமையும்
ஒன்றையும் நீவிர் உணரீர்! அஃதென்?
வென்றவர் பாசறை விளங்குவ தஃதோ?
இங்குமற் றுலாவுவன் யாவன்? பொங்குகால்
வருந்தோறும் சிலமொழி வருவ அஃதோ
திரும்பினன்! ஒதுங்குவம். தெரிந்துமேற் செல்குவம்.

[புருடோத்தமன் தனியா யுலவி வர]

(குறள் வெண்செந்துறை)

புரு:
(பாட)

உன்னினைவில் ஒருபோதும் ஒய்வின்றிக்
கலந்திருந்தும் உயிரே என்றன்
கண்ணிணைகள் ஒருபோதும் கண்டிலவே
நின்னுருவம் காட்டாய் காட்டாய்!

அவத்தை பல அடையுமனம் அனவரதம்
புசித்திடினும் அமிர்தே என்றன்
செவித்துளைகள் அறிந்திலவே தித்திக்கும்
நின்னாமம் செப்பாய் செப்பாய்!

---

1. ஆகாயமாகிய காடு 2. நிலை வேறுபாடுகள்

பொறிகளறி யாதுள்ளே புகும்பொருள்கள்
இலையென்பர் பொருளே உன்னை
அறியவவா வியகரணம் அலமாக்க[1]
அகத்திருந்தாய் அச்சோ அச்சோ. (3)

(புருடோத்தமன் சற்றே அகல)

(ஆசிரியப்பாவின் தொடர்ச்சி)

குடிலை:
(தனிமொழி)

மனிதன் அலனிவன்! புனிதகந் தருவன்!
தேவரும் உளரோ? யாதோ? அறியேன்.
இருளெலாம் ஒளிவிட இலங்கிய உருவம்
மருள்தரு மதனன் வடிவே! மதனற்கு
உருவிலை என்பர். ஓசையும் உருவும்!
பாடிய பாட்டின் பயனென்! அஃதோ!
நாடி அறிகுதும், நன்று நன்று.

[புருடோத்தமன் திரும்பி வர]

(குறள் வெண்செந்துறை தொடர்ச்சி)

(பாட.)

புலனாரக் காண்பதுவே பொருளென்னும்
பேதமிலாப் புன்மையோர்க்கிங்
குலவாதென் உளநிறையும் உனதுண்மை
உணர்த்தும் வகை உண்டே உண்டே (4)

பெத்தமனம் கற்பிதமே பிறங்குநினை
வெனப்பிதற்றும் பேதையோர்க்கோர்
யத்தனமற் றிருக்கவென்னுள் எழுமுனது
நிலையுரைப்ப தென்னே யெனனே. (5)

தேர்விடத்தென் உள்ளநிறை தெள்ளமுதே
உன்னிலைமை தேரா திங்ஙன்
ஊர்விடுத்தும் போர்தொடுத்தும் உனையகல
நினைத்ததுமென் ஊழே ஊழே. (6)

---

1. அலைய.

(ஆசிரியப்பாவின் தொடர்ச்சி)

குடில : சேரனே யாமிது செப்பினோன் போரினில்
ஒருபுறம் ஒதுங்கி அரசனை அகற்றி
நின்றதாற் கண்டிலேன். நிறைந்த காமுகன்.
ஒன்றநு கூலம் உரைத்தான். நன்றே

ஊரிவன் விடுத்ததும் போரிவன் தொடுத்ததும்
எண்ணிய கொள்கைக் கிசையும் புகன்றவை.
நண்ணுதும் நெருங்கி! நல்லது திரும்பினன்.

[புருடோத்தமன் திரும்பி வர]

புரு :
(தனிமொழி)

என்றும் கண்டிலம் இன்றுகண் டதுபோல்,
எத்தனை முகத்திடைத் தத்துறு துயரம்!
இவ்வயின் யான்வந் திருத்த[1] நாள்முதலாக்
கௌவை[2]யின் ஆழ்ந்தனை போலும் ஐயோ!

[குடிலன் எதிர்வர]

(குடிலனை நோக்கி)

ஜடிதி! பெயரென்! சாற்றுதி! தக்ஷணம்!

குடில : அடியேன்! அடியேன்! குடிலன்! அடிமை!

புரு :
வந்ததென் இருள்வயின்? வாளிடென் அடியில்

குடில : வெந்திறல் வேந்தநின் வென்றிகொள் பாசறை
சேர்ந்துன் அமையம் தேர்ந்து தொழுதுஓர்
வார்த்தையுன் திருச்செவி சேர்த்திடக் கருதி
வந்தனம் அடியேன்; தந்தது தெய்வம்
உன்றன் திருவடி தரிசனம் உடனே!

சிந்தையெப் படியோ அப்படி என்செயல்.

புரு : செப்புதி விரைவில், செப்புதி வந்தமை!

குடில : ஒப்பிலா வீர! எப்புவ னமுநின்

---

1. தாங்கிய 2. துன்பம்

மெய்ப்புகழ் போர்த்துள ததனால் இப்புவி
நீவரு முனமே நின்வசப் பட்டுத்
தாவரும் இன்பம் கடையறத் துய்ப்பப்
பாக்கியம் பெற்றிலம் பண்டே என்றுனி
ஏக்கமுற் றிருந்தமை யானெடு நாளாய்
அறிந்துளன். இன்றுநீ ஆற்றிய போரிற்
செறிந்திரு படையும் சேர்தரு முனமே
முறிந்தியாம் ஓடிய முறைமையும் சிந்தையிற்
களிப்படை யாமலே கைகலந் தமையும்
வெளிப்படை யன்றோ? வேந்த! இப்புவி யோரீ
வெல்லிட மும்வெலா இடமும் யாவும்
நல்லவா றறிவர். நாயினேன் சொல்வதென்?
வேசையர் தங்கள் ஆசையில் முயக்கம்!
அன்றோ இன்றவர் ஆற்றிய போர்முறை?
என்செய் வாரவர்? என்செய்வார்? ஏழைகள்!
நின்புகழ் மயக்கா மன்பதை உலகம்
யாண்டும் இன்றெனில், அணிதாம் இந்தப்
பாண்டியும் நின்பாற் பகைகொளத் தகுமே!
ஒருவா றறமே யாயினும், மருவாக்
கொற்றவர் பிழைக்காக் குற்றமில் மாக்களை
மற்றவர் மனநிலை முற்ற அறிந்தபின்
கருணையோ காய்தல்? கருமநல் லுருவே!

புரு:
(தனதுள்)
யாதோ சூதொன் றெண்ணினன் அறிகுவம்.
(குடிலனை நோக்கி)
வேண்டிய தென்னை அதனால் விளம்புதி.

குடில: ஆண்டகை யறியா ததுவென்? இன்று
மாண்டவர் போக[1] மீண்டவ ரேனும்
மாளா வழிநீ ஆளாய் என்னக்
கைகுவிப் பதேயலாற் செய்வகை யறியா
அடியேன் என்சொல்! ஆ! ஆ! விடியில்
வாளா மாளும் மனிதர் தொகுதி

---

1. சேர்க்கை

எண்ணி எண்ணி எரிகிற தென்னுளம்.
எண்ணுதி கருணை! இவர்க்குள் தாய்க்கொரு
புதல்வராய் வந்த பொருந[1]ரெத் தனையோ?
வதுவை முற்றுறா வயவ[2]ரெத் தனையோ?
புதுமணம் புரிந்த புருடரெத் தனையோ?
நொந்த சூலினர்[3] நோவுபா ராது
வந்திவண் அடைந்த மள்ளரெத் தனையோ?
செயிருற[4] முழந்தாள் சேர்ந்தழு பாலரைத்
துயிலிடைத் துறந்த சூரரெத் தனையோ?

புரு :
சரி, சரி! இவையுன் அரசர்க் காங்கு
சாற்றா தொழிந்த தென்?

குடில :
சாற்றிலென்?
போற்றான் யார்சொலும் புந்தியும் சற்றும்.
அன்பிலன்; பிறர்படும் துன்பம் சிறிதும்
அறியா வெறியன்; அன்போ டிம்மாலை
குறியா நீவிடு தூதையும் கொண்டிலன்.
அண்டிய சீவ ராசிகள் அனைத்தையும்
மண்டமர்[5] இதில்நின் வைவாள் தனக்கே
இரையிடல் ஒன்றே விரதமாகக் கொண்டனன்.
பித்தன் ஒருவன் தன்னால் இத்தமிழ்
நாடெலாம் வெறுஞ்சுடு காடாய் விடுமே.
ஆவ! இப்பெரும் பாவமும் பழியும்
அஞ்சினேன்; அஞ்சினேன்; எஞ்சலில் கருணை
யுருவே! அடியேற் கொருமொழி தருவையேல்
ஒருவர்க் கேனு முறுதுய ரின்றி
அரசனும் புரிசையும் அரைநொடிப் போதிலுன்
கரதல[6] மாமொரு கௌசலம்,[7]
காட்டுகே னடியேன் கேட்டரு ளரசே! (1)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

புரு : பாதகா! விசுவாச காதகா!
(தனதுள்)
ஆ! ஹா!
[சிரித்து]

---

1. போர் வீரர் 2. வீரர் 3. வருந்திய கருவுடைய மகளிர் 4. துன்பமுற்று 5. நெருங்கியபோர் 6. கையிடம் 7. சாமர்த்தியம்

குடில :

அரசன் கைப்படி வாங்குளார் யாருமென்
உரைதவ றாதுன் குடைக்கீ ழொதுங்குவர்.
மங்கல மதுரையு மிங்கிவர் வழியே
உன்னா ணைக்கீ ழொதுங்குதல் திண்ணம்.
தொல்புவி தோற்றியது தொட்டர சுரிமை
மல்கிய புவியிலித் ததனால் "மன்னவன்"
என்றபே ரொன்றுநீ யீவையே லென்றும்,
நின்னா ணையின்கீழ் நின்றுநீ முன்னர்
வேண்டிய தாரொடு நீருமே யன்றிமற்
றீண்டுள எவையே யாயினும் வேண்டிடில்
சிரமேற் சுமந்துன் முரசா ரணந்தைக்
கோயில் வாயிலிற் கொணர்ந்துன் திருவடி
கண்டுமீன் வதுவே கதியடி யேற்காம்
பண்டிரா கவன்றன் பழம்பகை செற்று
வென்றபோ திலங்கை விபீஷணன் காத்தவா
றின்றுநீ வென்றநா டினிதுகாத் திடுவேன்.

புரு :

சமர்த்தன் மெத்தவும்! அமைத்ததந் திரமென்?

குடில : அரசன தந்தப் புரமது சேர
யாவரு மறியா மேவருஞ் சுருங்கை
ஒன்றுள தவ்வழி சென்றிடி லக்கணங்
கைதவன் கைதியா யெய்துவ னுன்னடி.

புரு :

உண்மை?

(சேவகரை நோக்கி) யாரது?

குடில : உதியன் கண்முன்
மெய்ம்மை யலாதெவர் விளம்புவர்?

[அருள் வரதன் வர]

அருள் : அடியேன்!

புரு : கைத்தளை காற்றளை கொடுவா நொடியில்.

[அருள் வரதன் போக]

(குடிலனை நோக்கி)

எத்திசை யுளதுநீ யியம்பிய சுருங்கை?

குடில :

அணிதே! அஃதோ! சரணம் புகுந்த
எளியேற் கபய மியம்புதி யிறைவ!

புரு :

அவ்வழி யோநீ யணைந்தனை?

குடில : ஆம்! ஆம்!

செவ்விதி னொருமொழி செப்பிடி லுடனே
காட்டுவ னடியேன்.

[அருள் வரதனுஞ் சேவகரும் விலங்கு கொண்டு வர]

புரு : (குடிலனைச் சுட்டி) பூட்டுமின்? நன்றாய்!

குடில :

ஐயோ! ஐயோ! ஓஹோ? செய்ததென்?
மெய்யே முற்றும். பொய்யிலை! பொய்யிலை!

[அருள் வரதன் விலங்கு பூட்ட]

புரு : எத்திசை யுளதச் சுருங்கை? ஏகாய்!
சித்திர வதையே செய்வேன் பிழைப்பில்!

குடில : (அழுது)

தேடியே வந்து செப்பிய வடியேன்
ஓடியோ போவேன்? ஓஹோ! உறுதி
முந்தியே தந்திடில்...

புரு : மூடுநின் பாழ்வாய்.

சேரன் விஜயமுந் திருடான்! அறிகுதி.

[சேவகரை நோக்கி]

சூரர் பதின்மர் சூழுக விருபுறம்!

(குடிலனை நோக்கி)

நடவா யுயிர்நீ நச்சிடில் கெடுவாய்?
எத்திறம் பிழைப்பினுஞ் சித்திர வதையே!

[யாவரும் சுருங்கை நோக்கிப் போக]

ஐந்தாம் அங்கம் : முதற் களம் முற்றிற்று

# ஐந்தாம் அங்கம்

## இரண்டாம் களம்

**இடம் :** கன்னிமாடத் தொருசார் காலம் : யாமம்

[சில தோழிப் பெண்களும் ஒரு கிழவியும் அளவளாவி இருக்க]

(நிலைமண்டில ஆசிரியப்பா)

**கிழவி :**

ஏதுக்குமிவ் விளக்கும் இச்சிறு செம்பும்
ஒதுக்கிவை அம்மா! உதவும் வழியில்

**முதல் தோழி :**

என்னடி கிழவி! சொன்னால் அறிகிலை.
போம்வழி அறியோம்! போமிடம் அறியோம்!
மந்திரக் குளிகையோ! அந்தர மார்க்கமோ!

மூட்டையேன்? முடிச்சேன்? கேட்டியோ தோழி?
காது மில்லை! கண்ணு மில்லை!
ஏது மில்லை! ஏனுயிர் இருப்பதோ!

**கிழவி :**

கிழவிபேச் சேற்குமோ கின்னரக் காரிக்கு![1]
படும்போ தறிவை! இப் படியே பண்டு
முன்னொரு சண்டையில் உன்னைப் பெறுமுன்
ஓடினோம்...

**முதல் தோழி :**

போடீ! உன்கதை அறிவோம்.

[கிழவி போக]

சிரிக்கவா? என்செய! சிவனே! சிவனே!

[நகைக்க

**2-ம் தோழி :**

அம்மணி என்செய்தாள்? அக்காள்! அதன்பின்,
எப்படி அரசன் மீண்டான். செப்பாய்!

---

1. இளவயதுடையவள்.

**முதல் தோழி :**

எப்படிச் செப்பயான்? ஏந்திழை பட்டபா
டய்யோ! அத்துயர் தெய்வமே அறியும்!
மன்னவன் வாசல் கடந்தான் எனுமுனம்
தன்னிலை தளர்ந்தாள், சாய்ந்தாள். வாணியும்
அருகுள செவிலியும் யானுமாய் விரைவில்
தாங்கினோம். பாங்குள அமளியிற் சேர்த்தோம்.
மூச்சிலை; பேச்சிலை முகமெலாம் வெயர்வை
இட்டகை இட்டகால் இட்டவப் படியே.
இப்படி முடிந்ததே! இனியென் செய்வோம்!
தப்புமோ இவ்வொரு தத்துமென் றெண்ணி
ஏங்கினோம்,தியங்கினோம்; பாங்கி[2]ருந் தழுதோம்.

**2-ஆம் தோழி :**

ஐயோ தெய்வமே! அப்போ தவளுயிர்
பட்டபா டெதுவோ! கட்டம்! கட்டம்!

**முதல் தோழி :**

விதியிது! அலதிது கதையிலும் உளதோ?
நொந்தபுண் அதனிலே வந்திடும் நூறிடி,
தந்தை தேறிடத் தன்துயர் மறைதது
மகிழ்ச்சி காட்டினாள், வந்ததித் தளர்ச்சி.
மூடிடில் தீயும் மூளுமும் மடங்காய்:

**2-ஆம் தோழி :**

எத்தனை வேதனை! எத்தனை சோதனை!
யாது மறியாட் கேதித் துணிபு?
ஓதிய கட்டுரை ஒருமுறை இனியும்
நவிலுதி அக்காள்?

**முதல் தோழி :** நங்கைநன் மொழியென்

செவியிடை இனியும் மணிபோல் திகழும்!
அரசனை அடிபணிந் தொருசார் ஒதுங்கி
நீக்கமில் அன்பும் ஊக்கமும் களிப்பும்
காட்டிய மதிமுகம் கோட்டியே நின்ற
தோற்றமென் கண்ணின் மாற்றுதல் அரிதே!
''என்னோ இதற்கும் யோசனை எந்தாய்!

---

1. பக்கம் 2. துணிச்சல்

கொன்னே! வருந்தலை! கொள்கையிற் பிறழா
நீதிநம் பாலெனில் நேர்வது ஐயமே.

ஏததற் கையம்? இதுவிட் டடிமை
பெயர்வது பெரிதல பேருல கதற்குத்
துயர்வரும் எல்லை, நம் துயர்நோக் குதலோ
பெருமை! அண்ணிதே முனியிடம்; கருதிய
பிரிவோ ஒருதினம்! குருவும் தந்தையும்

சமமெனிற் சுந்தர விமலன் தன்திருப்
பாதா தரவே போதா தோதுணை?
ஆயினும் அத்தனை அவசரம்[2] ஆயின்,
ஆகுக ஆஞ்ஞைப் படியே! தடையில்லை.
அன்னையும் நின்னை அன்றிவே றறியேன்.

உன்னதே இவ்வுடல். உன்திரு உள்ளம்
உன்னிய படியெலாம் உவப்பச் செய்குவன்.
அடிமையின் கவலையால் அரசர்க் கியல்பாம்
கடமையிற் பிறழும் கலக்கம் விலக்குவை!
அன்பாம் உன்பால் ஐய! உன்மகள்
வேண்டும் வரமெலாம் யாண்டுமிவ் வொன்றே"

**2-ஆம் தோழி :**

மொழியோ இதுவும்? ஆஆ! ஆஆ!
இதுவெலாம் காணவோ எழுதினன் பிரமன்?

**முதல் தோழி :**

எதுவெலாம் காணவோ இருப்ப திக்கண்?

**2-ஆம் தோழி :**

என்செய் கின்றனள் இப்போ தேழை?

**முதல் தோழி :**

வஞ்சியிவ் அறையே வருவள் எல்லை!
ஏதோ எழுது கின்றனள் வாணி
கோதிநின் றாற்று கின்றனள் கூந்தல்

**2-ஆம் தோழி :**

நீரா டினளோ இந்நிசி?

**முதல் தோழி :**

எழுந்து வாசநீ ராடி முன்சுரத்

---

1. வீணே 2. அவசியம்.

தழுந்திய அன்றுதான் அணிந்தவெண் பட்டினைக்
கொடுவரப் பணித்தங் கதுவே தரித்து
நெடுநுதல் திலகமும் நேர்படத் தீட்டி,
அன்றிரா அணிந்தமுத் தாரமும் அணிந்து,
நின்றுதன் நிலையெலாம் ஆடியில் நோக்கி,

'நன்றோ நங்காய்! வாணி நவிலுதி!
அன்றுபோல் அன்றோ இன்றென் நிலைமை?"
என்று சிறுமுறு வலித்தனள். என் சொல!
உருவமும் உடையும் உரையும் நடையும்
சருவமும் பாவனை பண்ணியும்...

[முதற்றோழி அழ, மனோன்மணியும் வாணியும் வர]

**2-ஆம் தோழி:** அஃதோ

வந்தனள் காணுதி வாணியும் பின்னுளள்.
மறைகுவம் அவ்வறை வருக இவ்வழியே!

[தோழிமார் போக]

**மனோன்:** ஏந்தைபோல் தயாநிதி எங்கணும் இல்லை.
வந்தனம் வழங்கவும் வாய்கூ சுவதே!
ஏதோ ஒருவிதம் எழுதினேன் என்க!
வாணி! உன் மனத்திற் கிசைந்தான் மன்னன்.
காணா யீதோ அதற்குள கட்டளை.

[திருமுகங் காட்ட; வாணி வாசிக்க]

சொன்னேன் அன்றே வாணீ! முன்னமே
அன்னை தந்தையர் அன்பறி யார்கிறார்.

**வாணி :**

இத்தரு ணத்தில் இதுவென் அம்மணீ!
சத்தியம் எனக்கிது சம்மதம் அன்று.
நினைப்பரும் துயரில் நீயிவண் வருந்த
எனக்கிது தகுந்தகும்! ஏதிது தாயே?
உன்மனப் படியெலாம் உறுங்காற் காண்குவம்.

**மனோன் :**

என்மனப் படியெது? எனக்கொரு மனதோ?
எந்தையின் மனப்படி என்மனப் படியே.
வந்தஇச் சுரத்திடை மாண்டதென் சித்தம்.

வாணி : ஆயினும் அம்மா! யாரிஃத றியார்?
பாயிருள் தொகுதியிப் பரிதியும் கொடிய
வெஞ்சினக் கழுகும் அஞ்சிறைக் கிளியும்
பொருந்தினும் பொருந்தீர் ஐயோ! இத்தகைப்
பெருந்துயர்க் கெங்ஙனம் இசைந்தனை என்க.
என்னையுன் நினைவோ! என்னையுன் துணிபோ!
இன்னன் மகிழ்ச்சியில் என்மண மேகுறை!

மனோன் : [அழ]
வருந்தலை வாணி! வா வா இன்னும்
தெரிந்திலை. ஐயோ! சிறுமியோ நீயும்?
உண்மையான் உரைத்தேன். உணருதி உறுதி.
என்மனம் ஆரவே இசைந்தேன். மெய்ம்மை.
ஏதென எண்ணினை இவ்வுயிர் வாழ்க்கை?
தீதற இன்பம் துய்ப்பநீ எண்ணில்
ஈதல அதற்காம் உலகம். இமையவர்
வாழ்க்கையி லுந்துயர் வந்துறும் எனிலிவ்
யாக்கையில் அமையுமோ நீக்கமில் இன்பம்?
எனக்கெனக் கென்றெழும் இச்சையா திகளெனும்
மனக்களங் கங்களாம் மாசுக்கள் அனைத்தும்
தேய்த்தவை மாற்றித் திகழொளி யேற்றி
மண்ணிய மணியாப் பண்ணிட என்றே
வைத்தஇக் கடிய வாழ்க்கையாம் சாணையை
பைத்தபூஞ் சேக்கையாப் பாவித் துறங்க
யத்தனஞ் செய்திடும் ஏழையர் போல
என்னைநீ எண்ணினை! வாணி! இந்தச்
சுகவிருப் பேநமைத் தொழும்புசெய் பந்தம்.
தவமே சுபகரம் தவமென உணருவை?
உடுப்பவை உண்பவை விடுத்தரண் அடைந்து
செந்தி ஐந்திடைச் செறிந்தமைந் துறைதல்
ஆதிய ஓதுப அல்ல. அவற்றைத்
தீதறு தவமெனச் செப்பிடார் மேலோர்.
இவ்வுயிர் வாழ்க்கையில் இயைந்திடும் துயரம்

1. வடிவம்.

ஐயோ! போதா தென்றோ அன்னோர்
போனகம்[1] துறந்து கானகம் புகுந்து
தீயிடை நின்று சாவடை கின்றார்?
தந்தைதா யாதியா வந்ததன் குடும்ப
பந்தபா ரத்தினைப் பேணித் தனது
சொந்தமாம் இச்சைகள் துறந்து மற்றவர்க்
கெந்தநா ளுஞ்சுகம் இயைந்திடக் கடமையின்
முந்துகின் றவரே முதற்றவ முனிவர்.

வாணி :
அத்தகைத் தவமிங் கடியேன் தனக்கும்
ஒத்ததே அன்றோ?

மனோன் : ஒத்ததே யார்க்கும்
மேம்படக் கருதிடில் ஓம்புதி நீயும்.
அடுத்தவர் துயர்கெடுத் தளித்தலே யானிங்கு
எடுத்த நற்றவத்தின் இலக்கணம் ஆதலின்,
நடேசனை நச்சிநின் நன்மணம் அதுவும்
விடாதெனை அடுத்த வீரநா ரணன்றன்
கடுஞ்சிறை தவிர்த்தலும் கடனெனக் கருதி
எழுதினேன். இஃதோ! வழுதியும் இசைந்தான்.
என்கடன் இதுவரை; இனியுன் இச்சை.

வாணி : ஆயிடிற் கேட்குதி அம்மணீ! என்சூள்!
கண்டவர்க் கெல்லாம் பண்டைய வடிவாய்
நீயிவண் இருக்க நின்னுளம் வாரி
வெள்ளிலா[2] மெள்ள விழுங்கி இங்ஙனம்
வேதகம்[3] செய்த போதக யூதபம்[4]
பேரிலா ஊரிலாப் பெரியோன் அவன்றான்
யாரே ஆயினும் ஆகுக, அவனைநீ
அணையுநாள் அடியேன் மணநாள், அன்றேல்
இணையிலா உன்னடிக் கின்றுபோல் என்றும்
பணிசெயப் பெறுவதே பாக்கியம் எனக்குக்
கடமையே பிறவும் கற்றறி யேன்விடை
மடமையே ஆயினும் மறுக்கலை மணியே!

1. உணவு 2. விளாங்கனி 3. வேறுபடுத்தி 4. அரசயானை

மனோன் :

பேதமை அன்றோ ஓதிய சபதம்?
ஏதிது வாணி! என்மணம் தனக்கோ
இனியரை நாழிகை இதற்குள் ஆவதென்?
அன்பின் பெருக்கால் அறைந்தனை போலும்.
மன்பதை உலகம் வாஞ்சா வசமே!

வாணி :

உடலால் உயிரும் விழியலால் உணர்வும்[2]
கடபட சடமலாற் கடவுளும் இலையேல்
வேண்டிய விளைக! விசனமென்? அன்றேற்
காண்டியவ் வேளை கருணையின் இயல்பே! (1)

[இருவரும் போக]

ஐந்தாம் அங்கம் : இரண்டாம் களம் முற்றிற்று

1. அன்பின் வயம் 2. அறிவு.

# ஐந்தாம் அங்கம்

## மூன்றாம் களம்

இடம் : அரண்மனையில் மணமண்டபம் காலம் : நடுநிசி

[அமைச்சர் படைவீரர் முதலியோர் அரசனை எதிர்பார்த்து நிற்க]

(நிலைமண்டில ஆசிரியப்பா)

**முதற்படைத் தலைவன் :**
அடிகள் பின் போயினர் யாவர்? அறிவீர்?

**2-ஆம் படை :**
நடரா சனைநீர் அறியீர் போலும்?

**முதற் படை :**
அறிவேன். ஆ! ஆ! அரிவையர் யாரே
வெற்றிகொள்ளார் காணில்! வீணில் வாணியைக்
கெடுத்தான் கிழவன்.

**3-ஆம் படை :** அடுத்ததம் மணமும்!
தெரியீர் போலும்!

**முதற் படை :** தெரியேன், செய்தியென்?

**3-ஆம் படை :**
கோணிலா நாரணன் கொடுஞ்சிறை தவிர்த்தலும்
வாணியின் மனப்படி மன்றல் நடத்தலும்
இவ்வரம் இரண்டும் அம்மணி வேண்ட
அளித்தனன் அனுமதி களிப்புடன் அரசன்.

**முதற்படை :**
இருதிரை இட்டவா றிப்போ தறிந்தேன்.
ஒருதிரை வாணிக் கொருதிரை மணிக்கே.

**3-ஆம் படை :**
எத்திரை தாய்க்கென் றியம்புதி கேட்போம்

முதற் படை :

இத்திரை தாய்க்காம்

3-ஆம் படை சீ! சீ! அத்திரை.

2-ஆம் படை-

எத்திரை ஆயினென்? ஏனிரை கின்றீர்?

முதற் படை :

இருதிரை வந்தவா றிதுவே ஆயினும்
ஒரு திரைக் கொருதிரை எத்தனை தூரம்?

3-ஆம் படை

அதோ அவன் அறிகுவன் அறிந்திதோ வருவேன்.

[3-ம் படைஞன் மற்றோரிடம் போக]

முதற் படை:

ஐயோ! பொய்யறும் அன்னையம் மணிக்கும்
பொய்யன் பலதே வனுக்குமோ பொருத்தம்?

2-ஆம் படை :

வருத்தமேன் உனக்கு! மன்னன் திருவுளக்
கருத்தனு சரித்துநாம் காட்டலே[1] கடமை

[3-ம் படைஞன் மீண்டும் வர]

3-ஆம் படை

(முதற்படைஞனை நோக்கி)

இப்புறம் வருதி. செப்புவன் ரகசியம்.
சத்தியம் செய்தபின் சாற்றினன். நீயும்
எத்திறத் தோர்க்கும் இயம்பலை பத்திரம்!

அத்திரை மணத்திற் கன்றும்மற் றப்புறம்
நெருங்கிய சுருங்கையொன் றுளதாம். அவ்வழி
செல்லில் வெகுதொலை செலுமாம் இப்போர்
வெல்லும் வரையும் அவ்வழி மணந்தோர்
இருவரும் எய்திவாழ்ந் திருப்பராம்.

முதற் படை : சரி! சரி!

பொருவரும் புத்திமான் குடிலன்.
விரைவினிற் சமைத்தான்! வெகுதிறம் உடையான்.

---

1. பாவனை செய்தல்

3-ஆம் படை :

இப்போ தன்றது; நகரா ரம்பம்
எப்போ தப்போ தேவரும் துயரம்
கருதிமுன் செய்தனன்.

முதற் படை: ஒருவரும் அறிந்திலம்.

[முருகன் வர]

3-ஆம் படை :

யாரது? முருகனோ? நாரணன் எங்கே?

முருகன்:

நாரணன் அப்புறம் போயினன்; வருவன்.

3 ஆம் படை :

பிழைத்தீர் இம்முறை.

முருகன் : பிழைத்திலம் என்றும்!

3 ஆம்படை :

அத்திரைச் செய்தி அறிவாய் வைத்ததார்?

முருகன் :

வைத்ததா ராயினென்? வெந்தது வீடு.

[இருவரும் நகைக்க]

3 ஆம்படை :

வாயினை மூடுமின் வந்தனன் மணமகன்.

முருகன் :

ஈயோ வாயில் ஏறிட, நாயே!

முதற்படை :

அரசனும் முனிவரும் அதோவரு கின்றார்!

[ஜீவகன், சுந்தரமுனிவர், கருணாகரர் நிஷ்டாபரர், பலதேவன், நடராசன், நாராயணன் முதலியோர் வர]

ஜீவகன் :

இருமின் இருமின்! நமர்காள்[1] யாரும்!

[ஜீவகன், முனிவர் முதலியோர் தத்தம் இடத்திருக்க]

கொலு[2]வோ கொல்லிது! மணவறை! இருமின்.

---

1. நம்மவர்களே! 2. அரசன் வீற்றிருக்கும் இடம்.

பலதேவ ரேனும் பிதாவிது காறும்
வந்திலர் என்னை?

**பலதேவன் :** மன்னவர் மன்ன!
அந்தியிற் கண்டேன் அடியேன். அதன்பின்
ஒருவரும் கண்டிலர். தனிபோ யினராம்.

**ஜீவ :**
இருமிரும் நீரும், எங்கே கினும்நம்
காரிய மேயவர் கருத்தெப் பொழுதும்.

(நாராயணனை நோக்கி)
பாரீர் அவர்படும் பாடு.

**நாராயணன் :** பார்ப்பேன்!
சத்தியம் சயிக்குமேற் சாற்றிய படியே!

**ஜீவ :** இத்தகை உழைப்போர் எப்புவ னமுமிலை
எண்ணிநிச் சயித்த இத்தொழில் இனியாம்
பண்ணற் கென்தடை? சுவாமி! அடிகள்
தந்தநன் முகூர்த்தம் வந்ததோ?

**சுந்தர :** வந்தது:
[புருடோத்தமனும், குடிலனும் அருள்வரதன் முதலிய மெய்க்காப்பாளருடன் கற்படை வழி வர]

**புருடோத்தமன் :**
நின்மின்! நின்மின்! பாதகன் பத்திரம்!
[கற்படையில் அருள்வரதனை நோக்கி]
என்பின் இருவர் வருக.

(தனதுள்) இதுவென்?
இந்நிசி எத்தனை விளக்கு! ஏதோ
மன்னவை போலும்! மந்திரா லோசனை
இவர்சுந் தரரே! அவர் நடராஜர்!
இவர்களிங் குளரே! எய்திய தெவ்வழி?
இத்திரை எதற்கோ? அத்திரை எதற்கோ?
இத்தனை கோலா கலமென் சபைக்கு?
மாலையும் கோலமும் காணின் மணவறை
போலாம். அறிந்தினிப் போவதே நன்மை.

மந்திரம் ஆயின் மற்றதும் அறிவோம்.
இந்தநல் திரைநமக் கெத்தனை உதவி

ஜீவ : [திரைக்குப் பின் மறைந்து நிற்க

என்குலம் காக்க எனவருள் பழுத்துக்
கங்கணம் கட்டிய கருணா நிதிகாள்!
மனத்திறத் தாழ்ந்த மதிமந் திரிகாள்!
எனக்கென உயிர்வாழ் என்படை வீரர்காள்!
ஒருமொழி கூறிட அனுமதி தருமின்.
ஆடையின் சிறப்பெலாம் அணிவோர் சிறப்பே;
பாடையின் சிறப்பெலாம் பயில்வோர் சிறப்பே.
எள்ளரும்[1] மதிகுலச் சிறப்பெலாம் எமர்காள்
கள்ளமில் நும்மனோர் காப்பின் சிறப்பே.
ஆதலில் உமக்குப சாரம்யான் ஓதுதல்,
மெய்க்குயிர் கைக்குநா விளம்புதல் மானும்.[2]
ஈண்டுகாத் திடுவல்யாம் எனக்கடன் பூண்டநும்
மதிகுல மருந்தாய் வாய்த்தஎன் சிறுமி
விதைபடும்[3] ஆலென விளங்கினள் அவளைக்
காத்திடும் உபாயம் கண்டிட இச்சபை
சேர்த்தனன் என்பது தெரிவீர் நீவிர்.
இன்றுநாம் பட்டதோர் இழுக்கிவ் வைகறை
பொன்றியோ வென்றோ போக்குவம் திண்ணம்.
ஒருகுலத் தொருவன் ஒருமரத் தோரிலை
அப்படி அன்றுநம் கற்பகச் சிறுகனி!
தப்பிடின் மதிகுலப் பெயரே தவறும்.
அரியவிச் சந்தியைப் பெரிதும் கருதுமின்.
இருந்திடச் சிறியள்; அபாயம்! தனியே
பிரிந்திடப் பெரியள்; பிழை! அஃதன்றியும்
குலமுடி வெண்ணிக் குலையுநம்[4] உளத்திற்
கிலையத னாலோர் இயல்சமா தானம்.
ஆதலில் அரியதற் காலத் தியல்பை
யாதென நீவிர் ஆய்ந்தியான் இப்போ
தோதிடும் உபாயத் தாலுறு நன்மையும்
தீமையும் நன்றாய்த் தெரிந்து செப்புமின்!
குடிலனை அறியார் யாரிக் கொற்றவை?

---

1. இகழ்தலில்லாத 2. போலும் (உவம உருபு) 3. பொருந்தும்
4. நடுங்கும்

2-ஆம் படை :
குடிலனை அறியுமே குவலயம் அனைத்தும்.

ஜீவ :
அறிந்திடில் இறும்பூ தனையார் யாவர்?
மதியுளார் யாரவன் மதியதி சயித்திடார்?
நெஞ்சுளார் யாரவன் வன்திறற் கஞ்சார்?
யார்வையார் அவனிடத் தாரா[1] ஆர்வம்?
உண்மைக் குறைவிடம்; திண்மைக் கணிகலம்;
சத்திய வித்து; பத்தியுன் மத்தன்;
ஆள்வினை தனக்காள்; கேள்வி தன் கேள்வன்.
ஏன்மிக? நமர்காள்! இந்நடு நிசியிலும்
யானறி யாதுழைக் கின்றனன் எனக்கா.
நன்றே இங்கவன் இலாமையும், அன்றேல்
தன்புகழ் கேட்க அற்பமும் இசையான்.

புரு :
(தனதுள்)
எத்தனை களங்கமில் சுத்தன்! கட்டம்!

ஜீவ :
பற்பல பாக்கியம் படைத்துளர் பண்டுளோர்.
ஒப்பறும் அமைச்சனை இப்படி ஒருவரும்
முன்னுளோர் பெற்றிலர்; பின்னுளோர் பெறுவதும்
ஐயமென் றுரைப்பேன்; அன்னவன் புதல்வன்
மெய்ம்மையும் வாரமும் வீரவா சாரமும்
பத்திசேர் புத்தியும் யுத்திசேர் ஊக்கமும்
உடையனாய் அடையவும் தற்பிர திமைபோல்,
இனியொரு தலைமுறை நனிசே வகஞ்செய
இங்குளீற் றிருந்திலன் ஆயின், எமர்காள்!
எங்குநீர் கண்டுளீர் இச்சிறு வயதிற்
பலதே வனைப்போற் பலிதமாம்[2] சிறுதரு?

2-ஆம் படை :
இலையிலை எங்கும் இவர்போல் யாவர்?

ஜீவ :
எனதர சுரிமையும் எனதர சியல்பும்
தமதார் உயிர்போல் தாம்நினைந் திதுவரை
எவ்வள வுழைத்துளார் இவ்விரு வருமெனச்
செவ்விதின் எனைவிட நீவிரே தெரிவீர்.
இக்குலம் அவர்க்கு மிக்கதோர் கடன்பா

1. நீங்காத 2. பயன் தருவது.

டுடையதென் றொருவரும் அயிர்ப்புறார்[1]
அதனால்
தடையற அக்கடன் தவிர்க்கவும் நம்முளம்
கலக்கிடும் அபாயம் விலக்கவும் ஒருமணம்
எண்ணினேன். பண்ணுவேன் இசைவேல் நுமக்கும்
மணவினை முடிந்த மறுகணம் மணந்தோர்
இருவரும் இவ்விடம் விடுத்துநம் முனிவரர்
தாபதம்[2] சென்று தங்குவர் இத்தகை
ஆபதம் கருதியே அருட்கடல் அடிகள்
தாமே வருந்திச் சமைத்துளார் அவ்விடம்
போமா றொருசிறு புரையறு சுருங்கை.
அவ்வழி இருவரும் அடைந்தபின், நம்மைக்
கவ்விய[3] கௌவையும் கவலையும் விடுதலால்,
வஞ்சியன் ஒருவனோ, எஞ்சலில் உலகெலாம்
சேரினும் நம்முன் தீச்செறி[4] பஞ்சே.
இதுவே என்னுளம் இதுவே நமது
மதிகுலம் பிழைக்கும் மார்க்கமென் றடிகளும்
அருளினர் ஆஞ்ஞை. ஆயினும் நுமது
தெருளுறு சூழ்ச்சியும்[5] தெரிந்திட விருப்பே.

(நேரிசை ஆசிரியப்பா)

உரையீர் சகடரே உமதபிப் பிராயம்.

**சகடன் :**

அரசர் குலமன்று, ஆயினென்? சரி சரி!

**நாராயணன் :**

**(தனதுள்)**

மருகன் தப்பிய வருத்தம் போலும்.

**ஜீவ :**

குலந்தேர் வதுநற் குணந்தேர் வதுவே
பெயரால் என்னை? பேயனிவ் வஞ்சியான்
பெயரால் அரசன்! செயலாற் புலையன்![6]

**2-ஆம் படை :**

செய! செய! சரி சரி! தெளிந்தோம்! தெளிந்தோம்!

1. ஐயமுறார் 2. தவப்பள்ளி 3. பற்றிய 4. நெருப்பிற் பொருந்தும் 5. தெளிவு பிறக்கும் ஆலோசனை 6. நீசன் கீழானவன்.

நாரா: மனிதரால் ஆவதொன் றில்லை, மன்னவா!
இனியெலாம் ஈசனி திச்சை.

சகடன்: சரி! சரி!

யாவரும்:
சம்மதம்! சம்மதம்! சர்வசம் மதமே!

ஜீவ:
வாராய்! நாரணா! ஆனால் அப்புறம்
சென்றுநம் மனோன்மணிச் செல்வியை யழைத்து
மன்றல் திரைப்பின் வரச்செய்

[நாராயணன் போக]

யார்க்கும்
சம்மதம் எனிலிச் சடங்கினை முடிப்போம்.
வம்மின்! இனியிது மங்கல மணவறை
கவலை அகற்றுமின் கட்டுடன்! பனிநீர்த்
திவலை சிதறுமின்! சிரிமின்! களிமின்!
இன்று நாம் வென்றோம் என்றே எண்ணுமின்!
இனிநாம் வெல்லற் கென்தடை? தினமணி[1]
வருமுன் ஏகுவம் அரைநா ழிகைத்தொழில்!
ஆற்றுவம் அரும்போர் கூற்றுமே அஞ்ச.
நாளைநல் வேளை; நம்மணி பிறந்தநாள்
பாரீர்! பதினா றாண்டுமிந் நாளில்
ஓரோர் மங்கல விசேடம்!

சகடன்: ஓ! ஓ!
சரி! சரி! ஒவ்வொரு வருடமும் அதிசயம்!

[நாராயணன் திரும்பிவர—மனோன்மணி வாணி முதலிய தோழியருடன் திரைப் பின்வந்து நிற்க]

நாரா: இட்ட நின்கட்டளைப் படியே எய்தினர்.

ஜீவ:
(நாராயணனை நோக்கி)
மற்றிவர் கவலை மாற்றிட ஒருபா
சற்றிசைத் திடுவாளோ வாணி? சாற்றுதி!

---

1. சூரியன்.

(கொச்சகக் கலிப்பா)

வாணி :

(பாட)

நீர்நிலையின் முதலையின்வாய் நிலைகுலைந்த ஒரு கரிமுன்
ஓர்முறையுன் பெயர்விளிக்க உதவினைவந் தெனவுரைப்பர்;
ஆர்துயர் அளக்கர்[1] விழும் அறிவிலியான் அழைப்பதற்குன்
பேர்தெரியேன் ஆயிடினும் பிறகிடல்நின் பெருந்தகையோ! (1)

பாரரசர் துகிலுரியப் பரிதவிக்கும் ஒருதெரிவை[2]
சீர்துவரை நகர்கருதிச் சிதைவொழிந்தாள் எனஉரைப்பர்;
ஆர்துணையும் அறவிருக்கும் அறிவிலியான் அழைப்பதற்குன்
ஊர்தெரியேன் ஆயிடினும் உறுதிதரல் உனக்குரித்தே. (2)

மறலிவர மனம்பதறும் மார்க்கண்டன் உனதிலிங்கக்
குறிதழுவி அழிவில்வரம் கொண்டான்முன் எனஉரைப்பர்;
வெறிகழுமிப்[3] பொறியழியும் வெம்பாவி விரவுதற்குன்
நெறியறியேன் ஆயிடினும் நேர்நிற்றல் நினதருளே. (3)

(ஆசிரியப்பாவின் தொடர்ச்சி)

சுந்தர : எதுவோ இதனினும் ஏற்புடைப் பிரார்த்தனை?
மந்திரம் தந்திரம் வழங்கும் நற்செபம்
யாவையும் இதுவே பாவாய்! மனோன்மணீ!
வருதி இப்புறம், வாங்குதி மாலை.

[மனோன்மணி மணமாலை கொண்டு பலதேவனெதிர் வர]

ஒருதனி முதல்வன் உணர்வன் உன்னுளம்.
உன்னன் புண்மையேல் இன்னமும் காப்பன்.

[புருடோத்தமன் திரைவிட்டு வெளி வந்து நிற்க]

முதற் படை :

ஆற்றேன்! ஆற்றேன்; ஐய! இத் தோற்றம்.

3-ஆம் படை :

ஊற்றிருந் தொழுகி உள்வறந் ததுகண்.

4-ஆம் படை :

அமையா நோக்கமும் இமையா நாட்டமும்[4]

---

1. துன்பக் கடல் 2. திரௌபதி 3. கலக்கமிக்கு 4. பார்வை

ஏங்கிய முகமும் நீங்கிய இதழும்,
உயிரிலா நிலையும் உணர்விலா நடையும்
பார்த்திடிற் சூத்திரப் பாவையே. பாவம்!

[மனோன்மணி புருடோத்தமனைக் காண; உடன்
அவன் நிற்குமிடமே விரைவில் நடக்க]

யாவரும் :
எங்கே போகிறாள்? இது யார்? இது யார்?

புரு :
இங்கோ நீயுளை! என்னுயிர் அமிர்தே!
[புருடோத்தமன் தலை தாழ்க்க; மனோன்மணி
மாலை சூட்டி அவன்றோளோடு தளர்ந்து
மூர்ச்சிக்க.]

சுந்தர : மங்கலம்! மங்கலம்! மங்கலம்! உமக்கே!

யாவரும் :
சோரன்! சோரன்! சேரன்! சோரன்!

நிஷ்டாபரர் :
கண்டேன்! கண்டேன்! கருணாகரரே!
[கருணாகரரைத் தழுவி]

யாவரும் :
பற்றுமின்! பற்றுமின்! சுற்றுமின்! எற்றுமின்!

பலதே :
கொன்மின்! கொன்மின்!
[யாவரும் புருடோத்தமனைச் சூழ; சுந்தரர்
கூட்டம் விலக்க]

சுந்தர : நின்மின்! நின்மின்!
[அருள்வரதனும் மெய்க்காப்பாளரும் வர]

அருள்வரதன் :
அடையின் அடைவீர் யமபுரம். அகன்மின்!
[புருடோத்தமனையும் மனோன்மணியையுஞ்
சூழ்ந்து காக்க]

யாவரும் :
படையுடன் பாதகன்!
[யாவரும் பின்னிட விலங்குடன் குடிலனைக்
காட்டி]

அருள் : பாதகன் ஈங்குளான்,

ஜீவ : குடிலா உனக்குமிக் கெடுதியேன்? ஐயோ!
அடிகாள்! இதுவென்! இதுவென் அநீதி!
அறியேன் இச்சூ தறியேன்! அறியேன்!

சுந்தர : பொறு! பொறு! ஜீவக! அறிகுதும் விரைவில்.

புரு : வஞ்சியான் வஞ்சியான்! மன்னவ! உன்சொல்
அஞ்சினேன். சூதுன் அமைச்சன் செய்கை.
சுருங்கையின் தன்மை சொல்லியென் னையிங்
கொருங்கே அழைத்தான் உன்னகர் கவர.
உன்னர சுரிமையும் உன்னகர் நாடும்
என்னிடம் இரந்தான் இச்சூ திதற்கா!
ஓதிய சுருங்கையின் உண்மைகண் டிவன்தன்
சூதும் துரோகமும் சொலியுனைத் தெருட்ட
எண்ணியான் வந்துழி, இவ்வொளி விளக்கும்
பண்ணியல்[1] காட்டும் பழையபுண் ணியமும்
தூண்டிட ஈண்டுமற் றடையவும் யாண்டும்
எனதுயிர் அவாவிய இவ்வரு மருந்தை
நனவினிற் காணவும் நண்ணவும் பெற்றேன்.
பிரிகிலம் இனிமேல். உரியநின் உரிமை
யாதே ஆயினும் ஆகுக. ஈதோ!
மீள்குவன், விடைகொடு. நாளையும்
வேட்பையேற் காண்போம் ஞாட்பிடை[2] நாட்பே.

ஜீவ : உண்மையோ! குடிலா! உரையாய்!...

[குடிலன் முகங் கவிழ்த்து நிற்க]

நாரா : இதுவுநின்
உண்மையோ? மௌனமேன்?

யாவரும் : ஓகோ! பாவி!

நாரா : படபடத் திடுநின் பாழ்வாய் திறவாய்!

சுந்தர :
விடு விடு! விசாரணைக் கிதுவன் றமையம்!
நன்மையே யாவும் நன்மையாய் முடியின்.
வாராய் ஜீவக! பாராய் உன்மகள்

---

1. பண் பொருந்திய 2. போர்க்களம்.

தாராத் தன்னிரு கைதோட் சூட்டி
எண்படு மார்பிடைக் கண்படு நிலைமை!
இருமனம் ஏனினி? என்றுமிப் படியே
மருகனு மகளும் வாழ்க வாழ்த் துதியே,

ஜீவ : கண்மணீ! அதற்குட் கண்வளர்ந் தனையோ?[1]
உன்னையும் மறந்துறங் குதியேல் இனிமேல்
என்னையெங் கெண்ணுவை? இறும்பூ திருவரும்
ஒருவரை ஒருவர் உணர்ந்தமை!

[மனோன்மணி திடுக்கிட்டு விழிக்க]

வெருவலை! மணியே! பிரியீர் இனியே.

(வாழ்த்து—மருட்பா)

பள்ள உவர்க்கடலிற் பாய்ந்தோடும் வெள்ளமென
உள்ளம் உவந்தோடி ஒன்றானாய்—விள்ளா
மணியின தொளியும் மலரது மணமும்
அணிபெறு மொழியின் அருத்தமும் போல,
இந்நிசி யாகவெஞ் ஞான்றும்
மன்னிய அன்புடன் வாழ்மதி சிறந்தே!

[யாவரும் வாழ்த்த]

(கலித்துறை)

சிறிதா யினும்பற் றிலாதுகை யற்ற திருமகடன்
குறியாந் தலைவன் குடிலன்பின் எய்திய கொள்கை கண்டீர்
அறிவாம் எனும்நம் அகங்காரம் ஆறும் அவத்தையினிற்
செறிவா யிருக்குந் திருக்கு[2] வெளிப்படும் சீரிதுவே.

[ஐந்தாம் அங்கம் : மூன்றாம் களம் முற்றிற்று.

| | | | |
|---|---|---|---|
| ஆசிரியப்பா | 6-க்கு | அடி | 569 |
| வெண்செந்துறை | 6-க்கு | ,, | 12 |
| கொச்சகக்கலிப்பா | 3-க்கு | ,, | 12 |
| மருட்பா | 1-க்கு | ,, | 6 |
| ஆக அங்கம் 1-க்கு பா | 16-க்கு | ,, | 599 |
| இந்நாடகத்துள் வந்த அடிகள் | | | 4502 |

மனோன்மணீயம் முற்றிற்று.

1. உறங்குதல். 2. வஞ்சகம்.

## 1. மனோன்மணீய நாடக மாண்பு

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் தம்முடைய முப்பத்தாறாவது வயதில் இயற்றிய ஒப்பற்ற பெருநூல் மனோன்மணீயமாகும். நாடகத் தமிழில் நல்ல நூல்கள் மலரவில்லை என்ற குறையை இல்லையென்றாக்கிய இனிதான நூல் மனோன்மணீயமாகும். முதலாவதாக இந் நாடகத்தின் வழி, பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, தமிழினம் உயர்வுபெற வேண்டும் என்பதற்குரிய வழிமுறைகளைச் செவ்விதின் கிளத்தியுள்ளார். மொழிப் பற்றினையும், நாட்டுப் பற்றினையும் வீரவுணர்வினையும் ஆங்காங்கே வற்புறுத்துகின்றார். இரண்டாவதாகத் தமிழ் மறையாகத் துலங்கும், திருக்குறட் கருத்துக்களையும், தொடர்களையும் ஆங்காங்கே தம் நூலிடையே அழகுபட அமைத்துள்ளார். மூன்றாவதாகத் தமிழகத்தில் தொன்று தொட்டு வழங்கி வரும் பழமொழிகளை ஏற்ற இடங்களில் பொருட் பொருத்த முறக் கையாண்டுள்ளார். நான்காவதாகச் சங்க நூல் தொட்டு இடைக்கால இலக்கியங்கள் வரை இலங்கும் செந்தமிழ் நூல்களைத் தெளிவுறக் கற்றவர் என் பதனை நாடகத்தின் இடையே காட்டிச் செல்கின்றார். ஐந்தாவதாக இயற்கையில் மனிதன் ஈடுபாடு கொண்டு, இயற்கையில் தோய்ந்து இணையிலாத இன்பமும் அமைதி யும் பெற வேண்டுமென்பதை நூலில் வற்புறுத்திக் கூறி யுள்ளார். ஆறாவதாக நல்வாழ்விற் கியைந்த தத்துவக் கருத்துக்களைப் பாங்குறப் புலப்படுத்தியுள்ளார். அனைத்தி னும் மேலாகக் காப்பிய இலக்கணம் முழுதும் நிரம்பிய நூலாக மனோன்மணீயத்தைப் படைத்துள்ள திறம் பல

படியாகப் புகழ்ந்து பாராட்டுதற்குரியது. முரண்பட்ட பாத்திரப் படைப்புக்கள், சுவையாக வளர்ந்து செல்லும் கதை. தத்துவ விளக்கமாக நாடகத்தின் இடையில் அமைந்துள்ள 'சிவகாமி சரிதம்' — ஆகிய அனைத்தும் சேர்ந்து மனோன்மணீய நாடகத்தினை ஓர் ஒப்பற்ற நாடக நூலாக்கி விடுகின்றன.

இனி மேற்கூறப்பெற்ற செய்திகளை முறையே விளங்கக் காண்போம்.

## மொழிப் பற்று

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் கூறும் தமிழ்த் தெய்வ வணக்கம் அவர்தம் மொழிப்பற்றினை எடுத்துக் காட்டுவதாகும். கடலால்சூழப்பட்ட நிலவுலக மடந்தையின் முகம் பரத கண்டமாகவும், அம்மடந்தையின் நெற்றி தக்கணமாகவும் அம்மடந்தையின் நெற்றிப்பொட்டு திராவிட நாடாகவும், அம்மடந்தை இட்டுள்ள பொட்டிலிருந்து எழும் இனிய மணம் தமிழாகவும் எண்ணிப் பேராசிரியர் பாடல் புனைந்துள்ளார். **'எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந்தமிழணங்கே'** என்று தமிழ்த்தாயைப் போற்றிப் புகழ்கின்றார். பின்னர் பல்லுயிரையும் பலவுலகினையும் படைத்தளித்துத் துடைக்கும் எல்லையற்ற பரம்பொருள் போலவே தமிழ்மொழியும், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு முதலிய மொழிகளைவளர்த்து ஆளாக்கி விட்டும், ஆரியம்போல் உலக வழக்கு அழிந்து போகாமல் வாழ்வதாகக் குறிப்பிட்டுத் தமிழின் சீரிளமை கண்டு திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்தி நிற்கின்றார்.

தமிழின் பெருமையினை மேலும் கிளத்திக் கூறக் குடமுனி கடல் குடித்த கதையினையும், நக்கீரர்-சிவனார் கதையினையும், வைகை ஆற்றிலே ஞானசம்பந்தப் பெருமானால் இடப்பட்ட ஏடு எதிரேறிய கதையினையும் திருவாசகத்தினைச் சிவபெருமானே பிரதி செய்த கதையினையும் எடுத்துக் கூறுகிறார். பத்துப்பாட்டின் கற்பனை

வளத்தினையும், திருக்குறளின் நீதியுணர்வினையும், திருவாசகத்தின் உருக்கத்தினையும் அடுத்து மொழிகின்றார்.

பத்துப் பாட்டாதிமனம் பற்றினார் பற்றுவரோ
எத்துணையும்பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே?
வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி யொருகுலத்துக் கொருநீதி?
மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தில் மாண்டோர்கள்
கனஞ்சடையென் றுருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ?

இவ்வாறு தமிழ் இலக்கியப் பெருமைகூறும் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, தமிழ்த்தாயின் 'கணைக்காற்கு ஒள்ளிய சிறு விரலணியாக' இந்நாடகத்தினை நல்கியுள்ளதாக அடக்கத்தோடு கூறிக்கொள்கிறார்.

ஜீவகன் தன் படைவீரர்க்கு வீரவுரையாற்றும் பொழுதும் 'விந்தம் அடக்கினோன் தந்தநற் றமிழ்மொழி' என்று குறிப்பிடுகின்றான். மேலும் அன்னையர் தம் குழந்தையரோடு கொஞ்சிக் குலாவி உறக்கம் வரத் தாலாட்டுப்பாட்டு இசைத்த மொழியும் தமிழே என்று எடுத்து மொழிகிறான் ஜீவகன்.

பழையோர் பெருமையும் கிழமையும் கீர்த்தியும்
மன்னிய அன்பின்நும் அன்னையர் பாடி
நித்திரை வருவகை ஒத்தறுத் துமது
தொட்டில்தா லாட்ட, அவ் இட்டமாம் முன்னோர்
தீரமும் செய்கையும் வீரமும் பரிவும்
எண்ணி இருகணும் கண்ணீர் நிறையக்
கண்துயிலாதுநீர் கனிவுடன் கேட்ட
வண்தமிழ் மொழி.

—அங்கம் 4; களம் 10) . 115

மேலும் பாஷாபிமானமும் தேசாபிமானமும் கொள்ள வேண்டும் என்பதனை ஜீவகன் படைஞர்க்கு எடுத்து மொழிகின்றான். இதுபோன்று இன்னும் பலவிடங்களில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர் மொழிப்பற்றூட்டுகின்றார்.

## நாட்டுப் பற்று

மொழிப் பற்றினை ஓரளவு ஜீவகன் உரையில் வைத்த நாடக ஆசிரியர், நாட்டுப்பற்றினை அவன் கூற்றாகவே பெருமளவில் வெளிப்படுத்தியுள்ளார். வஞ்சி சூடிவந்த வஞ்சி நாட்டாரின் வஞ்சனையை அடியோடு மாய்க்க ஜீவகன் சேனை திரள்கிறது. 'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்' என்று இறுமாப்புக் கொள்கிறான் ஜீவக மன்னன். தன் படை வீரர்களுக்கு நாட்டுப்பற்றினை நலமுற ஊட்டுகின்றான். 'நாட்டபிமானமில் நடைப்பிணமாகக் கருதுகின்றான். தேசாபிமானத்தினைப் பொருளாகக் கருதவேண்டும்' என்கிறான். அந்தணர் வளர்க்கும் வேள்வித் தீயினும் உயர்ந்து நாட்டுப் பற்றுக் கொழுந்துவிட்டெரியும் உள்ளமே என்கிறான். அவ்வுளமே வானோர் உவந்து வரவேற்கும் உள்ளம் எனவும் கூறுகின்றான்.

அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னிலும்
நாட்டபி மானமுள் மூட்டிய சினத்தீ
அன்றோ வானோர்க் கென்றுமே உவப்பு!

—அங்கம் 4; களம் 1, 136-138

தாமிரபரணி யாற்றைக் கூறித் தன் படைஞர்க்கு நாட்டன்பினைத் தூண்டுகின்றான் ஜீவகன். தாமிரபரணியின் நீரினை உண்ணாதவர் ஒருவரும் இருக்க முடியாது; நீரை உண்டவர் நாட்டுப் பற்று உடையவராகத்தான் இருக்க முடியும் என்று மேலும் கூறுகிறான் ஜீவகன்.

கருதுவீர் தாம்பிர பன்னியின் கட்டுரை
மக்காள்! அருந்தி வளர்மின்! நுமக்கு
மிக்கோர் இல்லா வீரமாய்ப் பரநது
முதுசுதந் தரத்தின் முத்திரை ஆகி.
இதுபரி ணமித்துஉம் இதயத் துறைக!
அன்னியன் கைப்படா இந்நீர் கற்பிற்கு
இழிவுறின் மார்பினின் றிதுவே சோரியாய்ப்
பொழிகநீர் பொன்றிடும் அளவும் என்றன்றோ
வாழ்த்தி நுந்தலை வளர்த்தினள்.

—அங்கம் 4; களம் 1, 95-130

இவ்வாறு ஜீவகன் வழியாகப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் நாட்டுப் பற்றினைப் புலப்படுத்தியுள்ளார்.

## வீரவுணர்வு

'வேற்படைத் தலைவரே! நாற்படையாளரே! கேட்பீர் ஒரு சொல்' என்று தன் வீரப் பேச்சினைத் தொடங்குகின்றான் ஜீவகன். படை வீரர் கொண்ட கிளர்போர்க் கோலத்தினை நோக்கி மகிழ்கிறான். அணிவகுத்து நின்ற அவ்வீரர் திருக்கோலமே பிறவி எடுத்ததன் பெரும்பயன் என்கிறான்; அப்பேறு பிறர்க்கு வாய்க்காது என்கிறான், யாக்கையின் அரும்பயன் அவர்கட்கு வாய்த்ததாகக் குறிப்பிடுகின்றான். இவ்வாறு கூறித் தாயினும் தயை பூண்ட தாய்நாட்டிற்குத் தீமை விளைவிக்கத் துணிந்த பகைவரைக் கண்டு கொதித்தெழவேண்டும் என்றும் குறிப்பிடுகின்றான். பகைவர் படையெடுப்பினை எண்ணுந்தோறும் சினத்தீ மேலெழுந்து, கண்கள் பொரிந்து, நெடுந்திரட் புருவம் கொடுந் தொழில் குறித்து, வளங்கெழு மீசை கிளர்ந்தெழுந்தாடுகின்றதாம். இதனைக் கண்டு பாண்டிய மாதா புன்னகை பூக்கின்றனளாம். அமுதம் ஈந்துவந்த தாம்பிரபரணித் தாய் அலையெறிந்து ஆரவாரிக்கின்றனளாம். இவ்வாறு பாண்டிய மன்னன் தன் படைஞர்க்கு வீரவுணர்வு ஊட்டுகின்றான்.

தாயினும் சிறந்த தயைபூண் டிருந்தநும்
தேயமாம் தேவிக்குத் தீவினை யிழைக்கத்
துணிந்தவிவ் வஞ்சரை எணுந்தொறும் எணுந்தொறும்
அகந்தனில் அடக்கியும் அடங்கா தெழுந்து
புகைத்துயிர்ப் பெறியப் பொறிகண் பொரிய
நெடுந்திரட் புருவம் கொடுந்தொழில் குறிப்ப
வளங்கெழு மீசையும் கிளர்ந்தெழுந் தாடக்
களங்கமில் நும்முகம் காட்டுமிச் சினத்தீ
கண்டு அப் பாண்டியே கொண்டனள் உவகை
அலையெறிந் தீதோ ஆர்த்தனள்.

—அங்கம் 4; களம் 1, 83-92

வஞ்சிநாட்டார் சிங்கத்தின் குகைக்கு வந்து சிங்கத்தின் பிடரி மயிரைப் பிடித்திழுப்பது போன்று, பாண்டிய நாட்டின் மேல் படையெடுத்துள்ளனராம். எனவே போரில் பாண்டிய நாட்டு வீரர்கள் சிந்தும் ஒவ்வோர் இரத்தத் துளியும் உலகம் உள்ளளவும் பாண்டிய வீரர்களின் புகழைச் சொல்லுமென்றும், சுதந்திரமே சுவாசக் காற்றாக அவர் கட்கு அமைய வேண்டும் என்றும் வீரவுரை பகர்கிறான் ஜீவகன். பாண்டியர் உரிமை பாராட்டும் பண்பினர் என்றும், அவர்கள் செருக்கான சீர்மை வாழ்வினைப் பகைவர்கள் தீண்ட முனையக் கூடாது என்றும், தீண்டினால் பாண்டிய வீரர்களின் கோபத் தீயினுக்குச் சேர நாட்டு வீரர்கள் விறகாவார்கள் என்றும் வீரம்கொப்புளிக்கப் பேசுகின்றான்.

வந்தஇக் கயவர்நும் சிந்தையிற் கொளுத்திய
வெந்தழற் கவரே இந்தனம் ஆகுக!
இன்றுநீர் சிந்தும இரத்தமோர் துளியும்
நின்றுகம் பலவும் நிகழ்த்துமே. 'இந்தப்
பாண்டியர் உரிமை பாராட்டும் பண்பினர்;
தீண்டன்மின் திருந்தலீர்! அவர்தம் செருக்கு
சுதந்தரம் அவர்க்குயிர்; சுவாசமற் றன்று.
நினையுமின் நன்றாய்க் கனவினும் இதனை'

எனமுர சறையுமே எத்திசை யார்க்கும்
இத்தனிப் போரில் நீர் ஏற்றிடும் காயம்
சித்தங் களித்து ஐயமே துமக்கு
முத்தமிட் டளித்த முத்திரை ஆகி
எத்தனை தலைமுறைக் கிலக்காய் நிற்கும்
போர்க்குறிக் காயமே புகழின் காயம்.
யார்க்கது வாய்க்கும்!

—அங்கம் 4; களம் 1, 139-152

மேலும் ஜீவகன், அத்திப் பழத்தில் கொசுக்கள் பல தோன்றிச் சாவது போல வாழ்வு அமையக் கூடாது என்றும், பிறந்தவர் என்போர் புகழுடன் சிறந்தவரே என்றும் 'போரில் அடையும் விழுப்புண், புகழின்கண் என்றும், வீரர் போரில் மாள்வது இரந்தும் பெறத்தக்கது" என்றும், 'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப' மொழிந்தான். ஜீவகன் வீரவுரையில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் வீரவுணர்வினைப் பெருமிதம் தோன்றச் சிறக்கப் புலப்படுத்தியுள்ளார்.

தொல்குலமாம் மதிகுலத்தில் வரும் ஜீவகமன்னன், முதல் நாட்போரில் தோல்வி கண்டவுடனேயே தற்கொலை செய்துகொள்ளத் துணிகிறான். நாராயணன் நல்ல சமயத்தில் வந்து அச்செயலைத் தடுக்கிறான். 'கல்லும் உருகிக் கண்ணீர் விடும்படி'யும் 'புல்லும் கேட்பிற் புறப்படும் போர்க்கு' எனும்படியும் வீரவுரை யாற்றிய ஜீவகன் மானவுணர்வு தூண்ட இம்முடிவுக்கு வருகிறான். மயிர் நீப்பின் வாழாத கவரிமானைப் போலத் தன் உயிர் நீக்க ஜீவகன் துணிந்தது வீரவுணர்வோடு கூடிய மானவுணர்வினைப் புலப்படுத்துவதாகும்.

## திருக்குறளினை மேற்கோள் காட்டுதல்

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் மனோன்மணீயத்தில் ஏறத்தாழ இருபத்தைந்து இடங்களில் திருக்குறளைக் கையாண்டுள்ளார். பலவிடங்களில் திருக்குறட்

கருத்துக்களைத் தழுவி எழுதியுள்ளார். திருக்குறள் தொடர் களையே அகழ்ந்து அவர் தருகின்ற இடங்களை மிகுதியாக மனோன்மணீயத்தில் காணலாம். இவர் திருக்குறளை மேற்கோள் காட்டும் இடங்கள், இடமும் காலமும் பொருத்தமுற அமைந்து நயம் பயப்பதாயுள்ளன. இனிச் சில சான்றுகளைக் காண்போம்:

முதல் அங்கம் ஐந்தாம் களத்தில், குடிலன் தன் மனை யில் மாலை நேரத்தில் உலாவிக்கொண்டே தனக்குள் தனி மொழியாகப் பேசிக்கொள்கிறான். 'புத்தியே சகல சத்தியும்' என்று தன் நினைப்பைத் தொடங்குகின்றான். இதுவரை யில் அவன் போட்ட திட்டங்களெல்லாம் இனிதாக நிறை வேறினதாக இறும்பூதெய்கிறான். அவனுக்கு உட்பகை யினை விளைவித்த மதுரையை விடுத்துத் திருநெல்வேலியில் கோட்டையைக் கட்டி, மன்னனைக் குடியேற்றிய பிறகு, 'தானே யரசும் தானே யாவும்' என்னும் நிலைக்கு வந்து விட்டதாக எண்ணுகின்றான். மன்னவன் தன்னுடைய நிழலில் மறைந்துவிட்டதாகவும் மனதில் எண்ணுகின்றான். 'பிடித்தாற் கற்றை விட்டாற் கூளம்' என்று எண்ணுவ தோடு, அரசன் இறந்தால் அடுத்துத் தனக்கே அரசாளும் வாய்ப்பு இருப்பதாகவும் கருதுகிறான். 'கருவியுங் காலமும் அறியில் அரியதென்' என்று எதிர்நோக்கியிருக்கும் சந்தர்ப் பங்களைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டம் போடுகிறான். அதே சமயத்தில் மனோன்மணி கொண்ட காதல் நோயினையும், பலதேவனை அவளிடத்தில் பலமுறை அனுப்பினால் ஒருக்கால் அவனை மணக்க அவள் உடன்படலாம் என்றும் உறுதியாக நம்புகின்றான். இவ்வாறு பல்வேறு எண்ணங்களைத் தனக்குள் எண்ணிக் கொண்டிருக்கும் பொழுதுதான் 'கருவியுங் காலமும் அறியில் அரியதென்?' என்று தனிமொழியில் சிந்திக்கிறான் குடிலன்.

இக்கருத்து, திருக்குறளில் 'காலமறிதல்' என்ற அதிகாரத்தில் வரும்,

அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

—திருக்குறள் : 483

என்னும் குறளைத் தழுவியதாகும்.

இரண்டாவதாக, இரண்டாம் அங்கம் முதற்களத்தில் ஜீவக வழுதியோடு குடிலன் உரையாடும்பொழுது திருக்குறளை மேற்கோள் காட்டிப் பேசுகிறான். சுந்தர முனிவரின் யோசனைப்படி, ஜீவகன் மனோன்மணியின் திருமணம் குறித்துச் சேரநாட்டு மன்னன் புருடோத்தமனிடத்தில் தூது அனுப்பவேண்டுமெனக் கூறுகிறான். இச்செய்தி குறித்துக் குடிலன் குறிப்பிடும் கருத்து யாது என வினவிய ஜீவகனுக்கு, புருடோத்தமனிடம் தூதுவனை அனுப்பித் தற்போது அவன் ஆட்சியின் கீழிருக்கும் நன்செய்நாட்டினை நம்முடையது என்று கோரினால், ஒருவேளை அவன் உடன்பட்டுத் திரும்பக் கொடுத்தாலும் கொடுக்கலாம்; இன்றேல் ஏதேனும் வாதம் தொடங்கினாலும் தொடங்கலாம். அது பொழுது சமாதான முறையில் இந்த மணவினைபற்றிப் பேசி ஓர் உடன்பாடு காணலாம் என்று குடிலன் மறுமொழி புகன்றான்.

இதனைக் கேட்ட அளவில் 'மெத்தவும் களித்தோம் உத்தமோ பாயம்' என்று ஜீவகன் மகிழ்வதோடு, திருமணமும் உறுதியானதாக மனத்துள் மதிப்பதாகக் கூறுகின்றான். அப்பொழுது குடிலன் இடைமறித்து, உபாயம் நன்றாக இருப்பினும், தூது செல்லும் தூதுவர் திறமுடையவராக இருக்கவேண்டும் என்று குறிப்பிடுகின்றான். இதனை அவன்,

வினைதெரிந் துரைத்தல் பெரிதல, அஃது
தனைநன் காற்றலே யாற்றல்

என்று குறிப்பிடுகின்றான். இக் கூற்று, திருக்குறளில் 'வினைத் திட்பம்' என்னும் அதிகாரத்தில் அமைந்துள்ள,

**சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்.**

—திருக்குறள் : 664

என்னும் குறளினை நினைவூட்டுகின்றது.

மூன்றாவதாக, புலரியம் பொழுதில் கீழ்வானத்தில் தகத்தகாய கோலமாய்க் கைப்புனைந்தியற்றாக் கவின்பெறு வனப்புடன் தோன்றும் கதிரவனின் அழகிலும், காலைக் காட்சிகளிலும் மனத்தைப் பறிகொடுத்துவிட்டு நிற்கிறான், இயற்கைப் பித்தனும் வாணியின் காதலனுமான நடராசன். இயற்கைப் பொருள்கள் எல்லாம் ஏதோ ஒரு செய்தியினை உரைப்பன போல அவனுக்குத் தோற்றுகின்றன. வாய்க்காலின் கரையில் இணையாக இருந்து மகிழ்ந்து விளையாடும் இரண்டு நாரைகளைக் காண்கிறான். உடனே தன் காதலி வாணியின் நினைவு அவனுக்குத் தோன்றுகின்றது. முன்னர் ஒரு நாள் இருவர்க்கும் இடையே நிகழ்ந்த நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது. தான் ஒரு புதிய குவளைமலரைப் பறித்து அவள் கையில் கொடுக்க, அதனை அவள் தன் அழகுக் கூந்தலில் சூட்டிக் கொள்ளாமல், காதலனை மதியாதவள் போன்று ஓடுகிற நீரில் அக் குவளைப் பூவினை எறிந்து வேடிக்கை பார்த்ததாகவும், பின்னர், இச்செயலால் தான் கோபங்கொள்ளுவனோ என்று எண்ணி அவள் கலங்கியதையும் எண்ணிப் பார்க்கிறான். பின் அவள் அவ்வாறு கவலைப்பட்டிருக்கவேண்டியதில்லை என்றும், அவள் உள்ளத்தைத் தான் முற்றிலும் அறிந்திருப்பதாகவும் கூறிக் கொள்கிறான். இவ் எண்ணத்தினை,

**உளத்தொடு உளஞ்சென் றொன்றிடில் பின்னர்**
**வியர்த்தமே செய்கையும் மொழியும்**

என்று குறிப்பிடுகின்றான். ‘கண்கள் இரண்டும் ஒன்று கலந்து, அதன் வழி உளம் இரண்டும் ஒன்றிவிட்ட பிறகு, வாயிலிருந்து பிறக்கும் சொற்கள் எத்தகைய பயனும் தரா’ என்ற கருத்தமைந்த,

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில.

—திருக்குறள் : 1100

என்ற குறளைத் தழுவி நிற்கின்றது.

முதல்நாட் போரில் தோல்வி கண்ட ஜீவகன் தன் வாழ்வை முடித்துக் கொள்ள எண்ணுகிறான். போர்முகத் தோடிப் புறங்கொடுத்த தான் இனிச் செய்யத் தகுந்தது என்னவென்று பார்க்கும்பொழுது, போரிடைப் பொலியாது வாளாயிருந்த வாளால் தன்னை மாய்த்துக் கொள்ளலே தகுதி என்று எண்ணி, எண்ணியவழிச் செயல்பட முனை கிறான். நல்ல வேளையாக நாராயணன் அங்கு வந்து அவனைத் தடுத்து, 'மனோன்மணி தன்னை மறந்தனை போலும்' எனச் சொல்கிறான். 'குழந்தாய்! குழந்தாய்' எனக் கூறிக் கொற்றவன் மூர்ச்சிக்க, அரசனை மடியில் தாங்குகிறான் நாராயணன். பனிநீர் தெளித்துக் காற்று வீசக் களைப்பிலிருந்து தேறி எழுந்த ஜீவகன், தான் இனி உயிர் வாழ்வது நஞ்சான செயல் என்றும், ஒரு சிறு மயிரினை இழந்தாலும் கவரிமான் தன்னுடைய உயிரை விட்டு விடும் என்றும், பெருமை பீடழிய வந்தவிடத்தும் உயிரினை வீணே சுமந்து நிற்றல் மருந்தாகும் என்றும் மனங்கலங்கி மொழிந்தான்.

.........ஓர் சிறு
மயிரினை இழக்கினும் மாயுமே கவரிமா
பெருந்தகை பிரிந்தும் ஊன்சுமக்கும் பெற்றி
மருந்தாய் எனக்கே இருந்ததே நாரணா

—அங்கம் 4; களம் 3, 49-57

இறதக் கருத்துக்கள்,

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.

—திருக்குறள் : 969

மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகை
பீடழிய வந்த இடத்து

—திருக்குறள் 898

என்னும் இரு குறட்பாக்களைப் பின்பற்றி எழுந்தவையாகும்.

இவ்வாறாக மாண்பு நிறைந்த மனோன்மணீய நாடகத்தில் குறட் கருத்துக்கள் ஆங்காங்கே விரவி வந்திருக்கக் காணலாம்.

## பழமொழிகளைக் கையாளும் பான்மை

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் நாட்டு மக்களிடையே தொன்று தொட்டு வழங்கிவரும் பழமொழிகளை நன்கு உணர்ந்தவராகத் தெரிகின்றார். ஏனெனில் மனோன்மணீய நாடகத்தில் அறுபதுக்கும் மேற்பட்ட பழமொழிகள் வந்திருக்கக் காணலாம். இப்பழமொழிகள், கூறவந்த கருத்துகளுக்கு அரண் செய்வதோடு, நாடகச்சுவை சிறக்கவும் துணை புரிகின்றன. பல்வேறு பாத்திரங்கள் பல்வேறு பழமொழிகளைக் கையாளுகின்றன. ஒவ்வொருவர் கையாளும் பழமொழிகளும், அவ்வப் பாத்திரங்களின் பண்பினைப் பகர்வதாகவும் உள்ளன. பண்பாட்டின் பிறப்பிடமான பழமொழிகள் இடம் நோக்கி இனிமையுறக் கையாளப் பெற்றிருப்பதனைப் பின்வரும் சான்றுகளால் தெள்ளிதின் அறியலாம்:

முதல் அங்கத்தின் இரண்டாம் களத்தில் கன்னி மாடத்தில் ஏற்பாடு நேரத்தில் மனோன்மணியும் வாணியும் கழல் விளையாடுகின்றனர்; பாடிக்கொண்டே அவர்கள் கழல் விளையாடுகின்றனர். வாணி பாடிய பாட்டில் நடராசன் என்ற பெயர் வந்தது. மனோன்மணி வாணியின் காதலைப்பற்றி வினவுகின்றாள்; அவள் கன்னம் களவை வெளிப்படுத்தி விட்டது என்றும், எனவே காதலன் அவளுக்கு நேற்றுச்

சொன்னது என்ன என்றும் கேட்கின்றாள். இதனைக் கேட்ட வாணி பதைத்து,

> ஐயோ கொடுமை! அம்ம அதிசயம்
> எருதீன் றெனுமுனம் என்னகன் றென்று
> திரிபவ ரொப்பநீ செப்பினை

என்று கூறித் தான் தன் காதலனைக் கண்டு நாலைந்து நாட்களாகி விட்டன என்று கூறுகிறாள். மனோன்மணி, "காதலை வோடிய கண்ணாய்! வாணி! நுமது காதல் கழிந்ததோ. காணாதொருபோ திரேமெனுங் கட்டுரை, வீணானதே" என்று கேட்கின்றாள். அதற்கு வாணி வருந்தி, எதனையும் விளங்கக்கூறும் நிலையில் தான் இல்லை என்றும், யாவும் தன் தலைவிதியே என்றும், கையற்று வருந்தி மொழிகிறாள். அது பொழுது மனோன்மணி வாணியை நோக்கி "எட்பூ ஏசிய நாசியாய்! இயம்புக. மனத்திடை யடக்கலை! வழங்குதி வகுத்தே' என்று கூறுகின்றாள். 'எதனை எவ்வாறு எடுத்துரைப்பது' என வாணி கூறித் 'தலைவிதி தடுக்கற்பற்றோ' என்றும், அத்தலைவிதி முற்றிலும் தன்னை ஆட்டிவைத்த பிறகே தன்னை விட்டு அகலும் என்றும் கூறுகிறாள். வீட்டில் அவளுடைய தந்தையும் தாயும் கொடுமனம் உடையவர்களாக இருப்பதாகவும், அவள் உயிருக்குயிரான காதலர்க்கும் இன்னல் இழைத்ததாகவும் கலங்கி மொழிகின்றாள். அவர் எண்ணிய எண்ணத்தினை முதலையின் பிடிபோல் முடிக்கத் துணிந்தனர் என்றும் குறிப்பிடுகின்றாள். இக் கருத்து 'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா' என்ற பழமொழியை ஒட்டி யெழுந்ததாகும்.

இவ்வாறு வாணியின் பேச்சில் பழமொழிகள் பல வந்துள்ளதனைக் காணலாம். மேலும் இவர்கள் உரையாடலில் வாணி காதலின் பெருமை பேச, மனோன்மணி காதலை வெறுத்து மொழிய, பேச்சு சுவைப்படத் தொடர்ந்து செல்கின்றது. இறுதியில் செவிலித்தாய் இவர்கள் பேச்சின் இடையில் வந்து, மனோன்மணி வளர்த்த முல்லைக்கொடி நறுமுகை

மூழ்கித்தது என்றும், ஆதலின் மனோன்மணி வரைவிற் காதலிற் கவிழ்வள் என்றும் கூறுகிறாள். உடனே மனோன்மணி தன் மனம் தவத்தை நாடியிருக்குமேயன்றி, அற்ப ஆசைகளில் ஈடுபட்டு அவலம் உறாது என்று குறிப்பிட்டு,

நெருப்பையும் கறையான் அரிக்குமோ நேர்ந்தே

என்று உள்ள உறுதியோடு மொழிகின்றாள்.

ஆக, மனோன்மணியும், பழமொழியினைத் தன் பேச்சிடையே பயன்படுத்துவதனைக் காண்கிறோம்.

அடுத்து, பாண்டிய மன்னன் ஜீவகனிடத்தில் வாணியின் தந்தை சகடர் வந்து தன் மகள்மேல் புகார் கூறுகிறார். தான் அமைச்சன் குடிலன்மகன் பலதேவனுக்கு வாணியை வதுவை செய்ய நிச்சயித்திருக்கையில், நடராசன்மேற் கொண்ட காதலால் தன் சொற்களைச் சிறிதும் செவிமடுக்காமல் வாணி தன் கருத்திற்கு முரணாக நடந்து கொள்கிறாள் என்று வருந்திக் கூறிய, அளவில் அங்கிருந்த குடிலன், அவள் விருப்பப்படியே திருமணம் நடைபெறட்டும் என்று கூறவும், உடனே சகடர், "உமது குழந்தையாக இருந்தால் இப்படிச் சொல்வீர்களா? கிளியை வளர்த்துப் பூனைக்குக் கொடுக்கவா? பேயனுக்குக் கொடுக்கவா பெண்ணைப் பெற்றோம்" என்று நொந்து சிறிது சீற்றத்துடன் மறுமொழி கூறுகின்றார். சகடர் கூறும்,

பூவையை வளர்த்துப் பூனைக் கீயவோ

என்ற தொடர், 'கிளியை வளர்த்துப் பூனைக்குக் கொடுக்கவோ?' என்ற பழமொழியினை அடியொற்றி எழுந்ததாகும்.

வாய்மையும் தூய்மையும் நிறைந்து, தவ உருவாய் விளங்கும் சுந்தர முனிவரும் பழமொழியினைத் தம் பேச்சிடையே பொதிந்து வைத்துப் பேசுகின்றார். கனவில் காதலனைக் கண்ட மனோன்மணி காதல் நோய் உறுகிறாள். ஜீவகன்

மனோன்மணியின் திடீர்க் காய்ச்சலுக்குரிய உண்மைக் காரணத்தை அறிய முடியாமல் அவலமுறுகிறான். அது பொழுது மனோன்மணியின் வேறுபாட்டிற்குரிய காரணம் — மணப் பருவம் வந்துற்றதன் விளைவே என்று கூறுகின்றார் சுந்தர முனிவர்.

குழவிப் பருவம் நழுவுங் காலை
களிமிகு கன்னியர் உளமும் வாக்கும்
புளியம் பழமுந் தோடும் போலாம்.

— அங்கம் 1; களம் 4, 167—169

"பெண்கள் குழந்தைப் பருவத்தில் புளியங்காயையும் அதனைப் பற்றியிருக்கும் ஓட்டினையும் போன்று அவர் சொல்லுக்கும் பொருளுக்கும் தொடர்பு இருக்கும்; ஆனால் குழந்தைப் பருவம் கடந்து கன்னிப் பருவத்தை அடைந்த நிலையில், புளியம் பழம் ஓட்டின் உள்ளிருப்பதுபோல் தோன்றினும், உண்மையில் யாதொரு தொடர்பும் இல்லாததுபோல அவர்கள் சொல்லும் சொல்லினுக்குப் பொருள் இருக்காது; அது காதலின் தன்மையாகும்" என்று விளங்கக் கூறுகிறார் சுந்தர முனிவர்.

இவ்வாறாக, 'எள்விழற் கிடமிலை' என்று அரச வீதியின் ஆள் நெருக்கத்தை நாடகத் தொடக்கத்தில் குறிப்பிடும் சேவகன் முதலாக, தவமுனிவர் சுந்தரர் ஈறாகப் பலரும் தம் பேச்சிடையே பலமொழிகளைக் கையாளு கின்றனர்.

## பன்னூற் புலமை

திருக்குறள், பழமொழிகளே யல்லாமலும் பழந்தமிழ் இலக்கியங்களிலும் ஆழ்ந்த பயிற்சியுடையவர் சுந்தரம் பிள்ளையவர்கள் என்பது நூலின் இடையிடையே அவர் கையாண்டிருக்கும் புறநானூறு, சிலப்பதிகாரம், மணி மேகலை, தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, பெரிய புராணம், கம்பராமாயணம், வில்லி பாரதம், நைடதம், நளவெண்பா, திருவிளையாடற் புராணம், நீதிநெறி விளக்கம், ஒழிவிலொடுக்கம் நூல்களின் தொடர்புகள் புலப்

படுத்துவனவாகும். மேலும், 'பாரெலாம் பொய்யெனவே' துறந்த பட்டினத்தடிகள், தாயுமான தயாபரர் முதலிய சான்றோர்களின் தொடர்களையும் பொன்னேபோல் போற்றித் தம் நூலிற் பொதித்துள்ளார்.

சூட்டுடைச் சேவல் சுரைக்கொடி படர்ந்த அவ்
வீட்டுச் சியின்மேல் வீம்பாய் நடந்து
—அங்கம் 2; களம் 2. 11-13

என்ற மனோன்மணீயத் தொடர்,

பஞ்சி முன்றிற் சிற்றில் ஆங்கண்
பீரை நாறிய சுரையிவர் மருங்கின்
—புறநானூறு : 11 5-9

என்ற புறநானூற்றுத் தொடரினை நினைவூட்டுவதாகும்.

அடுத்து,

துகிர்க்கா லன்னமும் புகர்க்கால் கொக்கும்
செங்கட் போத்துங் கம்புட் கோழியும்
கனைகுரல் நாரையும் சினமிகு காடையும்
பொய்யாப் புள்ளும் உள்ளான் குருகும்
—அங்கம் 2; களம் 1. 118-121

என்ற மனோன்மணீய அடிகள்,

கம்புட் கோழியும் கனைகுரல் நாரையும்
செங்கா லன்னமும் பைங்காற் கொக்கும்
கானக் கோழியும் நீல்நிறக் காக்கையும்
உன்னும் ஊரலும் புள்ளும் புதாவும்
—சிலப்பதிகாரம் : நாடுகாண் காதை, 114-117

என்ற சிலப்பதிகார அடிகளை அடியொற்றி அமைந்தன வாகும்.

செறித்திடுஞ் சிறையினை யுடைத்திடும் புனல்போல்
— அங்கம் 3; களம் 1. 26

என்ற உவமை,

**சிறையு முண்டோ செழும்புனல் மிக்குழீஇ**
—மணிமேகலை : 5-19

என்ற மணிமேகலைத் தொடரை நினைவூட்டுவதாகும்.

வாணி தன் துன்பத்தை மனோன்மணிக்குக் கூறும் போது,

**யாரொடு நோவேன்? யார்க்கெடுத் துரைப்பேன்?**
**வார்கடல் உலகில் வாழ்கிலன்**
**மாளுவன் திண்ணம்; மாளுவன் வறிதே.**
—அங்கம் 1; களம் 2 : 39-41

என்று வருந்திப் பேசுகிறாள். இவ்விடத்தில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள்,

**யாரோடு நோகேன் யார்க்கெடுத் துரைக்கேன்**
**ஆண்டநீ யருளிலை யானால்**
**வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்**
**வருகவென் றருள்புரி யாயே**
—திருவாசகம் : வாழாப்பத்து : 1

என்ற திருவாசகப் பாடலை அப்படியே பெயர்த்தெடுத்துத் தந்துள்ளார் என்பது உண்மையே யன்றோ!

மனோன்மணி, வாணியை 'எட்பூ ஏசிய நாசியாய்' என விளிக்கின்றாள். இத்தொடர் 'எட்குலா மலர் ஏசிய நாசியாய்' என்னும் கம்பராமாயணத் தொடரைப் பின்பற்றியதாகும்.

மேலும் வாணி தன் 'தந்தையுங் கொடியன் தாயுங் கொடியள்' என்று பேசுகிறாள். இத்தொடர் கம்பராமாயணத்தில் மந்தரை சூழ்ச்சிப் படலத்தில் மந்தரை கைகேயின்பாற் கூறும் கூற்றாக வரும், 'தந்தையுங் கொடியன் நற்றாயுந் தீயளால்' என்ற தொடரை நினைவூட்டுவதாம்.

நாடகத் தொடக்கத்தில் சுந்தர முனிவரை வரவேற்கும் ஜீவகன், அவர் வருகையைப் பற்றிச் சிறப்பாக,

**திருவடி தீண்டப் பெற்றஇச் சிறுகுடில்**
**அருமறைச் சிகரமோ ஆலநன் னீழலோ**
**குருகுல விஜயன் கொடித்தேர்ப் பீடமோ**
**யாதென ஓதுவன்?**

—அங்கம் 1; களம் 1, 21-24

என்று பாராட்டுகின்றான். இப் பாராட்டுமொழி, பாண்டவர்க்குத் தூதுவந்த கண்ணனை,

**முன்ன மேதுயின் றருளிய முழுபயோ ததியோ**
**பன்ன காதிபப் பாயலோ பச்சையா லிலையோ**
**சொன்ன நால்வகைச் சுருதியோ கருதிநீ எய்தற்**
**கென்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடி......**

—வில்லிபாரதம்; கிருட்டிணன் தூதுச் சருக்கம் : 80

என்று வரவேற்ற விதுரன் மொழிகளோடு ஒப்பிட்டு நோக்கத் தக்கவை.

இவ்வாறு இன்னும் பல சான்றுகளைக் காட்டிப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களின் பன்னூற் புலமையினை நிறுவலாம்.

## இயற்கையின் பேரழகில் தோய்தல்

இயற்கையின் இனிய பெற்றியின் இனிமையில் ஈடுபட்டவர்கள் பழந்தமிழர்கள். இயற்கையின் பின்னணியில் துலங்கிய பெருவாழ்வு அவர்கள் வாழ்வாகும். இயற்கையழகின் இனிய சூழலில் இறைவனைக் கண்ட நாடு இது. எனவே, இயற்கைப் புனைவிற்கும் தம் நூலில் இடம் தந்துள்ளார் நூலாசிரியர். இயற்கை வழங்கும் இனிய செல்வம் குறித்து மகிழாமல், நாம் அற்ப செயல்களில் சிந்தையைச் செலுத்தி அழிகிறோம் என்பது வோரிட்ஸ் என்னும் கவிஞரின் கருத்தாகும்.

Little we see in **Nature** that is ours
We have given our **hearts** away a sordid boon!

என்று அவர் கூறுவதோடு,

Therefore am I still
A lover of meadows and the woods
And mountains; and all that we behold
From this green earth; of all the migthy world

என்றும் இயற்கையோடு தமக்குள்ள தொடர்பினைச் சுட்டி யுள்ளார். இதற்கொப்பவே இயற்கை யழகில் தோய்ந்து ஈடுபடும் நடராசன் என்ற பாத்திரத்தை ஆசிரியர் உருவாக்கி யுள்ளார். சகடர் கூற்றுப்படி நடராசன்,

எங்கேனு மொருபூ இலைகனி யகப்படில்
அங்கங் கதனையே நோக்கி நோக்கித்
தங்கா மகிழ்ச்சியில் தலைதடு மாறுவன்
பரற்கலும் அவனுக் ககப்படாத் திரவியம்
ஆயிரந் தடவை யாயினும் நோக்குவன்

—அங்கம் 1 : களம் 3, 114—118

என்ற தன்மையில் காட்சியளிக்கின்றான்.

நடராசன் அருணோதயங்கண்டு நின்று தனிமொழி யாகப் பேசிக்கொள்ளும் பேச்சிலும், குடிலனின் நன்செய் நாட்டு வருணனையிலும் இயற்கைக் காட்சிகளில் தோய்ந்த நூலாசிரியரின் நல்லுள்ளம் தெள்ளிதிற் புலனாவது காண்க.

## தத்துவ நூற் கருத்துக்கள்

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் தத்துவப் பேராசிரியராகப் (Professor of Philosophy) பணியாற் றியவர். எனவே தம் நூலின் பலவிடங்களிலும் தத்துவக் கருத்துக்களை எடுத்து மொழிந்துள்ளார்.

சுந்தரமுனிவர் தம் ஆசிரமத்தில் வாழும் நிஷ்டாபரரும் கருணாகரரும் ஒருபோது தத்துவ விசாரணையில் ஈடுபடு கின்றனர். உலகத் துன்பத்திற்குக் காரணம் பற்றி வேதாந்த

மனம் படைத்த நிஷ்டாபரர் பேசுகிறார்: "கருக்கொண்டுள்ள சினை ஈயைச் சிலந்திப் பூச்சி கட்டிப்பிடித்து இரத்தத்தை உறிஞ்சும்பொழுது ஈ கதறியழும் குரலை யார் கேட்கின்றார்? யார் அதனை ஓடிப்போய்க் காக்கின்றார்? நம்முடலையும் நோவும் சாவும் வந்தெய்தும். ஐந்துகோடி யோசனை பரப்புள்ள இப் புவியினும் பெரியது சூரியமண்டலம். வானிடை ஒளிரும் விண்மீன்கள் சூரியனை விடப்பெரியவை. இவையனைத்தும் சேர்ந்து ஒரு பிரமாண்டமாகும். இதுபோல் கணக்கற்ற பிரமாண்டங்கள் உள்ளன. திருமாலின் உந்திக்கமலத்தில் உதித்தவன் படைப்புக் கடவுளாகிய பிரமன். திருமாலோவெனில் பெருங்கடலில் ஒரு சிறு துரும்பு. பெருங்கடலும் இறைவனோடு ஒப்பிட்டுக் காணும்பொழுது கானல் நீராகத் தோன்றுமெனில் அற்ப உயிர்ப்பிராணிகளாகிய நாம் எம்மாத்திரம்!

"நான், நீ, ஊர், பெயர் முதலியன மாயையின் அவத்தைகள். இயந்திரக் கல்லில் அகப்பட்ட சிறு பயறுகள் நாம். மாயா உலகில் துயரமே மிஞ்சும். உலகத்துன்பங்களை மறக்க உதவுவது துறவு. துறவு மேற்கொண்டால் சுட்ட சட்டி கையை விட்டதாகும். உலகை மறந்தால் மெய்ஞ் ஞானம் தோன்றும். பின் பேரின்ப வடிவான அநுபூதியின் சுகத்தை அடையலாம்." இவ்வாறு பேரின்பத்தின் பெரும் பெற்றியினை நிஷ்டாபரர் கருணாகரருக்கு விளக்குகிறார்.

கருணாகரர், "இகமும் எனக்கு வேண்டாம்; பரமும் வேண்டாம். என் குருநாதரின் பாதசேவையே எனக்குப் போதும். உலகம் பொய்யென்றால் சுந்தரர் கருணையும் பொய்யா? உடலை ஓம்பி, உலகத் துன்பங்களை நிலையெனக் கருதி, நாமே எல்லாம் எனத் தருக்குற்று வீண் பெருமை பேசி, துன்பத்தில் துவண்டு வதங்கி இன்பத்தில் இறுமாந்து திளைத்து சிறியரைக் கண்டு செருக்கி, பெரியரைக் கண்டு மனம் பொறாது வாழ்ந்த அவலவாழ்விலிருந்து நம்மைக் கரை சேர்த்தவர் சுந்தரர் அல்லரோ?"

"மேலும் அந்தியில் மலரும் பவழமல்லிகை வெண்ணிறப் பூக்களுடன் துலங்குகின்றது. அவ் வெண்மை நிறப் பூச்சிகள் மலர் இருக்குமிடத்தை அறியத் துணை செய்கின்றது. ஈக்கள் பொருந்த, பூக்கள் கருக்கொள்கின்றன. இறைவன் படைப்பில் ஒவ்வொரு செயலும் காரண காரியத் தொடர்பு உடையவை ஆகும். எனவே நாம் குருநாதர் ஆணையை மேற்கொண்டு, அவர் காட்டியவழியே கண்மூடி நடப்போம். உலகிடைத் துன்பங்களைக் கண்டால் 'எம்மையும் காத்த இன்னருள் இவரையும் செம்மையிற் காக்க' என இறையருளை இறைஞ்சி நிற்போம். அழுதால் அவனைப் பெறலாம். அதுவே முத்தி பெறும் வழி; சித்தம் நற்சுத்தி யாகும் அருள்நெறி'' என்று அருட்கடலாம் ஆண்டவனின் அளவிலாக் கருணைப் பெருக்கின் திறத்தில் நம்பிக்கை கொண்ட நிலையில் கருணாகரர் பேசுகிறார்.

இவ்வாறாக, இவ்விரு துறவிகள் வாயிலாகத் தம்முடைய தத்துவக் கருத்துக்களைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் மனோன்மணீய நாடகத்தில் வெளிப் படுத்தியுள்ளார்.

## பாத்திரப் படைப்புகள்

எடுப்பார் கைப்பிள்ளையாக, வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கும் ஜீவகன் ஒருபுறம், அருந்திறற் சூழ்ச்சியும் ஆராய்ச்சி நலமும் கொண்ட குடிலன் பிறிதொருபுறம்; இருவரும் அருகருகே இருந்து வாழ்கின்றார்கள். நடிக்கவே தெரியாத ஜீவகன், நடிப்புக் கலையில் வல்ல குடிலன்! உள்ளத்தில் இருப்பதை மறக்காது அப்படியே வெளியே கொட்டிவிடும் ஜீவகன், உள்ளத்தில் ஓடிவிடும் எண்ணங் களை மறைத்து வெளியில் வேறொன்று பேசும் மறைவுளம் கொண்ட குடிலன்! இவ்வாறு குண வேறுபாடு கொண்ட பாத்திரங்கள் இரண்டு, மனோன்மணீய நாடகத்தினை நடத்திச் செல்கின்றன

நாராயணன் இருவரையும் நன்குணர்ந்தவன். எனவே இருவர் தம் பண்பு நலன்களையும் ஒப்பிட்டு உண்மை காண

அவனால் முடிகின்றது. ஜீவகனின் குற்றங்களையும் குணங்களையும் பின்வருமாறு நாராயணன் குறிப்பிடுகின்றான்:

.....................ஜீவகா! ஜீவகா!
முற்றுநாள் அறிவன் நின்குற்றமும் குணமும்
குற்றமற்று என்னுள கூறற் குன்வயின்?
வித்தையும் உன்பெருஞ் சத்திய விருப்பும்
உத்தம ஒழுக்கமும் எத்துணைத்து ஐயோ!
வறிதாக் கினையே வாளா அனைத்தும்
அறியா தொருவனை யமைச்சா நம்பி!

நாராயணன் குடிலனைப் பற்றிக் கொண்டுள்ள எண்ணம்,

................... குடிலனோ
சூதே யுருவாய்த் தோன்றினன் அவன்தான்
ஓதுவ உன்னுவ செய்குவ யாவும்
தன்னயங் கருதி யன்றி மன்னனைச்
சற்று மெண்ணான் மற்றுஞ் சாலமா
நல்லவன் போலவே நடிப்பான்

என்று குறிப்பிடும் அவனுடைய பேச்சால் விளங்குகின்றது.

ஜீவகன் சுந்தர முனிவரைச் சிறக்க, பயபக்தியோடு வரவேற்று உபசரிக்கின்றான். குடிலனோ தான் திருநெல்வேலிக் கோட்டையைச் சமைத்த புராணத்தைக் கட்டவிழ்க்கிறான்.

மனோன்மணிபால் அளவிடற்கரிய அன்பு பூண்டவன் ஜீவகன்.

உன்மன மகிழ்ச்சிக் குதவுவ உளுற்ற
உயிர்தரித் திருந்தேன்............

என்றும்,

உன்னை யன்றி பென்னுயிர்க் குலகில்
எதுவோ வுறுதி யியம்பாய்?

என்றும் மனோன்மணியிடம் பேசும் ஜீவகன் கூற்றால், அவன் அவள்பால் கொண்ட கரையிலாத அன்பு புலனாதல் காணலாம்.

மாறாகக் குடிலன் பலதேவனையே இறுதியில் வெறுத்துப் பேசுகிறான்.

> பிரியமும் நீயும், பேய்ப்பயல்! பேய்ப்பயல்!
> எரிவதென் உளமுனை எண்ணுந் தோறும்
> அரியவென் பணமெலாம் அழிந்து மற்றின்று
> ..........................................
> விதியிது இவனுடன் விளம்பி யென்பயன்?

என்று பலதேவனை வெறுத்து மொழிவதோடு, 'வதுவை போயின் என்?' ஆயின் என்?' என்று தன் மகன் வாழ்வின் நலம் கருதாமல் தன்னலமே கருதுகின்றான்.

இவ்விருவர் உள்ளத்திற்குத் தகவே மக்களும் வாய்த்தனர். தன் தந்தைமேல் கொண்ட அளவிடற்கரிய அன்பால் தன் காதலையே தியாகம் செய்ய ஒப்புக் கொள்கிறாள் மனோன்மணி. தன் கனவில் வந்து கருத்தில் நிறைந்த புருடோத்தமனைக் கூட எண்ணாமல், தான் வெறுக்கும் பலதேவனை மணம் செய்து கொள்ள ஒப்புக் கொள்கிறாள். மேலும்,

> அன்னையும் நின்னை அன்றிவே றறியேன்.
> உன்னதே இவ்வுடல் உன்திரு உள்ளம்
> உன்னிய படியெலாம் உவப்பச் செய்குவன்

என்று மன்னன் மனப்படியே நடக்க மகள் துணிகிறாள்.

இங்கே, பலதேவன் வேலால் நெஞ்சிற் குத்தப்பட்ட நிலையில் மனம் குமுறித் தன் தந்தையைத் தகாத முறையில் இழிவு படப் பேசுகிறான்:

> மன்னனைக் குத்திட உன்னினை; ஊழ்வினை
> என்னையே குத்திட இசைந்தது; யார்பிழை?
> பணம்பண மென்று பதைக்கின்றாய் பிணமே

என்று குடிலனைப் பழித்துப் பேசும் பலதேவன் மனோன்மணியின் அன்பிற்கு முரண்பட்ட பாத்திரமே யன்றோ?

'அறிவிலாத் தந்தையர் தம்வினை மக்களைச் சேரும்" என்றபடி கொடுமனக் குடிலன் மனத்தில் ஊன்றப்பட்ட விஷவித்திலிருந்து தழைத்த மரமே பலதேவன் எனலாம்.

ஜீவகன் வீரமும் மானமும் நிறைந்தவன். போர் குறிக் காயமே புகழின் காயம் என்பது அவன் கருத்து. அவன் படைஞர்க்கு ஆற்றும் வீரவுரை அவனுடைய வீரத்தினை விளங்க உரைக்கும். முதல் நாட் போரில் தோல்வி கண்ட நிலையில் தன் உயிரைத் தானே வாளால் மாய்த்துக் கொள்ளத் துணிகிறான்.

செருமுகத்து இரிந்தென் மானம் செகுத்தும்
உயிரினை ஓம்பவோ உற்றது? ஓர்சிறு
மயிரினை இழக்கினும் மாயுமே கவரிமா

என்று 'மானம் இழந்த பின் வாழாமை முன்னினிதே' என்று ஜீவகன் நாராயணனிடம் குறிப்பிடுகின்றான்.

குடிலனோ, வீரர்கள் துரத்தத் தன் மகனோடு வீதியில் நெடுக ஓடி அஞ்சி ஒளிகிறான்.

தீது நன்றென ஓதுவ வெல்லாம்
அறியார் கரையும் வெறுமொழி யலவோ?
பாச்சி பாச்சி என்றழும் பாலர்க்குப்
பூச்சி பூச்சி என்பது போலாம்

என்ற குடிலன் கூற்றால், அவன் பழியஞ்சாப் பாழுள்ளம் புலனாதல் காணலாம்.

மக்கள் நலமே தன் நலம் என மதிப்பவன் மன்னன் ஜீவகன். தன் நலமே மக்கள் நலம் என மறித்து நினைப்பவன் மதியமைச்சன் குடிலன்.

சுருங்கக் கூறின் ஜீவகன் வெளுத்ததெல்லாம் பாலெனும் மெய்ம்மை உளத்தவன்; களங்கம் ஓராதவன்.

குடிலன் சூதே உருவாய்த்தோன்றினவன்; தன்னலத்தில் தோய்ந்த உள்ளத்தினன்; நல்லவன் போலவே நடிப்பவன்! பொல்லா வஞ்சகன்.

இவ்வாறு இருவகை முரண்பட்ட பாத்திரப்படைப்புகள் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள், சுவையாக நாடகத்தினை நடத்திச் செல்லத் துணை புரிகின்றன.

இது போன்றே காதலே வாழ்வு எனக்கொண்ட வாணி ஒருபுறமும், தியாகமே வாழ்வு எனக்கொண்ட மனோன்மணி பிறிதொரு புறமும் இந்நாடகத்தில் இடம் பெறுகின்றனர்.

தந்தை சகடர் பேச்சை மீறுகிறாள் வாணி. சகடர்,

..........................தாதையர்
மாற்றங் கேளா மக்கள் கூற்றுவர்
எனுமொழி யெனக்கே யனுபவம்

என்று கூறுமளவிற்கு அவள் காதல் உறுதிப் பாடுடையது. மன்னன் அச்சுறுத்தியும் மாறாது காதலில் மன்னும் உள்ளம் அவள் உள்ளம். மனோன்மணியோ தந்தை உருவாக்கும் வண்ணம் தன் வாழ்வு அமைவதாக என அமைதியாகத் தன் காதலுக்கு விடை கூறி நிற்கிறாள். வாணிக்குக் காதலே பெரிது; மனோன்மணிக்குத் தன் தந்தையே பெரியன்.

முதலில் காதலை வெறுக்கும் மனோன்மணி காதலில் அவிழ்கின்றாள். ஆனால் நாடகத் தொடக்கத்திலிருந்து இறுதிவரை காதலில் ஒரே நிலையுடன் உலவி வருகிறாள் வாணி. இறுதியில் யாவும் இனிதே முடியக் காண்கிறோம்.

## காப்பிய இலக்கணம் நிரம்பிய நூல்

வாழ்த்து வணக்கம் என்னும் இரண்டு பொருள்களில் ஒன்று முதலாவதாக அமைந்து, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளினையும் உள்ளடக்கி, தன்னிகரில்லாத தலைவனை உடைத்தாய், மலை, கடல், நாடு

வளநகர், பருவம், இரு சுடர்த் தோற்றம் முதலிய வருணனைகள், அமைந்து, நன்மணம் புணர்தல், பொன்முடி கவிழ்தல், பூம்பொழில் நுகர்தல், புனல் விளையாடல், சிறு வரைப் பெறுதல், புலவியில் புலத்தல், கலவியிற் களித்தல் முதலியன புனையப் பெற்று, மந்திரம், தூது, செலவு, இகல், வெற்றி முதலிய சந்தியிற் றொடர்ந்து, சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்னும் உறுப்புகள் கொண்டு, நல்ல சுவையும், பாவமும் நிறைந்து, கற்றோர் புனைவது பெருங்காப்பியம் என்பர். அவற்றில் சில உறுப்புக்கள் குறைந்து வருவது காப்பியமெனப்படும்.

நாடகத் தொடக்கத்திலே அமையும் தமிழ்த் தெய்வ வணக்கத்தினை வாழ்த்து வணக்கமாகக் கொள்ளலாம். அற வாழ்வின் விளக்கங்களை யெல்லாம் கருணாகரர் பேச்சுக் கொண்டு தெளியலாம். பொருளின் பல்வேறு வகைப்பட்ட நடையமைதிகளை நாராயணன் பேச்சால் நலமுற விளங்கிக் கொள்ளலாம். இரட்டுற மொழிதலில் இவன் வல்லவனாக விளங்குவதனை நூல் முழுதும் காணலாம். இயற்கையில் ஈடுபாடு கொண்ட நடராசன் இல்லறத்தின் இயல்பினையும், பெண் இன்பத்தின் இனிமையினையும் பாங்குறக் கிளத்துகின்றான். இல்லறத்தின் இறுதியாய் விளங்கும் பேரின்ப நெறியே அந்தமில் இன்பத்து வீட்டுப் பேற்றினைத் தருவதாகும் என்ற உண்மையை, அநுபூதியின் மேன்மை குறித்து அறைந்து பேசும் நிஷ்டாபரர் வாக்குக் கொண்டு தெளியலாம்.

நூலின் தொடக்கத்தில் சுந்தர முனிவரிடம் குடிலன் தான் அரும்பாடுபட்டு அமைத்த திருநெல்வேலிக் கோட்டையின் சிறப்பினையும்,பாண்டிய நாட்டின் மேன்மையினையும், பொதிய மலையின் பெருமையினையும், தாமிரபரணி யாற்றின் உயர்வினையும் விளங்க எடுத்து மொழிகின்றான். தென்பாண்டிநாடு சிவலோகமாக விளங்குகின்றது. பொதிய மலையில் அகத்தியர் வாழ்கிறார். பொதியத்தில் பிறந்து, விலையுயர்ந்த முத்தையும் வேழ மருப்பையும் அடித்துக்

கொண்டு, சந்தனக் காடுகளை அழித்து, சங்கம் நிறைந்த விளைநிலங்களில் படிந்து, பொழில் பல கடந்து, குளம் பல நிரப்பி வளம் கொழித்து வருகிறது தாமிரபரணியாறு. பாண்டியர் தலைநகராம் திருநெல்வேலி அமரர் பொன்னகராம் அமராவதியினும் பொலிவுற்று விளங்குகின்றது. கோட்டையைச் சுற்றி அமைந்துள்ள அகழி கடல் ஆழமாக உள்ளது. இவ்வாறு ஆசிரியர் மலை, கடல், நாடு, வளநகர் முதலியனவற்றை அழகுறப் புனைந்துள்ளார்.

நடராசன் தனிமொழியில் வைகறையில் கீழ்வானத்தில் கோலம் புதுக்கியெழும் கதிரவனின் தோற்றமும், மாலையிலேயே மேற்றிசையில் மாணிக்கச் சுடராய் மறையும் கதிரவனின் மறைவும் இடம் பெற்றுள்ளன. 'நீவியக் கிழியில் ஓவியத் தொழில்வல்லோன் தீட்டிய சித்திரம் போல' என்று எழு ஞாயிற்றின் எழிலும், 'பொன்வினைக் கம்மியன் உருக்கி விடுதற்குயர்த்திய ஆடகப்பெருக்கென விளங்கும்' என்று அத்தமன சூரியனின் அழகும் கவினுற இந்நூலில் கிளத்தப் பட்டுள்ளன.

குடிலனின் சூழ்ச்சிகள் அனைத்தும் மந்திரம்—ஆலோசனையின் விளைவுகள்; 'புத்தியே சகல சக்தியும்' என்று அவன் கருதும் அறிவாற்றலின் விளைவுகள். பலதேவன் புருடோத்தமனிடத்தில் தூது செல்கிறான்; இரு நாட்டிற்கும் இடையிலான இகல் நன்செய் நாடு குறித்தது என மொழிகிறான். புருடோத்தமனிடத்திலிருந்து ஜீவகன் அவைக்கு வரும் தூதன் உழிஞை சூட உளம் பற்றி நிற்கிற தன் மன்னன் உள்ளத்தினைக் கூற, ஜீவகன் நொச்சி சூடுவேன் என அவனிடம் ஆர்ப்பரித்து எதிர் மொழி தருகின்றான். வீரம், செலவு, வென்றி, சந்தி முதலியன போர் காரணமாக எழுகின்றன.

நாடக இறுதியில் குடிலன் சூழ்ச்சிகள் எல்லாம் அழிந்து இறையருளால் மனோன்மணி புருடோத்தமனுக்கு மாலை

சூட்டுகிறாள். நன்மணம் சுந்தரர் முதலாய நல்லோர் வாழ்த்துடன் நன்சிறப்புடன் நடைபெறுகின்றது.

மேலும் சருக்கம், இலம்பகம் என்ற பழைய பாகுபாடு இன்றி அங்கம், களம் என்ற புதிய பாகுபாட்டுடன் இந்நூல் இலங்குகின்றது.

உயரிய கருத்துக்களை உள்ளடக்கி உயர்ந்த நெஞ்சத்தி லிருந்து முகிழ்த்த நூல் மனோன்மணீயமாகும். இந்நூல் நாடக தமிழ்த்துறைக்கு இடைக் காலத்தே ஏற்பட்ட நலிவினை மெலிவித்து நன்னலம் சேர்ப்பதாகும். இவ்வா றாக பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களின், மனோன் மணீயம் நாடக நல்லியல்புகள் அனைத்தும் அமைந்து காப்பிய அமைதி கவினுறத் துலங்கி, கருத்து மேம்பாடுகள் வண்ணமுறப் பொலிந்து, மாண்புடன் தமிழ் இலக்கிய வானில் வண்ணமுறத் தனி ஒளி வீசித் திகழ்கின்றது.

# 2. நன்செய் நாட்டின் வளம்

மனோன்மணிக்கு ஏற்ற கணவன் சேரநாட்டு மன்னன் புருடோத்தமனே என்று சுந்தர முனிவர் ஜீவகனிடம் கூறுகின்றார்; நடராசனைத் தூது அனுப்பி மன்றல்வினை பேசி வரச் சொல்கிறார். முனிவர் போனபின், ஜீவகன் தன் மந்திரி குடிலனோடு இது குறித்துப் பேசுகிறான். குடிலன் பெண் வீட்டார் முதலில் மணம் பேசிச் செல்லுதல் மரபும் வழக்காறும் அன்றென்றும், அதற்குபாயமாகத் தங்கள் ஆட்சிக் கீழ் முன்னர் இருந்த நன்செய் நாட்டின் மீது உரிமை கோரித் தூது அனுப்புவோம் என்றும் கூறி, நாஞ்சில் நாட்டு-நன்செய் நாட்டு வளத்தினைச் சிறக்க வருணித்துப் பேசுகின்றான்.

இவ்வாறு குடிலன் கூறும் நன்செய் நாட்டு வருணனை திணை மயக்கத்தினைத் திறம்படக் கூறுகின்றது. இவ் வருணனையில் மருதவளமும் நெய்தல் வளமும் மயங்குகின்றன. செல்வம் சேர்ந்த அந்நாட்டினை வருணிக்கும் பொழுது, ஆசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் சொல்லழகும் பொருளழகும் பொருந்தி வரும் வண்ணம் நன்செய் நாட்டினை நம் கண்முன் தோன்றுமாறு வருணிக்கின்றார்.

இனி நன்செய் நாட்டின் வளத்தினைக் காண்போம்:

1. நெய்தல் நிலத்து வெண்மணலில் அங்கு வாழும் பரதவப் பெண்கள் (நுளைச்சியர்கள்) உப்பிட்ட மீனை உலர்த்துகின்றனர். அம் மீன்களை மருத நிலத்து வண்டானங் குருகு வர வர, அதனை ஓட்ட அந்த நுளைச்சியர் காதில் அணிந்துள்ள பொற் குழையை எடுத்து வீசுகிறார்கள். அப்பொற் குழை தவறிப்போய், கடற்கரையிலுள்ள புன்னை மரத்தடியின் நிழலில் உறங்கி, அம்மலர்த்

தாதுக்களால் பொன்னிறம் பெற்றுப் பொலிந்து திரும்பி மருதநிலத்துக்குச் சென்ற எருமையின் மேல் அமர்ந்து சிறகுலர்த்தும் காக்கையின்மீது பட்டு அதற்கு உறுகண் விளைவிக்கும். (இங்கு நெய்தல் நிலமும் மருதநிலமும் ஒன்றிற்கொன்று அணித்தே இருந்து திணை மயக்கம் ஏற்படுகின்ற அழகு காண்க.)

2. நெய்தல் நிலத்து ஓடும் நீரோடையின் கரையில் மலர்ந்து மணம் பரப்பும் தாழம்பூவின் நிழலைத் தனது பெடை என எண்ணி மயங்கிய தாராக் கோழி (வாத்து) அதனை ஓடித் தழுவிற்று; இச்செயலைக் கண்ட ஆம்பல் மலர் ஏளனம் செய்து சிரிக்கவும், சிரித்த அதன் வாயில் தன் மகரந்தத் தாதுக்களைக் கொட்டிக் கோங்குமரம் விலக்கும்.

3. சங்கினம் ஈன்ற வெண்ணிற முத்துக்களை அன்னப் பறவையின் முட்டைகள் என்று மயங்கிய பருந்துக் கூட்டம், அவற்றைத் தம் கால்களால் கவர்ந்து சென்று அடப்பங் கொடியிலே மறைத்து வைக்கும்.

4. கருப்பஞ் சாற்றினைப் பக்குவமாகக் காய்ச்சும் மருத நிலச்சாலையில் எழுகின்ற புகை மண்டுதலால், நெய்தல் நிலத்தில் வாடி வதங்கிய கொடிகள் தளிர்க்கும்படி, புல்மேய்ந்து திரும்பும் எருமை, அப்புகையினைத் தன் கன்றெனக் கருதி மயங்கித் தன் தீம்பாலைச் சொரியும்.

5. நிலத்தில் உழவர்கள் தங்கள் கலப்பையால் ஆழ உழுதலின் விளைவாக அக்கலப்பையின் நுனி பூமியைத் தோண்டிக் கொண்டு போகும்பொழுது, அதனால் துன்பம் அடைந்த ஆமை, பரதவப் பெண்கள் தங்கள் கணவரோடு கொண்ட ஊடலில் விளைந்த சினத்தால் கோபத்தோடு தங்கள் மார்பில் மணக்கப் பூசியிருந்து வழித்தெறிந்த குங்குமச் சேற்றில் மறைந்து கொள்ளும்.

6. மருதமரத்தின் அழகிய கிளைகளில் வாழும் அன்றில் பறவைகள், மிகுந்த மீன்களைப் பிடிப்பதற்காக, நெய்தல்

நிலத்துப் பரதவர்கள் அமைதியான இரவில் கொட்டும் பறையொலியைக் கேட்டுக் கண் உறங்க மாட்டாதனவாய்த் துலங்கும்.

7. மூங்கில்போல் செழித்து வளர்ந்துள்ள மருத நிலத்து வயல்களின் நெற்பயிரின் அடித்தாள்களிடத்தே, உப்புப் பொதி ஏற்றிய ஓடங்களைப் பரதவர் கயிறுகொண்டு கட்டி வரிசையாக நிறுத்துவர்.

8. நாட்டில் நாடெங்கும் இரவு பகல் என்று பாராது மேகம் என்னும் கொள்கலம், தான் கடலில் முகந்த நீரினைக் கவித்துக் கொட்டியபிறகு செல்லும் வழியில் சிந்திய சிறு நீரே பாண்டிய நாட்டு வறுமையைப் போக்கும் சாரலாகும்.

9. நன்செய் நாட்டில் நிறைந்து பெருகியோடும் ஆற்று வெள்ளமும், கடல் வெள்ளமும் ஒன்று கலந்து ஒன்றிற் கொன்று விட்டுக்கொடுக்காமல் இளைக்காது எப்பொழுதும் எதிர்த்து நிற்கும் பிணக்கினால், நடுக்கடல் நீரும் உவப்பின் றித் நன்னீராய் இருக்கும். அக் கடலின் ஓரமாக இருக்கும் வயற் கரையில் மரக்கலங்கள் வந்து தங்கும்.

10. கால்வாய்களில் ஓடி மதகுப் பலகையைக் கடந்து பாய்ந்து விழும்போது எழும் 'ஓம்' என்ற நீரின் ஓசை விடாது ஒலித்ததினால், அவ் ஓசை பிரணவ ஒலியேபோல் அந்நன் செய் நாட்டின் இருபுறமும் எஞ்ஞான்றும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

11. நறுமணங் கொண்ட மலர்களையுடைய குவளைக் கொடியும், பன்னிறப் புற்களும் படர்ந்துள்ள நிலத்தைக் கம்பளமாக விரித்துக் கொண்டும், தாமரையின் தூய்மை யான மொட்டுக்களைப் புகையில்லாத விளக்காகக் கொண்டும், நிலவொளி வீசும் முத்துக்களையும் சோளிகளை யும் பணமாகப் பரப்பியும், நண்டுகள் வணிகர்களைப் போல்

அமர்ந்து தம் விரல்களால் அப்பணத்தினைக் கணக்கெண்ணிப் பார்க்கின்றன. அது பொழுது செந்நிறக் கால்களையுடைய வெண்ணிற அன்னமும், புகர்க்காலினையுடைய கொக்கும். சிவந்த கண்களையுடைய செம்போத்துப் பறவையும், கம்பங்கோழியும் உரத்த குரலையுடைய நாரையும், கடுஞ்சினங்கொண்ட காடையும், பொய்யாப் புள்ளும், உள்ளான் குருவியும் என்றிவை பலவும் சேர்ந்து குழுமித் தங்கள் சிரம் சிறிதசைத்தும் இறகை அடித்தும், மாலைக் கடையாம் அங்காடியின் அழகை விளக்கி, வணிகர் பேசும் குழுக்குறிபோல் தத்தம் கூட்டத்தினரை விளித்து அழைக்கும் பேரொலியே அந்நாட்டின் ஒரு பக்கம் கேட்கும்.

12. வலிமை சான்ற எருதுகளை வரிசை வரிசையாக நிறுத்திப் பொன்னேர் பூட்டி நின்ற சகர குமரர்களுக்கு ஒப்பான சலியாத உழைப்புடைய உழவர்கள் வாழ்த்திப் பாடும் குரவைப் பாட்டு ஒரு பக்கம் மங்கலமாய் முழங்கும்.

13. வயலில் சேற்றிடை நெருங்கி வளர்ந்துள்ள நாற்றினை எடுப்பவர்களும், அவற்றைக் கூறுபடுத்திக் கட்டாகக் கட்டுவோரும், பின் அந்நாற்றினை நடுகை வயலுக்கு நடவுக்குக் கொண்டுசெல்வோரும் நடுவோரும் களை களைவோரும் ஆகிய கள்ளுண்டு களிக்கும் பள்ளியர், பள்ளுப் பாட்டும் இசைப் பாட்டும் பாடும் ஓலம், ஒரு பக்கம் எங்கும் பரவி விளங்கும்.

14. குன்றென அரிந்து குவிக்கப்பட்டிருக்கும் செந்நெற் போரின்மீது பிணை விடப்பட்டுச் சுற்றி வரும் எருமைகள் மேகம்போல் விளங்க, அதுபோது எழும் மருதநிலப்பறையின் மங்கலவொலி எங்கும் நிறைந்திலங்கும்.

15. இறகால் தம்முடல் தடவிடின் கூச்சத்தால் சிரிக்கும் சிறு பெண்களைப் போன்று, நாஞ்சில் நாடாம் நிலமகள் வயலுழவர்களின் கலப்பையின் கொழுமுனை தன்மேல் படுவதற்கு முன் கூச்சம் அடைந்து, தன் உடல் குழைந்து இளக

பயிராகிய மயிர் சிலிர்த்துப் பல்வகை வளங்களையும் பாங்குறத் தந்து பரவசப்படுவாள்.

இவ்வாறு நன்செய் நாட்டினைக் குடிலன் வருணிக்கும் கூற்றில், அந்நாட்டின் மழை வளமும், ஆற்று வளமும், நில வளமும், நெய்தல் வளமும், நீர் வளமும், உழவு வளமும் முதலான சிறப்புக்கள் அனைத்தினையும் ஒருங்கே கண்டு மகிழலாம். இயற்கையின் இனிய பெற்றி இதனால் இனிமையுடன் விளக்கமுறுகின்றது.

# 3. சிவகாமி சரிதம்

மனேன்மணீய நாடகத்தில் மறக்கமுடியாத முக்கிய மான பகுதி சிவகாமி சரிதமாகும். சிலப்பதிகாரத்தில் அமைந் துள்ள கானல் வரி போன்று சுவையான பாடல்களைக் கொண்ட பகுதி இதுவேயாம். இப்பகுதி அமைந்துள்ள இடமும் மிகவும் சிறப்பான—பொருத்தமான இடமாகும். நாடகத் தொடக்கத்தில் நாம் மனோன்மணியையும் அவள் தோழி வாணியையும் சந்திக்கும்பொழுது காதலைப்பற்றி அவர்கள் கருத்து வேற்றுமை கொண்டவர்களாய் இருக் கிறார்கள். 'அரிவையர் நிறையழி காதல் நேரும்' தன்மை யைத் தெளிவாக எடுத்துரைத்து, 'தாமே துறக்கினும் மறப்பனோ என்னுளம் மன்னிய ஒருவரை' என்று வாணி காதலைப் பற்றி உறுதியுடன் மொழிகிறாள். மாறாக மனோன்மணியோவெனில் 'பூவையர் காதல் இதுவே யாமெனில் இகழ்தற் பாற்றே' என்கிறாள்; 'காதல் என்பது பேயோ பூதமோ' என்றும் கேட்கிறாள்;என் கருத்து உண்மை யில் 'வனத்தில் எய்தி வற்கலை புனைந்து மனத்தையடக்கி மாதவம் செயற்கே' அவாவுகின்றது என்றும் குடுப்பிடுகின் றாள். மேலும் வாணி பலதேவனை மணப்பதால் ஏற்படும் பழுதென்னை என்றும் கூறிக் காதலின் தன்மையை—பெற் றியை முற்றிலும் உணராதவளாயிருக்கிறாள்.

ஆனால் அன்றிரவே மனோன்மணி காதல் வயப்படு கிறாள். சேரநாட்டு வேந்தன் புருடோத்தமனைக் கனவில் கண்ட அன்றிலிருந்து கருத்தழிகிறாள். 'மட்டளவின்றிக் காதல் கதுவுங்காலைஒதுவை நீயேஉறும தன்சுவையே'என்று வாணி அவளிடம் கூறியதற்கேற்ப, காதல் அவளை வந்து பற்றிய அளவில் படாதபாடு படுகிறாள். 'நண்ப! என்னுயிரி நாத' என்று புலம்புகிறாள். மேலும் 'கண்டது கனவெனில் கனவும் அன்று, மற்று நனவெனில் நனவும் அன்று' என்றும்,

கண்ணால் எங்ஙனம் காணுவன்? கண்ணுளார் எண்ணவும் படாஅர்'என்னுளும் உளார்' என்றும் துணைபுணர் அன்னத் தூவி பரப்பிய அமளி மிசை படுத்தும் கண்படா நிலையில் நெஞ்சம் நிறை தளர்ந்து, நாணமும் நன்னலமும் தொலைய நடுங்குகின்றாள்.

இதற்கு மாறான காதல் அனுபவம் வாணியினுடையது. அது மனோன்மணியின் காதல்போல் திடீரென்று தோன்றிய தன்று: மெல்ல மெல்ல வளர்ந்து நெஞ்சில் நிறைந்தது. மங்கையர் தன்மனத்தினை வாங்கும் அழகனாம் நடராச னையே தன் மனத்தில் கொண்டு பிற ஆடவரைக் கனவிலும் கருதாத நிலையில் கற்பொழுக்கத்தோடு வாழ்ந்து வரு கிறாள் வாணி. அவளைப் பொறுத்தவரையில் காதல் என்பது விளையாட்டோ, பொழுது போக்கோ, வணிகமோ அல்ல; காதல் அவள் உள்ளத்தில் எல்லாமாய் எங்குமாய் நீக்கமற நிறைந்தொளிர்கின்றது. ஆனாலும் அவளுக்குத் தான் எத்தனை தொல்லைகள்? சோதனைகள்? அவள் காதலனை அவள் தாய் மனை வாரா வண்ணம் தடுக்க, குடிலன் ஊர் வாரா வண்ணம் தடுத்துத் துரத்துகிறான். நாட்டின் மன்னன் ஜீவகனும் வாணியின் மனத்தை அச்சுறுத்தி மாற்றமுனைகிறான். அவள் காதலன் நடராச னும் ஒரு சொல்' வேண்ட, அதனை நாணந் தடுக்க வாணி தராத நிலையில், அவனும் கலக்கமுற்றுச் செல்கிறான். இதனையும் எண்ணித் துடிக்கிறாள் வாணி. இவ்வாறு நெஞ்சும் நிறையும் நாணுமழிந்து, அழுத கண்கள் அஞ்சனம் கரைந்து, கஞ்சனக் கதுப்பும் கரைந்து, கலுழ்ந்து நிற்கிறாள் காதலின் செவ்வை யுணர்ந்த வாணி.

மனோன்மணி, வாணி இருவர்தம் உளநிலையும் காதலை எண்ணிக் கலங்குவதாக உள்ளது. "இந்நீர்மை வாய்ந்த இருவரின் உள்ளம் எதனை அவாவும்? அவர்கள் ஒன்றனைச் சொல்லவோ, கேட்கவோ விழைவது எப்பொரு ளைப் பற்றி" என்று நினைப்போம்? வேறு யாது? காதல் தொடர்பான சொற்களையும் காதலால் விழுங்கப்பட்ட

நீர்மையும் அவ்வாறு ஒருவரை யொருவர் உண்மையாய் நேசிக்கும் காலத்து, இடையூறு அவர்களைப் பிரிக்க, அப்பிரி வினால் அவர்கள் துயருறுவதும் இடையில் பலதிறப்பட்ட இன்னலுற்றுப்பின் திருவருள கூட்ட அணைந்து இன்புறு வதும் ஆகிய இந் நிகழ்ச்சிகளை யன்றோ கேட்கவோ சொல்லவோ விழையும்! அவ்விதம் சொல்லவோ சொல் வதைக் கேட்கவோ விழைய அதற்கேற்ற தகுதி இருவரிடத் லும் இருத்தல் வேண்டும். கேட்பவரைக் காட்டிலும் சொல் பவருக்கு மனத்திட்பமும், முதிர்ந்த அனுபவமும் இருத்தல் வேண்டும். கேட்பவர் அநேகமாக ஐய உளமுடையவரா யிருப்பர். இப் பெற்றி தெரிந்து ஆசிரியர் சுந்தரம்பிள்ளை யவர்கள், மனத்திட்பமும், முதிர்ந்த அறிவும், காதலில் பழகிய உளமும்,உலக அனுபவமும்,தான் சொல்லும் நிகழ்ச் சிகளில் அநேகமாக அனுபவித்தறிந்தவளுமான வாணியின் வாயிலாக இச்சிவகாமியின் சரிதத்தைச் சொல்லவைக் கிறார். கல்விகேள்விகளால் முதிர்ந்த அறிவு நிரம்பப் பெற்ற வளே யாயினும் உலகம் இன்னதென அறியாதவளாதலாலும் ‘காதல் என்பது என்? பூதமோ பேயோ?’ என்று கூறி நகை யாடிக் கனாத்திறத்தினால் இஞ்ஞான்றே காதலின் தகுதியைச் சிறிது உணரப் பெற்றவளாதலாலும் மனோன்மணியைக் கேட்கவைத்தார். இவ்வித நுட்பம் தெரிந்து இச் ‘சிவகாமி சரிதத்தை’ அமைத்த ஆசிரியரது பேரறிவு “போற்றத்தக்கது” என்று கலாநிலையம் என்ற பழைய திங்கள் இலக்கிய ஏடு சிவகாமி சரிதம் அமைந்துள்ள சிறப்பினைப் பாராட்டி உரைக்கின்றது.

இனிக் கதையினைக் காண்போம்.

கட்டழகு நிறைந்த காளை ஒருவன் துறவு வேடம் புனைந்து தொல்லை மிகப்பட்டுப் பாழடவியில் பாதைவிட்டு அலைந்து கொண்டிருக்கும் நிலையில் ஒரு மௌன தவமுனி வனைக் கண்ணுறுகின்றான்; தனக்கு மனமிரங்கி அருள் புரிந்து பாவியொருவனையளித்த பலனைப் பெறவேண்டு மென்கிறான். “நடக்க நடக்கப் பின் தொடரும் நிழலைப்

போன்று எல்லையற்றுப் பரந்து சொற்களையும் தொடரும் காடு முழுவதும் அலைந்து திரிந்தேன். அடவியின் ஆரிருளில் இனி நடக்க ஆவதில்லை; எனவே அருள் கூர்ந்து உடலம் அறும் வகை உளதாகிய வீட்டுப்பேற்றினையும் அதனை அடையும் நெறியினையும் பாங்காக எனக்கு உணர்த்த வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான்.

மௌன தவ முனிவனின் காதில் இந்த வேண்டுகோள் வீழ்ந்தவுடனே "தனிப்பெருங் காடு இது; இதுவே என் வீடு; இங்கு உலகோர் அணையார்; வேறொன்றும் மடமில்லை; அவாவினை யடக்கிய அறந்தரு நெஞ்சினரே என் வீட்டினை யடைதல் ஒல்லும் அவ்வாறு இங்கு வருபவர் பணிப்பாயி னையும் பூவணையினையும் எண்ணிப் பார்க்க மாட்டார்கள். பருகுவதற்குப் பாலமிழ்தும் கிடைக்காது. ஆயினும் நீ என்னுடன் வருவதால் உன் வேதனையும் மெய்ச்சலிப்பும் உன்னைவிட்டகலும்! நீ விரும்பின் என்னைப் பின் தொடர்ந்து வருக; இன்றேல் வேறு இடம் காண்க'' என்று மொழிந்தார். இவ்வாறு முனிவர்கூறிய இனியமொழிகேட்டு இருசெவியும் குளிர்ந்தான. பழைய நினைவு வந்து அவன் கண்கள் நீரைப் பனித்தன. 'நன்று' என்று கூறி நற்றவ முனிவன் நடந்து சென்ற வழியினைப் பின்பற்றித் தொடர்ந்து நடந்து சென்றான்.

இந்திரசால வித்தை புரிவோன் இட்ட கருந்திரை போன்று எட்டுத்திசைகளிலும் இருள் பரந்து விரிந்தது. அந்தரத்தில் சுந்தரத் தாரைகள் கண்சிமிட்டித் தங்களுக்குள் ஏதோ அரிய ரகசியங்கள் பேசி புன்னகைபுரிந்துகொண்டன. எனபுருகப் பிணைந்த இணை அன்றிற் பறவைகள் சிறிது விலகின; அச்சிறு பொழுது பிரிவினையும் பொறுக்கமாட் டாது ஏங்கி, உயிர் விடுப்பன போல இடையிடையே கூவின. அவற்றின் அன்பு நிலையை அறிந்தன போலவும், அவற்றின் துயரத்தினைத் தெரிந்தன போலவும் மரங்கள் அகமுடைந்து தம் அலர்ந்த மலர் தூவிக் கண்ணீர்க் காணிக்கை செலுத் தின. வெளவாற் பறவை இருட்டில் இங்கும் விந்தை நடப்

பதைத் தெரிவிக்க விளிப்பவர்போல் அலைந்தன; மின்மினிப் பூச்சிகள் விளக்கெடுப்பன போல் வெளிச்சம் தந்தன. இவ்வாறு காதலில் சட்டுண்ட இளைஞர் உயிர் வாட, அந்தி என்னும் பசலை மெய்யாட்டியை முன் ஏவி, இரவென்னும் இறைவி வந்திருந்தனள். பொறியரவின் தலையிலுள்ள மாணிக்கக் கற்களும், யானைத் தந்தங்களும் புலியின் அனல் விழிகளும் வெளிச்சத்தை உமிழ்ந்தன. பிரிவரிய ஊசி வழி பின்தொடரும் நூலைப்போல் பேரயர்வோடு மன மிறந்து முனிவரைப் பின்தொடர்ந்தான் மைந்தன். முனிவரோ அரிய புதரை அகற்றி, அன்போடு இளைஞனை அழைத்துச் சென்றார். முட்களை ஒதுக்கி நுழைந்தும், குகைகளை குறித்துக் கடந்தும், ஓங்கார ஒலி எழுப்பும் காட்டாற்றினைத் தாண்டியும், தவமுனிவனின் இடம் வந்து சேர்ந்தார்கள் இருவரும். வாயிலென்னப் பூட்டென்ன மதிலென்ன விளங்கும் மனையென்னும் பெயர்க்குரிய மர பொன்றும் இன்றி, நெருப்பொன்று மட்டுமே கொழுந்து விட்டெரியும் வெட்டவெளியே முனிவனின் இருப்பிடமாக இருந்தது. இருப்பிடத்தை அடைந்த இனிய தவமுனிவர் நெருப்பு நன்கு கனிந்து சுடர் விட்டு எரிவதற்கு நிமல விற கடுக்கினார். கனன்று எழுந்த நெருப்பு எங்கே தன்னைக் காட்டிக் கொடுத்துவிடுமோ என்று அஞ்சி, முனிவன் வேடம் புனைந்த இளைஞன் சற்று உளங்கூசிக் கூனிக் குறுகினான். அந்நிலையில் இளைஞனை நோக்கி தவமுனிவர் "மைந்தா! இனி நடக்க வழியுமில்லை; இதுவே நம்மிடம். இக்கனலருகே பனிபொழியும் வழிநடந்த பனிப்பகலப் பல மூலங்களை புசிக்கப் பறக்கும் உனது இளைப்பு" என்று கந்த மூலக் கனிகளை அவன் அருகில் வைத்தார். மேலும் அவர் நாவினால் விரற்கடைத் தூரத்தைக் கடக்க முடியாதவர் கடலையும் மலையையும் தாண்டியலைகின்றார்கள். என்னே மனிதரின் மூடமதி இருந்தவாறு?" என்று கூறினார்.

இதற்கு மறுமொழி யொன்றும் மொழியாதிருந்த இளைஞனை நோக்கி உனக்கு ஏன் கூச்சம்? நம் இருவரில்

பெரியர் சிறியர் என்று வேறுபாடு காணவேண்டா; நெருப் பருகே சென்று குளிர் காய்ந்து உன் அயர்வைப் போக்கிக் கொள்! ஏனெனில் சேர்ந்தார்க்குக் களிப்பும் சேராதார்க்குக் களிப்பும் உதவும் நெருப்பு'' என்று இரங்கி இரண்டு முறை இயம்பியும், தன்னருகேவாராது எதிரொன்றும் இசையாமல் மனமிறந்து புறமொதுங்கி மறைந்து வறிதிருந்த மகன் மலைவு தெளியப் பலவகைகளிலும் முயன்றார். ஆயினும் அவர் பகர்ந்த நயஉரைகள் இளைஞன் செவியில் ஏறவில்லை; பாதி முகத்தினை ஒரு பதும மலர் போன்ற கைகளால் மறைத்துக் கொண்டு, சுவரோவியம் போல் சுந்தரமாகத் தோன்றிய இளைஞனைப் பார்த்து, சிந்தை நொந்து முனிவர் 'எலி பிடித்து அலைக்குஞ் சிறுபூனை போன்று அடங்கி ஓங்கி எரிந்து ஒளி' தந்த நெருப்பின் ஒளியில் இளைஞனைக் கூர்ந்து உற்று நோக்கினார்.

மொழியாதும் புகலாது விழிமாரி பொழிய முகங்கவிழ்ந்து நிற்கும் இளைஞனை நோக்கி, முனிவர் கூறுவார்; ''எழில் நிறைந்த இளமையில் உனக்கு ஏற்பட்ட இடையூறுகள் உன்னை இந்தக் கோலம் புனையச் செய்தனவா? உனக்குக் கவலை என்ன? அரும் பொருளை இழந்தனையா? அரிய நண்பர்களை இழந்தனையா? காதல் கொள்ள நீ விழைந்த மாது பெருஞ் சூதாய் உன்னைக் கைவிட்டுக் கழன்றனளா? யாது உன் குறை? மெய்யாகச் சொல். இந்த உலகத்தில் உறும் சுகமனைத்தும் எதிரே தெரியும் இத்தீயில் தோன்றி மறையும் நிழல் போன்றவையே? கையாரும் பொருளென னக் கருதி, மணல் வகையைக் காப்பதெல்லாம் இலவுகிளி காத்தலினும் வறிதே! நண்பர்களும் உறவினர்களும் நம்மை நாடி உறவாடுவது, நறு நெய்க்குடத்தை நாடி மொய்க்க வரும் எறும்பு போன்றதே. பெண்கள் அகக் காதலெலாம் பேசு முயற்கொம்பே! அவர்கள் உடலம் பெருங் கபடங் களின் கொள்கலமே!'' என்றார்.

மௌனதவ முனிகள் மொழிந்த மொழிகள் இளைஞ னைக் கனவு கண்டு விழித்த கள்வன் நிலைக்கு ஆளாக்கின;

கையொடு பட்ட கள்வன் போன்று வெட்கி முகம் வெளுத்தான். நாணத்தை ஆபரணமாகப் பூண்டிருந்த அந்த இளைஞனை மீண்டும் நோக்க, அந்த இளைஞனின் வேஷ ரகசியங்கள் வெட்ட வெளியாயின. உண்மை பெறு கண்ணிணைகள் பெண்மை யுருவினைத் தெரிவித்தன. இவ்விதமாகத் தன்னைப் பெண்ணென இப்பொழுது வெளிப்படுத்திக் கொண்ட மங்கை எழுந்து, முனிவன் தாளிணை வணங்கி 'தெய்வமோடு நீ வாழும் திருக்கோயிலின் தூய்மைக்கு மாசு புகுத்திவிட்ட என்னை மறாது மன்னியுங்கள்'' என்று கூறிவிட்டுத் தன் கதையைச் சொல்லலுற்றாள்.

''மண்ணுலகில் காவிரிப்பூ மாநகரில் வணிககுல திலகமாக வாழ்ந்தாள் ஒரு மங்கை. இவள் வயிற்றில் இரண்டு பெண்களும் ஒரு மகனும் பிறந்தனர். இரண்டு பெண்களில் ஒருத்தி முழுமலடி; ஆயினும் செப்பறிய செல்வமுடையவள்; பிறிதொருத்தியின் மகளே யான்; ஒப்பரிய புருடர்க்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. மாமன் முறையுடைய அந்தப் பிள்ளையும் நானும் இளவயது தொடங்கி உடல் பிரியா நிழல் போல் ஒன்றாக வளர்ந்தோம். அவர் அடல் பெரியர்; அருளுருவர் அலகில் வடிவுடையர்; அவர் திருப்பெயரை யான் கூறல் அடாது" என்று கூறிய அளவில், முனிவனின் உடல் சிலிர்த்தது; கண்களில் கண்ணீர் வடிந்தது. எரிக்க விறகு எடுப்பவன்போல் எழுந்து சென்று விழிகளில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டார்.

இளம்பிடி மேலும் தன் கதையை எடுத்து மொழியத் தொடர்ந்தாள்; 'மலடியாகிய என் சிறிய தாய், தனக்கு மகவில்லாததால் தான் படைத்த செல்வம் அனைத்தையும் எனக்கே தந்தாள். பாவி நான் அச்செல்வத்தால் மதிமயங்கி நிலைதடுமாறி அவரை மதிக்க மறந்தேன். அவர் குறிப்பால் என் தவற்றினைச் சுட்டிக் காட்டியும் உணர்ந்தேனில்லை; மாறாக வெறுத்தேன். அவர் இதற்கு வேதனைப் பட்டு வெதும்பி இறுதியில் ஒரு நாள் என்னை விட்டே போய்விட்டார். அதன் பின் மணப் பருவத்தில் இருந்த என்னை

மணக்க விரும்பி வந்தவர்கள், பொருள் விரும்பி, குலம் விரும்பி, பொலம் விரும்பி, என்னை மணக்க வந்தார்களே தவிர என்னை விரும்பி என்னை மணக்கவந்தவர்கள் யாரும் இல்லை. என்னை விரும்பியவர் அவர் ஒருவரே என்ற உண்மையை அப்பொழுது தெளிந்தேன்; ஆயினும் அவர் இல்லையே! ஒரு வாரம், ஒரு மாதம், ஒருவருட காலம் ஓயாமல் அவரையே நினைத்திருந்தும் அவர் திரும்பி வரவில்லை. என் தோழியரோ, 'முன்னர் வெறுத்து மொழிந்தவரை இப்பொழுது தேடினால் எங்கிருந்து கிடைப்பார்' என்று என் செயலைச் சுட்டிக்காட்டி ஏளனம் செய்தனர். அவரைக் கண்டவரைக் கேட்டவரைக் காசினியில் தேடிக் கண்டிடச் சென்று யான் பட்ட துன்பத்திற்கு அளவேயில்லை. அவர் இருப்பார் என ஊக நெறியில் கூறியவர்களைத் தவிர உள்ளபடியே கண்டவர்கள் யாரும் இல்லை. 'உண்டெனிலோ கண்டிடுவேன்; இல்லையெனில் விரைவில் உயிர் விடுதலே நலம்' என்று கருதி, ஒருவித முடிவோடு இவ் ஆண் வேடந் தாங்கி, எங்கெங்கும் தேடி உடல் இளைத்தேன்.

தீர்த்த குளம், மூர்த்தி தலம், குருக்கள் உறையும் மடம், சமய வாதக்கணக்கர்கள் வாதிடும் சமய மண்டபம், யோகியர் வாழும் குகை முதலிய பல விடங்களுக்குச் சென்று தேடினேன். என் முயற்சிகள் எல்லாம் பாழே. தங்கள் தங்கள் பேட்டினை மறக்காத மானினையும், களிற்றினையும், குயிலினையும் 'நான் மறவாத நாதனை எங்கும் அறிவீரோ? அறிந்தால் கூறுங்கள்' என்று வினவவும் பயன் இல்லை. இவ்விடமும் அவ்விடமும் எவ்விடமும் தேடியும், என் அதிபரைக் காணமுடியவில்லை. இனி இவ்வுடம்பும் எனக்கு மிகவும் அருவருப்புடையதாகும். அவர் இல்லையெனில், என்னளவில் இந்த உலகமனைத்தும் எந்நலமும் இல்லாத ஒரு சுடுகாடேயாம்! மன்னுதவ மாமுனிவனே! என்னுடைய உயிர்த்துணைவரின் சிறு சாயை உங்களிடம் இருப்பதைக் கண்டு என் மனத்துயரத்தினை நின்பால் சொல்லிச் சிறிது ஆற்றிக் கொண்டேன்; இது தவிர

வேறோர் ஏதும் இல்லை. இனி யான் உயிர் வாழ்வதில் பொருளில்லை; இவ்வடிவே இனி எனக்குப் புகலிடம்'' என்று கூறிக் கொழுந்து விட்டெரியும் நெருப்பில் பாய்ந்து உயிர்விட முயன்றாள்.

இவ்வாறு இளமங்கை இசைத்த மொழிகள் முழுவதும் முனிவன் செவியிற் புகுமுன்னரே அவர் மூதுருவம் விலகியது. கவின்மிகு காளையாகத் தோற்றம் தந்தது. முகம் மலர்ந்து, மொழி குளறி, 'சிவகாமி யானுனது சிதம்பரனே' என்று செப்பு முனம், இருவரும் மற்றோ ருருவம் ஆனார்கள். எவர் தாம் முன் அணைந்தனர் என்று இதுகாறும் அறிய முடியவில்லை. இருவரும் ஒன்றாயினர் என்று அறைகிறது சுருதி. அதுபோது மலைமகளும் அலை கலைமகளும் பரிந்து வந்து யார்க்கிதுபோல் வாய்க்குமென வாழ்த்த, அருந்ததியும், 'இஃது எவர்க்கும் கிடைத்தற்கரிய பெருநிலை!' என்று வாழ்த்தினர்.

இக்கதையினை, உறக்கம் கொள்ளாமல் நடுயாமத்தில் துயருறும் மனோன்மணியின் மனக்கவலை மாற்ற, ஊனினையும், உயிரினையும் உருக்கும் வண்ணம் 'கண்டோ எனுமொழிக் காரிகை யணங்கு' பண்ணியல் வாணி, தேனி னும் இனியவாய்ச் சேர்ந்தொரு குரலில் வீணையின் இசை யுடன் விளங்கப் பாடினாள்.

இவ்வுலக உயிர்களாகிய ஆன்மாக்கள் அரும்பொருளாம் பரம்பொருளை—பதியை அடையும் மார்க்கத்தினை— தத்துவ நெறியினை விளக்கும் கதையே சிவகாமி சரிதை யாகும்.

# 1. மனோன்மணி

அவள் அழகிலும் நற்குண நற்செய்கைகளிலும் ஒப்புயர் வற்றவள். அவளுக்கு அப்போது வயது பதினாறாக இருந்தும் அவள் உள்ளம் குழந்தையர் கருத்தும் துறந்தோர் நெஞ்சமும் போல யாதொரு பற்றும் களங்கமுமற்ற நின்மலமாகவே யிருந்தது.

—பேராசிரியர் சுந்தரம்பிள்ளை

மனோன்மணீய நாடகக் காப்பியத்தின் தலைவி மனோன்மணி தொல்குலமாம் பாண்டிய குலத்தில் தோன்றிய ஜீவக மன்னனின் மகள் ஆவள். இவள் அன்பும் அறமுமே யாக்கையாகக் கொண்டவள். தந்தையிடத்தும் தவமுனிவராம் சுந்தரரிடத்தும் தூய அன்பு கொண்டவள்; பிறர் இடுக்கண் உறின் அதனைத் துடைத்தெறிய வேண்டும் என்னும் தொண்டுள்ளமும் பிறர் வாழத் தன்னலத்தையும் துறக்கலாம் என்ற தியாக மனப்பான்மையையும் கொண்டவள்; காவியத் தலைவிக்குரிய நற்பண்புகள் அனைத்தும் நன்கு வாய்க்கப் பெற்றவள்; சங்ககாலத் தலைவியின் நற்குண நற்செய்கைகளைக் குறைவறக் கொண்டவள். பேரழகும் பெருங்குணமும் கொண்டு பல்வேறு இயற்கையினை உடைய மாந்தர்தம் நெஞ்சங்களிலெல்லாம் ஒளி விளக்காக இவள் திகழ்கின்றாள். முதல் அங்கத்தின் முதற் காட்சியிலேயே இவள் நேரடியாகத் தோன்றாவிடினும், இவளைப் பற்றிய குண அழகு மேம்பாடுகளைப் பிறர் வாயிலாகக் கேட்டறிந்து நாம் இவளை நேரடியாகக் காணாமலேயே இவள் பேரில் அன்பு செலுத்தத் தொடங்கி விடுகின்றோம். ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர் 'வெனீஸ் வணிகன்' (The Merchant of Venice) என்னும் நாடகத்தில், அந் நாடகத் தலைவியின் குண அழகு மேம்பாடுகளை நேரடியாகக் கிளத்திக் கூறாமல், பெஸானியோ என்னும் அவள் தன் காதலன் கூற்றாக நமக்குப் புலப்படுத்துகின்றார். இதே

விரகினைக் (Technic) கையாண்டு பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களும் காவியத் தலைவியைத் தோற்றுவாய் செய்யும் பொழுதே நம் நெஞ்சில் நீங்காது நின்று ஒளிவிடும் அன்பின் கொடி விளக்காக ஆக்கிக் காட்டுகின்றார். சான்றாக, துறவு நெறியும் தொண்டுள்ளமும் கொண்ட தூயோரான சுந்தர முனிவர் தன்னை வணங்கிய ஜீவக மன்னனைப் பொதுப்பட வாழ்த்திவிட்டுச் ‘சுகமே போலும், மனோன்மணி?’ என்று மனோன்மணியின் நலனைத்தான் முதலாவதாக உசாவுகின்றார். அடுத்து, ஜீவகன், ‘இன்னும் வேண்டியது யாதோ? எமக்கருள் குரவ!’ என்று கேட்ட பொழுது, ‘உன்னையும் உன் குலத்துதித்த நம் மனோன் மணி தன்னையும் சங்கரன் காக்க’ என்று அவர்கள் பொருட்டு இறையருளை வேண்டிவிட்டு, ‘அன்பும் அறமுமே யாக்கையாகக் கொண்ட நின் புதல்வியை யான் காண நேசித்தேன்’ என்கின்றார். இக் கூற்றிலிருந்து மனோன் மணிபால் சுந்தர முனிவர் கொண்டுள்ள பரிவும் பாசமும் மதிப்பும் நல்லெண்ணமும் நன்கு புலனாகின்றன.

முனிவர் வருகை குறித்துப் பேசிக் கொள்ளும் நான்கு நகர வாசிகளின் கூற்றுக்களும் மேலே குறிப்பிடப்பட்ட எண்ணத்தினை வலியுறுத்துவனவாகவே அமைந்துள்ளன. ‘முனிவர் ஓதியது என்னை’ என்று கேட்ட இரண்டாம் நகர வாசிக்குப் பதில் அளிக்கும் மூன்றாம் நகரவாசி, ‘மனோன் மணி எனப் பெயர் வழங்கினர்’ என்று சொல்ல, நான்காம் நகரவாசி ‘வாழ்த்தினர் போலும், மற்றென்’ என்று கூறுகின்றான். இதனைச் செவிமடுத்த இரண்டாம் நகரவாசி, ‘பாழ்த்த தந்தையாம் ஜீவகனைக் காட்டிலும் மனோன் மணியிடத்துப் பரிவு மிகவுடையவர் சுந்தர முனிவர்’ என்று பகர்கின்றான். இதனைக் கேட்ட மூன்றாம் நகரவாசி அளிக்கும் மறுமொழியே மனோன்மணியின் அகவழகினை யும் புறவழகினையும் ஒருங்கே நம் கண் முன் ஆடியின் நிழல் போல் அங்கை நெல்லிக் கனியெனக் காட்டிவிடுகின்றது. அவள்மாட்டு அன்பு செலுத்தாதவர்கள் யாரும் இலர் என்றும், வையகத்தில் அவளுக்கீடாக மங்கையர் யாரும்

இல்லை என்றும், அன்பே உயிராகவும், அழகே உடம்பாகவும், மண்ணுலகு செய்த மாதவத்தால், மண்ணிடை மலைமகள் அருளும் கலைமகள் உணர்வும் கமலையின் எழிலும் கொண்டு, பாண்டியன் குலமாகிய பாற் கடலின் மீது அமுதமெனப் புறப்பட்ட நிறை நிலா மனோன்மணி என்றும் குறிப்பிட்டு அவளை வாழ்த்தாதவர் வையசத்தில் யாரே? என்ற வினாக்குறியினை மூன்றாம் நகரவாசி எழுப்புகின்றான்.

அப்பகுதி வருமாறு:

**ஐய மற்ற தற்கென்? யார்பரி வுறார்கள்?**
**வையகத் தவள்போல் மங்கைய ருளரோ?**
**அன்பே உயிரா அழகே யாக்கையா**
**மன்பேர் உலகுசெய் மாதவம் அதனால்**
**மலைமகள் கருணையும் கலைமகள் உணர்வும்**
**கமலையின் எழிலும் அமையவோர் உருவாய்**
**பாண்டியன் தொல்குலம் ஆகிய பாற்கடல்**
**கீண்டெழு மதியென ஈண்டவ தரித்த**
**மனோன்மணி யன்னையை வாழ்த்தார் யாரே?**

(அங்கம் 1 : களம் 1, 117-135)

மேலும், 'இமையவர்க்காக முன்னொரு வேள்வி நடத்தப்பெற்ற பொழுது தவசிகள் தனித்தனியாக அவி கொடுத்தும் வேள்வித் தீ பற்றி எரியாது அவிந்தது. ஜீவகனும் குடிலனும், மற்றுளோர் யாவரும் தளர்ந்து மனம் தளர்வுற்றிருக்க, மனோன்மணி விளையாட்டாகப் பெய்த நெய் நெடுஞ் சுழி சுழித்துப் பொங்கி எழுந்தது; மாதவர் மகிழ்ந்தனர். அன்றிலிருந்து யாவரும் மனோன்மணியை மதித்து வணங்குகின்றனர்' என்று இரண்டாம் நகரவாசி குறிப்பிடுகின்றான்.

**—.........விளையாட் டாக**
**மைதிகழ் கண்ணி பேதை மனோன்மணி**
**நெய்பெய் போழ்தில் நெடுஞ்சுழி சுழித்து**
**மங்கிய அங்கி வலமாய்ப் பொங்கிப்**

புங்கவர் மகிழ்ச்சியைப் பொறித்தது முதலா
முனிவர் யாவரும் மணியென மொழியில்
தங்கள் தலைமிசைக் கொள்வர், தரணியில்
எங்குளது அவட்கொப் பியம்புதற் கென்றே.

நான்காம் நகரவாசி இரண்டாம் நகரவாசியின் கூற்றினை அப்படியே முழுதும் ஏற்றுக் கொள்வதோடு, மேலும் ஒருபடி சென்று 'கரும்பும் கைக்கும் இன்மொழிக் கன்னியாம் மனோன்மணிக்கு ஒப்பேதும் உரைக்க இயலாது" எனக் கூறி அமைகின்றான்:

ஒக்கும்! ஒக்கும்! இக்குங் கைக்கும்
என்னும் இன்மொழிக் கன்னிக் கெங்கே
ஒப்புள துரைக்க......

இவ்வாறு நாடகப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள், நாடகத் தொடக்கத்திலேயே மனோன்மணிபால் எல்லோரும் கொண்டுள்ள நல்லெண்ணத்தினையும் நல்லன்பினையும் நயமுற நலமுற நவின்றுள்ளார்.

ஈண்டுக் குறிப்பிடப் பெற்று சுந்தர முனிவரும் நகரவாசிகளும் மட்டும்தான் என்பதில்லை. எடுப்பார் கைப்பிள்ளையாய் விளங்கும் ஜீவகன், மனோன்மணி விரும்பியது உரைத்தால் அஃது அம்புலியாயினும் கொணர்வதாகக் கூறுகிறான்; கூற்றுவனாயினும் மனோன்மணியை வருத்தின் அவனையும் மாய்விப்பேன் என்கிறான். மேலும் மனோன்மணி பிறந்த பின்னரே அவள் மழலை கேட்டு மிடிநீங்கி மகிழ்ச்சி மிக்கு அவளுக்கு உதவவே உயிர் தரித்திருப்பதாகக் குறிப்பிடுகின்றான்.

முனிவன் முயன்ற வேள்வியான் பிள்ளைக்
கனியென உனையான் கண்ட நாள் தொட்டு
நின்முகம் நோக்கியும் நின்சொற் கேட்டும்
என்மிடி நீங்கி யின்பம் எய்தி
உன்மன மகிழ்ச்சிக்கு யுதவுவ உளுற்ற
உயிர்தரித் திருந்தேன்.

இது போன்றே போர்க்களத்தில் ஜீவகனைக் காப்பாற்ற முற்படும்—அறிவு வழிச் செயல்படும்—நாராயணனும், 'தாய் மனோன்மணி நிலை கருதுவர் உன்னலம் கருதா தென் செய்வர்?' எனக்கூறி, மனோன்மணியினைத் 'தாயெ'னப் போற்றியுரைக்கின்றான்! பிறிதோரிடத்தில் 'மதிகுலக் கொழுந்து மனோன்மணி' என்கிறான்.

நகரவாசிகள் மனோன்மணியினை நேரிற் காண வாய்ப் புண்டு; அவள் செயலை—நலனை அறிய இடமுண்டு. ஆயினும் நாட்டுப்புறங்களில் வயல் உழும் உழவர்களும் மனோன்மணியின்பாற் பெரும்பரிவு கொண்டுள்ளார்கள் என்பது நாடகத்தின் மூன்றாம் அங்கம், இரண்டாம் களத் தில் வெளிப்படுகின்றது. முதல் உழவன்,

> தாயினுஞ் சிறந்த தயாநிதி மனோன்மணிக்கு
> உறுதுயர் ஒருவரும் ஆற்றார்

என்று பேசுகின்றமை காண்க.

அவ்வளவு ஏன்? நாடகத்தில் நாம் வெறுக்கும் கொடு மனக் குடிலனும் அவன் மகன் பலதேவனும்கூட அன்றோ மனோன்மணியைப் பற்றி நலமுற மொழிகின்றனர்! பலதேவன் புருடோத்தமனிடத்தில் மனோன்மணியைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது,

> ............உசிதன் மனையில்
> திரைக்கடல் அமுதே யுருக்கொண் டதுபோல்
> ஒருமலர் மலர்ந்து அங்கு உறைந்தது

என்று பாற்கடல் பிறந்த பால் நிலா என மனோன்மணியைக் குறிப்பிடுகின்றான்.

அவன் தந்தை குடிலனோவெனில், 'திருவினுஞ் சீரிய உருவினள்' என்று குறிப்பிடுகின்றான். போர் வீரர்களும் "இளவரசிக்கு ஜே! ஜே!" என்று ஆர்ப்பரித்து உற்சாகம் கொள்கின்றனர். நிகரில் புருடனாம் புருடோத்தமன்

'விண்ணணங்கு அனைய கன்னியர் பலரென் கண்முன் னின்றங் கிரக்கினுங் கலங்காச் சித்தம் மத்துறு தயிரில் திரிந்து பித்துறச் செய்த பேதை' என்றும், 'இணையிலா நவ்வியும் நண்பும் நலனும் உடையவள்' என்றும் மனோன் மணியைக் கனவிற் கண்ட நிலையிலேயே கவினுறப் பாராட்டி மொழிகின்றான். முடிவில் மனோன்மணியை நேரிற் கண்டபோதும், 'இங்கோ நீயுளை என்னுயிர் அமிர்தே' என்று பாராட்டிக் கனவிற் கண்ட காரிகையை நனவிற் கண்டு மாலையிடுகின்றான்.

முதல் அங்கத்தின் இரண்டாம் களத்தில் மனோன்மணி யும் வாணியும் கழல் விளையாடுகின்ற காட்சியே அவர்கள் நாடகத்தில் முதற்கண் வெளிப்படும் நிலையாகும். பாடத் தொடங்கும் பொழுதே மனோன்மணி தூய்மைக் காதலை யும் தூய்மையற்ற காமக் களியாட்டமாக எண்ணி மயங்கும் மருட்சி நிலையினைப் புலப்படுத்துகின்றாள். காதற் கடவுளாம் காமன் சிவபெருமானை அணைந்து நீராகிவிட்ட கதையினைப் பாட்டில் இழைத்துக் காட்டுகின்றாள்.

துணையறும் மகளிர்மேற் சுடுகணை தூர்ப்பவன்
அணைகிலன் அரன்முன் னென்றாடாய் கழல்
அணைந்து நீறானா னென்றாடாய் கழல்

என்று பாடுகின்றாள். ஆயின் அவள் தோழி வாணியோ காதலே நெஞ்சம் எனக் கொண்டவள். நடராசனிடம் காதல் கொண்டு அந்நினைவில் திளைப்பவள். காதலின் வன்மையினையும் முழுமையினையும் கண்ட அவள் எதிர்ப் பாட்டுப் பாடுகிறாள். காமன் எரிந்தாலும் அதற்குமுன் கடவுளும் காதல் வயப்பட்டுப் போனார் என்ற உண்மையை ஒளியாது எடுத்துரைக்கின்றாள். அவள் பாட்டு வருமாறு:

நீறாயினா லென்னை நேர்மலர் பட்ட புண்
ஆறாவடு வேயென் றாடாய் கழல்
அழலாடுந் தேவர்க்கென் றாடாய் கழல்

இவ்வாறு இருவரும் பாடிவரும் பொழுது வாணி நடராச னின் பெயரைப் பாட்டிடையே கூறிப் பெருமூச்செறிகிறாள். இது கேட்ட மனோன்மணி நகைச் சுவை மிளிரப் பின்வரு மாறு குறிப்பிடுகின்றாள்:

ஏதடி வாணி ஓதிய பாட்டில்
ஒருபெய ரொளித்தனை பெருமூச் செறிந்து
நன்று! நன்று! நின் ஞானம்
மன்றலும் ஆனது போலும் வார்குழலே!

இக்கூற்றிலிருந்து மனோன்மணியின் நகைச்சுவை உணர்வினை நாம் அறிந்து கொள்ளலாம். மேலும் வாணி யின்பால் பேரன்பு பூண்டவள் மனோன்மணி என்பதும் நமக்கு விளங்குகின்றது. வாணியை மனோன்மணி விளிக்கும் போதெல்லாம் புகழ்ச்சியுரை புகலுகின்றாள். சான்றாக, 'பிறைபழி நுதலாய்', 'எட்பூ ஏசிய நாசியாய்', 'முல்லையும் முகையும் முருக்கின் இதழும் காட்டும் கைரவ வாயாய்', 'வலம்புரிப் புறத்தெழு நலந்திகழ் மதியென வதியும் வதன மங்காய்', 'கண்டோ எனு மொழிக் காரிகை யணங்கே', 'காந்தள் காட்டும் கையாய்', 'மின்புரை இடையாய்', 'அனிச்சமும் நெரிஞ்சிலா அஞ்சிய அடியாய்' என்று வாணி யைக் குறிப்பிடும் மனோன்மணியின் சொற்கள், தான் ஓர் அரச குமாரியாயிருப்பினும், தனக்குத் தாழ்ந்த வாணி யிடத்துப் பேசும் பொழுதும் அவள் காட்டும் பண்பினையும் பரிவினையும் புலப்படுத்துவதோடு, அவளுடைய பேச்சு நயத்தினையும் தெளிவாக்குகின்றது.

காதலைப் பற்றிச் சிறப்பித்துப் பேசும் வாணியின் கூற்றுக்கு எதிராகப் 'பூவையர் காதல் இதுவே யாமெனில் இகழ்தற்பாற்றே' என்று காதலைக் கடிந்துரைக்கின்றாள் மனோன்மணி 'காதல் கொள்ளுதற்கு ஏதும் இல்லையாம்' என்ற கூற்றை எள்ளி நகையாடுகின்றாள்; 'தான் அறியாப் பேயாட்டந்தானாம்' என்று இடித்துரைக்கின்றாள். அதே நேரத்தில் தன் மனம் துறவுநெறியில் செல்ல எண்ணுகிறது என்பதனையும் எடுத்து மொழிகின்றாள்.

......என் கருத்து உண்மையில்
வனத்தில் எய்தி வற்கலை புனைந்து
மனத்தை அடக்கி மாதவம் செயற்கே
சுந்தர முனிவன் சிந்துர அடியும்
வாரிசம் போல மலர்ந்த வதனமும்!
கருணை அலையெறிந் தொழுகுங் கண்ணும்
பரிவுடன் முகிழ்க்கும் முறுவலும் பால்போல்
நரைதரு தலையும் புரையறும் உரையும்
சாந்தமுந் தயையுந் தங்கிய வுடலும்
மாந்தளிர் வாட்டு மேனி வாணி
எண்ணுந் தோறுங் குதித்து
நண்ணும் என்னுளம் மன்னிய தவத்தே

இவ்வாறு கூறிய மனோன்மணியிடம் வாணி, ''மட்டண வின்றிக் காதல் கதுவுங் காலை ஓதுவை நீயே யுறுமதன் சுவையே'' என்று கூறுகிறாள். இதற்கு மனோன்மணி பதிலளிக்கும்போது,

நண்ணும் என்னுளம் மன்னிய தவத்தே
காதலென் பதுவென்? பூதமோ? பேயோ?
வெருட்டினால் நாய்போ லோடிடும்; வெருவில்
துரத்தும் குறைக்கும் தொடரும் வெகுதொலை

என்கிறாள். செவிலித்தாய் "அவள் ஆசையுடன் வளர்த்த முல்லை முகை முகிழ்த்தது என்று கூறி, அவளும் விரைவில் காதலிற் கவிழ்வள் எனக் கழறி, 'போதுநீத் தெம்மனை புகுந்த நல் திருவே' என்று குறிப்பிடுகின்றாள். மனோன்மணியோவெனில் 'தவத்தைத் தான் நாடியிருக்கும் பொழுது காதலைத் தன் உள்ளம் நாடாது" எனக் கூறி, 'நெருப்பையுங் கறையான் அரிக்குமோ' எனவும் எடுத்துக் காட்டுகின்றாள்.

காதலை வெறுத்து இவ்வாறு கூறிய மனோன்மணி அன்றிரவே புருடோத்தமனைக் கனவிற் கண்டு காதலில் கவிழ்கின்றாள். 'உருமாறியது; நீராடவில்லை; உண்ண வில்லை; ஊசலாடவில்லை; பந்தாடவில்லை; குழல் முடிய

வில்லை; இசை பாடவில்லை; யாழ் மீட்டவில்லை: பொழி லாடவில்லை; ஆபரணம் அணியவில்லை; ஆணைபிறப்பிக்க வில்லை; கிளியை மறந்தாள்; அன்னத்தைத் துறந்தாள்''— இவ்வாறு செவிலித்தாய் காதலிற் கட்டுண்ட மனோன்மணி யின் மெய்ப்பாட்டினைப் புலப்படுத்துகின்றாள். 'நண்ப! என்னுயிர் நாத' என ஏங்கிப் புலம்பிய புலம்பலை அவள் கூறி, நேற்றிரவு குழல் சரிந்து, வளை கழன்று, மாலை கரிந்து, விழி பிறழ்ந்து, மொழி குழறி, கண்ணீர் மல்கி வாட்டமுற்றிருந்த நிலையைச் சொல்லி,

**நேற்றுத்**
**தவஞ்செய ஆசை என்றவன் தனக்குக்**
**காதல்நோய் காண ஓரேதுவு மில்லை**

என்று முத்தாய்ப்பு வைத்து, ஜீவகனை 'எம்தாய் இருக்கும் நிலைமையினி நீ—வந்தே காண்குதி' என்கின்றாள். காதல் கொள்வதற்கு ஓர் ஏதும் இல்லையாம் என்று பழித் துக் கூறியவளையே காதல் ஓர் ஏதுவும் இன்றி ஏன்? காதலன் நனவுக் காட்சியுமின்றிக் கனவுக் காட்சியிலேயே பற்றிக் கொள்கின்றது.

மனோன்மணியின் மன மாறுதலை-பண்பட்ட நிலை யினை அவள் பேச்சு நமக்கு மெய்ப்பிக்கின்றது.

**உரைப்பதுஎன் வாணி உளமும் உளமும்**
**நேர்பட அறியா என்றோ நினைத்தாய்**
**ஏன் அதில் ஐயம் எனக்கு அது துணியே**
**பூதப் பொருட்கே புலன்துணை யன்றிப்**
**போதப் பொருட்குப் போதும் போதம்**

காதலை வெறுத்த மனோன்மணி இப்பொழுது காத லின் கரை கண்ட வாணிக்குக் காதலின் இலக்கணத்தை யன்றோ எடுத்து மொழிகின்றாள்? மேலும் அவள் தருக்க வாதத்தால் காதலை நிலைநாட்ட முடியாதென்றும், நம்பிக்கை அதற்கு மிகுதியும் தேவை என்றும், 'நம்பல் என்பதுவே அன்பின் நிலைமை' என்றும், காதல் முதலிய

சிறந்த பொருள்களைத் தருக்க வாதத்தால் நிலைநாட்டு வோர் மலரின் மணத்தைக் கையால் அளந்து காண்பவரே என்றும் காதலின் பெற்றியை உள்ளவாறு உரைக்கின்றாள்.

இதுபோன்றே தவத்தின் வழியே தன் மனம் செல்கிறது என்று கூறிய அவள், தீய தவத்தின் நிலையினைத் திறம்படக் காட்டுகின்றாள்.

தவமென்? உணருவை!
உடுப்பவை உண்பவை விடுத்தரண் அடைந்து
செந்தீ ஐந்திடைச் செறிந்தமைந் துறைதல்
ஆதியா ஓதுப அல்ல அவற்றைத்
தீதறு தவமெனச் செப்பிடார் மேலோர்

என்று குறிப்பிடுகின்ற அவளே, சுந்தர முனிவரிடம் வாசிஷ்டாதி வைராக்கிய நூல்களைக் கற்றுத் தேர்ந்து முழுமை கண்டதன் விளைவாகப் புடம்போட்ட தங்கமென மனப்பக்குவம் பெறுகின்றாள்.

தந்தை தாய் ஆதியா வந்ததன் குடும்ப
பந்தபா சத்தினைப் பேணித் தனது
சொந்தமாம் இச்சைகள் துறந்து மற்றவர்க்கு
எந்தநா ளும்சுகம் இயைந்திடக் கடமையின்
முந்துகின் றவரே முதல்தவ முனிவர்

என்றும்,

அடுத்தவர் துயர்கெடுத் தளித்தலே யான்இங்கு
எடுத்தநல் தவத்தின் இலக்கணம்

என்றும் அவள் தவமாய தவத்தின் இலக்கணத்தைச் சுட்டிக் காட்டும்போது படிப்படியாக அவள் பெற்ற ஆன்மநேய வளர்ச்சி புலப்படுகின்றது.

எங்கிருந் தனவிவ் வன்றிற் பேய்கள்
நஞ்சோ நாவிடை? நெஞ்சம் துளைக்கும்?

என்பது காதல் என்ற காட்டாற்று வெள்ள உணர்ச்சியில் கண்டுண்ட மனோன்மணியின் கூற்று, கட்டற்ற காதல் வெள்ளம் தணிந்த நிலையில் அவள்,

இரவியை நோக்கற் கேன்விளக் குதவி
உண்மையாய் நமதுள முநகிலவ் வுருக்கம்
அண்மை சேய்மை என்றிலை

என்று கூறும் கூற்றும் படிப்படியான அவள் மனவளர்ச்சி யினைத் தெரிவிப்பனவாம். காதலின் தெளிந்த நிலையில் தான் அவள் உள்ளத்தில் நிலையான உறுதி பிறக்கின்றது. அதன் பயனாகப் பிறப்பதுதான்,

அஞ்சலை அஞ்சலை இதோவென் நெஞ்சிடை
வெஞ்சரம் பாயினும் அஞ்சிலேன்

என்ற மனத்திண்மையாகும்.

இவை எல்லாவற்றிலும் மேலாக, அவள் தந்தைபால் காட்டும் அன்பால், அவன் சொல்லைமீற முடியாமல் தன் அகக்காதலையே பலியிட்டுத் தன்னைத்தானே தியாகம் செய்து கொள்ளும் உயரிய நிலையில்தான் அவள் தூய பண்பு 'குன்றின் மேல் இட்ட விளக்காக' ஒளிவிடுகின்றது.

'உன்னால்தான் யான் உயிர் வாழ்கின்றேன்' என மொழிந்தான் தந்தை ஜீவகன். தனக்கென வாழும் தந்தை பலதேவனைத் தான் மணக்க வேண்டும் என்று கூறிய பொழுது, மாறாது உடன்பட்டாள் மனோன்மணி. அந் நிலையில் அவள் வாயினின்றும் பிறக்கும் மொழிகளைக் காண்க :

அன்னையும் நின்னை யன்றி வேறறியேன்
உன்னதே இவ்வுடல் உன்திரு வுள்ளம்
உன்னிய படியெல்லாம உவப்பச் செய்குவன்
அடிமையின் கவலையால் அரசர்க்கு இயல்பாம்
கடமையிற் பிறழும் கலக்கம் விலக்குவை
அன்பாம் உன்பால் ஐயஉன் மகள்
வேண்டும் வரமெலாம் யாண்டும் இவ் ஒன்றே

இவ்வாறு தந்தையிடமும் தாய்நாட்டிடமும் கொண்டவரிவில் காதலைக் கடமையில் மறந்து தன்நிலை தளர்ந்து சாய்கிறாள்; மூச்சில்லை; பேச்சில்லை; வியர்வை வடிகின்றது. இட்டகை இட்டகால் இட்டபடியே உள்ளன; அந்நிலையிலும் வாணியை மறவாது வாணி நடராசனை மணக்க அனுமதியளிக்குமாறும், நாராயணனைக் கடுஞ் சிறை நீக்குமாறும் அரசனை வேண்டிக் கொள்கின்றாள்.

இவ்வாறு மனோன்மணி தன் துயர் பொறுத்துப் பிறர் துன்பம் களைதலின் காரணத்தை அவளே சொல்கின்றாள்:

அடுத்தவர் துயர்கெடுத் தளித்தலே யானிங்கு
எடுத்தநற் றவத்தின் இலக்கணம் ஆதலின்
நடேசனை நச்சுநின் நன்மணம் அதுவும்
விடாதெனை அடுத்த வீரநா ரணன்றன்
கடுஞ்சிறை தவிர்த்தலும் கடனெனக் கருதி
எழுதினேன் இஃதோ வழுதியும் இசைந்தான்.

இவ்வாறு பிறர் நன்மை பொருட்டுத் தன் காதலைத் தியாகம் செய்ய முன்வரும் மனோன்மணி, காதலில் கால் கொள்ளாத மனத்தினளா என்றால், இல்லை யெனலாம். ஏனெனில் மனோன்மணி மணமாலை கொண்டு பலதேவன் எதிர்வரும் பொழுது சுருங்கை வழியே வந்த புருடோத்தமனைக் கண்ட அளவிலேயே அவளையறியாமல் அவள் கால்கள் அவன் நிற்குமிடம் நோக்கி விரைவில் நடந்து "இங்கோ நீயுளை! என்னுயிர் அமிர்தே!" என்ற புருடோத்தமன் கூறித் தலை தாழ்ந்த அளவிலே, அவன் கழுத்தில் மாலை சூட்டி அவன் தோளோடு தளர்ந்து மூர்ச்சிக்கிறாள்; இச்செயல்,

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்.

என்ற குறட் கருத்திற்கேற்பக் காண்டகைமை யின்றியும் அவர்கள் இருவரிடை மலர்ந்த காதல் பெற்றியினையும் ஆற்றலினையும் அறிவிக்கின்றன.

"காதல் என்பது ஒரு கனவு; தன்னலமற்ற தவமே அன்பின் பெருக்கம்.'' இவ்வாறு மனோன்மணி முதலில் கருதுகிறாள். இயற்கையின் பொருத்தம் ஒருவரை ஒருவர் காணா முன்பே கனவின் வழியே திருத்தமுற்றுத் திகழ்ந்தோங்கி கடவுட் காதலாக அவள் உள்ளத்தே சிறந்தொளிர்கிறது. உயிரினும் சிறந்த காதலினையும் தந்தைக்கும் தன் நாட்டிற்கும் எனப் பலி கொடுத்துழைக்கும் தொண்டு வாழ்வே தவவாழ்வு என்ற முடிவு, அவள் உள்ளத்தினைப் பிளந்து கொண்டெழுந்து பற்றி எரிகிறது. இத்தகைய காதலை இவ்வாறு பறிகொடுத்தோருக்கே உண்மைக் காதல் இன்பம் ஒப்பிலாத பயனாக அவரது தப்பிலாத வாழ்க்கையில் தானே வந்து எய்தும். இதனையே மனோன்மணி வாழ்க்கையில் காண்கின்றோம்.'' இவ்வாறு தமிழறிஞர் தெ. பொ. மீ அவர்கள் குறிப்பிடுகின்றார்.

நாடகத்தில், மனோன்மணி, அன்பின் செல்வியாய், அறத்தின் விளக்கமாய், பண்பின் பெட்டகமாய், காதலின் கனியாய், இரக்கத்தின் ஊற்றாய், தியாகத்தின் சிகரமாய்ச் சுடர்விட்டு ஒளிவீசி நிற்கின்றாள்.

## 2. வாணி

இவள் ஒழுக்கம் தவறா உளத்தள்; தனக்கு நன்றெனத் தெள்ளிதில் தெளிந்தவையையே நம்புந் திறத்தள்; அல்லன வற்றை அகற்றும் துணிபுமுடையவள்.

—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

மனோன்மணீய நாடகத் தலைவி மனோன்மணிக்கு உற்ற உயிர்த் தோழி வாணி. இவள் ஒழுக்கம் தவறா உளத்தள்; தனக்கு நன்றெனத் தெள்ளிதில் தெளிந் தவையையே நம்புந் திறத்தள்; அல்லனவற்றை அகற்றும் துணிபுமுடையவள். அன்பின் ஆழம் இவள் உள்ளம்; அழகின் திரட்சி இவள் உடல்; பண்பின் பெட்டகம் இவள் வாழ்வு; காதலின் துடிப்பே இவள் உயிர்மூச்சு; தீமையை எதிர்த்து நிற்கும் துணிவே இவள் போக்கு; சோர்வினைத் துடைக்கும் இவள் வாக்கு; துன்பக்கடலைக் கடக்கும் தோணி இவள் பேச்சு. அறிவின் கொழுந்தாய், அழகின் விருந்தாய், அன்பின் ஊற்றாய், காதலின் மணிமுடியாய், இசையின் இனிமையாய், நட்பின் இலக்கணமாய்த் துலங்கியதே வாணியின் வாழ்வெனலாம்.

இயற்கை அழகில் தன்னை மறந்து ஈடுபடும் நடராசனை இவள் நெஞ்சாரக் காதலிக்கிறாள். நேரடியாக இருவரின் காதற் பேச்சுகளும் செயல்களும் உணர்த்தப்படவில்லை. முன்னர் நிகழ்ந்த நிகழ்ச்சியினை இருவரும் எண்ணிப் பார்த்து மகிழ்வதும் கலங்குவதும் பின் துணிவதுமாக உள்ள போக்கில் இவர்கள் காதல் வளர்ந்து செல்கிறது. இஃது ஒரு புதுமை எனலாம். இதனினும் புதுமையன்றோ மனோன் மணி—புருடோத்தமன் காதல்!

முதன் முதலாக மனோன்மணியும் வாணியும் கன்னி மாடத்தில் கழலாடும் நிலையில் அவர்களைச் சந்திக்கிறோம். அவர்கள் பாடும் பாட்டே காதலின் வன்மை மென்மைகளை ஆயும் போக்கில் அமைந்து விடுகிறது. காதலே வாழ்வு என

எண்ணி அக் காதற் கடலில் மூழ்கிக் குளித்து முத்தெடுக்கும் வாணி, காதலின் பேராற்றலினை அனுபவத்தின் வழி நன்கு உணர்ந்தவளாதலின், காதலின் பெற்றி குறித்துப் பெருமை பட இசைப் பாட்டில் முழங்குகின்றாள். இறைவன்மேல் மலர்க்கணை செலுத்திய மன்மதன் நீறான நிகழ்ச்சியினை மனோன்மணி சொல்ல, 'வாணி அம் மன்மதன் நீறாகிப் போனாலும், அவன் எய்த மலரம்பு சிவன் நெஞ்சில் ஆறாத வடுவினை யன்றோ அமைத்துவிட்டது' என்று எதிர் மொழி கின்றாள். இவ்வாறு பாடிவரும்பொழுது, அவள் காதலன் நடராசன் நினைவு வந்து வந்து மோதுகின்றது; இறுதியில் பெருமூச்சோடு வெளிப்பட்டும் விடுகின்றது.

உருவங் கரந்தாலென் ஓர்மல ரம்பினால்
அரையுரு வானாரென் றாடாய் கழல்
(அங்கட ராஜரென்)றாடாய் கழல்

இதனைக் கேட்ட மனோன்மணி ஓதிய பாட்டில் ஒரு பெயர் ஒளித்த கள்ள உள்ளத்தைக் கண்டுபிடித்து 'மன்றலு மானது போலும் வார் குழலே' என வாணியை நகையாடு கின்றாள். அதற்கு மறுமொழி கூறும் வாணியின் பேச்சில் அவள் சொற்சாதுரியத்தினைக் காண்கின்றோம். பெருமூச்சு எழுந்ததற்குக் காரணம் ஒரு பொருளினையும் நெஞ்சில் நினைத்தமை அன்று என்றும்,

இச்சகத் தெவரே பாடினும்
உச்சத் தொனியில் உயிரப்பெழல் இயல்பே

என்றும் மறைத்து மொழிகின்றாள். 'அடுத்துக் காதலன் நேற்று ஓதிய தென்னை! உரையாய் எனக்கே' என்று கேட்ட மனோன்மணியிடம், வாணி,

எருதீன் றெனுமுனம் என்னகன் றென்று
திரிபவ ரொப்ப நீ செப்பினை

என்று விடையிறுக்கும் விரகிலும் வாணியின் அறிவாற்றலும் சொல்வன்மையும் துலக்கமுறுகின்றன.

வாணி நல்ல அழகி என்பது மனோன்மணி பேசசுக்குப் பேச்சு அவளைப் பெரிதும் புகழ்ந்து பேசுவதனின்றும் அறியலாம். 'காதளவோடிய கண்ணாய்' என்றும், 'எட்பூ ஏசிய நாகியாய்' என்றும் 'முல்லையின் முகையும் முருக்கின் இதழும் காட்டும் கைரவ வாயாய்' என்றும், 'காந்தள் காட்டும் கையாய்' என்றும் வாணி மனோன்மணியால் வர்ணிக்கப்படுகின்றமையை நோக்கும்பொழுது, வாணியின் பேரழகு நம் மனக்கண்முன் பளிச்சிடுகின்றது.

உருவ அழகில் மட்டுமா வாணி அழகி? இசையரசி அல்லவோ அவள்? 'கண்டோ எனும் மொழிக் காரிகை யணங்கே' என்றோர் இடத்தில் மனோன்மணி வாணியை விளிப்பதுபோன்று, அவள் குரல் 'ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உவப்பிலா ஆனந்தத் தேனினை'ப் பாய்ச்சுவதாக உளது. எனவேதான் சிவகாமி சரிதத்தை வாணி பாடிமுடித்தவுடன் மனோன்மணி,

> வாணி மங்காய் பாடிய பாட்டும்
> வீணையின் இசையும் விளங்குநின் குரலும்
> தேனினும் இனியவாய்ச் சேர்ந்தொரு வழிபடர்ந்து
> ஊனினையும் உயிரினையும் உருக்கும் ஆ! ஆ!

என்று வியந்து, புகழ்கின்றாள்.

நாடக இறுதியில் ஒரு துன்பச் சூழ்நிலையில் மற்றவர் மனக்கவலை மாற்றிட, மன்னன் தன்னைப் பாவொன்று இசைக்கச் சொன்ன நிலையில், அவள் அடிமனத்தின் ஆழத்திலிருந்து குமுறிக் குமுறிக் கொந்தளித்துக் கொந்தளித்து உயிர்நிலைப் பாட்டொன்று பிறக்கிறது.

> நீர்நிலையின் முதலையின்வாய் நிலைகுலைந்த ஒருகரிமுன்
> ஓர்முறையுன் பெயர்விளிக்க உதவினைஎன் றெனவுரைப்பர்
> ஆர்துயர அளக்கர்விழும் அறிவிலியான் அழைப்பதற்கென்
> பேர்தெரியேன் ஆயிடினும் பிறகிடல்நின் பெருந்தகையே!

இவ்வாறு பாடியதைக் கேட்ட சுந்தரர், பாட்டின் பொருத்தமும் குரலும் நோக்கி, 'எதுவோ, இதனினும் ஏற்புடைப்

பிரார்த்தனை' என்று மொழிவாரேயானால், வாணியின் அறிவாராய்ச்சிக்கும் இசைப்புலமைக்கும் சான்று வேறு கூற வேண்டா.

நடராசன் அழகன் என்று கண்டு வாணியின் உள்ளம் அவன்பாற் சென்று தங்கியதோ? இல்லை. 'அரிவையர்யாரே வெறிகொளார் காணில்' என்று, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று பூரிப்பால் பொங்கியெழும் புறத் தோற்றத்தினைக் கண்டு மயங்கிற்றா? இவ்வினாவிற்கு வாணியே விடையிறுக்கின்றாள்; கேட்போம்.

அறியாய் ஒன்றும் அம்ம அரிவையர்
நிறையழி காதல் நேருந் தன்மை
ஒன்றுங் கருதிய தன்றவ ருள்ளம்
சென்று பாய்ந்து சேருதல் திரியுங்
காற்றும் பெட்பும் காரண மின்மையில்
ஆற்றவும் ஒக்குமென் றறைவர்

ணி காட்டும் காதல் இலக்கணம் இது.

வாணியின் உயிர்க் காதலுக்கு உறுதுணை உண்டா ணில் இல்லை; இரக்கத்திற்குரியது அவள் காதல். தன் லயை,

தலைவிதி தடுக்கற் பாற்றோ? தொலைய
அனுபவித் தன்றோ அகலும் மனையில்
தந்தையுங் கொடியன்; தாயும் கொடியள்;
சிந்தியார் சிறிதும் பயன்படும் இடும்பை
என்னுயிர்க் குயிராம் என்கா தலர்க்கும்
இன்னல் இழைத்தனர்

என்று கதறிக் கூறுகின்றாள். பலதேவனுக்குத் தந்தை மனப் படியே மாலை சூடினால் விளையுங் கேடென்னை என்று மனோன்மணி வினவிய அளவிலேயே,

அம்மொழி வெம்மொழி! அம்ம! ஒழிதி
நஞ்சும் அஞ்சிலேன்! நின்சொல் அஞ்சினேன்

என்று மரியாதையோடு,அதே நேரத்தில் உள்ள உறுதியோடு அவன் சொல்லினை மறுத்து மொழிகின்றாள். மேலும்,

**இறக்கினும் இசையேன் தாமே துறக்கினும்**
**மறப்பனோ என்னுளம் மன்னிய ஒருவரை?**
**ஆடவ ராகமற் றெவரையும்**
**நாடுமோ நானுள வளவுமென் உளமே?**

என்று அவள் கூறுவதனின்று காதலே கற்பாகக் கொண்டு வாழும் காதலறச் செல்வியாகவாணி காட்சியளிக்கின்றாள். காதலை முற்ற வெறுத்துத் தவத்தின்மேல்தான் தன் நாட்டம் என்று கூறிய மனோன்மணிக்கு மறுமொழியாக.

**சின்னாட் செலுமுனந் தேர்குவன் நீசொல்**
**கட்டுரைத் திண்ணம் மட்டள வின்றிக்**
**கதல் காதுவும் காலை**
**ஓதுவை நீயே யுறுமதன் சுவையே**

என்று கூறுகிறாள். நூலறிவோடு அனுபவ அறிவும் நிறைந்தவள் வாணி என்பது, அவள் கூறியபடியே அன்றிரவே மனோன்மணி காதல் வயப்பட்டுக் கடுந்துயர் கொள்வதினின்றும் அறியலாம்.

தன் காதலன் துன்பம் கண்டு அத்துன்பம் தனக்கு வந்ததே போன்று மனங்கலங்கித் தியங்கி மாழ்குகின்றாள் வாணி. நடராசனை மனைவரா வண்ணம் ஒட்டிய சகடரையும் ஊர்வரா வண்ணம் ஒட்டிய குடிலனையும் நொந்து கொள்வதோடு, மனோன்மணி, 'நின் காதலையும் நீயுரைத்தனையோ நின்னே சனுக்கே' என்று கேட்டபோது, நாணம் தடையிடத் தான் அவனிடம் நடந்து கொண்டமைக்குப் பெரிதும் வருந்தி மொழிகின்றாள் வாணி.

**அதுவே பயம்! என் உளநின் றறுப்பது**
**வதுவையும் வேண்டிலர் வாழ்க்கையும் வேண்டிலர்**
**ஒருமொழி வேண்டினர்; உரைத்திலேன் பாவி**
**நச்சினேன் எனுமொழிக் கேயவர் இச்சை**
**பிச்சியான், ஓகோ! பேசினே னிலையே!**

இவ்வாறு தன் காதலை வெளிப்படக் கூறாமல் மறைத்த வாணியின் காதல் சங்க இலக்கியக் காதலாம். ஆடவரே காதலை வெளிப்படப் பேசுவர்; பெண்கள் குறிப்பாகவே மொழிவர்.

ஆடவர் காத லறைதலும் தையலர்
கூடமாய்க் கொள்ளலும் இயல்பே போலும்

என்று நடராசனே வாணியின் குணமேம்பாட்டினைக் குறிக்கின்றான்.

ஜீவகன் வாணியின் தந்தை சகடர் சொற்கேட்டு வாணியை மருட்டுகிறான்; அவள் காதல் தகாது என்கிறான்; தந்தை மனத்தின்படி மணம் பெறுவதே முறை என அச்சுறுத்திப் பார்க்கின்றான். 'நேசமில் வதுவை நாசகா ரணமே' என எடுத்து மொழிகிறாள்; பழைய புராணம் படிக்கிறான் ஜீவகன் :

புதுமைநீ புகன்றாய்! வதுவைமங் கையர்க்குப்
பெற்றோர் ஆற்றுவர்; ஆற்றிய வழியே
தையலார் மையலாய் நேயம் பூண்டு
வாழ்வது கடமை; அதனில்
தாழ்வது தகுதியோ தருமமோ சாற்றே

என்று கடமை என்றும், தகுதி என்றும், தருமம் என்றும் பலப்பலப் பேசுகிறான் ஜீவகன்.

அவன் கருத்தினை அமைதியோடு, அதே நேரத்தில் உள்ள உறுதியோடு எதிர்க்கிறாள் வாணி. 'அன்பு ஆக்கப் படும் பொருள் ஆகுமோ?' என்று அவனை வினவுகின்றாள். மேலும்,

நின்ற காதலின் நிலைமை, நினைவில்
இரும்பும் காந்தமும் பொருந்துந் தன்மைபோல்
இருவர் சிந்தையும் இயல்பா யுருகி
ஒன்றாந் தன்மை யன்றி ஒருவரால்
ஆக்கப் படும்பொரு ளாமோ?

என்கிறான். சாட்டையடி போல் இந்த விடை மன்னன் மனத்தில் சுரீர் என விழுகின்றது. கொதித்துப் பேசுகிறான் கொற்றவன்.

ஆமோ அன்றோ யாமஃ தறியோம்
பிஞ்சிற் பழுத்த பேச்சொழி; மிஞ்சலை;
மங்கையர் என்றும் சுதந்தர பங்கர்;
பேதையர்; எளிதிற் பிறழ்ந்திடும் உளத்தர்;
முதியவுன் தந்தை மதியிலுன் மதியோ பெரிது?

என்று கூறி அவளை ஏசுகின்றான். 'பலதேவனுக்கே உடன் படல் கடமை' என்ற மன்னனுக்கு, 'இல்லையெனில்?' என்று கேட்கிறாள் வாணி; 'கன்னியாயிருப்பாய் என்றும்' என்கிறான் ஜீவகன். 'சம்மதம்' என்கிறாள் வாணி. 'அரைக் கிலன்றோ சந்தனங் கமழும்?' என்கிறான் மன்னன். 'விரை தருமோசிறு கறையான் அரிக்கில்?' என்று பதில் கூறுகிறாள் மங்கை. இறுதியில் 'இறக்கினும் பலதேவனை மணக்க இசையேன்' என்று கூறி, அப்பேச்சினுக்கு முத்தாய்ப்பு வைக்கிறாள் வாணி. தன் உள்ளக் கருத்தினை உறுதியோடு எடுத்துரைத்த வாணி—அதே நேரத்தில் தன் வாழ்க்கை யையே பாழாக்க நினைக்கும் மன்னவனை முறைதவறிப் பேசவில்லை; நிதானத்தோடு பேசி, முடிவில்,

இறக்கினும் இறைவ! அதற்குயா னிசையேன்;
பொறுத்தருள் யானிவண் புகன்ற
மறுத்துரை யனைத்தும் மாற்றல ரேறே

என்று கூறும்பொழுது, அவள் காதலின் திண்மை, பணி வுடைமையின் சிறப்பு, பாராட்டுரையின் பெருமை ஆகிய அனைத்துப் பண்புகளும் புலனாகின்றன.

இயற்கைப் பித்தன் நடராசனுக் கேற்றவள் வாணி என்பது அவள் நடராசனைச் சந்தித்த இறுதிநாள் நிகழ்ச்சி யைக் கூறும்பொழுது,

பெருமலை பிறந்த சிறுகாற் செல்வன்
தெண்ணீர்க் கன்னி பண்ணிய நிலாநிழற்
சிற்றில் பன்முறைசி தைப்பவன் போன்று
சிற்றிலை எடுப்ப

என மொழியும்பொழுது இயற்கையழகில் உள்ளத்தைக் கொள்ளை கொடுக்கும் அவள் கலையுள்ளம் காண முடிகின்றது.

வெளுத்ததெல்லாம் பால் அல்ல; நம்பிக்கையின் அடித்தளத்தில்தான் வாழ்க்கையின் உயிர்நாடி உளது. காதலின் சிறப்பும் நம்பிக்கையின்பாற் படுகிறது. அந்த நம்பிக்கையே உலகை, உய்ந்து வாழ வகை செய்கின்றது.

உடலலா லுயிரும் விதியால் உணர்வும்
கடபட சடமலாற் கடவுளும் இலையேல்
வேண்டிய விளைக விசனம் என்? அன்றேல்
காண்டி அவ்வேளை கருணையின் இயல்பே

என்றபடி காதலின் கனிந்த தன்மையை பற்றிக் கொள்கிறாள் வாணி. மனோன்மணிக்கு மணம் முடியும்பொழுதே தன் மணமும் முடியும் என முடிவெடுக்கிறாள்.

பேரிலா ஊரிலாப் பெரியோன் அவன்தான்
யாரே யாயினும் ஆகுக; அவனைநீ
அணையும் நாளே அடியேன் மணநாள்

இவ்வாறு மனோன்மணீய நாடகத்தில் உண்மைக் காதலின் உயர்வையும், நட்பின் திறத்தையும், பெண்ணின் பெருங் குணத்தையும் ஒருங்கே காட்டும் உத்தமப் பெண்ணாய் வாணி இடம் பெற்று இலங்குகின்றாள்.

# 3. ஜீவகன்

*அவன் பனாங்குபோலக் களங்கமில்லாத நெஞ்சினன்.*
*—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை*

படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வரும் பாண்டிய மரபிலே வந்த மன்னன் ஜீவகன், 'ஆதி இன்னதென்று ஓது வதற்கரிய வழுதியின் தொல்குலம்' என்று தான் பிறந்த பாண்டியன் குலத்தினைப் பற்றி ஜீவகனே ஓரிடத்தில் பெருமை பாராட்டிக் கொள்கிறான். 'எடுப்பார் கைப் பிள்ளை தடுப்பார் யாரே' என்ற நாராயணன் கூற்றுப்படி தன் மதிமந்திரி குடிலன் ஆட்டி வைத்தபடியே நாடகத் தொடக்க முதல் இறுதிவரை ஆடுகிறான். தனக்கென்று ஒரு கொள்கை; ஒருசெயல்முறை என ஒன்றின்றிக் குடிலன் ஒளியிலேயே ஒளிவிட நினைக்கிறான். இதனைக் குடிலனே ஒருமுறை,

நாமே அரசும்; நாமே யாவும்
மன்னவன் நமது நிழலில் மறைந்தான்

என்று குறிப்பிடுகின்றான். குடிலனின்றி யாதொரு செயலும் ஆற்ற இயலாதவனாக இவன் முடங்கிக் கிடக் கிறான். இதுவே ஜீவகனிடத்தில் நாம் காணுகின்ற பெருங் குறையாகும். இக் குறையே நாடக மாந்தர் பலர் நலிவுறக் காரணமாகின்றது.

குடிலனைக் குறைவற நம்பிய கொடுமை ஜீவகன் எடுத்த தற்கெல்லாம் அவன் ஆலோசனைப்படியே நடப்பதிலிருந்து தெரியவருகிறது. எனவே குடிலனை இவன் நாடகத்தின் பல விடங்களிலும் நன்றாகப் புகழ்கிறான். 'பழுதிலாக் குடிலன்' என்றும், 'வாராய் குடில மந்திரி உனக்கு நேர்தான் ஆரே,' என்றும், 'நமது பாக்கியம் அவ்வேவா இவனை நாம் அமைச்சனாகப் பெற்றது' என்றும், 'மதியுளார் யாரவன் மதியதி சயித்திடார்' என்றும், 'என்னே இவன்மதி

முன்னிற்பவை வெவை' என்றும், 'குடிலனை அறியார் யார் இக்கொற்றவை' என்றும், 'யார்வையார் அவனிடத் தாரா ஆர்வம்' என்றும் பலவாறு குடிலனைப் பலப்படியாகப் பல இடங்களில் புகழ்ந்து பேசுகிறான். மேலும்,

உண்மைக்கு உறைவிடம் திண்மைக் கணிகலம்
சத்திய வித்து பத்திஉன் மத்தன்
ஆள்வினை தனக்காள் கேள்விதன் கேள்வன்

என்றும் புகழ்ந்து பேசுகிறான். 'எங்கேகினும் நம் காரிய மெயவர் கருத்தெப் பொழுதும்' என்றும், 'தற்புகழ் கேட்க அற்பமும் இசையான்' என்றும், 'நானே அவனிங் கவனே யானும்' என்று ஜீவகன் கூறும் குடில புராணம், ஜீவகனின் களங்கம் காணமுடியாத வெள்ளை உள்ளத்தைக் கள்ளமின்றிக் கூறும்.

ஜீவக மன்னனின் இந்த இரங்கத்தக்க நிலையினையே நாராயணன் பின்வருமாறு தெளிவுப்படப் பேசுகின்றான்.

வெளுத்த வெல்லாம் பாலெனும் மெய்ம்மை
உளத்தான் களங்கம் ஓரான் குடிலனோ
சூதே உருவாய்த் தோன்றினன்

என்று முரண்பட்ட இரு பாத்திரங்களைப் பற்றிய தெளிவுரையினை விளக்கி நிற்கிறான் நாராயணன்.

அரசத் துரோக நிகழ்ச்சியில் ஈடுபட்டு அதன் விளைவாகப் புருடோத்தமனால் கைது செய்யப்பட்டுச் சுருங்கை வழி அழைத்து வரப்படும் நிலையிலும், ஜீவகன், குடிலன் அந்த இரவிலும் தனக்காகவே எங்கோ உழைத்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிறான். இதனை மறைந்திருந்து கேட்கும் புருடோத்தமன், 'எத்தனை களங்கமில் சுத்தன் கஷ்டம்' என்கிறான். புருடோத்தமனிடத்திலிருந்து ஜீவகனிடத்துத் தூது வந்த தூதுவனும் ஜீவகனின் இந்நிலையினை, என்மதி குறித்தாய் எடுத்தகைப் பிள்ளாய்?' என்று இடித்துக் காட்டுகின்றான்.

போர் வந்துவிட்டது. இரு படைகளும் கலக்கின்றன, போரில் ஜீவகனுக்கு ஏதம் வருமோ என உண்மைத்

# 3. ஜீவகன்

*அவன் பனிக்குபோலக் களங்கமில்லாத நெஞ்சினன்.*
*—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை*

படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வரும் பாண்டிய மரபிலே வந்த மன்னன் ஜீவகன், 'ஆதி இன்னதென்று ஓதுவதற்கரிய வழுதியின் தொல்குலம்' என்று தான் பிறந்த பாண்டியன் குலத்தினைப் பற்றி ஜீவகனே ஓரிடத்தில் பெருமை பாராட்டிக் கொள்கிறான். 'எடுப்பார் கைப் பிள்ளை தடுப்பார் யாரே' என்ற நாராயணன் கூற்றுப்படி தன் மதிமந்திரி குடிலன் ஆட்டி வைத்தபடியே நாடகத் தொடக்க முதல் இறுதிவரை ஆடுகிறான். தனக்கென்று ஒரு கொள்கை; ஒருசெயல்முறை என ஒன்றின்றிக் குடிலன் ஒளியிலேயே ஒளிவிட நினைக்கிறான். இதனைக் குடிலனே ஒருமுறை,

> நாமே அரசும்; நாமே யாவும்
> மன்னவன் நமது நிழலில் மறைந்தான்

என்று குறிப்பிடுகின்றான். குடிலனின்றி யாதொரு செயலும் ஆற்ற இயலாதவனாக இவன் முடங்கிக் கிடக்கிறான். இதுவே ஜீவகனிடத்தில் நாம் காணுகின்ற பெருங் குறையாகும். இக் குறையே நாடக மாந்தர் பலர் நலிவுறக் காரணமாகின்றது.

குடிலனைக் குறைவற நம்பிய கொடுமை ஜீவகன் எடுத்ததற்கெல்லாம் அவன் ஆலோசனைப்படியே நடப்பதிலிருந்து தெரியவருகிறது. எனவே குடிலனை இவன் நாடகத்தின் பல விடங்களிலும் நன்றாகப் புகழ்கிறான். 'பழுதிலாக் குடிலன்' என்றும், 'வாராய் குடில மந்திரி உனக்கு நேர்தான் ஆரே,' என்றும், 'நமது பாக்கியம் அல்லவோ இவனை நாம் அமைச்சனாகப் பெற்றது' என்றும், 'மதியுளார் யாரவன் மதியதி சயித்திடார்' என்றும், 'என்னே இவன்மதி

இதே போன்றே முனிவரோடு மனோன்மணியை நடுநிசியில் தனியே அனுப்பக் கூடாது என்று கூறி, 'முனிவரேயாயினும் அறியரே. உலகம் பைத்தியம், பழித்திடும்; சத்தியம் உணராது' என்றான். மன்னனும் மதிமந்திரியின் மாற்று யோசனைக்கு ஒப்புக் கொள்கிறான். வஞ்சி நாட்டிற்குத் தூது செல்ல நடராசனே பொருத்தமானவன்" என்று சுந்தர முனிவர் சொல்லியிருக்கவும், ஜீவகன் பலதேவனே தூதிற்குப் பொருத்தமானவன் என்ற குடிலன் கூற்றையே ஒப்புக் கொண்டு செயல்படுகின்றான்.

இந்தப் பெருங்குறை ஜீவகன்பால் இருப்பினும், தவ முனிவரிடத்து மதிப்பும் பணிவும் கொண்டவனாகவே ஜீவகன் விளங்குகிறான். முனிவரை வரவேற்கும்போது,

வருக! வருக! குருகிரு பாநிதே!
திருவடி தீண்டப் பெற்றவிச் சிறுகுடில்
அருமறைச் சிகரமோ ஆலநன் னீழலோ
குருகுல விஜயன் கொடித்தேர்ப் பீடமோ
யாதென ஓதுவன்?

என்றும்,

எத்தனை புரிதான் இருக்கினும் எமக்கெலாம்
அத்த! நின் அருள்போல் அரணெது?

என்றும், அவன் கூறும் கூற்றுக்கள் மெய்யாகவே அவன் அடிமனத்தின் ஆழத்திலிருந்து வருவனவாகும்.

அடுத்து, ஜீவகன் மனோன்மணியிடத்துக் கொண்டிருக்கும் அன்பிற்கு அடைக்கும் தாழ் இல்லை. தடை இல்லை செவிலித் தாய் கொலுமண்டபம் வந்து, ஜீவகனிடம் மனோன்மணியின் துயர நிலையைச் சொல்லத் தொடங்க 'நேற்றிரா முதலா' என மொழியுமளவில், 'பிணியோ என் கண்மணிக்கு?' என்று பதைத்துக் கேட்கின்றான்; 'உரையாய் விரைவில், ஒளிக்கலை ஒன்றும்' என்கிறான். மனோன்மணியின்பாற் புதிதாகப் பிறந்துள்ள காதல் மெய்ப்பா

களைச் செவிலித்தாய் கூற அவையெல்லாம் குடிலன் கூற்றுப்படி 'அத்திறம் காமம் என்பது அறியாத' காவலனாய் பித்தனாய், பேதையாய் விளங்குகிறான் ஜீவகன்.

மனோன்மணியிடத்துச் சென்று அவன் பரிந்து பேசும் பேச்சிலும், மகள் மேல் அவன் கொண்ட மாறாத பாசம் எதிரொலிக்கின்றது. அவளாலேயே அவன் உயிர் தரித்திருந்ததாகக் கூறுகிறான்:

நின்முக நோக்கியும் நின்சொற் கேட்டும்
என்மிகை நீக்கி இன்பம் எய்தி
உன்மன மகிழ்ச்சிக் குதவுவ உஞற்ற
உயிர்தரித் திருந்தேன் செயிர்தீ ரறமும்
வாய்மையும் மாறா நேசமுந் தூய்மையும்
தங்கிய உன்னுளம் என்னுளந் தன்னுடன்
எங்கும் கலந்த இயல்பா லன்றோ
மறந்தே னுன்தாய் இறந்த பிரிவும்
உன்னை யன்றியென் னுயிர்க்கு உலகில்
எதுவோ இறுதி இயம்பாய்
அழாய்நீ அழுவையேல் ஆற்றேன்.

முதல் நாள் போரிற் கண்ட தோல்வியால் ஜீவகன் சோர்ந்திருக்க, 'மகளால் அன்றி மன்னவன் தேறான்' எனச் சேவகன் ஒருவன் கூறுகிறான். வாளால் தன்னை மாய்த்துக் கொள்ள நினைக்கையில் நாராயணன் வந்து தடுத்து, 'மனோன்மணி தன்னை மறந்தாய் போலும்' என்று கூற, 'குழந்தாய்! குழந்தாய்' என்று ஜீவகன் மூர்ச்சிக்கிறான்.

குடிமக்களிடத்தும் கொற்றவன் குறையாத அன்புடையவன் என்பது,

பருதிகண் டன்றோ பங்கயம் அலரும்?
அரசநீ துயருறில் அழுங்கார் யாரே?

என்ற சேவகன் கூற்றால் வெளியாகிறது.

ஜீவகனின் வீரவுணர்வும் மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் பெரிதும் பாராட்டத்தக்கவை. போருக்குப் புறப்படுமுன் நாற்படையாளரை நோக்கிப் பின்வருமாறு வீரவுரை பேசுகின்றான் ஜீவகன்.

பாண்டியர் உரிமை பாராட்டும் பண்பினர்
சுதந்திரம் அவர்க்குயிர் சுவாச மற்றன்று
இத்தனிப் போரில்நீர் ஏற்றிடுங் காயம்
சித்தங் களித்து ஐயமாது உமக்கு
முத்தமிட்ட டளித்த முத்திரை யாகி
எத்தனை தலைமுறைக் கிலக்காய் நிற்கும்
போர்க்குறிக் காயமே புகழின் காயம்
யார்க்கது வாய்க்கும்! ஆ! ஆ! நோக்குமின்.

வீரச் சுவை கொப்பளிக்கின்ற பேச்சு இது.

விந்தம் அடக்கினோன் தந்தஎம் தமிழ்மொழி

என்று கூறிப் படைவீரர்க்கு மொழிப்பற்றூட்டி அவர்களைத் 'தமிழ் மொழிக்கு ஜே! ஜே!' என்று அலைகடலென ஆர்ப்பரிக்கச் செய்கிறான் ஜீவகன்.

நாட்டபி மானமில் நடைப்பிண மூச்சாம்

என்றும்,

அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னிலும்
நாட்டபி மானமுள் மூட்டிய சினத்தீ
அன்றோ வானோர்க் கென்றுமே உவப்பு!

என்றும் படைவீரர்களுக்கு நாட்டுப்பற்று ஊட்டும் பொழுது நரம்புகள் புடைத்தெழுகின்றன.

இத்தகு வீரமும் மானமும் உடைய அரசன் பழைமைப் பண்பில் சிக்கிச் சுழல்கிறான். புதுமை நோக்கு இல்லை. எனவே தான் பலதேவனை மணந்து கொள்ளுமாறு வாணியை வேண்டுகின்றான். தன் மகளையும் சுந்தரா சொல்லப் புருடோத்தமனுக்கு மணம் பேசுகின்றான்.

இறுதியில் குடிலன் பேச்சால் பலதேவனை மணந்து கொள்ளுமாறு தன் மகள் மனோன்மணியை வேண்டுகிறான். மங்கையர் மனத்திற்கு மதிப்பளிக்காத பழைமையுள்ளம் ஈண்டுப் புலனாகின்றது.

கனிந்த நெஞ்சு, சிறந்த ஒழுக்கம் இவையிருந்தும் முதிர்ந்த பேரறிவின்றிப் பழைமைக்கு அடிமையாய்ப் புதுமைப் போக்கின்றி, நல்லவர்களைத் தீயவர்களாய், தீயவர்களை நல்லவர்களாய், நண்பர்களைப் பகைவர்களாய், பகைவர்களை நண்பர்களாய் எண்ணி மதிமயங்கும் மனநிலையிலேயே மதிகுல மன்னவன் ஜீவகன் மனோன்மணீய நாடகத்தில் வருகின்றான்.

நாடக இறுதியிலும் குடிலனைக் கையும் மெய்யுமாகக் கைவிலங்கோடு கண்ட நிலையிலும், குடிலன் சூழ்ச்சியினைத் தெளிந்த நிலையிலும், ஜீவகன், 'குடிலா உனக்குமிக் கெடுதி யேன்? ஐயோ!' என்றே அலறுகின்றான். அரசனின் அப்பாவித்தன்மை ஈண்டும் புலனாகின்றது.

குடிலனே தன் நன்னலம் கருதுபவன் என்று கொண்டு, அவன் கூற்றின்படியே நடந்து, அவன் ஆட்டிவைக்கும் பாவையாகவே ஜீவகன் மனோன்மணீய நாடகத்தில் தோன்றுகின்றான்.

# 4. குடிலன்

(அவன்) மந்திரி குடிலன் என்பவன் ஒப்பற்ற சூழ்ச்சித் திறமையுடையவனாயினும் முற்றும் தன்னயமொன்றே கருதும் தன்மையனாயிருந்தான்.

—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

மனோன்மணீய நாடகத்தில் தொடக்கம் முதல் இறுதி வரையில் இணையற்ற பங்கு கொள்பவன் குடிலனே. இவன் சூழ்ச்சியினை மையமாகக் கொண்டே கதை சுற்றிச் சுழன்று வருகின்றது. மண்ணைப் பிசைந்து தன் மனம் போனவாறு வடிவம் சமைக்கும் குயவனின் கைவண்ணம் போன்று, குடிலனின் கொடூர மனத்தினின்றும் பீறிடும் எண்ணங்களே நாடகத்தில் வரும் பாத்திரங்கள் பலவற்றினையும் ஆட்டிப் படைக்கின்றன. இதற்கு விதிவிலக்காகப் பலர் வரலாம். ஆனால் மன்னன் ஜீவகனைத் தன் மனம் போனபடி ஆட்டி வைக்கும் அவனுடைய தனித் திறமையாலே வீறு நிறைந்த மற்றப் பாத்திரங்களும் சற்றே தடுமாற வேண்டியுளது. குடிலனின் சூழ்ச்சிப் புயலில் சிக்கித் திகைப்பவர் பலர்.

நாடகத் தொடக்கத்திலேயே குடிலனை நாம் காண்கின்றோம். நீண்ட நெடும்பேச்சினைப் பேசிச் சுந்தர முனிவர்க்கு வெறுப்பூட்டுபவனும் அவனே. பீடுயர் நெல்லைக் கோட்டையினை அமைத்தவன் அவனே. இதற்காகப் பழமதுரையினின்றும் பாண்டியனைப் போக்கி நெல்லைக்குக் கொணர்ந்தான். பாண்டியனின் அரியணையின்மீது அவனுக்கு அளவில்லாத ஆசை. தக்கதருணம் நோக்கித் தவித்திருக்கிறான் குடிலன்.

கோட்டையை முனிவர்க்குக் காட்டிவா என்கின்றான் மன்னன். சுந்தர முனிவருக்கு முகமன் கூறி, 'நீயறியாதது தொன்றில்லை' என்று சுந்தர முனிவரைப் புகழ்ந்து பேசுவதோடு அமையாது, எந்திரப்படைகளும் தந்திரக் கருவிகளும் நிறைந்த கோட்டையின் இயல்பினை வருணிக்க முற்படு

கின்றான் குடிலன். நாநயமும் சொற்சாதுரியமும் பேச்சு வன்மையும் பெரிதும் உடையவன் குடிலன் என்பது குடிலனின் தொடக்கப் பேச்சிலேயே தெரியவருகின்றது. திருவாசகத்தினைத் திறம்படத் தெரிந்தவன் போன்று தன் பேச்சுக்குத் 'தென்பாண்டி நாடே சிவலோக மாமென முன் வாதவூரர் மொழிந்தனர்' என மேற்கோள் காட்டுகின்றான். உலகினைப் பசுவாகவும், பாரத நாட்டினை அப்பசுவின் மடியாகவும், தென்பாண்டி நாட்டினை அப்பசுவின் பால்கொடுங் காம்பாகவும் குறிப்பிடும் குடிலன் கூற்றில், அவன் பரந்துபட்ட அறிவு விளக்கமுறுகின்றது. மேலும் கோட்டையின் உயரத்தினைக் குறிப்பிட,

மஞ்சுகண் துஞ்சும் இஞ்சி யுரிஞ்சி
உதயனு முடல்சிவந் தானே

என்று குறிப்பிடுவதில் எத்துணை இலக்கிய நயம் கமழ்கின்றது.

முனிவரா குடிலன் பேச்சில் மயங்குகின்றவர்? அவர் அப்பால் அந்தப்புரம் சென்று மனோன்மணியைக் காண வேண்டுமென விரைகிறார். அவர் அப்புறம் போக 'நங் காரியம் ஜயம் எங்காகினுஞ் செல!' என்று கூறி, மகிழ்ச்சிக் களிப்பில் தன்செயல் சித்தியடைந்த சிந்தையோடு குடிலன் வெளியேறுகின்றான். இத்தகு தன்னல நோக்கமே அவன் வாழ்வாக—அதன் அடித்தளமாக அமைகிறது. நகரவாசிகள் பேசிக்கொள்வதிலும் இந்த உண்மையே வலியுறுகின்றது. கடல்மடை திறந்ததுபோல் குடிலன் பேசியதாக முதல் நகரவாசி குறிப்பிடுகின்றான். இரண்டாம் நகரவாசி அவன் புராணக் கதையினை வீணாக விளம்பினதாகக் கூறுகின்றான். 'குடிலன் செய்யும் படிறுகள் முனிவர் அறியாதவரோ?' என்று வினவும் மூன்றாம் நகரவாசியின் கூற்றால் நகரவாசிகளுக்கும் குடிலனின் வஞ்சனை புலப்பட்டுப் போயினமையை அறிந்து கொள்கிறோம்.

நகரவாசிகள் மட்டுந்தானா குடிலன் திட்டத்தை அறிந்துள்ளனர்? நாட்டுப்புறத்தில் நடமாடும் உழவர்கள் கூட

வன்றோ அவனை உள்ளவாறு அறிந்துள்ளார்கள். ஓர் உழவன் 'குடிலன் கைதொடில் மஞ்சளும் கரியாகும்மே" என்று குடிலன் கைராசியினை விமர்சிக்கின்றான். பிறிதோர் உழவன்,

குடிலன் படிறன்; கொற்றவன் நாடும்
முடியும் கவர்ந்து மொய்குழல் மனோன்மணி
தன்னையும் தன்மகற்கு ஆக்கச் சமைந்தான்
மன்னனைக் கொல்ல மலையனைத் தனக்குச்
சூதாய்த் துணைவரக் கூவினான்

என்று குறிப்பிட்டுக் குடிலனின் உட்கோளினைப் பறை சாற்றுகின்றான்.

நாடகத்தில் வரும் நாராயணன் அறிவு நுட்பமும் பண்பொழுக்கமும் நிறைந்தவன். குடிலனை உள்ளவாறு அறிந்து, அவன் சூழ்ச்சியினைச் சிதைத்து, மன்னனைக் காக்கும் மாண்புடையவன் அவன். குடிலனைப் பின்வருமாறு அவன் மதிப்பிடுகின்றான் :

……………………குடிலனோ
சூதே உருவாய்த் தோன்றினன் அவன்தான்
ஓதுவ உன்னுவ செய்குவ யாவும்
தன்னயங் கருதி யன்றி மன்னனைச்
சற்றும் எண்ணான் முற்றும் சாலமா
நல்லவன் போலவே நடிப்பான், பொல்லா
வஞ்சகன்.

ஆனாலும் குடிலனின் வல்லமையைப் பாராட்டவே வேண்டும். 'புத்தியே சகல சக்தியும்' என்பதே குடிலனின் தாரக மந்திரம். இவ் வல்லமையை நாராயணனும் உடன்படுகின்றான். 'நல்லது கருதான் வல்லமை என்பயன்?' என்ற அவனுடைய கூற்று முற்றிலும் உண்மையே!

"அரசரைத் தன் வஞ்சகச் சூழ்ச்சியால் ஏமாற்றி அரசினைப் பெறுவதே குடிலனது முயற்சி. அவன் தான் எண்ணுவதனை மனத்தே மறைத்துக் கொள்வான்; அதனை மறைத்து உரையாடுவதற்கு வேண்டுவன எல்லாம் தானே

பேசுவான். அதனைப் பேசுகின்ற முறையிலேயே பிறர் அதனை மறுக்கும்படி பேசுவான். பிறர் அவ்வாறு மறுத்த உடன் அப்பிறர்க்கெனவே உடன்படுவான் போலத் தான் எண்ணியதனை முடித்துக் கொள்வான். இதுவே குடிலனது சூழ்ச்சியின் சிறப்பியல்பு." இவ்வாறு குடில உள்ளத்தினை ஆய்ந்து காண்கின்றார் அறிஞர் தெ. பொ. மீ. அவர்கள்.

வாணியின் தந்தை சகடர் பணத்தின் வலைப்படுகிறார். தன் மகள் வாணி தன் காதலன் நடராசனை மறந்து பல தேவனை மணக்கவேண்டும் என்று விரும்புகிறார். தன் விருப்பம் செயல்பட மன்னன் துணையையே நாடுகின்றார். அதுபொழுது அருகிலிருந்த குடிலன், 'நடராசனையே வாணி மணந்தாலென்ன குறை?' என்று கேட்கின்றான். 'போம்! போம்! உமது குழந்தையேல் இங்ஙனம் கூறீர்' என்று வயிறெரிந்து பேசுகிறார் வயோதிகச் சகடர். குடிலன் மேலும் சூழ்ச்சிவலை விரிக்கின்றான். உள்ளத்தில் கள்ளங் கொண்டு உதட்டில் வேறொன்று பேசி நடிக்கின்றான். 'அழகன்! ஆனந்தன்!' என நடராசனைக் குறிப்பிடுகின்றான் குடிலன். மன்னன் 'அழகிருந்தென் பயன் தொழிலெலாம் அழிவே' என வெறுப்பில் மொழிகின்றான். குடிலன் விரும்பிய பயன் விளைகின்றது. விளைவினை அறுவடை செய்து கொள்ளத் தவறிவிடவில்லை குடிலன். கிடைத்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டு, 'சிதம்பரத்திற்கனுப்பினேன்; சென்றிலன் நின்றான்' என்று மன்னன் மனத்தில் கோபத் தீயினை மூட்டி, 'முனிவர் பிரியனாதலின் பெயர்ந்திலன் போலும்' என்று முனிவர் பெருமை பேசுவது போன்று அவர் மேல் மன்னன் மனவெறுப்புக் கொள்ளச் செய்கிறான். 'எரியும் கொள்ளியில் எண்ணெய் வார்த்தாற் போன்று' குடிலன் கூறிய சொற்களைக் கேட்டு, ஜீவக மன்னன், 'சரியல, இராச்சியத் தந்திரத்து அவர்க்கு என்' எனக் கேட்டு முனிவரின் அரசியல் தலையீட்டினை வெறுத்துப் பேசுகின்றான்.

காதலனைக் கனவில் கண்டு மயங்கிப் பிதற்றுகிறாள் மனோன்மணி. ஜீவகன் அது கண்டு வருந்த, உண்மை

நிலையினை உணர்கிறார் முனிவர். சேரனே மனோன் மணிக்குத் தகுந்த மணமகன் என எடுத்து மொழிகிறார் சுந்தரர்; புருடோத்தமனிடம் மன்றல் தூது செல்லத் தகுந்தவன் நடராசனே எனத் துணிகிறார் சுந்தரர், மன்னனிடத்தும் தன் கருத்தைச் சொல்கிறார். ஆயினும் இங்கும் குடிலனின் வஞ்சனையே வெற்றி முரசு கொட்டு கிறது. சேரனின் உறவை வெட்டும் உன் நோக்கில் தன் மகன் பலதேவனையே புருடோத்தமனிடத்தில் தூது அனுப்புகின்றான் குடிலன். மன்னன் மகள் மனோன்மணி தன் மகன் பலதேவனுக்கு உரியவளானால் இராச்சியமும் நம்முடையதாகுமே என இடையில் ஓர் எண்ணம் குடிலன் மனத்தில் பளிச்சிடுகின்றது. மனோன்மணியிடம் தன் மகன் பலதேவனை அடிக்கடி அனுப்பி வைத்தால் காதல் பற்றிக் கொள்ளும் என்று கணக்குப் போடுகிறான் குடிலன்.

அருகுள தெட்டியே யாயினும் முல்லைப்
படர்கொடி படரும் பலதே வனையவள்
இடமே பலமுறை யேவி லுடன்படல்
கூடும்

என்று குடிலன் தனக்குள் பேசிக்கொள்ளும் கூற்றில் அவனது உளவியல் நுட்பம் புலனாகிறது. தூது சென்ற பலதேவன் விரைவில் திரும்பி வராதது கண்ட குடிலன், முன்னெச்சரிக்கையாக 'வஞ்சி வேந்தன் தன் மகனை என்ன பாடுபடுத்துவானோ?' என்று ஜீவகனிடம் கூறிப் புருடோத் தமனைப் பழித்துப்பேசி மன்னன் மனத்தில் சேரன்பால் வெறுப்பு ஏற்பட வகை செய்கிறான். அதே நேரத்தில், தன் மகன்பால் மன்னன் பரிவுகொண்டு தன் மகனின் வலிமையை யும் வல்லமையையும் பாராட்டி மொழியச் செய்கிறான். மேலும் ஒருபடி சென்று,

என்று மிப்படியே இவள்பணி விடையில்
நின்று நம்உயிர் விடிலன்றோ நன்றாம்

என்று பலதேவன் மனோன்மணியின் பாதசேவையே யாக்கியம் என்று கருதியதாக நயமுற உரைக்கின்றான். இவையெல்லாம் குடில புத்தியின் கொடூர விளைவுகள்.

நாமே அரசும் நாமே யாவும்
மன்னவன் நமது நிழலின் மறைந்தான்

என்ற கூற்று அவன் தன்னம்பிக்கையின் ஊற்று.

குடிலன் பிரபுத்துவம் தன்னலம் தழைத்தோங்கும் பான்மையில் வளர்ந்தோங்கியுள்ளது. சிலர் வாழப் பலர் துன்பம் ஏற்கவேண்டும் என்பது குடிலன் கண்ட சித்தாந்தம். குடிலனுக்கு மனம் உண்டு. ஆனால் அம்மனத்தில் அனைத்துயிர்க்கும் அன்பு பாராட்டுகின்ற பண்பு இல்லை. செயலின் வித்தினையும் அதன் விளைவினையும் நன்கு அறிந்தவன் அவன். போர் மூள்கிறது. குடிலன் தன் மனத்தோடு பேசிக் கொள்கிறான். ஒருவனது ஆசைப் பெருக்குப் பலரைப் பாரில் மடிவிக்கும் என நன்கு தெளி கின்றான்.

ஒருவன தாசைப் பெருக்கால் உலகில்
வருதுயர் கடலில் பெரிதே

என்றும், போர் நிகழ்ந்தால்,

நின்றவிவ் வீரரை ஒன்றிய மனைவியர்
உற்றார் பெற்றார் நட்டார் என்றிப்
படியே பரவும் படியெலாம் துன்பம்

என்று தன் பேராசைப் புயலுக்குப் பலியாகப் போகும் உயிர்களின் துன்பத்தினையும் உன்னிப் பார்க்கின்றான். ஒரு கணம் தயங்குகின்றான்; மனித மனம் பெறுகின்றான். ஆட்டங் கண்டு அயர்ந்து நின்ற மனம் ஓட்டங் காண்கிறது; மீட்டும் குடிலபுத்தி குடிபுகுந்து கொள்கின்றது. இதோ குடிலன் பேசுகின்றான்:

பலபெயர் துக்கப் பட்டா லன்றி
உலகில் எவரே ஒருசுக மணைவார்?

அம் மட்டோ? நல்லது நினைக்கும் தன் மனத்தையே கடிந்து கொள்கிறான்.

என்னை? என் மதி இங்ஙனம் அடிக்கடி
என்னையும் எடுத்தெறிந் தேகுதல் சீச்சீ!

தன்னைப் போலவே உலகமும் தன்னலகப் பேய் கொண்டு ஆடுகின்றது என்று குடில மனம் எண்ணுகின்றது.

தன்னயம் கருதி யன்றித் தமைப்போல்
பின்னொரு வனையெணிப் பேணுவர் உளரோ!

என்று வினாவெழுப்பி,

அலகிலா மானிடர் யாவரும் அவரவர்
நலமே யாண்டும் காடுவர்

என்று விடை கூறிக் கொண்டு அமைதியும் பெறுகிறது. 'புண்ணியம் ஜீவகா ருண்ணியம் எனப் பல பிதற்றுதல் முற்றும் பித்தே' என்பது குடிலனின் கொள்கை.

குடிலனுக்கு நேர்மையில் நம்பிக்கையில்லை; கோணல் வழியிலேயே—குறுக்கு வழியிலேயே அவன் உள்ளம் சுழல்கிறது; தனக்கு வேண்டாதவர்களைப் பகைவர்களாக்கிக் கொள்ளத் துடிக்கிறது. உண்மையான அரசசேவகன் நாராயணனைச் சிறைக்கு அனுப்பி வைக்கின்றது. கோட்டைக் காவலில் இருக்க வேண்டிய நாராயணன் போர்க்களம் புகுந்ததாகக் குற்றம் சாட்டி, 'நாராயணன் ஏன் தன் காவலை விட்டு வந்தான்?' என்று தன்னை வினவிய ஜீவகனுக்கு,

ஐய! யான் அறிகிலன் அவரிலும் நமக்கு
மெய்ம்மையர் யாவர்? வேலியே தின்னில்
தெய்வமே காவல் செழும்பயிர்க்கு என்பர்

என்று கூறித் தன் பகை முடிக்கின்றான். இம் மட்டோடு நிற்கவில்லை குடிலன். சுந்தர முனிவரைக் கூட மன்னன் ஐயப்படும் அளவிற்குக் கொண்டு வந்து விடுகிறான்.

அழுக்கா றென்று நாம் ஐயமற் றறைதல்
ஒழுக்கம் அன்றே! குருவன் றோஅவர்

என்று நயமாகக் கூறி, ஜீவகன் வாயினின்றும்

ஐயரும் அழுக்கா றடைந்தார் மெய்ம்மை

எனும் வாசகத்தினை வரவழைக்கின்றான்.

மன்னன் நிழலில் இவன் வாழ, இவன் தன் நிழலில் மன்னன் மறைவதாக நினைக்கிறான். ஜீவகன் குடிலனைப் பலபடப் பாராட்டி மொழிகிறான்.

நானே அவனிங் கவனே யானும்

என்றும்,

............எங்கே கினும்நம்
காரிய மேஅவர் கருத்தெப் பொழுதும்

என்றும்,

குடிலா! உனைப்போற் கூரிய மதியோர்
கிடையார் கிடையார்

என்றும்,

யானறி யாதுழைக் கின்றனன் எனக்கா

என்றும்,

பற்பல பாக்கியம் படைத்துளர் பண்டுளோர்
ஒப்பறும் அமைச்சனை இப்படி ஒருவரும்
முன்னுளோர் பெற்றிலர்

என்றும், கூறும் ஜீவகனை மதிப்பிடும் குடிலன் கருத்து,

போற்றான் யார்சொலும் புந்தியும் சற்றும்
அன்பிலன் பிறர்படுந் துன்பஞ் சிறிதும்
அறியா வெறியன்

என்பதும்,

பித்தன் ஒருவன் தன்னால் இத்தமிழ்
நாடெலாம் வெறுஞ் சுடுகாடாய் விடுமே

என்பதும் ஆகும்.

மன்னனிடத்தில்தான் குடிலனுக்குப் பற்றில்லை. நன்மையினிடத்தாவது பற்றுண்டா வென்றால் அதுவும் இல்லை.

தீது நன்றென ஓதுவ எல்லாம்
அறியார்க்கு அறையும் வெறும்மொழி

என்பது குடிலனின் கோட்பாடு.

இருவகை உபாயமின்றி எந்தச் செயலிலும் ஈடுபடக் கூடாது என்பது குடிலனின் கொள்கை. 'இரு சரம் இன்றி எப்போ ரிடையும் ஏகார் மதியோர்' என்கிறான் அவன். எனவே தான் போரில் தோற்பது உறுதி எனத் தெரிந்ததும், குறுக்கு வழியில் வெற்றியினைச் சந்திக்கச் சுருங்கை வழியே சென்றவன், சுருங்கை முடிவில் புருடோத்தமனைக் கண்டு அரசிற்குப் பேரம் பேசுகிறான். தன் செயல் சரியே என்பதற்கு அவன் காட்டும் ஆதாரம் இராமாயணத்தில் வீடணன் மேற்கொண்ட செயல் என்பதேயாம்.

பண்டிரா கவன்றன் பழம்பகை செற்று
வென்றதோ ரிலங்கை விபீஷணன் காத்தவாறு
இன்றுநீ வென்றநா டினிதுகாத் திடுவேன்

என்று, அவன் இராமயணக் கதை நிகழ்ச்சியை மேற்கோள் காட்டுவது சாத்தான் திருமறையினின்றும் (The devil quoting the Scripture) மேற்கோள் காட்டுவது போன்றுளது.

இறுதியில குடிலன பெறும பரிசில் யாது? ஊரார் உதைக்குப் பயந்து,

ஏதிது இங்ஙனம் யாவரு மெழுந்தனர்
வீதியிற் செல்லலை வீணர் அபாயம்
ஒழிகுவம் இவ்வழி! வழியிது! வாவா!

என்று தன் மகன் பலதேவனை அழைத்து ஓடுகிறான். தான் பெற்றெடுத்த மகன் பலதேவனே, அவனை,

மன்னனைக் குத்திட இசைந்தது யார்பிழை?
பணம்பண மென்று பதைக்கின்றாய் பிணமே

என்று வேலால் நெஞ்சில் இடியுண்ட நிலையில் பழித்துப் பேசுகின்றான். ஜீவகனை போரில் வேல்கொண்டு குத்திடக் குடிலன் செய்த சூழ்ச்சி முடிவில் அவன் மகன் பலதேவனையே பாதிக்கிறது.

சேரனிடத்தில் இராச்சிய பாரத்தை இரந்து நின்ற போது அவன் பெற்ற பரிசில் 'மூடுநின் பாழ்வாய்; சேரன் விஜயமும் திருடான்' என்பதேயாகும். "படபடத் திடுநின் பாழ்வாய் திறவாய்" என்று கைவிலங்குடன் புருடோத்தமனின் கைதியாக வரும் குடிலனை நோக்கி நாராயணன் படபடக்கின்றான். குடிலன் சூழ்ச்சியெல்லாம் சிதைகின்றது. பலதேவனுக்கு மனோன்மணியை மணமுடிக்க இறுதி நேரத்தில் அவன் மேற்கொண்ட முயற்சியும் நிறைவேறவில்லை. மனோன்மணி புருடோத்தமனுக்கு மாலையிடுகின்றாள்.

இவ்வாறு குடில மனத்தில் தோன்றிய சூழ்ச்சிகள் எல்லாம் இறுதியில் அவனையே அடியோடு தகர்த்தெறிகின்றன. 'அறம் வெல்லும்; பாவம் தோற்கும்' என்ற உண்மை குடிலன் வாழ்வால் விளக்கமுறுகின்றது. தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வினாலும் இறுதியில் தருமமே வெல்லும் என்பது குடிலனின் வாழ்வுவழி மனோன்மணீயம் நமக்குணர்த்தும் நல்ல பாடமாகும்.

# 5. சுந்தர முனிவர்

முதுநகராகிய மதுரை துறந்து கெடுமதியாளனாகிய குடிலன் கைப்பட்டு நிற்கும் நிலைமையால் ஜீவகனுக்கு யாது விளையுமோ என இரக்கமுற்று, அவனுடைய குலகுருவாகிய சுந்தர முனிவர் அவனுக்குத் தோன்றாத் துணையாயிருந்து ஆதரிக்க எண்ணித் திருநெல்வேலிக் கருகிலுள்ள ஓர் ஆசிரமம் வந்தமர்ந்தருளினார்.

—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

காவியுடை உடுத்துக் கந்தமூலங்கள் புசித்துக் காட்டிலே கண்மூடி வாழும் துறவியல்லர் சுந்தரர்; நாட்டிலே மக்கள் இடையிலே வாழ்ந்து மக்கள் நலம் பேணலே தவமாய தவம் என்று துணிந்து தொண்டில் நெஞ்சம் திளைக்கும் தூய துறவி இவர். ஜீவக வேந்தனைத் தொலைத்திடக் குடிலன் எடுக்கும் முயற்சிகள் எல்லாம் இவரால் மாற்றப்படுகின்றன. ஜீவகனைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பினை இவர் ஏற்கின்றார். ஆயினும் தம் எதிர்ப்புக் குரலை எங்கும் எழுப்புவதில்லை, 'தீமையை எதிர்த்து நில்லாதே' (Resist not the evil) என்ற ஏசுவின் போதகம் இவர் வாழ்வின் விளக்கமாய் உளது. தீய சக்தியினை எதிர்க்காமல், அத்தீய சக்திகள் தாமே மாயும் வகையில் நற்செயல்களைச் செவ்வியறிந்து செயலாற்றுவதில் வல்லவராயிருக்கிறார். தென்னவன் குலம் தழைக்கத் திருவருள் கூட்டும் குரு முனிவராய்த் துலங்கித் தவத்தின் நலமெலாம் தன்மையில் விளங்கப் பாடுபடுகின்றார்.

நாடகத்தின் தொடக்கமே இவருடைய புகழைப் பலரும் பேசுவது போன்று அமைந்துள்ளது. சேவகர்கள் இங்கும் அங்கும் ஓடி முனிவர் அமரப் பொற்சிங்காதனமும், அவர் அடியிணை அருச்சனைக்காகும் மலர்களையும் நாடுகின்றனர். எங்கும் 'சுந்தர முனிவா! வந்தனம் வந்தனம்' என்னும் ஒலியே சிறந்தெழுகின்றது. இவ் ஆரவாரம்,

களிறுகள் பிளிறும் ஓசையினையும் குதிரைகளின் குளம்படி யோசையினையும், முரசின் முழக்கினையும் அவித்து மேலோங்கி எழுகின்றது.

முனிவர் என்றிடிற் கனிவுறுங் கல்லும்
எத்தனை பத்தி! எத்தனை கூட்டம்!

என்று சேவகர்கள் பேசிக்கொள்கிறார்கள். சுந்தர முனிவரை ஜீவக மன்னனும் இன்புற வரவேற்கின்றான். பிறவிப் பிணி தீர்க்கும் பெருமான் என்று கூறி, அவர் வருகையினைக் கண்ணபெருமான் வருகையோ எனக் களிப்புறுகின்றான். எல்லோரையும் வாழ்த்திய சுந்தர முனிவர் மனோன்மணியின் நலத்தினைத் தனிப்பட உசாவு கின்றார். இதிலிருந்து சுந்தரமுனிவர் மனோன்மணிபாற் கொண்ட பேரன்பு புலப்படுகின்றது. 'உன்னருள் உடை யோற் கென்குறை' என்று மன்னன் தன் குலகுருவின் பேரருட் பெருக்கத்தினையே பெரிதென மதிக்கின்றான். 'எத்தனை புரிதான் இருக்கினும் எமக்கெல்லாம் அத்த! நின் அருள்போல் அரணெது?' எனச் சுந்தரரின் அருள் ஒளியே தன்னை வழி நடத்திச் செல்லும் ஒளிப்பிழம்பு என ஜீவகன் மொழிகின்றான். கொடுமனக் குடிலன்கூட,

ஊன்வரு பெருநோய் தான்விட அடைந்த
அன்பரின் புறஇவ் வருளுருத் தாங்கி
வந்தருள் கிருபா சுந்தரமூர்த்தி
நீயறி யாததொன் றில்லை

என்று சுந்தரரைச் சிறப்பிப்பானேயானால், அவர் பெருமை யினை விரித்துரைக்கவும் ஒல்லுமோ!

கோட்டையின் சிறப்பெல்லாம் குறைவறக் குடிலன் வாய்க் கேட்ட முனிவர், 'கோட்டையல்லாது மன்னனைக் காக்கும் வழி உளதோ?' என அமைதியாக எடுத்து மொழி கிறார். காலம் என்பது கறங்குபோற் சுழன்று மேலது கீழாகவும் கீழது மேலாகவும் மாற்றிடும் தோற்றம் என்று, காலக்கடலில் மக்கள் அனைவரும் கட்டு மரங்களே என்ற கருத்தை வெளியிடுகின்றார். 'உன்னையும் உன் குலத்

குறித்த மனோன்மணி தன்னையும் சங்கரன் காக்க' என அவர் குறிப்பிடுவது, குடிலனின் சூழ்ச்சியினை ஜீவகனுக்கு மறைமுகமாகச் சுட்டுவதேயாகும். 'நின் புதல்வியை யான் காண நேசித்தேன்; அத்திருவுறையும் அப்புறம் போதற்கு ஒத்ததாமோ இக்காலம்? உணர்த்தாய்' என்று சுந்தரர் ஜீவகனை வினவும் கூற்றில்தான் எத்துணைப் பொருட்செறிவு, தன்னடக்கம், பரிவுணர்ச்சி முதலியன நிறைந்து காணப்படுகின்றன.

> குடிலன் செய்யும் படிறுகள் முனிவர்
> அறியா தவரோ?

என்று நகரவாசி ஒருவன் குறிப்பிடுகின்றான். ஆம்! குடிலன் செய்யும் சூழ்ச்சிகளை முற்ற உணர்ந்தவரே முனிவர். ஆயினும் குடிலனை நேரடியாக அவர் எதிர்த்துக் கொள்ளவில்லை. குடிலனோடு எங்கும் நேர் நின்று பேசாமல் ஒதுங்கி ஒருபுறம் போகின்றார். 'தீயாரைக் காண்பதுவும் தீதே! தீயோர் சொற் கேட்பதுவும் தீதே! தீயாரோடு இணங்கி இருப்பதுவும் தீதே' என்றபடி சுந்தரர் நடந்துகொள்கிறார்.

இவருடைய தோற்றமே பிறரை நன்கு கவர்கின்றது. சிந்துரம்போல் சிவந்த அடிகள்; தாமரை மலர்போல் மலர்ந்த மதிமுகம்; கருணையொழுகு கண்கள்; பரிவினைப் புலப்படுத்தும் முறுவல்; பால்போல் வெளுத்த நரைத்த தலை; குற்றம் காண முடியாத பேச்சு; சாந்தமும் தயையும் தாங்கிய உடல்—இவையே சுந்தர முனிவரின் தவத்திருக் கோலம்.

மனோன்மணி சுரமுற்றாள் என்று கேட்ட சுந்தரர் அந்தப்புரம் விரைகிறார். மன்னன் அவர்தம் மலரடி வணங்குகின்றான். முனிவர் நிகழ்ந்தது கேட்டு, மனோன்மணியின் சுரத்திற்குக் காரணம் காதலே என முடிவிற்கு வருகிறார். ஜீவகனை நோக்கி,

> குழவிப் பருவம் நழுவுங் காலை
> களிமிகு கன்னிய ருளமும் வாக்கும்
> புளியம் பழமுந் தோடும் போலாம்

என்று காதலின் பெற்றியினை உணர்த்துகின்றார்; மனோன்மணியின் துயர் தீரும் மார்க்கமும் மன்னனிடம் உரைக்கிறார்; 'திருவாழ் கோடாம் சேர தேசத்துப் பெரு விலாப் புருடனாம் புருடோத்தமனே பூங்கொடி படரப் பாங்காம் தரு' எனப் பக்குவமாக மொழிகிறார்; நடராச னைத் தூதாகப் புருடோத்தமனிடத்தில் அனுப்பினால் மன்றல் வினையை மகிழ்ச்சியில் முடிப்பன் என்று வகையும் கூறுகிறார் சுந்தரர்.

ஆயினும், சுந்தரர் கூறிய யோசனையைப் 'பழுதிலாக் குடிலன்' பழுதுபடுத்தி விடுகின்றான். முனிவர் ஜீவகனிடம் ஓர் அறையினைக் கேட்டுவாங்கி அங்கிருந்து கோட்டைக்கு வெளியே போதற்குச் சுருங்கை வழி காண்கிறார். இச் சுருங்கை வழியினைக் குடிலன் கண்டதால் அவனுக்குக் கேடு வந்து சேர்ந்தது; அவ்வழியே அவனை விலங்கிட்டு அவன் பின்வந்த புருடோத்தமனுக்கோ கனவிலே கண்ட காரிகை யாம் மனோன்மணியை நனவில் தந்து நல்வினையாம் மணவினை மங்கலமாய் நடக்கத் துணைபுரிந்தது.

நூல் பல கற்ற நுண்ணறிவாளராம் சுந்தரமுனிவர் விரிந்த பேச்சினையும் விவாதப் போரினையும் சிறிது விரும் பாதவர். ஒரு முறை தம் சீடர்களாகிய கருணாகரரும் நிஷ்டாபரரும் வாதிட்டதைக் கேட்டு, 'உங்கள் பேச்சின் தன்மையறிவேன்; ஓயாப் பேச்சினை ஒழியுங்கள்' என்று உரை பகன்றார். இதனால் சமய வாதமாம் சழக்கினைக் கடந்த இவர் தம் சமரச நிலை தெள்ளிதற் புலனாம்.

இறுதியில் போரில் தோற்ற ஜீவகன் முனிவரை நாடு கிறான். மன்னனின் மனத்துயரைப் போக்கத் தான் சுருங்கை கண்டதைக் கூறி, 'அஞ்சற்க' என அபயம் அளித்து மனோன்மணியைக் காப்பாற்றும் பொறுப்பைத் தாம் ஏற்றுக்கொண்ட நிலையில், ஜீவகன் அவர் தன் பொருட்டு எடுத்த வருத்தத்தினை எண்ணி,

> ........உன்திரு
> வுளப்படி கொடுபோய் அளித்தரு ளுதியேல்

**இந்துவின் குலமெனும் முந்திய பெயர்போய்ச்**
**சுந்தரன் குலமெனச் சந்ததம் வழங்கும்**

என்று நன்றிப் பெருக்குடன் நாத்தழுதழுக்கப்பேசுகின்றான்.

இறுதியில் மனோன்மணி பலதேவனை மணக்க வேண்டியநிலை குடிலன் சூழ்ச்சியால் உருவாகின்றது வாணி வருந்திப் பாடுகிறாள். அதுவே ஏற்புடைப் பிரார்த்தனை என்கிறார் சுந்தரர். கையில் மணமாலையை எடுத்துக் கொண்டு மனோன்மணி பலதேவனுக்கு மாலை சூட வருகின்றாள். அந்நிலையிலும் நெஞ்சம் பதறாமல் நிலை குலையாமல்,

**ஒருதனி முதல்வன் உணர்வன் உன்னுளம்**
**உன்னன்பு உண்மையேல் இன்னமும் காப்பன்**

என்று அமைதியாக இருக்கின்றார். தவ முனிவர் வாக்கும் பழுதுபடுமோ? இதுவும் ஜீவகன் நம்பிய குடிலப் பாய்மரம் போல் பழுதாகுமா என்ன? புருடோத்தமன் அந்நேரத்தில் சுருங்கை வழியே வந்து மாலையிட, "மங்கலம் மங்கலம் மங்கலம் உமக்கே" என மணமக்களை வாழ்த்தியருளுகிறார் சுந்தர முனிவர்.

இவ்வாறு சுந்தர முனிவர் நாடகம் இன்பியலாக இனிது முடியக் காரணமாகிறார்; மன்னனையும் மன்னன் மகள் மனோன்மணியையும் காப்பாற்றுகிறார். 'அருளே வெல்லும்' என்ற இவர்தம் நம்பிக்கையே இறுதியில் வெல்கிறது ஆண்டவனின் அருளாட்சி அவனியில் ஒளிரத் திருவருளே வடிவான சுந்தரர் வருகின்றார். சுந்தர முனிவர் நாடகக் காப்பியத்தின் நல்லுறுப்பாய்ப் பொருத்தமுற அமைந்து யாவும் இனிதே முடியப் பெருந்துணை புரிகின்றார்.

## 6. நடராசன்

ஓர் அழகமைந்த ஆனந்த புருஷன்
—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை.

சுந்தர வாணியின் அந்தரங்கத்திற்கு உரிய காதலன் நடராசன; இவன் இயற்கையின் இனிய பெற்றியில் இரண்டறக்கலந்து ஈடுபடும் இயல்பினன். இயற்கையின் ஓட்டத்தில் தன் வாட்டத்தையெல்லாம் மறப்பவன்; இயற்கையின் படைப்பில் இறைவனின் தத்துவத்தைக் கண்டு கருத்துணரும் கற்றோன்; நூலறிவும் நுண்ணறிவும் வாய்ந்தவன்; உலகின் சிறுமைகண்டு பொங்கி, இல்லறத்தின் இனிமை கண்டு அடங்கும் பெற்றியன்; சுந்தர முனிவரின் பேரருளுக்குப் பாத்திரமானவன்; காணும் காட்சிகளைக் கவிதையாகப் புனையும் கவின்மிகு பாவாணன்; அழகன்.

ஊர்ப் புறத்தின் ஒருசார் ஒதுங்கிக் கீழ்வானத்தில் கோலம் புதுக்கிக் கைபுனைந்தியற்றாக் கவின் பெறும் அழகோடு எழும் பருதியின் உதயம் கண்டு உளம் உவந்து இவன் பாடும் பாட்டு நம் நெஞ்சினை அள்ளும் நீர்மைத்தாகும்.

ஓவியத் தொழில்வலோன் நீவிபக் கிழியில்
தீட்டுவான் புகுந்த சித்திரம் தீட்டுங்
தூரிபந் தொடத்தொடத் துலங்குதல் போல
சூரியன் பன்னிறக் கதிர்கள் தொடத் தொட
உருவுதோன் றாவணம் ஒன்றாய்ச் செறிந்து
கருகிருள் மயங்கிய காட்சி கழிந்து
சிறிது சிறிதா யுறுப்புகள் தெளியத்
தோன்றுமித் தோற்றம் நன்றே

என்று செஞ்ஞாயிற்றின் எழிலில் ஈடுபடுகின்றான்.

இதுபோன்றே மெல்லியலாரின் மென்மையான உள்ளத்தினை— மலரினும் மெல்லிதான காமத்தின் செவ்வியை அறிபவரும் சிலரில் ஒருவனாகக் காட்சி தருகிறான் நடராசன்.

ஆடவர் காத லறைதலுந் தையலர்
கூடமாய்க் கொள்ளலும் இயல்பே போலும்

என்று அகத்தினை ஆராய்ச்சி செய்கிறான்.

உளத்தோ டுளஞ்சென் றொன்றிடிற் பின்னர்
வியர்த்தமே செய்கையும் மொழியும்

என்று தன் காதல் அனுபவத்தினை எண்ணிக் களிக்கின்றான். மேலும், நாராயணன் மாதர் உள்ளத்தினை, 'அலையெறி கடல்' என்று கூறிய அளவில்,

திரைபொரல் கரையிலும் வெளியிலு மன்றி
கயத்திலும் அகத்திலுங் கலக்க மவர்க்கிலை

என்று சரியான மறுமொழியும் புகல்வதோடு நில்லாது. புருடரின் புன்மையினையும் கடிந்து மொழிகின்றான்.

மணமும் அவர்க்கொரு வாணிகம்! அந்தோ
சீ! சீ! என்இத் தீயவர் செய்கை!

என்று ஆடவர் சிறுமை கண்டு அருவருப்படைகிறான். நற்குண நற்செய்கையுடைய நங்கை, வாழ்வின் துணையாகக் கிடைத்தால் 'பொன்மலர் நாற்றம் பெற்றதாகும்' என்றும், இல்லறம் 'பேரின்ப வெள்ளமா மூழ்கப் பக்குவஞ் செய்யும் பள்ளிச்சாலை' என்றும் கூறுகின்றான். இக்கூற்றுக்களால் இவன் மதிநுட்பம் புலனாகின்றது.

பலதேவனின் தீய வொழுக்கத்தினைத் தன் செவியாற் கேட்டவுடனே சீறிச் சினக்கிறான். ஒருவன் ஒருத்தி எனும் உயரிய கொள்கைவழி இயங்கும் நடராசனால் பலதேவனின் இத் தீயொழுக்கம் மன்னிக்க முடியாததாயப்படுகிறது.

அவனை ஓடிப் பிடித்து ஒறுக்க எண்ணியது உள்ளம்: தீண்டியடிக்கக் கை நீள்கிறது. ஆயினும்,

நினைக்கலை தீயனை நினைப்பதும் தீதே
சினக்கனலே எழும்பும் நமக்கேன் அச்சினம்

என்று எண்ணி, அமைதியில் ஆழ்கிறது அவன் உள்ளம். வெகுளியும் விடுத்துக் குணமெனும் குன்றேறி நிற்கும் நிலை- அன்பின் ஆற்றல் காணும் நிலை இதுவே.

ஆனால் நடராசனைப் பற்றி வாணியின் தந்தை சகடர் எண்ணும் எண்ணமே வேறு. பணத்தாசை பிடித்த அப் பாழ் மனம்,

தனியே யுரைப்பன் தனியே சிரிப்பன்
எங்கேனு மொருபூ இலைகனி அகப்படில்
அங்கங் கதனையே நோக்கி நோக்கித்
தங்கா மகிழ்ச்சியில் தலைதடு மாறுவன்
பரற்கலும் அவனுக் ககப்படாத் திரவியம்

என்று ஜீவகனிடத்தில் நடராசனைப் பற்றிப் பேசச் செய்கிறது. ஆயினும் சகடரின் இக்கூற்றே நடராசன்பால் நமக்கு நல்லெண்ணத்தினை வளர்க்கின்றது.

குடிலன் 'அழகன்' என நடராசனைப் புகழ்வது போல் பேசுகின்றான். ஆனால் அரசனோ, 'அழகிருந் தென்பயன்; தொழிலெலாம் அழிவே' என்று நடராசனை வெறுத்து மொழிகிறான். மங்கையர் மனத்தினை வாங்கும் தடந் தோளனாகப் படைவீரர் நடராசனைக் குறிக்கின்றனர். 'அரிவையர் யாரே வெறிகொளார் காணில்' என்கின்றனர் அவர்கள்.

அடுத்து நடராசன் நாங்கூழ்ப் புழுவினைப் பார்த்து,

எம்மண் ணாயினும் நன்மண் ணாக்குவை
விடுத்தனை இதற்கா எடுத்தனை யாக்கை

என்றும்,

உழைப்போர் உழைப்பில் உழுவோர் தொழில்மிகும்
உழைப்போர்க் கெல்லாம் விழுமிய வேந்து நீ

என்றும் அது உழவர்க்கு உதவும் தொண்டினைப் பாராட்டி மொழிகின்றான். ஓடும் நீரினைப் பார்த்து, 'யாரே உனைப் போல் அனுதினம் உழைப்போர்' என்று கூறுகிறான். வாய்க்காற் கரையில் முளைத்திருக்கும் சிறு புல்லினைப் பார்த்துத் தத்துவம் பேசுகின்றான். பாரிசாதம் போன்ற மலர்கள் மண்ணில் இரவில் மலர்கின்ற காரணத்தால்தான் நன்மணமும் வெண்ணிறமும் கொண்டு விளங்குகின்றன என்று தாவர இயலின் நுட்பம் பேசுகின்றான் நடராசன்.

மனோன்மணியின் திருமணம் குறித்துப் புருடோத்தமனிடம் தூது செல்லப் பொருத்தமானவன் நடராசனே என்று ஜீவகனிடம் கூறுகிறார் சுந்தர முனிவர்.

—நடராசன்
என்னுளன் ஒருவன்; ஏவில்
சென்றவன் முடிப்பன்: மன்றல் சிறக்கவே

என்று முனிவர் கூற்றில் நடராசனின் செயல் திறம் மிளிர்கிறது. 'முனிவர் பிரியன்' என்று குடிலனும் நடராசனைப் பற்றி ஜீவகனிடம் கூறுகின்றான். சுருங்கை வழி அமைப்பதில் முனிவருக்குத் துணைநின்றவன் நடராசனே. முனிவரே மனம் திறந்து நடராசனைப் பாராட்டுகிறார்:

எல்லாம் நடராசரே! உமதுபே ரருளே!
அல்ல தென்றால் ஆகுமோ? சுருங்கை
இத்தினம் எப்படி முடியும் நீர் இலரேல்?
எத்தனை கருணை? எத்தனை கைம்மாறு?

இத்தகைய பாராட்டு யாருக்கும் எளிதில் கிடைப்பதன்றன்றோ? மேலும் தவத்தின் திருவுருவமாய் இலங்கும் சுந்தர முனிவரிடமிருந்து கிடைப்பதென்றால், நடராசனின் சிறப்பிற்கு வேறு சான்றும் வேண்டுமோ?

இந்தப் புகழுரை கேட்ட நடராசன் பணிவுடன்,

நல்லது! நல்லது! சொல்லிய முகமன்,
வேலை எனதோ? உமதே! விநோதம்.

ஏவிய வழியான் போவதே யல்லால்
ஆவதென், என்னால்? ஆ! ஆ! நன்றே

என்று அடக்கமாக மறுமொழி கூறும் பொழுது, அறிவு, ஆற்றல், பண்பு, அடக்கம் ஆகிய அருங்குணங்களின் இருப்பிடமாக நடராசன் காட்சி தருகிறான்.

இத்தகைய பேராற்றலை நடராசனுக்கு வழங்கிய சக்தி எது? காதற் பெண்ணின் கடைக்கண் அன்பே தன்னை இயக்கி, எடுத்த செயல் இனிதாக நிறைவேற வெற்றிப் பாதை வகுத்திருக்கும் என முடிவு கொள்கிறான் நடராசன்.

பின்னிய கூந்தற் பேதையின் இளமுகம்
என்னுளத் திருந்திங் கியற்றுவ திப்பணி
அதனா லன்றோ இதுபோல் விரைவில்
இவ்வினை இவ்வயின் இனிதின் முடிந்தது.

இயற்கையும் காதலும் மட்டுமல்ல நடராசன் தெரிந்தவை; 'அரசியல் ரகசியம் அம்பலம் ஆகும்' வகையும் அவன் அறிவான். இதனைப் பின்வரும் அவன் கூற்றால் அறியலாம்:

அரசன் அமைச்சர் ஆதியர் தங்கள்
சிந்தையில் புதைத்த அந்தரங் கப்பொருள்
விழி முகம் நகைமொழி தொழில் நடை இவைவழி
ஒழுகிடும்; அவைகளை உழையுளார் தமக்குத்
தோற்றிய பலவொடும் தொடுத்துக் காற்றில்
தூற்றுவர்

காதற்களத்தில் தேறும் நடராசன் போர்க்களத்திலும் வீரமாகப் போரிடுகிறான். புல், புழு, வாய்க்கால், கல் முதலிய பொருள்களை உணர்ந்த நடராசன் அரசன், அமைச்சர், 'ஆழமில் கருத்தில் தோற்றுவது அனைத்தும் சாற்றும், ஏழைகள்' ஆகிய அனைவரையும் அறிந்துள்ளான். இவற்றால் காதற் கன்னி வாணிக்கு ஏற்ற காதலன் நடராசனே என்பது நன்கு போதரும்.

# 7. நாராயணன்

இவன் குடிலனுடைய சூதுகள் தெரிந்தவன். அரசன் நிந்தித்துத் தள்ளினும் அவனைக் காப்பாற்றும் பொருட்டு அவனை விட்டு நீங்காது மதுரையினின்றும் அவனோடு தொடர்ந்து வந்த பரோபகாரி.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை

நாடகத்தில் அருளின் திருவுருவாய்ச் சுந்தரர் வருகிறார் என்றால், அறிவின் பிழம்பாய் நாராயணன் வருகிறான். இவன் குலகுரு சுந்தர முனிவரின் திருக்கூட்டத்து அடியான். பொய்யினைக் கடிந்து மெய்யினைப்பற்றி வாழும் நாராயணன், சகடன் குடிலன் முதலானோர் கொண்ட பேராசைப் பெருக்கினை எள்ளி நகையாடி இரட்டுற மொழி கின்றான். கண்ணினைக் காக்கும் இமைபோல் ஜீவக வழுதி யைக் காக்கிறான். போர்க்களத்திடையும், பின்னர் தற்கொலை செய்துகொள்ள முயன்ற போதும், ஜீவக வேந்தன் உயிரைக் காப்பாற்றுகின்றான். ஆற்றல் சான்ற இப்படை மறவன் படைவீரர்களிடம் செல்வாக்குடன் துலங்குகின்றான். தன் உயிரினும் அரசனது ஆணையே போற்றத்தக்கது என்னும் துணிபுடையவன் இவன்; மனித உள்ளத்தில் ஓடும் எண்ணங்களை உள்ளவாறே ஊடுருவிக் காணும் உயர் பேராளனாம் இவன், சிந்தித்துச் செயல் புரியும் வினையாண்மையும், நகைச்சுவை நாட்டமும் நன்கு கைவரப் பெற்றவன்.

குடிலன், குலகுருவாம் சுந்தரர்மீது மன்னன் மனத்தில் வெறுப்பு விளையும்படிவேண்டியன இயற்றுகின்றான். பழங் காலப் புராணத்தை விரித்து, வசிட்டர், கௌசிகர் முதலிய முனிவர்களின் செயல்களைக் குறிப்பிட்டு, முனிவர் மனிதரி னும் எவ்வகையினும் மேம்பட்டவர் அல்லர் என்றும், இச்சை யற்றவர்கள் இகத்தில் யாவரே என்றும், மன்னன் மனங் கொள்ளுமாறு பேசுகின்றான். இந்நிலையில் நாராயணன்

குறுக்கிடுகின்றான். 'ஐயோ! பாவி அருந்தவ முனிவரைப் பொய்யனாக்கு கின்றானே இக்குடிலன்' என்று எண்ணி, 'எடுப்பார் கைப்பிள்ளை'யாய்த் தடுப்பாரின்றி வாழும் ஜீவகனின் புன்மை நோக்கிப் புலம்புகின்றான்.

.........பொல்லா
வெறுமெலும்பை நாய்கௌவும் வேளை நீ செல்ல
உறுமுவதென் நீயே யுரை

என்று அரசனை நோக்கிக் கூறும் அவன், பதவியை எலும்புத் துண்டமாகவும், குடிலனை நாயாகவும் உவமித்து, ஜீவகன் உண்மை நிலையினை உணருமாறு செய்கின்றான்.

தன் மூக்கில் கரியைத் தேய்த்துக்கொண்டு அரசன் முன் தோன்றிப் பிறர் நகையாட இவன் இடமாகி,

ஏ! ஏ! நாரணா கரியாய் உன்மூக்கு
இருந்தவா றென்னை? ஏ! ஏ! இதுவென்?

என்று அரசன் கேட்டபோது,

மூக்கிற் கரிய ருளரென நாயனார்
தூக்கிய குறளின் சொற்படி யெல்லாம்
உள்ளநின் றருகவர் இல்லார் ஆவரோ?

என்று நகைச்சுவையாகவும், அதே நேரத்தில் பொருளாழத் தோடும் பதிலளிக்கின்றான். மேலும் நாராயணன் திருக் குறளை முற்றக் கற்ற நல்லான் என்பதும், சமயமறிந்து திருக்குறளை கையாளும் மதித்திறம் படைத்தவன் என்பதும் இக்கூற்று வழிப் புலனாகின்றன.

'வெளி வேடத்தில் செந்நிறம் வாய்ந்த குன்றி மணி யைப்போல் செம்மையுடையோராய்ச் சிலர் இவ்வுலகில் காட்சியளித்தாலும், ஆழ்ந்து நோக்கில் அவர் உள்ளம் குன்றிமணியின் மூக்கில் உள்ள கருமை போன்று கொடிய

எண்ணங் கொண்டவராகவே இருப்பர்' என்ற கருத்தினைக் கொண்ட,

> புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
> மூக்கிற் கரியார் உடைத்து

என்ற குறட்கருத்தினை உள்ளடக்கியே நாராயணன் இவ்வாறு பேசுகின்றான் என்பது மன்னனுக்குத் தோன்ற வில்லை. எனவே அவன்,

> ஓகோ, ஓகோ, உனக்கேன் பைத்தியம்

என்று கூறி நகைக்க, உடனே அவையினரும்

> ஓகோ! ஓகோ! ஓகோ! ஓகோ!

என்று சிரிப்பொலி எழுப்புகின்றனர். இவ்வாறு சிந்தித்து உணர்ந்து திருந்த வேண்டிய கருத்து, சிரிப்பாய்ப் போய் விடுகிறது.

குடிலனை நாராயணன் நன்கு அறிவான். ஆயின் அவன் அண்மையில் இருக்கும் அரசன் அறிந்தானில்லையே! குடிலனின் பொய் வேடத்தை, போலி வாழ்வினை, வஞ்சக வழியினை வகையுறப் படம்பிடித்துக் காட்டுகிறான் நாராயணன்.

> ......குடிலனோ
> சூதே யுருவாய்த் தோன்றினன்; அவன்தான்
> ஓதுவ உன்னுவ செய்குவ யாவுந்
> தன்னயங் கருதி யன்றி மன்னனைச்
> சற்று மெண்ணான் முற்றுஞ் சாலமா
> நல்லவன் போலவே நடிப்பான், பொல்லா
> வஞ்சகன் மன்னர் அருகுளோர் அதனை
> நெஞ்சிலும் நினையார் நினையினும் உரையார்

என்று கூறும் நாராயணன் கூற்று நூற்றுக்கு நூறு உண்மை யன்றோ? மக்களின் மனப்பாங்கினைப் பாங்காகஅறிந்தவன் அவன் என்பதும் இக்கூற்றால் புலனாகின்றது. நாராயணன்

பெண்களைப் பற்றிக்கொண்டிருக்கும் கருத்தும் அவன் உள வியல் உணரும் மாண்பினைப் புலப்படுத்தும்:

ஓதி யுணரினும் மாத ருள்ளம்
அலையெறி கடலினும் சலன மென்ப.

குடிலனை, நாராயணன் அறிந்தவாறே, குடிலனும் நாராயணனை நன்கு அறிந்தவனே. எனவேதான் நாராய ணனை 'வினையறி நாரணன்' எனத் தன் மனத்தே எடை போட்ட அவன்,

எதுவுமிந் நாரணன் இருக்கில் அபாயம்!

என்று கருதுகின்றான்.

அடுத்து 'நாராயணரேல் தீரமாய் மொழிகுவர்' என்றும் 'நாரா யணரே நன்மதி உடையோர்' என்றும் படைவீரர் பேசும் பேச்சுக்கள், நாராயணனின் அரச பக்தியினையும் அறிவு மேம்பாட்டினையும் அறைய வல்லனவாகும். சகடர் தன் மகள் வாணியைப் பலதேவனுக்கு மணமுடிக்க மன்னன் தயவை நாடும்பொழுது நாராயணன், 'கிழவனின் அழுகை' என்று மன்னன் கூறிய அளவில் 'சிலவருடந்தான்' என்றும், 'நெடு நாள் நிற்கும் இளையவர் அழுகை' என்றும் கூறுவதில் தான் எத்துணைக் கருத்தாழம் பொதிந்து கிடக்கின்றது!

நாராயணன் நல்ல போர் மறவன். படைவீரர் தன்னைச் சுற்றிச் சூழ்ந்து புகழும் பொழுதும் அமைதியான மனநிலை யோடு அவர்களை நோக்கி,

சிறுமையும் பெருமையுஞ் செய்பவர்க்கு அன்றிச்
செய்வினை தனக்கு ஏது? மெய்மையில் யாவுந்
திருத்தமாச் செய்தலே பொருத்தம் உத்தமர்க்கு

என்று கூறும் கூற்றில், எச்செயலினையும் திருத்தமுறச் செய்ய வேண்டும் என்னும் அவன் ஆர்வம் விளங்குகின்றது.

கோட்டைமேல் உலவி நிற்கும்பொழுதும், அறியாது ஒரு வனை அமைச்சாய் நம்பி அரசன் படப்போகும் துன்பதினை

யினை எண்ணித் தனக்குள் இரங்குகின்றான். போர்க் களத்தில் ஜீவகனைக் காப்பாற்றுவதோடு, போரில் அடைந்த தோல்வி கண்டு பொறாது உயிர்விடத் துணிந்த அவனைத் தடுத்து நிறுத்தி, "மனோன்மணி தன்னை மறந்தாய் போலும்!" என்று நல்ல சமயத்தில் ஜீவகனுக்கு மகள்பால் நினைவுவரச் செய்து அவன் உயிரைக் காப்பாற்றுகின்றான். ஜீவகன் உயிர்விடத் துணிந்த நிலையில் இருந்து மீண்டு, வருந்திய படை மறவரைப் பார்த்து,

> பிரிய சேவகரே பீடையேன்? துயரேன்?
> இழந்தனம் முற்றும் என்றோ எண்ணினீர்!
> அழிந்ததோ நம்மரண்? ஒழிந்ததோ நம்படை?
> மும்மையில் இம்மியும் உண்மையில் ஒழிந்திலம்
> வெல்லுவம் இனியும்; மீட்போம் நம்புகழ்

என்று வீர முழக்கமிடும் அளவிற்குச் செல்லும் அந்நிலையை உருவாக்கிய நாராயணனுக்கன்றோ நாம் நன்றி நவில வேண்டும்.

குடிலன் பேச்சால் தன்னைத் தவறாக எண்ணி ஜீவகன் தன்னைக் கழுவேற்றத் துணிந்த நிலையிலும்,

> வெருவிலேன் சிறிதும் வேந்தநின் விதிக்கே
> அறியா யாயின் இதுகா றூயும்
> வறிதே மொழிகுதல்! வாழ்க நின்குலம்!

என்று மன்னன் மரபு வாழ, வேண்டிநிற்கிறான். தண்டனை யடைந்த தனக்காகப் படைவீரர் கொதித்தெழுந்த நிலையிலும், கொற்றவன் ஆணைக்கு அடங்குவதே அவர் தம் கடமை என்று சுட்டுகிறான்.

மனோன்மணியும் இறுதியில் பலதேவனை மணக்கச் சம்மதித்த நிலையில் தான் ஜீவகனிடம் கேட்ட இரண்டு வரங்களில் ஒன்று நாராயணன் உயிர் மீட்டலாக அமைந் திருப்பது நாராயணன்பால் நாடகத் தலைவியாம் மனோன் மணி கொண்ட அன்பினைப் புலப்படுத்தும்.

"தம்மையும் பலி கொடுக்க முந்தும் விரைவோடு, பொய் பொறாத மனம் பதைக்க, குறைவெலாங் கண்டு குலுங்கக் குலுங்க நகைத்து வெறுத்து, ஒன்றுக்குமஞ்சாத பேராண்மை யோடு அரசரையும் காத்து, அனைவரிடமும் ஓடிப் பாயும் அன்பையும் வளர்த்து, உடன் சூழ்ந்தார் எல்லாரும் தங்கள் உயிரையும் தமக்கெனக் கொடுக்கும்படி அவர்களிடத்தேயும் தன்னலமின்மையை ஓங்கச்செய்து, திருவிளையாடல் புரியும் இவர், இவை அனைத்தையும் பணயம் வைத்து, உலக அமைதிக்கெனக் கடமை ஒன்றையே நம்பி, நாடு கொடுத்த நஞ்சினை நச்சி உண்டு நமனுலகடைந்த நல்லார் சாக்ரடிசி னைப் போல இவரும் கடமைச் சொக்கட்டானாடுகின்றார். அன்பெல்லாம் கடமையின் விளக்கமாகக் காண்பதே இவர் கண்ட அன்பின் தனிப் பெருங் காட்சி" என்று அறிஞர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் நாராயணனின் பண்பு நலம்பற்றி நயமுறக் கூறுவர்.

# 8. புருடோத்தமன்

*நன்னயங் கருதாச் சதுரனாகிய புருடோத்தமன்.*
*—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை.*

திருமநாடெனப் பெயர் தாங்கிய திருவாழ் கோடாம் சேரதேசத்துப் பெருவேந்தன் புருடோத்தமன். தன்னை ஒப்பாரில்லாத தகைமை சான்றவன்; மனோன்மணி என்னும் பூங்கொடி படரப் பாங்காம் தருவாகப் புருடோத்தமன் முக்காலமும் உணர்ந்த சுந்திர முனிவரால் குறிக்கப் பெறுகிறான். நாடகத் தலைவி மனோன்மணிக்கு ஏற்ற தலைவன் இவனே. இருபது களங்கள் கொண்ட மனோன்மணீய நாடகத்தில் புருடோத்தமன் தோன்றுவது மூன்று களங்களிலேயாகும். பலதேவன் தூதுபோன களம் ஒன்று; சுருங்கை வழியே ஏகிய குடிலன் எதிர்பாராமல் புருடோத்தமனைச் சந்தித்துப் பாண்டிய நாட்டினைக் காட்டிக் கொடுப்பதாகக் கூறும் களம் இரண்டு; மனோன்மணி மாலையிட்டு மயங்கி அவன் தோளில் சாயும் இறுதிக் களம் மூன்று. ஆக மூன்று களங்களில் மட்டும் புருடோத்தமன் தோன்றினாலும் அவனது அழகு வடிவும், காதல் துன்பமும், வீர விம்மிதமும், அறநெறி பிறழாச் சிந்தையும் நாடகத்தில் நன்கு விளக்கமுறுகின்றன.

சுந்தரமுனிவர் புருடோத்தமனெனும் பொறையனையே தனக்கு மருமகனாக மதித்தார் என்று ஜீவகன் குடிலனிடம் கூறிய அளவில், குடிலன் புருடோத்தமனின் புறவழகினைப் புகழ்ந்துரைக்கின்றான்.

புருடோத் தமனெனும் பொருநைத் துறைவன்
காண்டகும் ஆண்டகை யென்றும் ஞானம்
மாண்ட சிந்தைய னென்றும் யாண்டுந்
திரியும் தவசிகள் உரைசெய யானுங்
கேட்டதுண்டு

என்று குடிலன் கூறும் கூற்றால், புருடோத்தமன் கண்டார் மயங்கும் கட்டழகுக் காளை என்பதும், கற்றார் போற்றும் அறிஞன் என்பதும், தவசிகள் பாராட்டும் தகைமையோன் என்பதும் விளங்குகின்றன. மேலும்,

இருளெலாம் ஒளிவிட இலங்கிய உருவம்
மருள்தரு மதன வடிவினன்

என்று புருடோத்தமனைப் புகழ்ந்துரைக்கிறான் குடிலன்.

புருடோத்தமனை நாம் முதன் முதலில் இரண்டாம் அங்கத்தின் மூன்றாம் களத்தில் சந்திக்கிறோம். அப்பொழுது அவன் கனவிற் கண்ட காரிகையை எண்ணி, 'யார்கொலோ அறியேம்! யார்கொலோ அறியேம்!' என்று சிந்தித்து அயர் கிறான். விண்ணணங்கனைய கன்னியர் பலரைக் கண்டும் இதுவரை ஒருபோதும் கலங்கி யறியாத அவன் சித்தம் இப்போது 'மத்துறு தயிரில் திரிந்து' பித்துக் கொண்டுள்ளது. ஆயினும் கனவிற் கண்ட அந்த கார்குழலாள் 'நவ்வியும் நண்பும் நலனும் உடையவள்' எனத் துணிகின்றான்.

அமுதமுற் றிருக்குங் குமுதவா யலர்ந்து
மந்த காசந் தந்தவள் நின்ற
நிலைமையென் நெஞ்சம் நீங்குவ தன்றே!

என்று எண்ணும் புருடோத்தமன் கனவிற் கண்ட காரிகை,

உண்டெனிற் கண்டிடல் வேண்டும் இலையெனில்
இன்றே மறத்தல் நன்றே

என்கின்றான். அவ்வாறே மறத்தலே முறையெனக் கருதி னும் மங்கையை மறக்க முடியவில்லை அவனால். எனவே எவருடனாவது போர் இயற்றியாவது போரின் ஆரவாரத் தில் துயர் மறப்போம் என்ற முடிவிற்கு வருகிறான்;

போரே வருடனே யாயினும் புரியிலவ்
ஆரவா ரத்தில் அயர்ப்போம்.

இந்நிலையில் பலதேவன் பாண்டிய மன்னனிடமிருந்து தூது வருகிறான். வந்த பலதேவனோ தன்னைத் தானே வியந்து கூறிக்கொள்கிறான். முதல் சந்திப்பின் சில விநாடிகளிலேயே அவனை அளந்து கண்டுவிடுகிறான் புருடோத்தமன். எனவே தனக்குள் 'மடையன்' என அவனை எண்ணிக்கொண்டு, 'வந்ததென்?' என்று மட்டும் வினவி அமைகிறான். ஆயினும் பலதேவன் பழங்குப்பை விரிக்கின்றான். மீண்டும் 'வந்த அலுவலேன்?' என்று கேட்கின்றான் புருடோத்தமன். நன்செய் நாட்டின் உரிமை கோருகிறான் பலதேவன். அவ்வுரிமையினைப் புருடோத்தமன் பெறவேண்டுமெனில் ஓர் உபாயம் உள்ளதாகக் கூறி, 'உசிதன் மனையில் திரைக்கடல் அமுதே, உருக்கொண்டதுபோல் ஒருமலர்' உறைவதாகவும் மனோன்மணி எனும் அம்மலரின் தேனைச் சுவைக்கும் வண்டாகப் புருடோத்தமன் ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றான். இதற்கு மறுமொழியாகப் புருடோத்தமன் 'ஓஹோ' என நகைத்து,

வண்டு மலரிடை யணையஉன் னாட்டில்
கொண்டு விடுவரே போலும்

என் வண்டை மலரிடைக் கொண்டுவிடும் விந்தைப் போக்கினைக் கடிந்து, குற்றமற்ற இருபுறக் காதலே தகும் என்றும் 'அரியணை இருவர்க்கிடங் கொடா' தென்றும் உறுதியுடன் மொழிகின்றான்.

இறுதியாகப் பலதேவனுக்குத் தன் முடிவைக் கூறும் பொழுது,

கடிபுரி பலமாக் காக்க இல்லையேல்
முடிநம் அடியில் வைத்து நாமிடும்
ஆணைக் கடங்கி யமர்க

என்று குறிப்பிடுகின்றான்; இக்கூற்றுக்களால் புருடோத்தமனின் அஞ்சாமையும் அவன் வீரத்தில் அவன் கொண்ட நம்பிக்கையும் புலப்படுகின்றன. பலதேவன் போனவுடன்,

> முட்டாள் இவனை விட்டவன் குட்டுப்
> பட்டபோ தன்றிப் பாரான் உண்மை

என்று தனக்குள் இவ்ன் கூறிக்கொள்வது போன்றே ஜீவகன் வாழ்வில் அவலம் பற்றுகின்றது.

ஆனால் புருடோத்தமனின் இம்முடிவினை,

> உண்ணவா என்றியாம் உறவுபா ராட்டிற்
> குத்தவா எனும்உன் மத்தன்

என்று குடிலன் குறிப்பிடுகின்றான். மேலும் தந்தை தாய்க் கீழ் வளர்ந்தவன் அல்லன் ஆதலின் நன்று தீது ஒன்றும் நாடா உளத்தன் என்றும் குறிப்பிடுகின்றான். 'தூண்டிடு சினத்தன்' என்றும், 'தொழுதிடில் மீள்வன்' என்றும் அவன் பண்பினைப் பழித்தும் குடிலன் பேசுகின்றான். ஜீவகனும் இதனை பொட்டியே.

> மலரிடிற் காய்வன்; பழிலிடில் மகிழ்வன்;
> பெரியோர் சிறியோர் பேதையர் அறிஞர்
> உரியோர் அயலார் என்றவன் ஒன்றும்
> உன்னான்

என்று புருடோத்தமனைப் பற்றிக் குடிலனிடம் கூறுகின்றான்.

ஆனால் இக் குற்றச்சாட்டுகளை உண்மையில் ஆய்ந்து காணின், அவை புருடோத்தமனுக்குப் பொருந்தாமற் போவதைக் காணலாம்.

உண்ணினைவில் ஒருபோதும் ஒய்வின்றிக்
கலந்திருக்கும் உயிரே என்றன்
கண்ணிணைகள் ஒருபோதும் கண்டிலவே
நின்னுருவம் காட்டாய்

என்று அவன் கனவில் வந்து கண்ணில் நின்று நெஞ்சில் உறைந்த மனோன்மணியைப் போரிடையிலும் மறவாது நினைந்து நினைந்து நெக்குருகுகின்றான். 'நிறைந்த காமுகன்' என இவனைக் குறிப்பிடும் குடிலன் உரை பழுதேயாம்.

சுருங்கை வழி வந்து எதிர்பாராமல் தன்னைக் கண்டு பாண்டியனையே காட்டிக் கொடுத்து, பாண்டிய நாட்டின் அரசுரிமை கேட்டிருக்கும் குடிலனைப் 'பாதகா! விசுவாச காதகா' என்று தன்னுள் நினைந்து, அவன் சொல்லை ஏற்றுக் கொள்ளாமல் கைத்தளை காற்றளை கொண்டு அவனைக் கைதியாக்கிச் சுருங்கை வழியே பாண்டியன் அரண்மனைக்கு அழைத்து வருகிறான் புருடோத்தமன்.

கற்படை வழி வந்து மணவினைச் சடங்கு நடக்கும் இடத்தில் மறைவில் ஒருசார் திரையின்பின் ஒதுங்கி நின்று, அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கவனிக்கிறான். அது பொழுது இரவிலும் தன்பொருட்டே எங்கோ கடனாற்றப் போயிருப்பதாகக் குடிலனை ஜீவகன் கூறக் கேட்ட புருடோத்தமன், 'எத்தனை களங்கமில் சுத்தன்' என்று மன்னன் மடமை நோக்கி இரங்குகின்றான். மனோன்மணி மணமாலைகொண்டு பலதேவன் எதிர்வரும் வேளையில் புருடோத்தமன் திரைவிட்டு வெளியே வருகின்றான். புருடோத்தமனைக் கண்ட மனோன்மணி அவன் நிற்கு மிடமே விரைவில் நடந்து சென்று, அவன் தலை தாழ்க்கவும் அவன் கழுத்தில் மாலை சூட்டி அவன் தோளோடு தளர்ந்து மூர்ச்சிக்கிறாள். 'இங்கோ நீயுளை! என்னுயிர் அமிர்தே' என்கிறான் புருடோத்தமன். அவ்வளவில் யாவரும் அவளைச் சூழ, குடிலனைக் காட்டி அவையோர்க்கு அருள்

வரதன் நிகழ்ந்தது கூற. 'அநீதியையும் சூதையும் அறியேன்' என அரசன் அயர்க்க, 'வஞ்சியான் வஞ்சியான்' என்றபடி 'சேரன் விஜயமும் திருடன்' என்பதனை யாவர்க்கும் கூறி, அந்நிலையிலும் 'நாளையும் வேட்பையேற் காண்போம் ஞாட்பிடை நாட்பே' என்று அரியேறெனக் கர்ச்சிக் கின்றான் புருடோத்தமன்.

> புணர்ச்சி பழகுதல் வேண்டா! உணர்ச்சிதாம்
> நட்பாங் கிழமை தரும்

என்ற குறளின் கருத்திற்கு இலக்கியமாகத் திகழ்வது புருடோத்தமன்—மனோன்மணியின் காதல் அனுபவம் ஆகும்.

# 9. பலதேவன்

*குடிலனுடைய மகன் பலதேவன் என்னும் ஒரு துன்மார்க்கன்*

*—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை*

அதிகார மேகம் கொண்ட அமைச்சன் குடிலனின் மகன் காம மேகம் கொண்ட பலதேவன் ஆவன். குடிலனோ வெனில் திட்டம் வகுத்துச் செயலில் மிளிர்பவன். சூழ்ச்சிச் சதிரைத் திறம்பட நிகழ்த்துபவன்; மதிமேம்பாடுடையவன். ஆனால் இவன் அருமைப் புதல்வனோ அரிவையர் சுகம் தேடி அலையும் மதியீனன். சிற்றின்ப வேட்கையே அவன் வாழ்வின் கருப்பொருளாய் அமைகிறது.

நலமே சிறந்த குலமே பிறந்த
பலதேவ னாமொரு பாக்கிய சிலாக்கியன்

என்று பலதேவனைப் பாராட்டிப் பாண்டிய மன்னன் ஜீவகன் பேசுகின்றான். மேலும் புருடோத்தமனிடத்தின் தூது செல்லத் தக்க சூழ்ச்சித்திறன் உடையவன் நடராசனே என்று சுந்தரர் சொல்லியிருப்பவும், ஜீவகன் குடிலன் சொல் தேறி அவன் மகன் பலதேவனையே மன்றல் தூதினுக்குத் தேர்ந்தெடுக்கின்றான்.

அத்திறம் முற்றும் ஒத்தவ னாய்நமக்
குரிமை பூண்டநின் அருமை மகன்பல
தேவனே யுள்ளான் மேலவர் பலர்பால்
முன்னம் பன்முறை தூதிலும் முயன்றுளான்

என்று ஜீவகன் பேசுகின்றான்.

இது கேட்ட குடிலன், 'வசையறு புதல்வன் பாலியன் மிகவும்; காரியம் பெரிது' என்று முன்னெச்சரிக்கையாகப் பேசித் தன் கருத்தை முடிக்கிறான். நாடக இறுதியிலும்,

எங்குநீர் கண்டுளீர் இச்சிறு வயதிற்
பலதே வனைப்போற் பலிதமாம் சிறுதரு.

என்று ஜீவகன் பலதேவனைப் பற்றிப் புகழ்ந்து அவையோ ரிடத்தில் பேசுகின்றான்.

ஜீவகன் பலதேவன் பண்பினை அறியாதவனாதலால் இவ்வாறு உரைத்தான். ஆயின் மைந்தனின் உண்மைக் குணம் குடிலனுக்கா தெரியாது? படர்கொடியாக மனோன் மணியை எண்ணும் குடிலன், அக்கொடி படரும் எட்டி மர மாகத் தன் மகனை எண்ணுகிறான்.

அருகுள தெட்டியே யாயினும் முல்லைப்
படர்கொடி படரும் பலதே வனையவள்
இடமே பலமுறை யேவில் உடன்படல்
கூடும்

என்று குடிலன் நம்புவது உலகியலை ஒட்டியேயாம். ஆயினும் மாண்புடைய மனோன்மணியின் உள்ளத்தில் பலதேவனைப் பற்றிய எண்ணமே எழவில்லை.

பலதேவன் தந்தை சொற்படியும் சகடரின் பேராசைப் படியும் வாணியை மணக்கப் போகிறான் என்பதனைக் கேள்வியுற்று, அவனோடு காமக் களியாட்டயரும் ஆசை நாயகி ஒருத்தியின் தாய், அவனை ஊர்ப்புறத்தில் ஒருசார் வைகறை நேரத்தில் கண்டு, தன் மகளை மறந்து புறக் கணித்துவிட வேண்டாம் என்று மன்றாடுகிறாள். அவளுக்கு மறுமொழியாக,

எவருனக் குரைத்தார் இத்தனை பழங்கதை
சவமவள் எனக்கேன்? இவள்சுக மெங்கே?
பொய்பொய் நம்பலை ஐயமெல் லாம்விடு
பணத்திற் காக்கிழப் பிணந்துடிக் கின்றது

என்று கூறும் கூற்றில் விரசம் மிகுந்துள்ளது. அரண்மனையில் திருடிய பொற்றொடி ஒன்றினை அவள் கையில் தந்து தன் கள்ளக் காதலிக்குத் தருமாறு சொல்கிறான், வாணியையும்

பணத்தாசை பிடித்தலையும் அவள் தந்தையினையும் பழித்துரைக்கும் பலதேவனை அத் தாய் போனபின் பலதேவனின் நண்பன் 'செவ்விது, செவ்விது இவ்விட மெத்தனை' என்று வெளிப்படையாகவே அவன் களவு வாழ்வினைப் பற்றிக் கேட்கிறான். அதற்கு பலதேவன் அளிக்கும் விடை பகுத்தறிவு மிக்க மனித இனத்திலேயே அவனைச் சேர்த்துக் கொள்ளும்படியாக இல்லை என்பது கீழ்க்காணும் அவன் கூற்றால் தெரியவரும்.

ஐந்தோ? ஆறோ? அறியேன் போ! போ!
இச்சுக மேசுகம்; மெய்ச்சுகம் விளம்பில்
வாணி யாயினென்? மனோன்மணி யாயினென்?
அதைவிடப் படித்த அலகையா யினுமென்?
கணிசத் திற்கது; காரியத் திற்கிது.

இதை மறைந்து கேட்ட நடராசன் உள்ளம் கொதிக்கிறது; ஆண்கள் வர்க்கத்தையே நாராயணனிடம் பழித்துப் பேசச் செய்கிறது.

புருடரே புலையர் நிலையிலாப் பதடிகள்
இருளுடை நெஞ்சர் ஈரமில் உளத்தர்
ஆணையு மவர்க்கொரு வீணுரை அறிந்தேன்
தந்நய மன்றிப் பின்னொான் றறியார்
காதகர் கடையர் கல்வியில் கசடர்

என்று நடராசன் தன் நெஞ்சக் குமுறலையெல்லாம் எரிமலையென வெடித்துக் கக்குகிறான்.

சேரநாடு செல்லும் பலதேவன், குடிலன் ஆங்கவன் பேசவேண்டியவெல்லாம் விரிவா யெடுத்து விளம்பியிருக்கவும், புருடோத்தமனின் சினத்தைக் கிளறும் வகையில் மடமைத்தனமாக உரையாடுகின்றான். தன்னைப் பற்றி உயர்வாக 'மந்திரச் சிகாமணி தந்திரத் தலைவன் குடிலேந்திரன் மகன்' என்று தன்னைப் புருடோத்தமனிடம் அறிமுகப்

படுத்திக் கொள்ளும் அளவிலேயே இவன் ஒரு 'மடையன்' என்ற முடிவுக்குச் சேரன் செவ்விதின் வந்து விடுகின்றான். மன்றல் வினை பேசச் சென்றவன், மதியீனத்தால் மறப் போருக்கு வழி கோலிவிட்டு வந்து விடுகின்றான். தூது வனுக்குரிய பண்புகள் ஒன்றும் இவன்பால் இல்லை. இதனைப் புருடோத்தமனும்,

நன்செய்நா டதனை நாவு கூசாமற்
பாண்டியற் களிக்க என்றுரை பகர்ந்தும்
ஈண்டுநீ பின்னும் உயிர்ப்பது தூதுவன்
என்றபே ரொன்றால் என்றே அறிகுதி

என்று கூறி அவன் மதியற்ற தன்மையினைச் சுட்டுகின்றான்.

இத்தகு இழிகுணப் பலதேவன் தான் கற்பழித்து கை விட்ட ஒருத்தியின் தமையனால் போரில் வேலால் தாக்கப் படுகிறான்; 'உன் நடத்தையால் விளைந்தது இது' என்று தன்னைக் கடிந்துரைத்த தந்தைக்குப் பலதேவன் கூறும் பதில்,

மன்னனைக் குத்திட உன்னினை; ஊழ்வினை
என்னையே குத்திட இசைந்தது யார்பிழை?

என்பதாகும்.

இக்கூற்று முற்றும் உண்மையே! குடிலனையே உடனி ருந்தே கொல்லும் வியாதி போன்று, வீயாது அடியுறையும் நிழல் போன்று, தொடர்ந்தே வரும் ஊழ்வினையாக வந்து முளைக்கிறான் பலதேவன். இத்தகைய மகனைக் காட்டி லும் கொடுமனக் குடிலனுக்கு வேறு தகுந்த தண்டனையும் இருக்க முடியுமோ?

மகன் மார்பில் புண்பட்டுப் புலம்புவதனையும் பொருட் படுத்ாது, குடிலன், 'எரிவதென் னுள்ளம் உனை எண்ணும் தோறும் அரியவென் பணமெல்லாம் அழித்தனையே' என்று நெஞ்சமும் நிறையும் அழிந்துகூற, அதற்குப் பலதேவன்

'பணம் பணம் என்றேன் பதைக்கின்றாய் பிணமே' என்று பதிலளிக்கும் பொழுது, பெற்றுப் பெயரிட்டு வளர்ந்த தந்தையிடம்—அதுவும் நாடே நடுங்கும் குடிலனிடம், அருமைத் திருமகன் பேசும் முறை இவ்வாறு அழகியதாகவுள்ளது!

நாராயணன் கழுவேற்றப்பட வேண்டுமென்று அரச கட்டளை பிறக்கிறது. படைவீரர்கள் இதற்குக் காரணமான குடிலனைப் பிடிக்க ஓடிவருகின்றனர். வீரர்க்கு அஞ்சிக் குடிலனும் பலதேவனும் ஓடி ஒளிகின்றனர். பலதேவன் அந்த இடத்தில் குடிலன் சினத்தினையும் பொருட்படுத்தாமல் நாராயணனைப் பாராட்டிப் பேசும் பண்பு ஒன்றே பலதேவனிடத்து நாம் இந்நாடகத்தில் காணும் நல்ல பண்பாகும்.

'அறிவிலாத் தந்தையர் தம்வினை மக்களைச் சாரும்' என்று நாடகத்தில் வரும் உழவன் ஒருவன் கூறும் கூற்றின் உண்மை, குடிலன்—பலதேவன் இவர்கள் வாழ்வால் நாடகத்தில் நன்கு புலனாகின்றது.

## III. இடங்கண்டு பொருள் நயம் காணவேண்டிய பகுதிகள்

முதல் அங்கம் : முதற் களம்

1. திருவடி தீண்டப் பெற்றவிச் சிறுகுடில்
அருமறைச் சிகரமோ ஆலநன் னீழலோ
குருகுல விஜயன் கொடித்தேர்ப் பீடமோ
யாதென ஓதுவன் (21-24)

முதல் அங்கம் : இரண்டாம் களம்

2. எருதீன் றெனுமுணம் என்னகன் றென்று
திரிபவ ரொப்பநீ செப்பினை (17-18)

3. நெருப்பையுங் கரையான் அரிக்குமோ
நேர்ந்தே (147)

முதல் அங்கம் : மூன்றாம் களம்

4. துறந்தார் முற்றுந் துறந்தவ ரல்லர்
மறந்தார் சிற்சில. (23-24)

5. பெண்ணை யந்தார் சூடிட நுந்தம்
பெண்ணை யந்தார் சூட்டெனப் பேசினர் (183-184)

முதல் அங்கம் : நான்காம் களம்

6. விரைதரு மோசிறு கறையான் அரிக்கில் (119)

7. குழவிப் பருவம் நழுவுங் காலை
களிமிகு கன்னிய ருளமும் வாக்கும்
புளியம் பழமுந் தோடும் போலாம் (167-169)

முதல் அங்கம் : ஐந்தாம் களம்

8. அருகுள தெட்டியே யாயினும் முல்லைப்
படர்கொடி படரும் (22-23)

9. யாத்திரை போன நூற்றுவர் சோறடு
பாத்திரந் தன்னிற் பங்கு பங்காக
ஒருவரை யொருவர் ஒளித்துப் பருமணல்
இட்ட கதையா யிருக்குமோ (93-96)

இரண்டாம் அங்கம் : முதற் களம்

10. இராச்சிய பாண சூத்திரம் யார்க்கும்
நீச்சே யன்றி நிலையோ? (210-211)

11. மூக்கிற் கரிய ருளரென நாயனார்
தூக்கிய குறளின் சொற்படி எல்லாம்
உள்ளதின் னருகவ ரில்லா ராவரோ? (268-270)

12. சித்திர பார்வை யழுந்தார்க் கெத்தனை
காட்டினுங் கீறிய வரையலாற் காணார் (322-323)

இரண்டாம் அங்கம் : இரண்டாம் களம்

13. ஓதி யுணரினும் மாத ருள்ளம்
அலையெறி கடலினுஞ் சலன மென்ப (121-122)

இரண்டாம் அங்கம் : மூன்றாம் களம்

14. பரவு பாடையும் விரவுமா சாரமும்
நோக்கில் வேறொரு சாக்கியம் வேண்டா (88-89)

15. வண்டு மலரிடை யணைய உன் நாட்டில்
கொண்டு விடுவரே போலும். (118-119)

மூன்றாம் அங்கம் : முதற் களம்

16. புலிவேட் டைக்குப் பொருந்துந் தவிலடி
எலிவேட் டைச்கும் இசையுமோ?
[இயம்பாய் (144-145)

மூன்றாம் அங்கம் : இரண்டாம் களம்

17. உழைப்போர் உழைப்பில் உழுவோர்
தொழில்மிகும்
உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்துநீ (68-69)

18. அரசியல் இரகசியம் அங்காடி யம்பலம்
வரும்வித மிதுவே (209-210)

மூன்றாம் அங்கம் : மூன்றாம் களம்

19. கையாரும் பொருளென்னக் கருதிமணல் வகையைக்
காப்பதெலா மிலவுகிளி காத்தலினும் வறிதே 24

20. பெண்களகக் காதலெலாம் பேசமுயற் கொம்பே
பெருங்கபட மிடுகலனோ பிறங்குமவ ருடலம் 23

21. பூதப் பொருட்கே புலன்துணை அன்றி
போதப் பொருட்குப் போதும் போதம்
இரவியை நோக்கற் கேள்விளக் குதவி? (82-84)

22. நம்பலென் பதுவே அன்பின் நிலைமை (110)

மூன்றாம் அங்கம் : நான்காம் களம்

23. எய்ப்பினில் வைப்பா யிருந்தபே ரருளைக்
கைப்படு கனியெனக் கண்டபின் உலகில்
எப்பொரு ளையுமிப் படியே இவ்வருள்
தாங்கிடும் என்பதில் சமுசயம் என்னை? (236-239)

நான்காம் அங்கம் : முதற் களம்

24. அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னிலும்
நாட்டபி மானமுள் மூட்டிய சினத்தீ
அன்றோ வானோர்க் கென்றுமே உவப்பு!
(236-238)

25. உத்தம மாதர்கள் உண்டுமற் றாங்கே
எத்தனை யோபேர் இவர்க்கவர் துணையாம்
(194-195)

நான்காம் அங்கம் : மூன்றாம் களம்

26. ......மற்றுநீ கழறிய
உழிஞையங் குளதெனில் வழுதிபாற் பழுதில்
நொச்சியும் உளதென நிச்சயம் கூறே (241-243)

27. பணம்பணம் என்றேன் பதைக்கின்றாய் பிணமே
(295)

ஐந்தாம் அங்கம் : முதற் களம்

28. பித்தன் ஒருவன் தன்னால் இத்தமிழ்
நாடெலாம் வெறுஞ்சுடு காடாய் விடுமே.
(119-120)

29. பண்டிரா கவன்றன் பழம்பகை செற்று
வென்றதோ ரிலங்கை விபீஷணன் காக்கவா
றின்றநீ வென்றநா டினிதுகாத் திடுவேன்
(142-144)

ஐந்தாம் அங்கம் : இரண்டாம் களம்

30. உடலால் உயிரும் விழியலால் உணர்வும்
கடபட சடமலாற் கடவுளும் இலையேல்
வேண்டிய வினைக (164-166)

ஐந்தாம் அங்கம் : மூன்றாம் களம்

31. ஆடையின் சிறப்பெலாம் அணிவோர் சிறப்பே
பாடையின் சிறப்பெலாம் பயில்வோர்
[சிறப்பே (75-76)

# IV. சென்னைப் பல்கலைக் கழக வினாத்தாள்கள்

## April—1959

1. வாணியின் காதலைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

(அல்லது)

மனோன்மணீயத்தில் அமைந்த வீரச்சுவையை விளக்கி எழுதுக. 20

2. நாராயணனின் குணவியல்புகளை ஆராய்க.

(அல்லது)

ஆசிரியர் சுந்தரம் பிள்ளையின் தமிழ்ப் பற்றும், அவர் தமிழுக்குச் செய்த தொண்டும் பற்றி எழுதுக. 20

3. இடஞ்சுட்டி விளக்குக :—

(1) "மற்றுநீ கழிய
வுழிஞையங் குளதெனில் வழுதிபாற் பழுதின்
நொச்சியு முளதென நிச்சயங் கூறே"

(2) "விரைதரு மோசிறு கறையா னரிக்கில்?"

(3) "பெண்களகக் காதலெல்லாம் பேசமுயற்
கொம்பே" 10

## Sept—1959

1. சுந்தர முனிவரின் சிறப்பியல்புகளைப் புலப்படுத்துக

(அல்லது)

ஜீவகன் எடுப்பார் கைப்பிள்ளை என்னும் கூற்றினை ஆராய்க. 20

2. மனோன்மணீயம் ஒரு சிறந்த காப்பியம் என்று கூறுதல் எவ்வாறு பொருந்தும்?

(அல்லது)

குடிலனுடைய சூழ்ச்சிகள் எவ்வாறு சிதைந்தன?

4. இடம் சுட்டி விளக்குக :

(a) "உழைப்போ ருழைப்பில் உழுவோர்
தொழில்மிகும்
உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்து நீ"

(b) "......அங்கு
பரவு பாடையும் விரவுமா சாரமும்
நோக்கில் வேறொரு சாக்கியம் வேண்டா"

(c) "கருமருந் தரையிற் சிறுபொறி சிதறினும்
பெருநெருப் பன்றோ பின்பார் தடுப்பார்
அதனா லன்பரே ஆணைக் கடங்குமின்" 10

## April—1961

1. ஜீவகவழுதிக்கும் குடிலனுக்கும் உள்ள குணவேறுபாடுகளை விளக்கி வரைக.

(அல்லது)

மனோன்மணி காவியத் தலைவிக்குரிய நற்பண்புகளனைத்தும் நன்கு வாய்க்கப் பெற்றவள் என்பதைத் தக்க சான்றுகள் காட்டி நிறுவுக. 20

2. நடராசனின் குணவியல்புகளை நன்கு ஆராய்க.

(அல்லது)

நிஷ்டாபரர் கருணாகரர் ஆகிய இருவருக்குமிடையே நடந்த உரையாடல்களை விளக்கி வரைக. 20

3. இடம் சுட்டி விளக்குக :—

(a) நெருப்பையுங் கறையா னரிக்குமோ நேர்ந்தே

(b) எலிப்பகை தொலைக்க இருந்ததன் வீட்டில்
நெருப்பினை யிடல்போ லன்றோ நேர்ந்தது.

(c) கையாரும் பொருளென்னக் கருதி மணல் வகையைக்
காப்பதெலா மிலவுகிளி காத்தலினும் வறிதே. 20

## Sept—1961

1. மனோன்மணி, வாணி இவர்களுடைய குணவியல்புகளை ஒப்பிட்டு ஆராய்க.

(அல்லது)

நாராயணனின் குணவியல்புகளை நன்கு ஆராய்க. 20

2. ஜீவகவழுதி கள்ளங்கபடமற்ற நேர்மையுள்ளத்தினன் என்பதையும், குடிலன் தன்னலமும் வஞ்சனையுமே வடிவாகக் கொண்டவன் என்பதையும் தக்க சான்றுகள் காட்டி நிறுவுக.

(அல்லது)

சிவகாமியின் சரிதையை விளக்கி வரைக. 20

3. இடஞ்சுட்டி விளக்குக :—

(a) விரைதரு மோசிறு கறையா னரிக்கில்

(b) ..........—ஓர் சிறு
மயிரினை யிழக்கினும் மாயுமே கவரிமா

(c) பண்டிரா கவன்றன் பழம்பகை செற்று
வென்றதோ ரிலங்கை விபீஷணன் காத்தவா
நின்றுநீ வென்ற நாடினிது காத்திடுவேன். 10

## April—1962

1. சிவகாமியின் சரிதத்தைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

மனோன்மணீய ஆசிரியர் திருக்குறளைத் தமது நூலிடையே அமைக்கும் அழகை நன்கு சான்று களால் புலப்படுத்துக. 30

2. குடிலனின் சூழ்ச்சிகள் அவனையே தொலைத்த வாற்றினை விளக்கி எழுதுக.

(அல்லது)

மனோன்மணீயம் காப்பிய இலக்கணம் முழுதும் நிரம்பிய நூல் என்பதைக் காட்டுக. 20

இடஞ்சுட்டி விளக்குக :—

a நன்று நன்றுநின் நாணம்
மன்றலு மானது போலும் வார்குழலே

b உண்ணவா என்றியாம் உறவுபா ராட்டிற்
குத்தவா எனும்உன் மத்தனன் றேயிவன்

c உரிமைமே லாண்மைபா ராட்டா சாந்தம்
பெருமையில் பிணத்திற் பிறந்ததோர் சீதம்.

d அல்லையேல் நின்புரம் முடிய
ஒறுத்திட உழிஞையுஞ் சூடுவேன். 10

## Sept—1962

1. வாணியின் குணநலன்களை விவரித்துக் கூறுக.

(அல்லது)

மனோன்மணீய ஆசிரியர் பழமொழிகளைக் கையாளும் திறனை நன்கு சான்றுகளால் விளக்குக. 20

2. மனோன்மணீய நாடகத்திற்குச் சுந்தரமுனிவர் ஓர் இன்றியமையாத உறுப்பாக எங்ஙனம் திகழ்கிறார்?

(அல்லது)

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை வீரச்சுவையை எவ்வாறு தமது நூலில் அமைத்துள்ளார்? 20

3. இடஞ்சுட்டி விளக்குக :—

a எரிந்தன னாயிலென் என்றென் றுந்தம்
மூடல் கரிந்தது பாதியென் றாடாய் கழல்.

b இழிவுறின் மார்பினி ன றிதுவே சோரியாய்ப்
பொழிகநீர் பொன்றிடு மளவும்.

c அப்பெருங்கடலும் மெய்ப்பொருட்கெதிரில் எப்படிப்
பார்க்கினு மிசையாப் பேய்த்தேர்.

d திருந்தவன லருகிலினிச் சென்றுறைதிமைந்த சேர்ந்
தார்க்குக் களிப்புதவுஞ் சேரார்க்குப் பனிப்பே. 10

## Sept—1963

1. நாராயணனின் குணவியல்புகளை விளக்குக.

(அல்லது)

குடிலன் கொடும்பாதகன் என்னும் கருத்தை ஆய்க.

2. மனோன்மணீயத்திற் பயன்படுத்தப்பட்டுள்ள பழமொழிகளில் மூன்றனை இடஞ்சுட்டி விளக்குக. 15

3. அடியில் வருவனவற்றுள் மூன்றனுக்கு விளக்கவுரை வரைக : 20

(a) சற்றிதோ மணங்கொடுத்து உற்றிதோ பாடும்.

(b) பாவையின் பாடெலாம் பட்ட தென்னுளமே.

(c) மன்னவ னென்போன் மதியில் வலியோன்.

(d) இவ்வயிற் கேட்டதுங் கண்டதும் தீராத் துயரமே செய்வது.

(e) குட்டுப்பட்ட போதன்றிப் பாரான் உள்ளம்.

(f) நொச்சியும் உள்வெண நிச்சயங் கூறே.

## April—1964

1. வாணி (அல்லது) நடராசனின் பண்புகளை ஆராய்க.

2. குடிலனின் சூழ்ச்சித் திறனையும் வஞ்சகப் போக்கையும் விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.

(அல்லது)

மனோன்மணீய நாடகம் தத்துவக் கருத்துக்களையும் நாட்டுப் பற்றையும் உணர்த்துவது என்பதை விளக்குக.

3. எவையேனும் இரண்டினை இடந்தோன்ற விளக்குக.

(a) அதனில், குற்றங் காணக் குறுகுதல் முற்றும் மணற்சோற்றிற்கல் தேடுதல் மானும்.

(b) உறப்புகள் தாமே உயிரினை யுண்ண ஒருப்படின் விலக்குவ ருளரோ.

(c) எதற்கிக் கயவனைக் கைதவன் அனுப்பினான் நயந்தி துணர்ந்து நட்டிலன் போன்மே.

(d) இரவியை நோக்கற் கேன்விளக் குதவி. 10

## Sept—1964

1. ஜீவகன் (அல்லது) சுந்தர முனிவரின் பண்புகளை ஆராய்க.

2. மனோன்மணிக்கு நேர்ந்த இன்னல்களைக் கடப்பதற்கு வாணி எவ்வெவ்வாறு உதவியாக இருந்தாள்? (20)

(அல்லது)

சிவகாமி சரிதம் இந்நாடகத்தில் அமைந்தது பொருந்துமா? அதன் பயன் யாது? விளக்குகள்!

3. எவையேனும் இரண்டனை இடம் தோன்ற விளக்குக :

(a) துறந்தா றறிவரோ தூதின் தன்மை.

(b) கருப்போ தேனோ என்றவர் களிப்பது
நெருப்பா றும்மயிர்ப் பாலமு மன்றோ?

(c) அப்பந் தின்னவோ அலால்குழி எண்ணவோ
செப்பிய துனக்கு.

(d) பெருந்தகை பிரிந்துமுன் சுமக்கும் பெற்றி
மருந்தாய் எனக்கே இருந்ததே. 10

## April—1965

1. ஜீவகன் (அல்லது) சுந்தர முனிவரின் பண்புகளை ஆராய்க.

2. மனோன்மணீயத்தில் திருக்குறள் கருத்துக்களும் பழமொழிகளும் பயின்று வருதலை எடுத்துக் காட்டுக.

(அல்லது)

குடிலனின் சூழ்ச்சிகள் தோல்வியுற்ற காரணங்களை விளக்குக.

3. எவையேனும் இரண்டனை இடந்தோன்ற விளக்குக.

(அ) பேயனுக் களிக்கவோ பெற்றனம் பெண்ணை?

(ஆ) சித்திரப் பார்வை யழுந்தார்க்கு எத்தனை காட்டினும் கீறிய வரையலால் காணார்.

(இ) உண்ணவா என்றியாம் உறவுபா ராட்டின் குத்தவா எனும்உன் மத்தன் அன்றே யிவன்.

(ஈ) பிறந்தார் என்போர் புகழுடன் இறந்தோர் அப்பெரும் புகழுடம் பிப்படி இன்றிதோ. 10

## Sept—1966

1. மனோன்மணியின் காதல் (அல்லது) குடிலனின் சூழ்ச்சி என்பதுபற்றி ஒரு கட்டுரை எழுதுக. 20

2. மனோன்மணீயத்தில் வாணியும் நடராசனும் எவ்வெவ்வாறு பயன்படுகின்றனர்?

(அல்லது)

மனோன்மணீய நாடக அமைப்பை விளக்குக. (20)

3. எவையேனும் இரண்டனை இடந்தோன்ற விளக்குக :

(அ) பெற்றோர் உற்றோர் களுக்கும் தமக்கும்
விழுமம் விளைத்துத் தாமே அழுவர்
என்னே அவர்தம் ஏழைமை.

(ஆ) தீது நன்றெனா ஓதுவ எல்லாம்
அறியார் கரையும் வெறுமொழி அலவோ?

(இ) முட்டாள் இவனை விட்டவன் குட்டுப்
பட்டபோ தன்றிப் பாரான் உண்மை.

(ஈ) மன்னவன் நல்லவனா வாய்க்குதல் போல
என்னுள தரியவற் றறியதிவ் வுலகில். 10

## April—1967

1. வாணி அல்லது மனோன்மணியின் பண்புகளை ஆராய்க. 20

2. குடிலனுடைய சூழ்ச்சிகளை முறைப்படுத்திக் கூறி, அவை செயலற்றமையை விளக்குக.

(அல்லது)

ஜீவகன் படைபயில் களத்தில் ஆற்றிய உரையின் சிறப்பினைப் புலப்படுத்துக.

3. எவையேனும் இரண்டனை இடந்தோன்ற விளக்குக:

(1) நெருப்பையும் கறையான் அரிக்குமோ நேர்ந்தே?

(2) முன்னை வழக்கும் அன்னதே ஆயினும்
ஆத்திரம் தனக்குச் சாத்திரம் என்னை?

(3) உழைப்போ ருழைப்பின் உழுவோர் தொழில் மிகும்.

(4) இரவியை நோக்கற் கேன்விளக் குதவி? 10

## Sept—1967

1. நிஷ்டாபரர்க்கும் கருணாகரர்க்கும் நடைபெற்ற உரையாடலின் பொருளைத் தருக.

(அல்லது)

ஜீவனுக்கும் வாணிக்கும் நடைபெற்ற காதல் பற்றிய உரையாடலை விவரிக்க. (20)

2. குடிலனுடைய தனிமொழிகளைக் கொண்டு அவனுடைய பண்புகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

நடராசனும் நாராயணனும் மனோன்மணீய நாடகத்தில் பெற்றுள்ள இடங்களை ஆராய்க. 20

3. எவையேனும் இரண்டினை இடந்தோன்ற விளக்குக :

(1) குற்றங் காணக் குறுகுதல் முற்றும் மணற்சோற்றிற் கற் றேடுதல் மானும்.

(2) எனவகைதேறியக் கண்ணும் வினைவகை கோடிய மாந்தர் கோடியின் மேலாம்.

(3) குடிலன் கைதொடின் மஞ்சளும் கரியா கும்மே

(4) ஒருவன தாசைப் பெருக்கா லுலகில் வருதுயர் கடலிற் பெரிதே. 10

## April—1968

1. நடராசன் (அல்லது) நாராயணன் பண்புகளை ஆராய்க. 20

2. மனோன்மணீய ஆசிரியர் நாடு மொழி சமயம் பற்றிக் கொண்டிருந்த கொள்கைகளை எடுத்துக் காட்டுக.

(அல்லது)

நாடகத்தில் பழமொழிகளையும் திருக்குறள் தொடர்களையும் அமைத்திருத்தலைக் காட்டி விளக்குக. 20

3. எவையேனும் இரண்டினை இடந்தோன்ற விளக்குக.

(அ) உன் தொல் குலத்தில் உன் திருமேனியில் வைத்த பரிவும் பத்தியும் எத்தனை.

(ஆ) முட்டா ளிவனை விட்டவன் குட்டுப்
பட்டாபோ தன்றிப் பாரா னுண்மை.

(இ) உன்மகற்குத் தினைத்துணைத் தீங்கவன் செய்யின் என்மகட்குப்
பனைத்துணை செய்ததாப் பழிபா ராட்டுவன்.

(ஈ) சிறுமையும் பெருமையும் செய்பவர்க் கன்றிச்
செய்வினை தனக்கேது? 20

## Sept — 1968

1. சீவகன் அல்லது சுந்தரர் பண்புகளை ஆராய்க.

2. வாணியின் துணை மனோன்மணிக்கு எவ்வாறு பயன்பட்டது? விளக்குக : 20

(அல்லது)

சிவகாமி சரிதம் நாடகத்தின் இடையே அமைந்த காரணத்தை விளக்குக. 20

3. எவையேனும் இரண்டினை இடந்தோன்ற விளக்குக :

(அ) முன்னை வழக்கும் அன்னதே ஆயினும் ஆத்திரந்
தனக்குச் சாத்திர மென்ன?

(ஆ) உறுப்புகள் தாமே உயிரினை உண்ண ஒருப்படில்
விலக்குவ ருளரோ?

(இ) புலிவேட் டைக்குப் பொருந்துந் தவிலடி எலி வேட்
டைக்கும் இசையுமோ?

(ஈ) கருமருந் தறையில் சிறுபொறி சிதறினும்
பெருநெருப் பன்றோ பின்பார் தடுப்பர்? 10

## April—1969

1. வாணி அல்லது நடராசன் பண்புகளை ஆராய்ந்து எழுதுக. 20

2. மனோன்மணீயத்தில் தத்துவக் கருத்துகள் எவ்வெவ் நிலைகளில் யார் யார் வாயிலாக எவ்வெக் காரணம் பற்றி விளக்கப்படுகின்றன?

(அல்லது)

குடிலன் ஒரு திறமையான பாத்திரப் படைப்பு என்ற கருத்தை விளக்குக.

3. எவையேனும் இரண்டினை இடம் தோன்ற விளக்குக.

(அ) பிடித்தால் கற்றை விட்டால் கூளம்.

(ஆ) பித்தன் எப்படிச் சுந்தரர்க்கு
ஒத்த தோழனாய் உற்றனன்.

(இ) வெளுத்த எல்லாம் பாலெனும் மெய்மை
உளத்தான்.

(ஈ) கொன்றபின் அன்றோ முதலை நின்றழும் 10

## Sept—1969

1. சுந்தரமுனிவர் அல்லது புருடோத்தமன் பண்புகளை எடுத்துக்காட்டுக.

2. சுந்தரம் பிள்ளை நாட்டுப்பற்றும் சமயப் பற்றும் மிக்கவர் என்பதற்கு நாடகம் தரும் சான்றுகள் என்ன?

(அல்லது)

மனோன்மணியின் திருமணம் நிறைவேறுவதற்கு வாணி புரிந்த உதவிகளை விளக்கி எழுதுக. 20

3. எவையேனும் இரணடினை இடந்தோன்ற விளக்குக :

(அ) அரைக்கில் அன்றோ சந்தனம் கமழும்.

(ஆ) இராச்சிய பாரை சூத்திரம் யார்க்கும் நீச்சே அன்றி நிலையோ.

(இ) சுற்றிச் சுழலினும் கறங்கொரு நிலையைப் பற்றியே சுழலும்.

(ஈ) பணம் பணம் என்றேன் பதைக்கின்றாய் பிணமே நிணம்படு நெஞ்சுடன் நின்றேன். 10

## April—1970

1. குடிலன் சூழ்ச்சியில் வல்லவன் என்பதை விளக்குக.

(அல்லது)

புருடோத்தமனின் இயல்புகளை வரைக. 20

2. நடராசன் இயற்கையில் ஈடுபாடு மிக்கவன் என் பதைத் தெளிவுறுத்துக.

(அல்லது)

'பழமொழிகள் நாடகத்துக்குத் தனிச் சிறப்பூட்டு கின்றன' என்பதை எடுத்துக்காட்டுக. 20

3. எவையேனும் இரண்டினை இடந்தோன்ற விளக்குக :

(அ) அருமறைச் சிகரமோ, ஆலநன் னீழலா, குருகுல விஜயன் கொடித்தேர்ப் பீடமோ?

(ஆ) உறுப்புகள் தாமே உயிரினை யுண்ண ஒருப்படில் விலக்குவ ருளரோ?

(இ) புலிவேட்டைக்குப் பொருந்துந் தவிலடி எலிவேட்டைக்கும் இசையுமோ?

(ஈ) வளையும் வேய் நிமிரும் வளையா நெடுமரம் கிளையுடன் கெடுமே கிளர்காற் றதனில் 10

## Sept—1970

1. சீவகவழுதி எடுப்பார் கைப்பிள்ளை என்பதன் பொருத்தத்தை ஆராய்க.

(அல்லது)

சுந்தர முனிவர் கதை நிகழ்ச்சிக்கு இன்றியமையாதவர் என்பதைப் புலப்படுத்துக. 20

2. சீவகன் தன் வீரர்முன் சாற்றிய வீரவுரையினை வரைக.

(அல்லது)

மனோன்மணீய நாடகத்திலிருந்து நாம் பெறத் தக்க அறிவுரைகளைத் தொகுத்து வரைக. 20

3. எவையேனும் இரண்டினை இடம்தோன்ற விளக்குக :-

(அ) பெண்ணை யந்தார் சூடிட நுந்தம் பெண்ணையந் தார் சூட்டெனப் பேசினர்.

(ஆ) அருகுள தெட்டியே யாயினும் முல்லைப் படர் கொடி படரும்.

(இ) அரசியல் இரகசியம் அங்காடி யம்பலம் வரும்வித மிதுவே.

(ஈ) ஒட்டாரி பின்சென் றுயிர்வாழ் தலினும் கெட் டான் எனப்படல் அன்றே கீர்த்தி? 10

## April—1971

1. சுந்தர முனிவர் என்பவர் மனோன்மணீய நாடக அமைப்பிற்குத் தேவையா? ஆராய்க.

(அல்லது)

சுந்தரம் பிள்ளையின் நாட்டுப்பற்றும் சமயப் பற்றும் நாடகத்தில் எவ்வாறு இடம் பெறுகின்றன? விளக்குக. 20

2. பலதேவனின் இயல்புகளை எடுத்துரைக்க.

(அல்லது)

மனோன்மணீய நாடகம் அறிவுறுத்தும் உண்மைகளைத் தொகுத்துரைக்க. 20

3. எவையேனும் இரண்டினை இடம் தோன்ற விளக்குக :-

(அ) அதனிற், குற்றங்காணக் குறுகுதல் முற்றும் மணற்சோற் றிற்கற் றேடுதல் மானும்.

(ஆ) பாச்சி பாச்சி என்றழும் பாலர்க்குப் பூச்சி பூச்சி என்பது போலாம்.

(இ) இத்தனை சூதெலா மெங்குவைத் திருந்தாய் உத்தமன் போலமற் றெத்தனை நடித்துளாய்.

(ஈ) நம்பிய பாய்மரம் பழுது விட்டிடக் கோட்டையாம் வெளிக்கட லோட்டம். 10

## Sept—1971

1. நடராசனும் வாணியும் மனோன்மணீய நாடகத்திற்கு எவ்வெவ் வகையில் தேவையாக உள்ளனர்? விளக்குக.

(அல்லது)

மனோன்மணியின் வாழ்வில் நேர்ந்த இன்னல்களையும் அவை நீங்கிய வகைகளையும் எடுத்துரைக்க.

2. சிவகாமியின் சரிதை நாடகத்துள் இடம் பெற்றது பொருந்துமா? ஆய்க.

(அல்லது)

குடிலன் படைப்பு வியக்கத்தக்க கற்பனை என்பதை விளக்குக. 20

3. எவையேனும் இரண்டினை இடம் தோன்ற விளக்குக :

(அ) பளிங்கும் பழித்த நெஞ்சாய் உனக்குக் களங்கம் வந்த காரணம் எது ?வா?

(அ) உறுப்புக்கள் தாமே உயிரினை உண்ண ஒருப்படில் விலக்குவ ருளரோ.

(இ) நாணா துலக மாளல்போல் நடித்தல் நாணாற் பாவை யுயிர்மருட் டுதலே.

(ஈ) ஒருவர் ஒருபொரு ளறியின் இரகசியம் இருவர் அறிந்திடிற் பரசிய மென்ப. 10

## April—1972

1. தெய்வ பக்தியுடன் தேச பக்தியை இசைத்து,

அல்லது

வேதாந்தத்துடன் விஞ்ஞானத்தை இணைத்து ஆசிரியர் நாடகம் செய்திருக்கும் நயத்தைப் புலப்படுத்துக. 20

2. நடராசன் உலகந்தெரியாத ஓர் இலட்சியவதி தானா?

அல்லது

நாராயணன் உலகந் தெரியாத ஓர் காரியவாதி தானா?—ஆராய்க. 20

3. எவையேனும் இரண்டினை இடம்தோன்ற விளக்குக:

(அ) எதற்கும் திருக்குறள் இடந்தரும் விடு, விடு.

(அ) அப்பந் தின்னவோ அலால்குழி எண்ணவோ.

(இ) போதங் கரைந்துமேற் பொங்கிடும் அன்பைப்
பூத யாக்கையோ தடுத்திடும்.

(ஈ) கிழவிப்பேச்சு ஏற்குமோ கின்னரக் காரிக்குப்படும்
போது அறிவை. 10

## Sept—1972

1. பழமைக்கும் புதுமைக்கும் பாலமாய்ச் சமைந்தது மனோன்மணீயம்.

அல்லது

ஆசிரியரின் மேதைதமையை வெளிப்படுத்துவது அவர் வகுத்திருக்கும் உரையாடல்களின் அமைப்பே-ஆராய்க. 20

2. மதிநுட்பம் எவ்வளவு இருந்தாலும் வாழ்வின் உன்னதக் கோட்பாடுகளில் நம்பிக்கை இல்லா விட்டால் முடிவான வெற்றி அடைய முடியாது என்பதற்குக் குடிலன் ஓர் எடுத்துக்காட்டு.

அல்லது

கதாநாயகனுக்கு முரண்பட்டவளாகவே தோன்று கிறாளா வாணி—ஆராய்க. 20

3. எவையேனும் இரண்டினை இடம் தோன்ற விளக்குக:—

(அ) நல்லது. மிகவும், செல்லிடந்தொறும் கதையாய் இருந்தது.

(ஆ) அரசியல் இரகசியம் அங்காடி அம்பலம் வரும் விதம் இதுவே.

(இ) உங்கள் பேச்சு அறிவோம், ஓயாப் பேச்சே, இங்கு அது முடியுமோ?

(ஈ) மரணமோ என்றால் மரணம் அன்று மறுபிறப்பு என்பீர் யாதோ உண்மை? 10

# ANNAMALAI UNIVERSITY

## B. A. & B. Sc. Degree Examinations
## (SECOND YEAR)
## PART II—TAMIL
## DRAMA AND PROSE

### May—1968

1. மனோன்மணீய நாடகத்தில் அமைந்துள்ள கற்பனைத்திறனைச் சான்றுகளுடன் புலப்படுத்துக.

(அல்லது)

மனோன்மணீய நாடகத்தில் சுந்தர முனிவர் பெறும் இடத்தை விளக்கி எழுதுக. 20

2. ஜீவகன் இயல்புகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

நடராசனின் பண்பு நலன்களை வரைக. 20

3. பின்வருவனவற்றை இடஞ்சுட்டி விளக்குக:

(அ) 'விரைதரு மோசிறு கறையான் அரிக்கில்'

(ஆ) 'மன்னவன் நல்லனா வாய்க்குதல் போல
என்னுள தரியவற் றரியதிவ் வுலகில்'

### Sept—1968

1. மனோன்மணீய நாடகம் காப்பிய இலக்கியம் நிறைந்தது என்பதனை விளக்குக.

(அல்லது)

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, தம் நூலில் வீரச் சுவையினை விளக்கும் நெறியினைப் புலப் படுத்துக. 20

2. குடிலன் கொடும் பாதகன் என்னும் கருத்தினை ஆய்ந்தெழுதுக.

(அல்லது)

சுந்தர முனிவர் மனோன்மணீய நாடகத்திற்கு ஓர் இன்றியமையாத உறுப்பினராய்த் திகழ்கிறார் என்பதனை நிறுவுக. 20

3. பின்வருவனவற்றை இடம் சுட்டி விளக்குக.

(அ) பரிதி கண்டன்றோ பங்கயம் அலரும்.

(ஆ) ஒருகுலத் தொருவன் ஒருமரத் தோரிலை. 10

## April—1969

1. மனோன்மணீயத்தில் நாஞ்சில் நாடு வருணிக்கப் படும் முறையினை எடுத்தெழுதுக.

(அல்லது)

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை தம் நாடகத்துள் திருக்குறளைக் கையாளும் விதத்தினைச் சான்று களுடன் புலப்படுத்துக.

2. சிவகாமி சரிதம் நாடகத்துள் நாடகமாக அமைந் துள்ள பான்மையினை எடுத்துக் காட்டுக.

(அல்லது)

மனோன்மணீய நாடகத்துள் இடம்பெறும் வாணி யின் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.

3. பின்வருவனவற்றை இடஞ்சுட்டி விளக்குக:

(அ) 'காலம் என்பது கறங்குபோல் சுழன்று
மேலது கீழாக் கீழது மேலா
மாற்றிடுந் தோற்ற மென்பது மறந்தனை'

(ஆ) 'களிமிகு கன்னிய ருளமும் வாக்கும்
புளியம் பழமும் தோடும் போலாம்'

## April—1969

1. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்கை யைத் திறம்படவும் சுவைபடவும் வருணிக்கும்

வல்லமை படைத்தவர் என்பதை அவர்தம் நாடகத்தினின்றும் புலப்படுத்துக.

(அல்லது)

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர் தம் நாடகத்தில் பழமொழிகளைப் பயன்படுத்தியுள்ள திறத்தினைச் சில எடுத்துக்காட்டுக்கள் தந்து விளக்கி எழுதுக. 20

2. குடிலனது சூழ்ச்சித் திறனை விளக்குக.

(அல்லது)

மனோன்மணீய நாடகத்தில் நாராயணன் பெறும் இடத்தை விளக்கி வரைக. 20

2. பின்வருவனவற்றுள் நான்கினை இடஞ்சுட்டி விளக்குக.

(அ) "விரை தரு மோசிறு கறையான் அரிக்கில்"

(ஆ) தீமைகை விடற்கு வேளை சிந்திப்போர்
சேய்மை உன்னி மனைதிரும்பார் ஒப்பார். 10

## September—1970

1. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் தம் நாடகத்துள் நாட்டுப்பற்றினையும், மொழிப் பற்றினையும் புலப்படுத்தியுள்ள வகையினை விளக்கி எழுதுக.

(அல்லது)

மனோன்மணீய நாடகத்தில் தத்துவக் கருத்துக்கள் உணர்த்தப்பெறும் பாங்கினை விளக்கி எழுதுக.

2. நடராசன், பலதேவன்-இவ்விருவருடைய இயல்புகளை ஒப்பிட்டு ஆராய்க.

(அல்லது)

மனோன்மணி பாத்திரம் வாயிலாகப் பெண்மை நலனைப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை உணர்த்தியுள்ள பான்மையினை விளக்குக. 20

3. இடஞ்சுட்டி விளக்குக :

அ சித்திரப் பார்வை யழுந்தார்க் கெத்தனை காட்டினுங் கீறிய வரையலாற் காணார்.

ஆ உழிஞையங் குளதெனில் வழுதிபாற் பழுதில் நொச்சியும் உளதென நிச்சயம் கூறே.

## May—1971 (First year)

1. விஞ்ஞான உண்மைகளைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தம் நாடகத்தில் இழைத்துள்ள பாங்கினை எடுத்துக் காட்டிப் பாராட்டுக.

(அல்லது)

சிவகாமி சரிதத்திற்கும் மனோன்மணீய நாடகத்திற்கும் உள்ள இயைபை ஆராய்க. 20

2. "என்னை யென்மதி யிங்ஙன மடிக்கடி யென்னையு மெடுத்தெறிந் தேகுதல்" - இதன் உட்கிடக்கையை நன்கு விளக்குக.

(அல்லது)

மனோன்மணிக்குச் சுந்தரர்மீது இருந்த பற்றும் ஜீவகன் மீது இருந்த பற்றும் புலப்படுமாறு எங்ஙனம்? 20

3. இடஞ்சுட்டி அகலவுரை தருக :

அ ஓதி யுணரினும் மாத ருள்ளம்
அலையெறி கடலினுஞ் சலன மென்ப.

ஆ பூதப் பொருட்கே புலன்துணை யன்றிப்
போதப் பொருட்குப் போதும் போதம்.

## May—1971 (Second year)

1. மனோன்மணீயம் படித்து மகிழ்தற்குரியதேயன்றி நடித்து இன்புறுதற்குரியதன்று என்பதை ஆராய்க.

(அல்லது)

நாடகத்திற்குக் கயவன் இல்லையேல் கதையும் இல்லை என்பது எவ்வாறு பொருந்தும்? 20

2. மனோன்மணி அல்லது வாணி பண்பு நலன்களை எடுத்துக் காட்டுக. 20

3. இடஞ்சுட்டி விளக்குக:

அ இராச்சிய பாண சூத்திரம் யார்க்கும்
நீச்சோ வன்றி நிலையோ.

ஆ கொன்றபின் அன்றோ முதலை நின்றழும். 10

## November—1971

1. மனோன்மணீய நாடகம் காப்பிய இலக்கணம் நிறைந்தது என்பதை நிறுவுக.

(அல்லது)

பெண்மையின் பெருமை பேசுவது மனோன்மணீயம் என்பதை ஆராய்க. 20

2. சுந்தர முனிவர், புருடோத்தமன், நடராசன் ஆகிய இவருள் ஒருவர்தம் பண்பு நலன்களை எடுத்துக் காட்டுக. 20

3. இடஞ்சுட்டி விளக்குக:

(அ) மற்றுநீ கழறிய
உழிஞையங் குளமெதனில் வழுதிபால் பழுதில்
நொச்சியு முளமெதன நிச்சயங் கூறே.

(ஆ) பெண்களகக் காதலெலாம் பேசுமுயற் கொம்பே

10

# V. பின்னிணைப்பு

## 1. தத்துவக் கருத்துக்கள்

அங்கம் 1 : களம் 1

**சுந்தர :**

**(ஜீவகனிடம்)**

காலம் என்பது கறங்குபோற் சுழன்று
மேலது கீழாக் கீழது மேலா
மாற்றிடுந் தோற்ற மென்பது மறந்தனை. (94-96)

அங்கம் 1 : களம் 5

**குடிலன் :**

போர்வந் திடிலிவண் நேர்வந் திடுமெலாம்
யார்இற வார்கள்? யார்அறி வார்கள்? (46-47)

அங்கம் 3 : களம் 5

(சிவகாமி சரிதம்)

**சிவகாமி :**

சாரும் வரை குறியாது தன்னிழலை யளக்குந்
தன்மையென நான்நடக்கத் தான்வளரும் அடவி
ஆரிருளில் இனிநடக்க ஆவதிலை உடலம்
ஆறும்வகை வீடுளதே லடையுநெறி யருளாய். (2)

**சிதம்பரன் :**

"ஏகாந்தப் பெருங்ககனம்; இதிலுலக ரணையார்
சென்றுறைய மடமுமிலை; திகழ்வெளி யென்வீடு;
சிந்தையற நொந்தவர்க்குச் சேரவிலை பந்தம். (3)

**சிதம்பரன் :**

'தந்நாவி லொருவிரலைத் தாண்டவறி யாமல்
சாகரமும் மலைபலவுந் தாண்டியலை கின்றார்
என்னேயிம் மனிதர்மதி' (16)

[1] ஐயோஇவ் வையகத்தி லமைந்தசுக மனைத்தும்
அழலாலிங் கெழுந்தடங்கு நிழலாக நினையாய்
கையாரும் பொருளென்னக் கருதிமணல் வகையைக்
காப்பதெலா மிலவுகிளி காத்தலினும் வறிதே. (23

சிவகாமி :
கண்டவரைக் கேட்டவரைக் காசினியில் தேடிக்
கண்டிடச் சென் றேயலைந்த கட்டமெனைத் தென்க?
உண்டெனத்தம் யூகநெறி உரைப்பவரே யல்லால்
உள்ளபடி கண்டறிந்தோர் ஒருவரையும் காணேன் (39)

இவ்விடமும் அவ்விடமும் எவ்விடமும் ஓடி
இதுவரை தேடியுமென் அதிபரைக் கண்டிலனே
எவ்விடம்யான் நண்ணவினி? எவ்விடம்யான் உண்ண?
இக்காயம் இனியெனக்கு மிக்கஅரு வருப்பே. (43)

பொய்யேதான் ஆயிடினும் புனிதரவர் தந்த
போதமலால் வேறெனுக்கும் ஓதுமறி வுளதோ? (44)

வாணி :
"சிவகாமி யானுனது சிதம்பரனே" என்னச்
செப்புமுனம் இருவருமற் றோருருவம் ஆனார்!
எவர்தாமுன் அணைந்தனரென் றிதுகாறும் அறியோம்
இருவருமொன் றாயினரென் றேயறையும் சுருதி. (48)

அங்கம் 3 : களம் 4

(நிஷ்டாபரர் கருணாகர உரையாடல்)

நிஷ்டாபரர் :
பாரினிற் புதிதோ போரெனப் புகல்வது!
போரிலை ஆயினென்? யாருறார் மரணம்?
எத்தினம் உலகில் எமன்வரா நற்றினம்?
இத்தினம் இறந்தோர் எத்தனை என்பீர்?
ஒவ்வொரு தினமும் இவ்வனம் ஒன்றில்,
எறும்பு முதலா எண்ணிலா உயிர்கள்
உயந்துயர் கணக்கிட் டுரைப்போர் யாவர்? (5-11)

• * •

நோவும் சாவும் ஒன்றே அன்றியும்
உலகெலாம் நோக்கில்நம் உடலொரு பொருளோ?
(26-27)

ருணாகரர் :

உளமெனப் படுவதோ அளவிலாப் பெருவெளி;
கோட்டையும் இல்லை பூட்டுதாழ் அதற்கிலை;
நஞ்சே அனைய பஞ்சேந் திரியம்;
அஞ்சோ வாயில்? ஆயிரம்; ஆயிரம். (132-135)

* * *

எங்கிலை அவனருள்? எல்லையில் அண்டம்
தங்குவ தனைத்தும் அவனருட் சார்பில்
அண்ட கோடிகளிங் கொன்றோ டொன்று
விண்டிடா வண்ணம் வீக்கிய பாசம்,
அறியில் அருளலாற் பிரிதெதுஆ கருஷணம்?
ஒன்றோ டொன்றியாப் புற்றுயர் அன்பில்
நின்றஇவ் வுலகம், நிகழ்த்திய கருணை
பயிற்றிடு பள்ளியே அன்றிப் பயனறக்
குயிற்றிய பொல்லாக் கொடியயந் திரமோ? (152-160)

* * *

...............................அதனால்
இத்தனி உலகில் எத்துயர் காணினும்
அத்தனை துயரும் நம அழுக்கெல்லாம் எரித்துச்
சுற்றநற் சுவர்ண சோதித் தெடுக்க
வைத்தஅக் கினியென மதித்தலே உயிர்கட்கு
உத்தம பக்தியென் றுள்ளுவர் ஒருகால்
காரண காரியம் காண்குவம் அல்லேம். (171-177)

* * *

இவ்விதம் நோக்கிடில் எவ்விதத் தோற்றமும்
செவ்விதிற் பற்பல காரணச் செறிவால்
அவ்வவற் றுள்நிறை அன்பே ஆக்கும். (189-191)

## 2. பழமொழிகள்

அங்கம் 1 : களம் 2

1. 'முதலையின் பிடிபோல் முடிக்கத் துணிந்தனர்' (38)
ஒப்பு : (முதலையும் மூர்க்கனுங் கொண்டது விடா)

அங்கம் 1 : களம் 3

2. 'பூவையை வளர்த்துப் பூனைக் கீயவோ' (110)
ஒப்பு : (கிளியை வளர்த்துப் பூனைக்குக் கொடுக்கவா?)

அங்கம் 1 : களம் 4

3. 'பரிதி வந்துழி யகலும் பனியென' (37-38)
ஒப்பு : (பகலவனைக் கண்ட பனிபோல)

அங்கம் 2 : களம் 1

4. 'அங்கைப் புண்ணுக் காடியும் வேண்டுமோ? (260)
ஒப்பு : (கைப்புண் பார்க்கக் கண்ணாடியா?)

5. 'வெளுத்த தெல்லாம் பாலெனும் மெய்மை யுளத்தான்'
ஒப்பு : (மின்னுவதெல்லாம் பொன்னல்ல)

6. 'தன்னுளந் தன்னையே தின்னும்' (163)
ஒப்பு : (தன்னெஞ்சே தன்னைச் சுடும்)

அங்கம் 3 : களம் 3

7. 'இரவியை நோக்கற்கேன் விளக்குதவி' (84)
ஒப்பு : (யானை பார்க்க வெள்ளெழுத்தா?)

அங்கம் 4 : களம் 3

8. 'நெருப்பிடை நெய் சொரிந் தற்று' (4)
ஒப்பு : (எரிகிற கொள்ளியில் எண்ணெய் வார்த்தாற்போல்)

9. 'இருதலைக் கொள்ளியில் எறும்பானேனே' (47)
ஒப்பு : (இருதலைக் கொள்ளியிடை எறும்புபோல)

10. 'கண்ணிடு மணல்போல உறுத்துவ' (135-136)
ஒப்பு : (கண்ணில் மணல் உறுத்துவது போல)

அங்கம் 4 : களம் 4

11. 'வேலியே தின்னில் தெய்வமே காவல்
செழும் பயிர்க் கென்பர்' (24)
ஒப்பு : (வேலியே பயிரை மேய்ந்தால்)

அங்கம் 4 : களம் 1

12. 'கைக்கெட் டியது தன் வாய்க்கெட் டுதற்குள்
வந்துறும் அந்தமில் பிரதிபந் தங்களே' (174-175)
ஒப்பு : (கைக்கெட்டியது வாய்க் கெட்டவில்லை)

அங்கம் 5 : களம் 2

13. 'கிழவிபேச் சேற்குமோ கின்னரக் காரிக்கு' (9)
ஒப்பு : (ஏழைசொல் அம்பலம் ஏறுமோ?

14. 'நொந்தபுண் அதனிலே தந்திடும் நூறிடி' (3)
ஒப்பு : (பட்ட காலில் படும் கெட்ட குடியே கெடும்)

அங்கம் 5 : களம் 3

1. 'ஆடையின் சிறப்பெலாம் அணிவோர் சிறப்பே
பாடையின் சிறப்பெலாம்
பயில்வோர் சிறப்பே' (75-76)
ஒப்பு : (ஆள்பாதி ஆடைபாதி; செந்தமிழும் நாப்பழக்கம்)

# 3. திருக்குறள் மேற்கோள்

அங்கம் 2 : களம் 5

1. 'கருவியுங் காலமும் அறியில் அறியதென்?" (16)

ஒப்பு : அருவினை யென்ப வுளவோ கருவியாற்
காலம் அறிந்து செயின்.

அங்கம் 2 : களம் 1

2. 'வினைதெரிந் துரைத்தல் பெரிதல அஃது
தனைநன்கு ஆற்றலே ஆற்றல்' (170-171)

ஒப்பு : சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்.

3. 'என்னே! இவன்மதி முன்னிற் பவையெவை?' (333)

ஒப்பு : மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை.

4. 'மூக்கிற் கரியர் உளரென நாயனார்
தூக்கிய குறளின் சொற்படி' (268-269)

ஒப்பு : புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து. (277)

5. 'தீரா இடும்பையே தெளிவில் ஐயுறல்' (278)

ஒப்பு : தேரான் தெளிவுந் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா விடும்பை தரும்.

அங்கம் 2 : களம் 1

6. 'உளத்தொடு உளஞ்சென் றொன்றிடிற் பின்னர்
வியர்த்தமே செய்கையும் மொழியும். (50-51)

ஒப்பு : கண்ணோடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்
[சொற்கள்
என்ன பயனு மில. 1100

## திருக்குறள் மேற்கோள்

7. 'காதலா மூழிக் கனன்முன் வையாய்
மாதரார் கட்டுரை மாயா தென்செயும்?'
(111-112)

ஒப்பு : வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். (435)

8. 'குணமு ளார்இல் துணைவ ராயின்
இல்லது என் உலகில்?' (164-165)

ஒப்பு : இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை?

அங்கம் 4 ; களம் 1 361

9. 'மீன் உண்ணக்
குளக்கரை இருக்கும் கொக்கென அடங்கி' (31-33)

ஒப்பு : கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து (490)

10. 'போர்க்குறிக் காயமே புகழின் காயம்'

ஒப்பு : விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து. (876)

11. 'அனந்தம் தலைமுறை வருந்தனி மாக்கள்,
தினந்தினம் தாம்அனு பவிக்குஞ் சுதந்தரம்
தந்ததம் முன்னோர் நொந்தபுண் எண்ணிச்
சிந்தையன் புருகிச் சிந்துவர் கண்ணீர்
என்றால் அப்புண் 'இரந்துகோட் டக்கது'
அன்றோ?' (154-159)

ஒப்பு : புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பின் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து. (180)

12. 'பிறந்தார் என்போர் புகழுடன் சிறந்தோர்'

ஒப்பு : தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று. (235)

## அங்கம் 3 : களம் 3

13. 'ஓர் சிறு
மயிரினை இழக்கினும் மாயுமே கவரிமா'
பெருந்தகை பிரிந்தும் ஊன் சுமக்கும் பெற்றி
மருந்தாய் எனக்கே இழிந்ததே நாரணா, (49-52)

ஒப்பு : மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.
மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்
[தகைமை
பீடழிய வந்த இடத்து. (868)

14. 'அழகார் அம்புயப்
பூவினத் துயர்வு பொய்கையின் ஆழத்து
அளவுஆ வதுபோல் உளமது கலங்கா
ஊக்கம் ஒருவன் தாக்கத் தளவெனத்' (85-88)


ஒப்பு : வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு. (695)

15. 'மானமே பெரிது
சிதைவிடத் துரவோர் பதையார் சிறிதும்
(263-264)

ஒப்பு : சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பின்
பட்டுப்பா டூன்றுங் களிறு. (597)

16. 'நாணா துலகம் ஆள்போல் நடித்தல்
நாணாற் பாவை. உயிர்மருட் டுதலே.' (270-272)

ஒப்பு : நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணா லுயிர்மருட்டி யற்று. (1020)



சி.பா

தேசிங்கு ஆண்ட செஞ்சியில் பிறந்தவர் (3—5—1935) இந்தச் செந்தமிழ்ச் செல்வர்.

கண்டாச்சிபுரமும் திருவண்ணாமலையும் இந்த இலக்கியப் பொழில் கற்ற இடங்கள். பைந்தமிழ் வளர்க்கும் பச்சையப்பன் கல்லூரிப்பாசறை மறவருல் ஒருவர். அன்னைத் தமிழில் பி.ஏ. ஆனர்சு. அங்கு முதல் வகுப்பில் தேறிய முதல்வர், 'குறுந்தொகை' பற்றிய ஆய்வுரைக்கு 1963-ல் எம்.லிட்., பட்டமும், சேரநாட்டு செந்தமிழ் இலக்கியங்கள், பற்றிய ஆய்வுரைக்கு 1970-ல் டாக்டர் (பி.எச் டி,) பட்டமும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இவர் பெற்ற சிறப்புகள், நல்ல நடை கொண்ட இந்த நாகரீகர் பேர் சொல்ல நாளும் மாணவர் படை உண்டு நாட்டில்! சென்னைப் பல்கலைக் கழகத்தில விரிவுரையாளராகச் சேர்ந்தவர் பேராசிரியராகத் துறைத தலவராகச் சிறந்திருக்கிறார். முன்னால் தமிழக ஆளு நருக்குத் தமிழை முறையாகப் பயிற்றுவித்த ஆசிரியர், இநத மூற்றிய புலமையாளர், தற்போது தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் துனை வேந்தருமாவார்

முப்பது நூல்கள் படைத்துள்ள இவர் ஒப்பருத்திறனுக்கும் உயர் தமிழ் அறிவுக்கும், 'தமிழ் இலக்கிய வரலாறு ஒன்றே சான்று! அண்மையில் வந்துள்ள அணிகலன். சங்க இலக்கியம் சில பார்வைகள் ஆங்கிலத்தில் ஒரு நூல் 'சங்ககால மகளிர் நிலை' பற்றிய ஆராய்ச்சி. 'இலக்கிய அணிகள்' என்ற நூல் தமிழக அரசின் இரண்டாயிரம் உரூபா முதல் பரிசை பெற்றது படித்துப் பல பட்டம் பெற்ற இந்தப் பைந்தமிழ் வேந்தர்க்குப் பலரும் கொடுத்துள்ள புகழ் மகுடங்கள்: புலவரேறு (குன்றக்குடி ஆதீனம்) செஞ்சொற் புலவர் (தமிழ்நாடு நல்வழி நிலையம்) சங்கநூற் செல்வர் (தொண்டை மண்டல ஆதீனம்)

பெருந்தகை மு. வ. வின் செல்லப்பிள்ளை சி ப.ா அவர் புகழ் பாடும் உருந்தமிழ்த்தும்பி: அயராது உழைக்கும் அருஞ்செயல் நம்பி! இலக்கியப் பேச்சில் இன்ப அருவி! எழுத்தில் நல்ல இலக்கியப் பிறவி!

சி.பா, இந்த ஈரெழுத்து ஒரு மொழி, இளைஞர்க்குச் சொல்வது சிறக்கப் பாடுபடு

மா. செ